www.tamilarangam.net

Eathuvarai April-May 2009



# எதுவரை?

மரணத்திலிருந்து வாழ்விற்கு...

ஏப்ரல் - மே 2009

“புத்திசுவாதீனத்தின் மெல்லிழையையும் இழந்து, எந்தவிதமான எதிர்ப்புணர்வுமின்றி இந்த பயங்கரவாத, வன்முறைப் புதைகுழிக்கு சமூகம் இடம்கொடுத்துவிடப் போகிறதோ என்று நாம் அஞ்சுகிறோம். மனித ஆளுமைகள், ஆற்றல்களையெல்லாம் பறிகொடுத்துவிட்ட நிலையில் நமது சமூகம் இருக்கிறது...

யாராவது ஒருவர், எமது விவரணங்கள் “ஏதோவொரு கருத்தை” முன்தள்ள முனைவதாகக் கருதினால், அது எமது பகுப்பாய்வில் ஒருங்கிணைந்த பூரணத்தை வெளிக் கொணரவும், ஒரு புரிதலை தேடிக் கொள்ளவும், ஒதுங்கிப் போய் நிற்கும் நிலைமைக்குள் அமிழ்ந்து கொண்டிருக்கும் எமது சமூகத்திற்கு மீண்டும் புத்துயிரூட்டவும் அதனை ஒழுங்குறச் செய்வதற்கான சில வழிகளைத் தேடவும் இது முக்கியமானது”

-முறிந்தபனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இலங்கை, தமிழகம், புலம் பெயர் நாடுகளில் உள்ள தமிழ் மொழிச் சமூகங்களிடையே/ கருத்து நிலைகளிடையே தொடர்பையும் ஆரோக்கியமான உரையாடலையும் ஏற்படுத்துவதுடன், முன்னோக்கி செல்வதற்குமான குறைந்தபட்ச முயற்சி!**

- **பத்திரிகைகள் / சஞ்சிகைகள் / பிரசுரங்களை வெளியிடல் / நூற்பதிப்பு**

  சமூகவியல், மானுடவியல், அரசியல், பண்பாட்டு தளங்களில் பங்காற்றக்கூடிய எழுத்துக்களை / ஆவணங்களை நூலுருவாகக் கொண்டு வருதல்

- **நூல் விநியோகமும் நூல் கண்காட்சியும்,**

  தமிழில் உள்ள தேர்வு செய்யப்பட்ட நூல்கள், பலராலும் விரும்பிப் படிக்கப்படும் நூல்கள், முக்கியமான நூல்களை கிடைக்கச் செய்தல். நூற் கண்காட்சிகளை நடாத்துதல். 'நூல்கள் தேடுகைக்கான இணையத்தளத்தை' கொண்டிருத்தல்.

- **செயலமர்வுகள் / சந்திப்புக்கள்**

  முக்கியத்துவமானதும், பேசப்பட்டே ஆகவேண்டியதுமான விடயங்களையிட்டு "இரு மாதத்துக்கு ஒரு முறை" ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் முழுநாள் செயலமர்வு / சந்திப்பு / உரையாடல்களை நடாத்துதல்.



# தமிழ் மொழிச் சமூகங்களின் செயற்பாட்டகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Eathuvarai
Bi-Monthly ■ April-May 2009

# 01



# எதுவரை?

இருமாத இதழ்
ஏப்ரல்-மே 2009



01

நிர்வாக ஆசிரியர்:
M.Fauzer

சஞ்சிகையை தொடர்ச்சியாக கொணர்வதற்கு பங்காற்றும் கூட்டு முயற்சி இது.

தொடர்புகளுக்கு:
**Email:**
**eathuvarai@gmail.com**
Tel: **0044-7912 324 634**

02, Langley Walk,
Crawley,
RH11 7LR,
U.K

வடிவமைப்பு
ஜீவமணி
jeevamani@gmail.com

அச்சுப்பதிப்பு:
பயணி
payani..pub@gmail.com

**Private Circulation Only**

கட்டுரை:

04 சிறுபான்மையினரின் ஒருமைப்பாடு - இன்றைய தேவை!
**நிர்மலா**

11 புலிகளுக்குப் பிறகு
**அ. மார்க்ஸ்**

25 கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம்: பிரச்சினைக்கான தீர்வு
**எஸ்.ரி.ஆர்**

30 இன்றைய தேவை:
ஆத்ம சுத்தியுடன் கூடிய யதார்த்தபூர்வமான மீளாய்வு!
**பி.ஏ. காதர்**

43 தமிழீழமும் தமிழர்களும்
உலகமய-காலனீயத்தின் சோதனை விளையாட்டுகள்
**ஜமாலன்**

53 இத்தாலியன் குடுமி சும்மா ஆடாது
**கலையரசன்**

75 இலங்கையில் இன உறவுகளின் சாத்தியம்
**ரவி சுந்தரலிங்கம்**

திறனாய்வு:

56 பெரிய மரைக்கார் சின்ன மரைக்கார்: தனிவரைவா ?
இனவரைவா ? சாய்மனை எழுத்துக்கு மிகச் சிறந்த உதாரணம்
**எம்.ஐ.எம். றவூப்**

71 கலாமோகனின் கதைகள்
**சு. குணேஸ்வரன்**

சிறுகதை:

34 எம்.ஜி.ஆர். கொலைவழக்கு
**ஷோபாசக்தி**

65 விட்டு விடுதலையாகி...
**தீரன். ஆர்.எம். நௌஸாத்**

அஞ்சலி:

16 ஹெரோல்ட் பின்ரர் (1930 - 2008)
**ஜி.ரி.கே. கேதாரநாதன்**

கவிதை:

- **சித்தார்த்தன்**
- **அனார்**
- **சி. ஜெயசங்கர்**
- **நவாஸ் சௌபி**
- **சுகன்**
- **கல்லூரன்**
- **தீபச்செல்வன்**
- **மருதமுனை விஜிலி**
- **முழுமதி எம். முர்தளா**

www.tamilarangam.net





# கசப்பும் கடும்துன்பமும்...

வார்த்தைகளால் விபரணம் செய்ய முடியாத மனித அவலமும் வெம்மையும் அச்சமும் அடக்குமுறையும் இலங்கை மண்ணில் சர்வமும் வியாபித்துள்ளது. இந்த அழுகிய புதைகுழிக்குள்ளிருந்து மீண்டெழ எவ்வித வழியுமற்று மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் இலங்கையின் அனைத்து மக்களினதும் வாழ்வு ***தொடரும் அரசியற் போர் சூதாட்டக்களத்தில்*** பணயம் வைக்கப்பட்டுள்ளது.

அழிவின் அரசியலும் போராட்டத்தின் அழிவும் தொடர்கிறது. இன்றைய உச்ச நெருக்கடிக்கும் மனித அவலத்திற்கும், உள்நாட்டளவில் பிரதான பாத்திரப் பொறுப்பாளிகள் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளின் தலைமையுமே! இந்த உண்மையை நேரடியாக சுட்டிக்காட்டுவதற்கு தயங்கும் போக்கும் இன்றைய நிலைக்கு வலுச்சேர்த்தே வந்திருக்கிறது.

இவ்விரு அதிகார மையங்களுக்கிடையில் நிகழும் போரை தேசிய இனப் பிரச்சினையுடன் மாத்திரம் சம்பந்தப்படுத்தி எம்மால் பார்க்கமுடியவில்ல. இருதரப்பிற்குமே நீடித்து நிற்கும் தேசிய இனப் பிரச்சினைக்கு சாத்தியமான வழியில் அரசியல் தீர்வு காண வேண்டுமென்ற நிலைப்பாடு கிடையவே கிடையாது!

மக்கள் மீது அரசுக்கு இல்லாத அக்கறையும் பரிவும்தான் விடுதலைப்புலிகள் தலைமைக்கும். இதனை நாம் இங்கு அரசியல், வரலாற்றுத் தரவுகளுடன் விபரிக்கத் தேவையில்லை. இந்த விவாதத்தில் நாம் இறங்கி காலத்தைக் கழிப்பதே ஒரு வகையில் மக்களின் துயரங்களை நீடிக்கச் செய்வதற்கு பங்காற்றுவதில்தான் போய் முடியும்!



சிட்டப்பிரசாத்

அரசு சார்பு - புலிஎதிர்ப்பு, புலிசார்பு - அரசு எதிர்ப்பு என்கிற அரசியல் அணிச் சேர்க்கையிலும் கருத்து நிலையிலுமிருந்து விடுபட்டு இன்றைய இலங்கை நெருக்கடியை அணுகும் அவசியம் உள்ளது. ***இலங்கையின் அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமைகள், தேசிய சிறுபான்மை இனங்களின் சமத்துவவாழ்வு, வடக்கு கிழக்கு உட்பட முழு இலங்கைக்கும் இன்று தேவையாகியுள்ள ஜனநாயக மாற்றம்*** என்பன நமக்கு முக்கியத்துவமானது. மக்களை சூழ்ந்துள்ள சூன்யத்திலிருந்து வெளியே கொணர்வதற்கு இவைகள் தொடர்பான அக்கறையும் உழைப்பும் அவசியமாகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




அரசும் புலிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காத வகையில் தமது அதிகாரத்தின் எல்லைக்குள் வாழும் மக்களுக்கு அடிப்படை உரிமைகளை வழங்க மறுத்தே வந்துள்ளனர்/ வருகின்றனர். எழுத்துச் சுதந்திரத்திற்கோ கருத்து சுதந்திரத்திற்கோ இவர்களின் அதிகார நிழலில் உயிரே இல்லை.

விடுதலைப் புலிகளின் தலைமை, தேசியப் போராட்டத்தைக் காரணம் காட்டி இவற்றை மறுத்து வருவதைப்போல்தான், இன்று இலங்கை அரசுத் தலைமை இலங்கை தேசத்தை காப்பதற்கான போரை நடத்துவதாகச் சொல்லி இவற்றை மறுத்துவருகிறது. இவ்விரு அதிகார மையங்களுக்கிடையிலும் ஒட்டுமொத்தமான முழு இலங்கைச் சமூகமே ஒருவிதக் கொடுங்கோன்மை, இராணுவ மயப்படுத்தப்பட்ட முற்றுகை, ஒடுக்குமுறைக்குள் ஆட்பட்டுக் கிடக்கின்றது. இதன் தன்மை ரீதியான விளைவுகள் மோசமாக உருவாகி மக்களை பாதித்து நிற்கிறது.

இவைகள் பற்றி நமக்கு அக்கறையிருக்குமானால் இந்தக் கையறுநிலையை மாற்ற நாம் பல தளங்களில் செயற்பட வேண்டிய கடமைப்பாடு உடையவர்களாக உள்ளோம்! **இவைகள் குறித்த விமர்சனங்களும், கருத்துக்களும் சிந்தனைகளும் படைப்புகளின் பேசு பொருளுமே நமது உட்கிடை.** "எரிந்த கட்சி-எரியாத கட்சி" விவாதம் நமது நோக்குக்கு அப்பாற்பட்டது.

**எம். பௌஸர்.**




**எத்துனை ஆயிரம் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுவிட்டது!**
**வாழ்ந்து கொண்டிருக்கும் எத்துனை இலட்சம் மக்களை**
**அலைக் கழித்துக் கொண்டிருக்கிறது.**
**இதற்கு முடிவே இல்லையா?**
**இந்த மனித குலத்துயர்**

# எதுவரை?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்டுரை



# சிறுபான்மையினரின் ஒருமைப்பாடு - இன்றைய தேவை!

நிர்மலா

இன்று இலங்கையில் நடக்கும் போர் சிங்கள தமிழ் தேசியவாதங்களுக்கிடையிலான நீண்ட வரலாற்று ரீதியான ஒரு போட்டியினால் ஏற்பட்ட தெனச் சொல்லலாம். காலனித்துவ காலத்திலும் காலனி எதிர்ப்புப் போராட்டக்காலத்திலும் உருவாகிய இத்தேசியவாதங்கள் இலங்கையின் பின்காலனித்துவ வரலாற்றில் மிகுந்த வன்முறை யுடனும் யுத்த மூர்க்கத்துடனும் தம் நடவடிக்கை களை அரங்கேற்றியுள்ளன.

சுதந்திரமடைந்த காலத்திலிருந்து, சிங்கள பௌத்த தேசியவாதமானது இலங்கையின் நவீன காலனித்துவ அரசின் மீது தன் மேலாண்மையை நிறுவியதன் மூலம் சகல சிறுபான்மை மக்களையும் விளிம்புநிலைக்கு தள்ளியுள்ளது. அனைத்து ஒருமைப்பாடுடைய இனங்களையும் உள்வாங்கிய 'இலங்கையர்' என்ற தேசிய அடையாளமொன்று கட்டமைக்கப்படுவதை இது இல்லாமல் ஆக்கி விட்டது. இதற்குப் பதிலிறுக் கும் வகையில், மிகுந்த தீவிரமான தமிழ்த்தேசிய வாதமொன்று உருவாகி, அது ஈற்றில் ஆயுத வன்முறைப்போராட்டமாக உருவெடுத்தது.

இப்போராட்டத்தினூடாக வலிமைகூடிய தமிழ்த்தேசியம் ஒன்று முகிழ்க்குமென்ற தமிழ்த் தேசியவாதிகளின் அபிலாஷை நிறைவு பெறாமல்; தமிழ் தேசியம் என்று கூறப்பட்ட கட்டமைப்பு மேலும் மேலும் சிதறுண்டதே நிதர்சனமானது. பிராந்திய, மத, சாதி, பால், அரசியல் அடிப்படை களில் தமிழ் தேசியம் மேலும் சிதறுண்டு 30 வருட போரின் பின் இன்னும் மோசமாக பின்னோக்கிப் போகும் பாதைக்கே வந்து சேர்ந்துள்ளது.

எந்த தேசியவாத கருத்தியலும் ஒரு தேசியத் தைக் கட்டமைக்க விழைகின்ற வேளையில், தேசத்தின் எல்லைகளை வரைந்து அத்தேசத்தில் அங்கம் வகிக்க யாருக்கு அருகதையிருக்கின்றது என்பதை நிர்ணயிக்க முனைகின்றது. அவ் வேளையில் தேசியவாதம் பலவந்தமாக, சில குழுவினரை தன்னுள் உள்வாங்கவும், அதன் எதிர்விளைவாக, வேறு சிலரை, தவிர்க்க முடியாத படி புறந்தள்ளவும் செய்கிறது. இத்தகைய நடை முறைகள் தமிழ்த் தேசியத்தைக் கட்டமைக்கின்ற முயற்சிகளிலும் இன்றியமையாத பங்கு வகித்துள்ளது.

குறிப்பாக, புலிகளியக்கம் இத்தகையதொரு நடைமுறையில் மிகக் தீவிரமாக இறங்கியது. தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள சிறுபான்மையினரை இந்நடைமுறைகளுக்குட் படுத்தி, எந்தவித நெகிழ்ச்சியும் அற்று ஆவேசத்துடன் உள்ளிழுத்தும் புறந்தள்ளியும் வந்துள்ளது. புலிகளியக்கத்தின் இப்போக்கின் காரணமாக, அதன் கருத்தியலை ஏற்றுக் கொள்ளாதவர் மீதான அதன் தயவுதாட்சண்ய மற்ற போக்கு, மேலும் தமிழ்த்தேசியத்தை சிதறடிக்க ஏதுவாகியது.

அண்மைக் காலங்களில் அரசுக்கும் புலி களுக்குமிடையில் உக்கிரமடைந்துள்ள போரி னால் இலங்கை முழுவதுமே போர்மயப் படுத்தப்பட்டு அரசும் சமுதாயமும் இன்னும் ஆழமாகவும் தீவிரமாகவும் இராணுவமயப் பட்டுள்ளன. இரு பக்கங்களிலும் தேசிய வாதத் தினதும் ராணுவவாதத்தினதும் ஆபத்தான கலவையானது மேலும் தமிழ் சிங்கள சமூகங் களை துருவமயப்படுத்தும் கைங்கரியத்தையே கடந்த 30 வருடங்களாகவும், குறிப்பாக கடந்த இருவருடங்களாக மிகத்தீவிரமாகவும் செய்து வருகின்றன.

இப்போர் நடைமுறைகள் மேலும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே உள்ள வேறுபாடுகளை மேலும் மோசமாக்கி அந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகங்களுக்கிடையே இணக்கப்பாடு வருவதை மேலும் பின்தள்ளுகிறது. புலிகளியக்கமும் மகிந்த அரசாங்கமும் தத்தமது தீவிர தேசியவாத வடிவங்களைத் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் இத்தகையதொரு இராணுவ நடைமுறைத் திட்டத்திலேயே தங்கியுள்ளன.

இலங்கை அரசானது தனது போர் நிகழ்ச்சி நிரலை இலங்கை அரசியலின் மையப்பரப்புக்கு கொணர்ந்து, இந்தப் போர்ப்பிரச்சாரத்திற்கு மிக மோசமான சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளின் உதவியை நாடியுள்ளது. போர் தீவிரமடையும் அதேவேளை போரைப்பற்றிய உரையாடலை உச்சஸ்தாயிக்கு கொணர்ந்து அதனடிப்படையில் புதிய அடக்குமுறைகளை கட்டவிழ்த்து, போரைப் பற்றிய சகல அரசியல் சர்ச்சைகளையும் அடக்கி ஒரு புதிய சர்வாதிய பத்தியத்தை நிறுவ முனைகிறது.

தற்போதைய அரசாங்கம் அரசியல் பிரச்சினையான இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவ தீர்வொன்றையே நாடிநிற்கிறது என்பதை அது மீண்டும் மீண்டும் தெளிவாக்கியுள்ளது. சிறுபான்மையினங்களின் நியாயமான முறையீடுகளுக்கான தீர்வுகளைக்காணும் நோக்குடன், நாடளாவிய ஒரு அரசியல் விவாதத்தையோ, ஜனநாயகம், சமூக நீதி போன்ற அரசியல் கேள்விகள் பற்றிய சர்ச்சைகளோ நடைபெறாவண்ணம் அடக்கி, இவைபற்றி கேள்வி எழுப்புவோரை ‘துரோகிகள்’ என (புலிகளைப் போலவே) முத்திரையிட்டு, அரசியல் பரப்பின் விளிம்புகளுக்கு மகிந்த அரசாங்கம் புறந்தள்ளியுள்ளது.

அதேவேளையில், புலிகளும் இராணுவ நிகழ்ச்சிநிரலொன்றையே பின்பற்றுவதுடன், ஒரு அரசியல் விவாதத்தை நடாத்துவதன் மூலமோ, பேச்சுவார்த்தையின் மூலமோ ஜனநாயகத்துடன் கூடிய சமாதானமொன்றை கோரும் அரசியல் பாதையை முன்னின்று நடாத்தும் ஆற்றலையோ அரசியல் விருப்பையோ ஒருபோதும் கொண்டிருக்கவில்லை. பிளவுபட்டிருக்கும் சமுதாயங்களைக் கொண்ட எமது நாட்டில், போரின் வெற்றி தோல்விகளைப்பற்றியும், எந்தப்பக்கம் எவ்வளவு நிலப்பரப்பின் மேல் ஆதிக்கம் செலுத்துகின்றனர், போரின் இருசாராரும் எத்தனை பேர் பலியாகின்றனர் என்பன போன்ற கேள்விகளே கவனத்தை ஈர்க்கின்றன. போரினால் பொது மக்கள் படும் அவலங்கள், போரில் இருசாராராலும் அவர்கள் பகடைக்காய்களாய் பாவிக்கப்படுதல், அரசினதும் புலிகளினதும் மனித உரிமை மீறல்கள், ஊடகங்களின் சுதந்திரம் பறிபோதல், சாதாரண மக்களின் பேச்சுச் சுதந்திரம் பறிபோதல், விலைவாசி அதிஉச்ச நிலைக்கு போதல் போன்ற முக்கிய பிரச்சினைகள் அரசியல் அரங்கில் பின்தள்ளப்பட்டு விட்டன.

**அண்மைக் காலங்களில் அரசுக்கும் புலிகளுக்குமிடையில் உக்கிரமடைந்துள்ள போரினால் இலங்கை முழுவதுமே போர்மயப்படுத்தப்பட்டு அரசும் சமுதாயமும் இன்னும் ஆழமாகவும் தீவிரமாகவும் இராணுவ மயப்பட்டுள்ளன. இரு பக்கங்களிலும் தேசியவாதத்தினதும் ராணுவவாதத்தினதும் ஆபத்தான கலவையானது மேலும் தமிழ் சிங்கள சமூகங்களை துருவமயப்படுத்தும் கைங்கரியத்தையே கடந்த 30 வருடங்களாகவும், குறிப்பாக கடந்த இருவருடங்களாக மிகத் தீவிரமாகவும் செய்து வருகின்றன.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுபான்மைச்சமூகங்கள் எவ்வாறு இலங்கை அரசினால் நடாத்தப்படப்போகின்றன என்ற அதி முக்கியமான அரசியல் கேள்வி இவ்விரு தேசிய வாதங்களினதும் போட்டியைப்பற்றிய இருமைச் சூத்திரப்பொறிக்குள் (binary) அகப்பட்டுக் கொண் டுள்ளது. இது எங்களை ஒரு அரசியல் முட்டுச் சந்துக்குள் தள்ளிவிட்டுள்ளது. பலரின் மனநிலை யும் போரில் எந்தப்பக்கம் வெல்லும் என்பதை யிட்டு அலைபாய்ந்து கொண்டிருக்கின்றதே அல்லாமல், இப்பொறிக்குள்ளிருந்து எவ்வகை யில் வெளிக்கிளம்புவது பற்றிக் காத்திரமாகச் சிந்திக்க தலைப்படவில்லை.

எமது சமூகத்தினரின் அரசியல் பிரச்சினைகள் பற்றி தேசியவாத வரைச்சட்டகத்துக்கு (paradigm) வெளியே சிந்திக்க இயலாது நிற்கிறோம். போரின் நடைமுறைகளும் அவற்றின் தாக்கங்களும் எமது சமூகங்களை பெரிதும் பாதித்ததோடல்லாமல் சிறு பான்மையினங்களுடன் அரசுக்கிருக்கக்கூடிய அரசியல் உறவினை மேலும் சீரழித்துள்ளது.

இப்பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர் வொன்று கிடையாது என வெவ்வேறு குரல்கள் ஒலித்துக் கொண்டிருந்தாலும் அவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்காகிப் போய் விட்டன. புலிகளின் அபிலாஷைகள் தமிழ் மக்களின் அபிலாஷைகளல்ல என்பதை மகிந்த அரசாங்கம் அலட்சியம் செய்கின்றது.

புலிகளின் வீழ்ச்சி, அவ்வியக்கத்தை அரசியல் ரீதியாக பலவீனப்படுத்துவதிலேயே தங்கி யுள்ளதே தவிர இராணுவத் தோல்விகளில் மாத்திரமல்ல என்பதையும் இவ்வரசாங்கம் கவனத்தில் கொள்ள மறுக்கின்றது. உண்மையில் புலிகளின் அரசியல் வீழ்ச்சி, மகிந்த அரசாங்கத் தின் இராணுவ வெற்றிகளுக்கு முன்னமேயே ஆரம்பித்துவிட்டது. புலிகளின் தொடர்ந்த இருப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தல் என்பது தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு ஒரு நியாயமான தீர்வினைக் காண்பதிலேயே தங்கியுள்ளது என்பதை மகிந்த அரசாங்கம் கணக்கிலெடுக்கத் தவறி விட்டது.

இந்த இக்கட்டான வேளையில், தமிழ் மக்களும் நீண்ட காலமாக தாம் அனுபவித்து வரும் துன்பங்களுக்கு தீர்வினைத் தேடிச்செல்லும் பாதை குறித்து மீள்பார்வை செய்யவேண்டும். சிங்கள பௌத்த தேசியவாதிகள் இலங்கையில் பெரும்பான்மைவாத ஜனநாயகம் (majoritarian democracy) ஒன்று நிலவுவதற்காகவே வாதிடு கிறார்கள்.



தமது வாதங்களை நிலைநிறுத்த சிங்கள சமூகத்தின் பெரும்பான்மை எண்ணிக்கையிலும், வரலாற்றை தமக்குச் சாதகமாக வாசிப்பதிலும் தான் தங்கியுள்ளனர். தமிழ்த்தேசியவாதங்களும் இதேவகையடிப்படை கொண்டவை. வரலாறும் எண்ணிக்கையுமே இங்கும் முக்கியம் பெறு கின்றன. சிங்கள பௌத்த தேசியவாதம் ஏற்படுத்தித்தந்த சூத்திரப் பொறிக்குள் தமிழ் தேசிய வாதிகளும் அகப்பட்டுக்கொண்டுள்ளனர்.

சிங்கள பௌத்த தேசியவாத எடுகோள்களைப் போன்ற தாயகக்கோட்பாடு வடகிழக்கில் தமிழரின் அதிகளவு எண்ணிக்கை ஆகிய எடுகோள்களில் கூடிய நம்பிக்கை வைத்திருக் கின்றோம். நாம் சிங்கள தேசிய வாதத்தை அதேவகையான வாதப் பிரதிவாதங் களினாலும் நியாயப்பாடுகளினாலும் தோற்கடிக்க முயல்வது வீணானது.

நாம் இலங்கையின் தேசியஇனப்பிரச்சினை எனக் கூறப்படுகின்ற அரசியல் பிரச்சினையை வேறொரு வரைச்சட்டகத்துக்குள் (paradigm shift) ஆராய முற்படவேண்டும். அதுவே இவ்விரு தேசிய வாதங்களினதும் இரட்டைக் சூத்திரத்துக் குள்ளிருந்து நாம் வெளியேவர உதவும். நாம் எமது பிரச்சினைகளுக்கு தேசியவாத விளக்கங் களை அளிக்க முற்படுவதை விடுத்து வித்தியாச மான கேள்விகளை நாம் கேட்க முனைய வேண்டும். தமிழச் சமூகம் புலிகளின் கைகளில் அகப்பட்டுக் கொண்டு, மிகுந்த துன்பத்தை அனுபவித்திருந்தாலும் நீண்ட நோக்கில் அவர் களின் அரசியல் சமூக உரிமைகள், அவர்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு ஆகியவற்றை உறுதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்வது இலங்கையரசின் கடமையே. தமிழ்ச் சமூகத்தின் அடிப்படை அரசியல் சர்ச்சை இலங்கை அரசினுடனேயாகும்.

இலங்கையரசு எல்லா சமூகங்களையும் ஒரு இலங்கையடையாளத்துக்குள் வரையறை செய்ய முயலும் அதே நேரத்தில், சிறுபான்மையினரை புறந்தள்ளுகிறது. இலங்கையரசின் பாரபட்சமான நடாத்துதலுக்கு தமிழ்மக்கள் மாத்திரமல்ல மற்றச் சிறுபான்மையினரும்கூட, குறிப்பாக, முஸ்லிம் மக்களும், மலையக மக்களும் தமது இன அடிப் படையில் பிரச்சினைகளை எதிர்கொள்ளுகின்ற னர். இம்மக்களின் கணிசமான பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் கடமை இலங்கையரசுக்கு உள்ளது. அடிப்படையில் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த மக்கள் அரசுடனான தம் பிரச்சினைகளை தீர்க்கவேண்டுமெனில், அதாவது சிங்கள பௌத்த தேசிய வாதத்தின் வரலாற்று திட்டத்தின் (historic project) நிமித்தம் தமக்கு ஏற்பட்ட பாரபட்சங் களின் பாதிப்புகளுக்கு தீர்வு காண்பதாயின், அதற்கு வழிமுறையாக நாடளாவிய பாரிய அரச சீர்திருத்தம், அதிகாரப்பகிர்வு ஆகியவற்றை கோரி நிற்கும் மாற்றங்களுக்காக போராட வேண்டும்.

**எந்தவொரு சிறுபான்மையினத்தினதும் கோரிக்கைகளுக்கு அரசினைச் செவி சாய்க்குமாறு நிர்ப்பந்திப்பதற்கு, அச் சமூகம் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்ட ஏனைய சிறுபான்மையினருடன் ஒரு பலம் வாய்ந்த கூட்டமைப்பொன்றைக் கட்டியமைப்பதன் மூலமே அரசுக்கெதிரான பலமான போராட்டத்தை முன்னெடுக்கலாம். சிறுபான்மையினரிடையே எழக்கூடிய இக் கூட்டமைப்பு பரஸ்பரம் மரியாதை, சம அந்தஸ்து, சமத்துவம், புரிந்துணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் தான் கட்டப்பட வேண்டும். ஜனநாயக அடிப்படையில் சகல விளிம்புநிலை சமூகங்களையும் உள்ளடக்கிய கூட்டமைப்பால் தான்; சிறுபான்மைச் சமூகங்கள் தாம் மோசமாக நடாத்தப்படும் முறையை எதிர்க்கக் கூடிய, வலிமைமிக்க சவால் ஒன்றை முன்னெடுக்க முடியும்.**

அரசு தனது பிரஜைகள் எல்லோரினதும் கோரிக்கைகளுக்கு குறிப்பாக சிறுபான்மை யினரின் பிரச்சினைகளுக்கு இடமளிக்க கடப் பாடுடையது என்பதை ஆணித்தரமாக எடுத்துரைக் கவும், அரசைக்கணக்குக் காட்டும்படி சவால் விடவும் இக்கூட்டமைப்பு முன்வரவேண்டும்.

நாமும் இனங்களுக்கிடையிலான பிரச்சினைக் கான தீர்வு பற்றி தெற்கிலிருந்து ஒரு ஒருங்கிசைவு வரும் என பல வருட காலமாக எதிர்பார்த்திருந் தோம். தெற்கிலுள்ள அரசியல் கட்சிகளுக் குள்ளிருக்கும் சிங்கள பௌத்த தேசியவாதிகளின் திருகுதாளங்களாலும் புலிகளியக்கத்தின் தீர்க்க தரிசனமற்ற வன்முறை அரசியலினாலும் தெற்கிலிருந்து வரவேண்டிய ஒருங்கிசைவு உருவாகவில்லை.

இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்கான தீர்வு, அதை நிலைநாட்டத்தேவையான அரச சீர்திருத்தத்தின் வடிவம் பற்றி சிறுபான்மையினங் களுக்கிடையில் ஏற்படக்கூடிய ஒருங்கிசைவினை வளர்த்தெடுப்பது இக்காலத்தின் அதிமுக்கிய தேவையாகும். இலங்கைத்தமிழ் சமூகம் முஸ்லிம், மலையக சமூகங்களுடனும் தலித் சமூகம் போன்ற மற்ற சிறுபான்மைச் சமூகங்களுடனும் சிங்கள சமூகத்தில் விளிம்பு நிலையிலிருக்கும் மக்களுடனும் புரிந்துணர்வைக் கொணர்ந்து கூட்டுக்களை சமத்துவ அடிப்படை யில் அமைக்க வேண்டும். வெவ்வேறு அடை யாளங்களைக் கொண்ட இந்த சமூகங்கள் எவற்றையுமே ‘தமிழ்தேசியம்’ என்ற ஒன்றுக்குள் உள்ளடக்க முயன்றோமெனின் அது மேலும் சிதறுண்டலையே ஏற்படுத்தும்.

சிறுபான்மைச்சமூகங்களைச் சேர்ந்த நாம் அரச சீர்திருத்தம் எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண் டும், அதிகாரப்பகிர்வு எப்படி நடைமுறைப் படுத்த வேண்டும் போன்ற விடயங்கள் பற்றி எம்மிடையே ஒரு இணக்கப்பாட்டை உருவாக்க வேண்டும். இதன் மூலமே சிங்களபௌத்த தேசியவாதிகளின் பெரும்பான்மை ஜனநாயக வாதங்களை முறியடிக்க இயலும். சிங்கள பௌத்த பெரும்பான்மை ஜனநாயகவாதத்துக் கெதிரான இச்சிறுபான்மையினரின் இணக்கப் பாடு நிச்சயம் தார்மீக பலம் கொண்டுள்ளது. புலிகளின் வன்முறை அரசியலினால் தமிழ் தேசியவாத அடிப்படையிலான தமிழரின் போராட்டம் தனது தார்மீக பலத்தை இழந்து விட்டது. தமிழரின் அரசியல் சமூக உரிமை களுக்கான போராட்டம் சிறுபான்மை யினரின் கூட்டொன்றின் மூலம் எடுத்துரைக்கப் படுமே யெனின் அதை வெறுமனே புலிகளின் தற் கொலை வன்முறை அரசியலுடன் ஒருமித்துப் பார்த்து அதை உதாசீனப்படுத்த முடியாது.

அரச சீர்திருத்தத்துக்கான சிறுபான்மையினரின் அறைகூவல் இலங்கையில் ஒரு பன்முகப் படுத்தப்பட்ட சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் நோக்கம் கொண்டதாயிருத்தல் வேண்டும். இவ்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விலக்கையடைய வேண்டிய நோக்கில் பல்வேறு அமைப்புக்கள் ஒரு ஜனநாயக அரசியல் கலா சாரத்தை உருவாக்குவதற்கு பங்களிக்கவேண்டும். இத்தகைய ஒரு புதிய அரசியல் கலாசாரத்தின் உருவாக்கத்தின் மூலமே நாம் சிறுபான்மை யினத்தவரின் ஒருங்கிசைவொன்றை ஏற்படுத்த லாம். முஸ்லிம், மலையக, தலித் சமூகத்தினருக்கு அரசினுடன் பிரச்சினைகள் இருக்கின்றதென்ப தோடு தமிழ் தேசியவாதத்துடனும் அவர்களுக்கு தீவிர பிணக்குகள் உள்ளன. இம்முரண்பாடு களைத் தீர்ப்பதெனின் ஜனநாயக அடிப்படை யிலான கலந்துரையாடல்களையும் சீரழிந்து போன எமது உறவுகளை குணப்படுத்தும் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நடைமுறை களையும் நாம் கையாள வேண்டும்.

இத்தகைய நடைமுறைகளில் தம்மை ஈடு படுத்த விரும்பும் தமிழ் முற்போக்கு அரசியல் செயற்பாட்டாளர்கள் மேலாண்மை தமிழ் தேசிய வாதத்தைவிட்டு முற்று முழுதாக வெளியே வந்தால் தான் மற்ற சிறுபான்மை சமூகங்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தலாம். நாம் மற்றைய சிறுபான்மைச் சமூகங்களுடனும் முற்போக்குச் சிந்தனையுடைய சிங்கள செயற்பாட்டாளருடனும் சேர்ந்து. செயலூக்கத்துடன் கூடிய வரலாற்று பூர்வமான பங்களிப்பை ஒருங்கிசைவை ஏற்படுத்துவதன் மூலம் முன்னே செல்லலாம்.

இத்தகையதொரு முயற்சி இலங்கையில் பாரிய அரச சீர்திருத்தத்தை இலங்கையில் கொணரவும், அதன் மூலம் பிரதேசங்களுக்கு கூடிய அதிகாரங்கள் வழங்கும் முயற்சிகளுக்கு பெரிய அளவில் பங்களிக்கக் கூடும். அத்துடன் ஜனாதிபதி அனுபவிக்கும் எல்லையற்ற அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கவும், ஒற்றையாட்சியினை மீளமைக்கவும் உதவக் கூடும். மேலும் இத்தகையதொரு முயற்சி, அரசு தனது ஸ்தாபனங்களையும் யாப்பையும் ஜனநாயக மயப்படுத்த நிர்ப்பந்தித்து, அரசுக்கு ஒரு சவாலாகவும் அமையும்.

அரசாங்கம் தீர்வு பற்றி, எடுத்திருக்கும் நடவடிக்கைகள் அதாவது சர்வகட்சிபிரதிநிதிகள் குழுவின் முழுமையான அறிக்கையை வெளி வராமல் பண்ணியது, கிழக்கு இலங்கையில் நடைபெற்ற தேர்தல், 13ம் திருத்தச் சட்டத்தை தற்போது நடைமுறைப்படுத்தும் முறைமை என்பன பற்றி நியாயமான கேள்வியெழுப்புவது முக்கியமாகின்றது. நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி பதவியில் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் பிரயோகமும் துஷ்பிரயோகமும் இந்த சிறுபான்மையினரின் கூட்டமைப்பினால் கேள்விக்குள்ளாக்காக்கப்பட வேண்டும். தமிழ் தேசியவாதத்துக்கு சம்பந்தமில்லாதது போலத் தோன்றும் பல விடயங்கள் உதாரணமாக நீண்ட காலமாக சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் 17-ம் சீர்திருத்தச்சட்டம், தெற்கில் ஊடகச் சுதந்தரம், ஜனாதிபதியின் அதிகாரங்களின் துஷ்பிரயோகம் ஆகியவை இக்கூட்டின் அக்கறையை நிச்சயம் ஈர்க்க வேண்டும்.

புகலிடத்தில் வாழும் மாற்றுக்கருத்துள் ளோராகிய நாம் இக்கூட்டொன்று உருவாவதற்கு எம்மாலானதைச் செய்யவேண்டும். அத்துடன் நாம் சிறுபான்மையினரின் ஒருங்கிசைவொன்று உருவாவதற்கான பணியை முன்னெடுத்துச் செல்வதுடன் அழிவுக்கிட்டுச்செல்லும் இரு தேசியவாதங்களின் போட்டா போட்டியைப் பற்றிய சர்ச்சையிலிருந்து விலகி அதை மறுத் துரைக்கவேண்டும். புகலிடத்தில் வாழும் நாம் இலங்கையில் வாழும் மக்களை விடவும் கூடிய சுதந்திர வெளியில் வாழ்கிறோம். நாம் இக் கருத்துகளை பொதுக்களங்களில் பயமின்றி ஓங்கி ஒலிக்கவேண்டும். இந்நடவடிக்கைகள் மூலம் புகலிடத்தில் ஒரு ஜனநாயக அரசியல் கலாசாரம் உருவாவதற்கு நாம் பங்களிக்கலாம்.


நன்றி தெகல்கா





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியல் பரப்பில் பல பாரபட்சங்களை அனுபவிக்கின்றனர். அத்துடன் எல்லா சமூகங்களிலும் போரின் அனர்த்தங்களினால் ஒரே வகையான பாதிப்புகளை அனுபவிக்கின்றனர். சமாதானம் பற்றிய பரந்த அடிப்படையிலான சர்ச்சைகளிலும் இத்தகைய பெண்களின் குரல்கள் கேட்கப்பட வேண்டும்.

தென்னிலங்கையில் சில பிராந்தியங்களில் வாழும் சாதாரண உழைக்கும் மக்கள் உலகமயமாக்கலின் ஆதிக்க சக்திகளுக்கும் அவர்களின் உள் நாட்டுப் பிரதிநிதிகளின் நடவடிக்கைகளுக்கும் ஆட்பட்டு தமது நிலம், சுற்றுச்சூழல், பொருளாதாரம் ஆகியவற்றின் மீதான தம் கட்டுப்பாட்டை இழந்துள்ளனர். இது ஒரு நாடளாவிய பிரச்சினையாகும். எந்தவொரு இனத்துக்கும் இவை பிரத்தியேகமானதல்ல.

ஒவ்வொரு சமூகத்தினதும் பிரச்சினைகளைக் கணக்கில் எடுக்க கூடிய நடைமுறையொன்றை நாம் தேர்ந்தெடுத்து சமரசம் விட்டுக்கொடுப்பு ஆகிய மனப்பான்மையுடன் அணுகி, எல்லா சமூகங்களும் பெரும்பான்மை இனம் உட்பட, அதிகாரப்பரவலாக்கத்தின் மூலம் தாம் வெற்றி ஈட்டியுள்ளனர் என்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டாக வேண்டும். பெரும்பான்மையினம் கூட தான் முற்றிலும் தோற்றுப் போய்விட்டது, எல்லாவற்றையும் இழந்து விட்டது என்ற உணர்வைக் கொண்டிருந்தால் நிரந்தர சமாதானம் ஏற்பட வழியில்லை. தற்சமயம் நாடு அரசியல் ரீதியாக ஒரு குட்டைக்குள் தேங்கி நிற்பது போன்ற உணர்வே மேலிட்டுள்ளது. சிறுபான்மையினரை பிரதிநிதிப் படுத்தும் கட்சிகள், அழுத்தக்குழுக்கள், பிரச்சாரக் குழுக்கள் ஆகியவற்றின் பலம் வாய்ந்த கூட்டணியொன்று தான் தற்சமயம் நாம் அகப்பட்டிருக்கும் அரசியல் சகதியிலிருந்து எம்மை வெளியே கொணர உதவ முடியும். இத்தகையதொரு கூட்டணி, அரசுடன் ஜனநாயக அடிப்படையில் வாதிடவும் பேச்சு வார்த்தை நடாத்தவும் தலைப்பட்டால், அதுவே பெரும்பான்மை இனத்துக்கு, அரசியல் யாப்பின் சீர்திருத்தத்துக் கான முயற்சிகள், இப் பேச்சுவார்த்தைகள் பிரிவினைக் கோரிக்கையின் நிழலில் நடாத்தப் படவில்லை என்ற தன்னம்பிக்கையைத் தரும்.

இத்தகையதொரு பலம் வாய்ந்த கூட்டணியைக் கட்டியமைப்பது எம் நாட்டின் அரசியலில் அழிவை நோக்கிச்செல்லும் தேசியவாதங்களின் ஆதிக்கத்தை முடிவுக்கு கொண்டுவர ஏதுவாகவிருக்கும். ▣

சிறுபான்மை மக்கள் ஒன்று சேர்ந்து போராடுவதற்கு எல்லா சிறுபான்மையினங்கள்; குழுக்களை உள்ளடக்கிய ஒரு நடைமுறையையும் அரசியல் பாதையையும் தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு இனத்தின் பிரச்சினை பற்றி மாத்திரம் தொடர்ந்து நாம் கவனம் செலுத்த முடியாது. அத்துடன் வடக்கு கிழக்கினுள் வாழும் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மாத்திரமல்ல வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் மக்களின் பிரச்சினைகளிலும் அக்கறை காட்டுதல் இத்தகைய கூட்டமைப்பைக் கட்டியெழுப்ப உதவி செய்யும்.

முஸ்லிம் மக்களின் பல அச்சங்களை - தம் நிலங்களை இழக்கும் அச்சம், தமது கலாசார அரசியல் வெளியை இழக்கும் அச்சம், மேலாண்மை செலுத்தும் இரு தேசிய வாதங்கள் பற்றிய அவர்களின் பயம் ஆகியவற்றுக்கு தமிழ் அரசியல் செயல்பாட்டாளர்கள் முகங்கொடுக்க வேண்டும். மலையக மக்களுக்கு தமது பாதுகாப்பு, மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தேக்கம் ஆகிய பிரச்சினைகள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். அதிகாரப் பரவலாக்கம் மூலம் எவ்வகையில் மலையக மக்கள் பொருளாதார மேம்பாடடையலாம், அரசின் சேவைகளை எப்படி மற்றைய இனத்தினர் போல் அணுகி பாவிக்கலாம் போன்ற விடயங்களுக்கு விடை காணவேண்டும். பெண்களும் கூட சிறுபான்மையினராயில்லாவிட்டாலும் சிறுபான்மையினரைப் போன்றே சமூக பொருளாதார





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சித்தார்த்தன்





# கடவுளர்களின் நகரங்களில் வாழுதல்

எல்லாப்பாதைகளும் திருப்பங்களில் முடிகின்றன
ஓப்பாரிகளும் விசும்பல்களும்
ஓலங்களினாலுமான நகரத்தில்
வெறும் பிரார்த்தனைகளுடன் வாழுகின்றோம்

எல்லாப் பிரார்த்தனைகளும் கடவுளருக்கானதில்லை
எல்லாக்கடவுளர்களும் சனங்களுக்கானவையுமல்ல
இருந்தபோதும்
பிரார்த்தனைகளால் நிறைகிறது நகரம்
கடவுளர்கள்
மகா காலங்களினது அற்பத்தனங்களிலிருந்து
வந்துவிடுகின்றனர் நகரங்களுக்கு

மதுவருந்தி போதையில் மிதக்கும் கடவுள்கள்
கொலைகளின் சாகசங்களைப் பேசும் கடவுள்கள்
சித்திரைவதைக் கூடங்களில்
குதவழி முட்கம்பி சொருகும் கடவுள்கள்
தெருக்களில்
உடைகளைந்து வெடிகுண்டு தேடும் கடவுள்கள்

அடையாள அட்டைகளைத் தொலைத்தவனின் மனமும்
மறந்துபோய் வீட்டில் விட்டு வந்தவனின் மனமும்
தெருக்களில் கதறுகின்றன

கடவுளரின் அற்பத்தனங்களுக்கிடையில்
வெறும் பிரார்த்தனைகளுடன் இரவுகளை உறங்குகிறோம்
பகல்களை ஓட்டுகிறோம்

கடவுளர் அலையும் காலத்தில்
இரவில் புணர்ச்சிக்கலையும் நாய்களினது
காலடி ஓசைகளும் கடவுளர்களுடையவைதான்

ஓப்பாரிகளும் விசும்பல்களும்
ஓலங்களினாலுமான நகரத்தில்
சனங்களின் பிரார்த்தனை
தெருவில் சுடப்பட்டு இறந்தவனின்
இறுதி மன்றாடலாயும் கதறலாயும்
நிர்க்கதியாய் அலைகிறது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# புலிகளுக்குப் பிறகு

அ. மார்க்ஸ்



இந்தக் கட்டுரையை நான் எழுதத் தொடங்கிய போது 'கர்னல்' கருணா எனப்படும் வினாயக மூர்த்தி முரளிதரன் ஆளும் கட்சியில் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி) சேர்ந்து அமைச்சராகப் பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொள்ளும் செய்தி வெளி வந்துள்ளது. எனது கணக்குப்படி அவர் 106வது அமைச்சர் என நினைக்கிறேன். தேசிய ஒருமைப் பாட்டுத் துறைக்கு அவர் பொறுப்பேற்றுள்ளார். அவரது திறமையை மெச்சிப் பேசிய ஜனாதிபதி ராஜபக்சே அபிவிருத்தி மற்றும் சமூகநலம் என்கிற அம்சங்களில் கருணாவின் கொள்கை தமது சுதந்திரக் கட்சியின் கொள்கையுடன் பொருந்தி வருகிறது என்று சொல்லியுள்ளார். சில தசாப்தங்களுக்கு முன் மட்டகளப்பு தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் செ. இராஜதுரை தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்தபோது 'கிழக்கு மாகாணத் தமிழரின் அபிவிருத்திக்காக' இப்படிச் செய்வதாகக் கூறியது நினைவுக்கு வருகிறது.

முல்லைத் தீவுப் பகுதியில் மேலும் மேலும் புலிகளின் ஆடற்களம் சுருங்கிக் கொண்டே போகிறது. வெகு விரைவில் அவர்களின் கதை முடிக்கப்படலாம் எனப் பத்திரிகைகள் ஆருடங்கள் எழுதுகின்றன. கெரில்லாப் போர்முறைக்குத் தாவலாம் அல்லது வேறு நாடுகளுக்குத் தப்பி ஓடலாம் என்கிற ஊகங்களும் சொல்லப் படுகின்றன. அப்படியெல்லாம் ஆகாமல் போய் இதே வடிவில் இன்னும் கொஞ்சம் தொடரும் வாய்ப்பையும் மறுத்துவிட முடியாது. ஸ்ரீலங்காவிலுள்ள ஐ.நா. அவை ஒருங்கிணைப்பாளர் *(Resident Humanitarian Coordinator)* சமீபத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றின்படி சுமார் 2,00,000 சிவிலியன்கள் போர்ப் பகுதியில் சிக்கிக் கொண்டுள்ளனர். பெரிய அளவில் பெண்கள், குழந்தைகள் இதில் அடக்கம். உணவு, மருந்து, தண்ணீர்ப் பற்றாக்குறைகளால் அவதியுறும் இம் மக்கள் ஒரு பக்கம் இராணுவத் தாக்குதலால் சாகிறார்கள் என்றால் இன்னொரு பக்கம் தப்பி ஓடுபவர்களைப் புலிகள் சுட்டுக் கொல்வதாகவும் அவ்வறிக்கை சொல்கிறது.

ராஜபக்சேவைப் பொருத்தமட்டில் குறைந்த பட்ச சிவிலியன் இழப்புக்களுடனே யுத்தத்தை நடத்துவதாக இந்தியாவின் காதில் விழுமாறு அடிக்கடி உரக்கக் குரல் கொடுத்த போதிலும், அவருக்கு எல்லாத் தமிழர்களும் 'பயங்கர வாதிகள்' அல்லது 'பயங்கரவாத ஆதரவாளர்கள்' தான். தமிழ் சிவிலியன்கள் போரின் விளைவாகவே கொல்லப்பட்ட போதிலும், புலிகள் அவர்களைப் பிடித்து வைத்திருப்பதன் விளைவாகவே அது நடக்கிறது எனக் காரணம் சொல்லி இதை "இனப்படுகொலை" (Genocide) என வரையறுக்க மறுக்கின்றன ஐ.நா. நிறுவனங்கள்.

ஆக, இத்தனை இழப்புகளுக்கும் மத்தியில் இங்கு உடனடியாகவோ, இல்லை சற்றுத் தாமதமாகவோ ஏற்படப் போகிற போர் நிறுத்தம் இருதரப்பு உடன்பாட்டின் அடிப்படையில் ஏற்படப்போகிற ஒன்றல்ல. மாறாக ஒரு தரப்பு வெற்றியின் மீது கட்டுப்படுகிற போர்நிறுத்தம். இதன் விளைவுகள் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் இன்னும் பல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுபான்மையினர் ஆகியோர் மனநிலையில் என்ன மாதிரி விளைவுகளை ஏற்படுத்தும்? இன்று நாம் கரிசனம் கொள்ள வேண்டிய அம்சம் இதுவே. போர் நிறுத்தம் உடனடி சாத்திய மாகாமல் போர் தொடரும் பட்சத்திலும் கூட இந்த விளைவுகள் ஏற்படவே செய்யும்.

இந்தக் கால் நூற்றாண்டுப் போரில் தமிழர்கள் கிட்டத்தட்ட 70,000க்கும் மேற்பட்ட உயிர்கள், உடைமைகள், எல்லாவற்றையும் தொலைத்து விட்டு நிற்கிறார்கள். உள்நாட்டு இடப்பெயர்வு கள், வெளிநாட்டுப் புலப் பெயர்வுகள், குடும்பச் சிதைவுகள் எல்லாவற்றோடும் ஒரு போரையும் தோற்றுவிட்டு வெறுங்கையோடு நிற்கிறார்கள். வெற்றிபெற்றவர்களின் நிழலில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அழிந்துபோன கிராமங்கள், இடிந்துபோன பள்ளிகள், மருத்துவ மனைகள் எல்லாம் இனி புனர் நிர்மாணம் செய்யப்பட வேண்டும்.

இன்னொரு பக்கம் வெற்றிப் பெருமிதம் இனவாத உணர்வை அதன் உச்சத்திற்குக் கொண்டு நிறுத்தியுள்ளது "கொழும்பு முதல் திருகோணமலை வரை, பாய்ன்ட் பெட்ரோ முதல் டோன்ட்ரா ஹெட் வரை ஒவ்வொரு வீட்டு உச்சியிலும் சிங்கக் கொடி பறக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை" எனக் கொக்கரிக்கிறார் ராஜபக்சே (ஜன 17, 2009). இராணுவ தளபதி சரத் பொன்சேகா இரண்டாண்டுகட்குமுன்பே கனடா இதழ் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் இது சிங்களவர்களின் நாடு. தமிழர்கள் இதை உணர்ந்து நடந்து கொள்ளவேண்டும் என அறிவுரை பகர்ந்தார். அதிகாரப் பரவல் தொடர்பாக 2006ல் அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் முன் கருத்துரை வழங்கும் போது 'ஜாதீய ஹெல உருமய' எனப்படும் பிக்குகளின் கட்சி சார்பாக, "தமிழர்களின் தாய்நாடு (இந்தியாவிலுள்ள) தமிழ்நாடு தான் இங்கே அவர்கள் சிறுபான்மையினர் மட்டுமே" என அக்கட்சி பிரதிநிதி சம்பிக்கா ரணவகே கூறினார். "சிங்களவர்கள் மட்டுமே இந்நாட்டின் குடிமக்கள். மற்றவர்கள் எல்லோரும் இங்கே வருகை புரிந்தவர்களே (Visitors). பவுத்தத்தின் அடிப்படை யான கருணையின் விளைவாக அவர்களின் வருகையை நாங்கள் எதிர்க்கவில்லை. இந்தக் கருணையை அவர்கள் என்றென்றைக்குமானதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. எங்கள் மன்னர்கள் வணிகம் செய்வதற்கு அனுமதி அளித்ததாலேயே இங்கே முஸ்லிம்கள் வந்தனர். மொகலாயப் படையெடுப்புக்கு அஞ்சி இங்கே தமிழர்கள் தஞ்சமடைந்தனர். இவர்கள் எல்லோரும் இன்று

**ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்புகளான மதச்சார்பின்மை, தாராளவாதம், பன்மைத்துவம், நல்லாலுகை, இன ஒருமைப்பாடு எதுவும் செயல்படாத ஒரு அரசின் கீழ்தான் இன்று எல்லா இலங்கை மக்களும் வாழ்கின்றனர்.**

நன்றி மறந்து நிற்கின்றனர்" என மிகச் சமீபத்தில் ஒரு முறையும் அவர் குறிப்பிட்டார் (Daily Mirror 16, அக் 2008).

சென்ற வாரத்தில் இணைய தளத்தில் இப்படி யொரு வாசகத்தைப் பார்த்தேன்: "சிங்களவர்கள் இன்று தமிழ்ச் சமூகத்திடம் எதிர்பார்ப்பது என்னவெனில் ஒற்றை ஸ்ரீலங்கா என்கிற கொள்கைக்கு மனப்பூர்வமாக விசுவாசம் காட்டு வதைத்தான், இந்தத் தீவு எல்லா மக்களுக்குமான இனத் தாயகம் (ethnic homeland) எனச் சொல்லி 'ஒற்றை இன நிலப்பகுதிகளை' (mono ethnic regions) யாரும் கோரக்கூடாது". அரசியல் தீர்வு பற்றி எழுதப்படும் கட்டுரைகள் எல்லாம் இந்தியா வைப் போல ஒரு கடுமையான பிரிவினை எதிர்ப்பு தடைச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்றுதான் தொடங்குகின்றன. சுயநிர்ணய உரிமை என்றெல்லாம் இலங்கையில் இன்று யாரும் வாய் திறக்க முடியாது.

இப்படி நிறையச் சொல்லலாம். வெகு விரைவில் பொதுத் தேர்தலும் அதற்குப் பின் ஜனாதிபதி தேர்தலும் வர உள்ளன. இந்த இராணுவ வெற்றியை இன வாதப் பெருமை யாக்கி வாக்குகளாகக் குவித்துக் கொள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயங்காது. ஜாதிய ஹெல உருமய, ஜனதா விமுக்தி பெரமுனே முதலான இனவாதக் கட்சிகளும் அதைத் தான் செய்யப் போகின்றன. ஆக ஸ்ரீலங்காவின் ஒவ்வொரு மக்கட் பிரிவுகளும் மற்றவைகளிலிருந்து முற்றாக விலகி (Polarisation) ஒதுங்கி நிற்கும் நிலைக்கு இன்று வந்துள்ளன. இந்தச் சூழல் தமிழ் மக்களுக்கு மட்டுமின்றி சிங்களப் பெரும் பான்மையினருக்கும் முஸ்லிம் மக்களுக்கும் ஜனநாயகத்தையும் அடிப்படை மனித உரிமை களையும் மறுப்பதற்கே கொண்டுவிடும்.

1948ல் ஸ்ரீலங்கா சுதந்திரமடைந்தபோது இந்தியாவைப் போலன்றி பெரும் போராட் டங்கள், பிளவுகள், இனப் படுகொலைகள், மதக் கலவரங்கள் என்றெல்லாம் இல்லாமல் ஒப்பீட்ட ளவில் அமைதியாக அது நடந்தேறியது. மனித வளர்ச்சி நிலை, பொருளாதாரம் ஆகிய அம்சங் களிலும் கூட அன்று சிங்கப்பூர், தென் கொரியா முதலான நாடுகளுக்கு அது ஒரு 'மாடலாக'





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**வெறுப்பின் அடிப்படையில் கட்டமைக்கப்படும் அடையாள உணர்வுகளுக்கு நிலையான எதிரி என்று ஒன்று கிடையாது. வெறுப்பதற்கு அதற்கு ஏதேனும் ஒரு எதிரி வேண்டும் என்பது மட்டுமே அடிப்படை.**

இருந்தது. பிற ஆசிய, ஆப்ரிக்க நாடுகளைக் காட்டிலும் வளர்ச்சி நிலையில் உயர்ந்திருந்தது. ஆனால் இன்று ஸ்ரீலங்கா தனது 60ம் சுதந்திர நாளைக் கொண்டாடியபோது அது போரினால் சீரழிந்த ஒரு நாடு. 25 ஆண்டு கால சிவில் யுத்தம் அதன் பொருளாதாரத்தையும் அகக் கட்டுமானங் களையும் மட்டும் அழித்துவிடவில்லை. வீங்கிப் போன ஒரு அதிகார வர்க்கம், ஊதிப்போன ஒரு அமைச்சரவை (106 பேர்!) ஒப்பிட்டுச் சொல்ல இயலாத ஊழல், குடும்ப ஆட்சி, இராணுவத்தின் ஆசியுடன் வெளிப்படையாக இயங்கும் கொலைப் படைகள், ஆள் கடத்தல்கள், சித்திர வதைகள், பாலியல் வன்முறைகள், மனித உரிமை மீறல்கள்... இதுதான் இன்றைய ஸ்ரீலங்கா. 'நாட்டெல்லைகள் இல்லாப் பத்திரிகையாளர்கள் (Reporters Without Berders) என்னும் அமைப்பு ஒன்று சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்றின்படி (BBC News, 2008) உலகிலுள்ள ஜனநாயக நாடு களிலேயே பத்திரிகைச் சுதந்திரத்தில் ஆகக் கடைசியாக உள்ளநாடு ஸ்ரீலங்கா.

'Fund for Peace' என்னும் அமைப்பும் 'Forign Policy' என்னும் இதழும் நடத்திய கணக்கெடுப்பில் 'தோல்வியுற்ற அரசுக்கான குறியெண்ணில் (Failed State Index) ஸ்ரீலங்காவின் இடம் 20 எனக் கண்டறி யப்பட்டுள்ளது (2008). சுமார் 12 தரவுக்குறி (Indicates) களின் அடிப்படையில் கணக்கிடப்படும் குறியெண் இது. ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஆயுதம் தாங்கிய 20 குண்டர்களால் வெடிவைத்துத் தகர்த்து 2 மில்லியன் டாலர் இழப்பு ஏற்படுத்தப்பட்டதுடன் 2009ம் ஆண்டு தொடங்கியது. அடுத்த இரண்டு நாட்களில் 'மோட்டார் சைக்கிள் ஸ்குவாட்' எனச் சொல்லப் படும் கொலைப்படையினரால் பலரின் கண்முன் லசந்தா விக்ரமதுங்கா என்கிற ஸ்ரீலங்காவின் தலைசிறந்த பத்திரிகையாளர் சுட்டுக் கொல்லப் பட்டார். ராஜபக்சே ஆட்சிக்கு வந்தபின் தமிழர் தேசிய கூட்டணியின் TNA மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளர். பத்திரிகை யாளர்களுக்கு ஈராக்கைக் காட்டிலும் ஆபத்தான நாடு இலங்கை என இன்று கூறப்படுகிறது.

ஒரு சிறு கும்பலிடம் அனைத்து அதிகாரங் களும், முடிவெடுக்கும் உரிமைகளும் குவிந் துள்ளன. ஜனாதிபதியின் இரு இளைய சகோதரர் கள் பேசிலும் கோட்டபயாவும் இன்று இலங்கை யின் மிகமுக்கியமான அதிகார மையங்கள். பாராளுமன்ற உறுப்பினரான பேசில் ஜனாதிபதி யின் எண்ணற்ற ஆலோசனைக் குழுக்களின் உறுப்பினர். பாதுகாப்புத் துறைக்குப் பொறுப் பான கோட்டபயா இன்று இராணுவத் தீர்வைத் தவிர வேறு வழிமுறைகளுக்கே இடமில்லை என முனைப்புடன் இயங்குபவர். மூத்த சகோதரர் சமல் ஒரு அமைச்சர். அப்புறம் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, பிரதமர் ரத்னசிரீ விக்ரமநாயகா, ஜாதிய ஹெல உருமயாவின் சம்பில்கா ரணவகே ஆகியோரோடு ஹாரி ஜெயவர்தனே, சஜின் வாஸ் குணவர்தனே முதலான கார்ப்பரேட் முதலாளிகள்- இவர்கள் தான் இன்று இலங்கை அரசைக் கையில் வைத்திருப்பவர்கள். இவர்கள் வைத்ததுதான் அங்கே சட்டம்.

போர் மிகப்பெரிய அழிவுகளுக்கு மட்டு மல்ல, ஊழல்களுக்கும் வழிவகுத்துள்ளது. புலிகளின் மிக எளிய தயாரிப்பான, ஒப்பீட்ட ளவில் மெதுவாகச் செல்லக்கூடிய 'செஸ்னார்' விமானம் கொழும்பில் தாக்குதல் நடத்தியதை காரணம்காட்டி உலகின் மிக நவீனமான, அதிவேக 'மிக் 29' ரக விமானங்கள் ஐந்து வாங்கப்பட்டதில் 8 மில்லியன் இலங்கை ரூபாய்கள் அளவு ஊழல் நடந்துள்ளது. முன்னாள் கப்பற்படைத் தளபதி தயா சாந்தகிரி மீது இன்று ஊழல் விசாரணை நடந்து கொண்டுள்ளது. இஸ்ரேலிலிருந்து 'ஆர்டிலெரி' துப்பாக்கிகள் வாங்குவதில் 400 மில்லியன் இலங்கை ரூபாய்கள் 'இழப்பு' ஏற்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப் பட்டுள்ளது. தற்போதைய தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கனங்கோடா மீதும் இராணுவ 'சோனார்' கருவி வாங்கிய வகையில் 56 மில்லியன் இலங்கை ரூபாய்கள் ஊழல் குற்றச்சாட்டு உள்ளது.

அரசு வசம் இருந்த ஓய்வூதிய நிதி, 'பாங்க் ஆஃப் சிலோன்' எனப்படும் அரசு வங்கி ஆகிய வற்றிலிருந்து 3 மில்லியன் ரூபாய்கள் கடன் பெற்று ஜனாதிபதியின் பெயரில் தொடங்கப் பட்டுள்ள 'மிகின் ஏர்வேய்ஸ்' என்னும் அரசு விமான நிறுவனம் சற்று முன் குறிப்பிட்ட இரு கார்ப்பரேட் முதலாளிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. லஞ்ச ஊழல் விசாரணையில் முனைப் பாக இருந்ததற்காக விசாரணை ஆணையத் தலைவர் பியசேனா ரணசிங்கேவை அப்பதவியி லிருந்து நீக்கியுள்ளார் ராஜபக்சே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனவாத உணர்வில் கட்டமைக்கப்பட்டுள்ள இன்றைய இலங்கை அரசை அரசியல் ஆய்வாளர்கள் 'இனவாத ஆட்சி' (Ethnocracy) என்கின்றனர். *Ethnocentric Democracy, Illiberal Democracy* என்கிற கருத்தாக்கங்களும் பயன்படுத்தப்படுகின்றன. ஆட்சியில் பௌத்த பிக்குகளின் (தேரர்) செல்வாக்கை முன்னிட்டு இதை ஒரு 'தேரராட்சி' என்றும் சொல்வதுண்டு. (பார்க்க: *Neil Devotta, Srilanka at Sixty, EPW, Jan 31.2009*). ஆக ஜனநாயகமும், மனித உரிமைகளும் மறுக்கப்படுவது தமிழர்களுக்கு மட்டுமல்ல, முஸ்லிம், சிங்களப் பொது மக்களுக்கும் தான் என்பதை மறந்துவிடக் கூடாது. ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்புகளான மதச்சார்பின்மை, தாராளவாதம், பன்மைத்துவம், நல்லாளுகை, இன ஒருமைப்பாடு எதுவும் செயல்படாத ஒரு அரசின் கீழ்தான் இன்று எல்லா இலங்கை மக்களும் வாழ்கின்றனர்.

சேனநாயகா முதல் ராஜபக்சே வரை அடுத்தடுத்து வந்த ஆட்சியாளர்கள் அவ்வளவு பேரும் இனவாதத்தை முன் வைத்தே அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டனர். 1948ல் உருவாக்கப்பட்ட சோல்பரி அரசியல் யாப்பின் 29ம் பிரிவு தமிழர்களின் அடையாளத்தை ஏற்று 'குழு உரிமைகளை' (Groups Rights) அளித்தது. 1972ல் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி ஆட்சிமுறையில் 'குழு உரிமை' மறுக்கப்பட்டு தனிநபர் உரிமைகள் மட்டுமே வழங்கப்பட்டது. இடையில் உருவான 13வது திருத்தம் ஒரு ஒற்றை அரசின் கீழ் அதிகாரப் பரவலுக்கு வழிவகுத்தது.

2006ல் உருவாக்கப்பட்ட 'அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு'வில் சிறுபான்மை அறிக்கை, பெரும்பான்மை அறிக்கை என இரண்டு அறிக்கைகள் உருவாயின. 11 உறுப்பினர்கள் (மொத்த உறுப்பினர் 17) கையெழுத்திட்ட பெரும்பான்மை அறிக்கை ஒற்றை ஆட்சியின் கீழ் அதிகாரப்பரவல், குழு உரிமை என்கிற வகையில் தமிழர்களின் அடையாளத்தை ஏற்பது முதலான பரிந்துரைகளைச் செய்துள்ளதாக அறிகிறோம். இத்தோடு சிங்களத்துடன் தமிழுக்குச் சம உரிமை, பௌத்தத்திற்கான சிறப்புரிமை நீக்கப்பட்டு மதச்சார்பற்ற அரசு அமைய வழிவகுக்கும் திருத்தங்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு இன்று உலக நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும். அதிகாரப் பரவல் என்பது ஜனநாயகத்துடன் இணைந்ததாக இருத்தல் அவசியம். எந்த ஒரு இன அடிப்படையிலான அடையாளமும் பல உள் அடையாளங்களை ஒடுக்குவதாகவே அமையும். இலங்கையின் கடந்த கால் நூற்றாண்டாக நடைபெறும் சிவில் யுத்தம் இரண்டு ஒன்றையாட்சிக் கோரிக்கைகளுக்கு இடையேயான போராகவே இருந்து வந்துள்ளது. வெறுமனே ஒற்றையாட்சி அமைதல் மட்டுமே ஜனநாயகத்திற்கான உத்தரவாதமாக முடியாது.

வடக்கு - கிழக்கு மாநில ஒருங்கிணைவு என்கிற 80-களின் கோரிக்கையை இன்று தமிழ் பேசும் மக்கள் எந்த அளவு ஏற்கிறார்கள் என்கிற மதிப்பீடும் இன்று தேவையாகிறது. முஸ்லிம்கள், கிழக்குப் பகுதியினர், தலித்துகள் ஆகியோரின் கருத்துக்களை அறிய பொது வாக்கெடுப்பு ஒன்றும் தேவையாகிறது. இதெல்லாம் இன்று எந்த அளவு உடனடிச் சாத்தியம் என்கிற ஐயம் இயல்புதான். ஆனால் இது குறித்த விவாதம் ஒன்று தேவை. இந்த விவாதத்திற்கான தேவையை இரு இன மக்களும் உணர வைப்பதில் இரு இனங்களையும் சேர்ந்த அறிவுஜீவிகள், ஜனநாயக சக்திகள், இடதுசாரிகளின் பங்கு இன்று முக்கியமாகிறது. துருவங்களாக ஒதுங்கி நிற்கும் இனங்களிடையே ஒரு 'பகை மறப்பு' (Reconcilation) தேவைப்படுகிறது.

புலிகள் ஒழிக்கப்படுவதோடு பிரச்சினை முடிந்துவிடப் போவதில்லை. ஆனால் அப்படித்தான் ராஜபக்சே அரசு சொல்லிவருகிறது. இனவாத அரசுக்கு எந்தவகையிலும் குறையாத படுகொலைகள், மனித குண்டு வெடிப்புகள், சித்திரவதைகள், ஆட்கடத்தல்கள் ஆகியவற்றுக்கும் காரணமாகிற புலிகளின் இத்தகைய நடவடிக்கைகளில் அடிப்படையில் அவர்களைப் 'பயங்கரவாதிகள்' என ராஜபக்சே அரசு வரையறுப்பதை இன்று உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. அப்படியே பார்த்தாலும் கூட புலிகளின் மறைவோடு 'பயங்கரவாதம்' தான் மறையுமே ஒழிய இனப்பிரச்சினை ஒழிந்துவிடப் போவதில்லை. தமிழர்களின் சில அடிப்படையான உரிமைகள் நிலை நாட்டப்படும் வரை பிரச்சினை தொடரவே செய்யும். பிரச்சினை தொடரும் வரை தமிழர்களுக்கு மட்டுமல்ல, முஸ்லிம்களுக்கும், சிங்களவர்களுக்கும் ஜனநாயகமும், மனித உரிமைகளும் வழங்கப்படப் போவதில்லை.

வெற்றிப் பெருமிதத்துடன் இன்று உருவாக்கப்பட்டுள்ள பேரினவாதம் தமிழர்களுக்கு எதிராக மட்டுமல்ல முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என மதச் சிறுபான்மையினருக்கும் எதிராக உருப்பெற்றுள்ளது. இந்தியாவில் இன்று உருவாகியுள்ள இந்துத்துவப் பாசிசத்திற்கு இணையான சில நடவடிக்கைகள் இன்று இலங்கையிலும் மேற்கொள்ளப்படுகின்றன. கிறிஸ்தவ வழிபாட்டு இல்லங்கள் தாக்கப்படுகின்றன. தொண்டு நிறுவனங்கள் இலக்காக்கப்படுகின்றன. சமீபத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில் சுற்றுக்கு விடப்பட்டுள்ள ஒரு 'ஈ-மெயில்' கடிதம் முஸ்லிம்கள் மீது வெறுப்பைக் கக்கு கிறது. இஸ்லாமிய அடிப்படைவாதிகள் எனவும் பவுத்தத்திற்கு எதிரானவர்களுடன் இணைந்து 'நாசரிஸ்தான்' ஒன்றை கிழக்கு மாகாணத்தில் உருவாக்கப் போகிறார்கள் எனவும் அது எச்சரிக்கிறது. முஸ்லிம்களுக்கு நிலங்களை விற்க வேண்டாமெனவும், சிங்களப் பெண்களை முஸ்லிம்களுடன் பழகவிடவேண்டாம் எனவும் அது சிங்கள பவுத்தத்திற்கு வேண்டுகோள் விடுக்கிறது.

இந்த முயற்சிகள் இன்று சிறிய அளவில் இருக் கலாம். ஆனால் போர் முடிவுக்குப் பின் இது விசுவரூபம் எடுக்க வாய்ப்பு உண்டு. வெறுப்பின் அடிப்படையில் கட்டமைக்கப்படும் அடையாள உணர்வுகளுக்கு நிலையான எதிரி என்று ஒன்று கிடையாது. வெறுப்பதற்கு அதற்கு ஏதேனும் ஒரு எதிரி வேண்டும் என்பது மட்டுமே அடிப்படை. மீண்டும் இந்திய எடுத்துக்காட்டு ஒன்றைச் சொல்லலாம். மகாராஷ்டிரத்தின் வலுவான பாசிச அமைப்பான சிவசேனா தொடக்கத்தில் கம்யூ னிஸ்டுகளைத்தான் இலக்காக்கியது. பின் அது தமிழர்கள், முஸ்லிம்கள், இன்று வட இந்தியர்கள் எனத் தன் இலக்கை மாற்றிக் கொண்டே போகிறது. "அவர்கள் கம்யூனிஸ்டுகளைத் தேடி வந்தார்கள். நான் பேசவில்லை. ஏனெனில் நான் கம்யூனிஸ்ட் இல்லை..." என்று தொடங்குமே அந்தப் புகழ்பெற்ற பாஸ்டர் மார்டின் நிமோல ரின் கவிதை அது இன்றைக்கும் பொருத்த மானதுதான்.

**தமிழ், சிங்கள, முஸ்லிம் அறிவுஜீவிகள், ஜனநாயக சக்திகள், இடதுசாரிகள் ஒன்றாக இணைந்து இந்தச் சூழலுக்கு முகம் கொடுக்க வேண்டும்.**

ஜனநாயகத்துடன் கூடிய அதிகாரப் பரவல், பகை மறுப்பு, மனித உரிமைகளுக்கான போராட்டம், உயர் பாதுகாப்பு வலயங்கள் ஒழிக்கப்படுதல், இடம்பெயர்க்கப்பட்டோர் மீண்டும் தம் பகுதிகளில் குடியமர்த்தப்படுதல், உடனடிப் புனர் நிர்மாணச் செயற்பாடுகள் ஆகிய மனிதாபிமானக் கோரிக்கைகளுடன் உலக அளவில் நாம் இயங்க வேண்டிய காலம் இது. சமீபத்தில் இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து இந்தக் கருத்துக்களைப் பேசிச் சென்ற இலங்கை ஐக்கிய சோசலிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஸ்ரீதுங்க ஜெயசூர்யா அவர்களின் பேச்சுக்கள் இந்த வகையில் இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய ஒன்று. ▣



## வடு

இலங்கை தலித் மக்களின் மேம்பாட்டிற்காகவும் அவர்களின் குரலற்ற குரலுக்கு தார்மீக ஆவேசத்துடன் குரல்தரும் இதழாக வடு உள்ளது. இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் (பிரான்ஸ்) அமைப்பின் வெளியீடு இது.

நீண்டகால பெருங்கதையாடலான "தமிழர் அரசியலி னுள்" புதைக்கப்பட்டுவரும் தலித் மக்களின் பிரச்சனை கள் குறித்த கவனத்தை ஏற்படுத்தும் அரசியல் குரல் முக்கியமானது, தேசிய இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணும் போது தலித்மக்கள் மீதான அரசியல் சமூக ஒடுக்குமுறைகளுக்கும் தீர்வுகாண வேண்டு மென இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி வலியுறுத்தி வருகிறது.

கற்பிதப்பட்ட அனைத்து புனிதங்கள் மீதான விமர்சனங்களை முன்வைப்பதும், இலங்கை தலித் அரசியல் பண்பாட்டு கலாசார மேம்பாட்டிற்கான கருவியாகவும் தமது குரல் உள்ளது என வடு ஆசிரியர் குழுவினர் அழுத்தி உரைக்கின்றனர்.

*தொடர்புகளுக்கு:*
*FDSDS*
*70, SQUARE DES BAUVES*
*95140 GARGES LES GONESSE*
*FRANCE*
*Emai: vadu.world@hotmail.fr*

## உங்கள் கவனத்திற்கு!

உங்கள் கருத்துக்களை, படைப்புகளை, விமர்சனங் களை, ஆலோசனைகளை கணனியில் தட்டச்சு செய்து எமது மின்னஞ்சல் முகவரிக்கு
*eathuvarai@gmail.com*
அனுப்பிவைத்தால் இதழ் தயாரிப்புக்கு உதவியாக இருக்கும் என்பதை கவனத்திற்கொள்ளவும்.

■ எதுவரை சஞ்சிகையை உங்கள் நண்பர், நண்பிகளுக்கும் அறிமுகப்படுத்தவும்.

■ நூல் மதிப்புரைக்காக நூல்களை அனுப்பிவைப்பவர் இரு பிரதிகளை அனுப்பிவைக்கவும்.

நன்றி
- ஆசிரியர்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net





# ஹரோல்ட் பின்ரர்

(1930 - 2008)



ஜி.ரி.கே. கேதாரநாதன்

பின்ரரின் அரசியல் ஈடுபாடு பிரசித்தமானது. மனித உரிமை விவகாரங்களுக்காக உலக அரங்கில் அவர் வாதாடினார். ஜனநாயக மேம்பாடுடைய நாடுகள் தாமென தம்பட்டமடித்து வந்த மேற்கு நாடுகளின் இரட்டைத் தனங்களை, சுயரூபங்களைத் தயக்கமின்றி அம்பலப்படுத் தினார். 1973 காலப்பகுதியில் சிலி ஜனாதிபதி அலன்டே படுகொலை செய்யப்பட்டு, அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டதிலிருந்து மனித உரிமை மற்றும் அரசியல் விவகாரங்களில் தீவிரமாகச் செயற்படத் தொடங்கினார். பகிரங்கமாகக் கருத்துக்களைக் கூறுவதால் சர்ச்சைகள் மூண்டன. எனினும் அவர் ஒதுங்கிவிடவில்லை. பின்ரரின் அரசியல் நிலைப்பாடு உறுதியானது. சமூக அநீதிகளை எதிர்ப்பதிலும், ஒடுக்கப்பட்டவர் களது குரலாக ஒலிப்பதிலும் பற்றுறுதியுடன் செயற்பட்டார். ஈராக் விவகாரத்தில் அமெரிக்கத் தலையீட்டை எதிர்த்து மிக வன்மையாகக் கண்டித்தார். புஷ் – பிளேயர் ஆகியோரது கூட்டு மேலாதிக்க நடவடிக்கைகளையும் அவர்களது எதேச்சாதிகாரமான போக்கினையும் கடுந்தொனியில் விமர்சித்தார். அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை மாபெரும் கொலைப்பாதகனென்றும் பிளேயரை அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையைக் கண்மூடித்தனமாக ஆதரித்தவர் என்ற ரீதியில் அவரை ஏமாற்றப்பட்ட முட்டாளென்றும் வர்ணித்தார். அத்துடன் பிளேயருக்கெதிரான அரசியல் குற்றப் பிரேரணையினை முன்னின்று ஆதரித்தார். செப்ரம்பர் 11 இரட்டைக் கோபுரத் தகர்ப்பு, பெண்டகன் தாக்குதல் ஆகியனவற்றை பழிவாங்கல் நடவடிக்கைகளாகச் சுட்டிக் காட்டிய பின்ரர் அவற்றுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடாவடித்தனமான ஆப்கானிஸ்தான் மீதான ஆக்கிரமிப்பினையும், ஈராக் மீது வில்லங்கமாகத் திணிக்கப்பட்ட தடையையும், யுத்தத்தையும் நியாயமான காரணங்களாக குறிப்பிடுகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பிற்பட்ட சிக்கலான நெருக்கடி சூழ்ந்த கால கட்டத்தினைத் தமது படைப்புலகுக்குள் மிகத் துல்லியமாக வெளிப்படுத்திய ஆங்கில நாடக ஆசிரியர் ஹெரோல்ட் பின்ரர் ஆவார். மிகப் பெரும் ஆளுமையாகத் திகழ்ந்த பின்ரரின் படைப்பு முகங்கள் பலவாகும். அவர் பல்துறை சார்ந்த படைப்பாற்றல் நிரம்பியவர். கவிஞர், நடிகர், நாடகவியலாளர், நெறியாளர், திரைக்கதை எழுத்தாளர், கட்டுரையாளர், மனித உரிமைகள் ஈடுபாட்டாளர் மற்றும் எல்லா வற்றுக்கும் மேலாக அவர் துணிவு மிக்க சமரசங்களை உதறித் தள்ளும் பற்றுறிதியாளர், அரசியல் விமர்சகர் என்பதுடன், தீவிர செயற் பாட்டாளருமாவார்.

அவருக்குக் கிடைத்த அதியுயர் கௌரவங்கள் மற்றும் விருதுகள் சிலவற்றை மனச்சாட்சியின் பேரால் எத்தகைய தயக்கமுமின்றி தாமே முன் வந்து நிராகரித்தவர். பாசாங்கோ, புகழ் நாட்டமோ எதுவுமற்ற அவர் அகம்பாவம் இல்லாத நேர்மையாளர். உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் அதிகார மையங்களது அடக்கு முறைகள், கபடத்தனங்கள் மற்றும் ஒடுக்கு முறைகள் போன்றவற்றுக்கும் கருத்துச் சுதந்திரப் பதிப்பு, தணிக்கைகளுக்கும் எதிராக நீண்ட காலம் இடையறாது போராடி வந்த படைப்பாளி மாத்திரமன்றி ஒரு போராளியுமாவார். அரை நூற்றாண்டுக்கும் மேலாக நீண்ட காலத் தலை முறையினராகிய பார்வையாளர்களையும், வாசகர் களையும் தனித்துவமான படைப்புகளின் மூலம் ஈர்த்து வைத்திருந்த சர்வதேசப் புகழ் வாய்ந்த ஒரு சாதனையாளரான படைப்பாளிதான் 'ஹெரோல்ட் பின்ரர்' என்பது விமர்சகர்கள் பலரது ஏகோபித்த முடிவாகும். 1930 ஆம் ஆண்டு லண்டனில் 'ரிக்னி' என்னுமிடத்தில் பிறந்த 'ஹெரோல்ட் பின்ரர் 2008ஆம் ஆண்டு டிசம்பர் 24 ஆம் திகதி தமது 78 ஆவது வயதில் காலமானார்.

வாழ்வியலின் எதிரும் புதிருமாக உள்ளார்ந்த உட்கிடையாக இடுக்குகளில் பதுங்கியிருக்கும் அவலங்களையும், அபத்தங்களையும் நிசப் தங்களுக்குள் ஒடுங்கி உறைந்து போயிருக்கும் மௌனங்களையும், சலனங்களையும், சகல வற்றினதும் எதிரிடையான முரண்களையும், எதிர்பார்த்தவற்றைப் புறந்தள்ளி சடுதியாக எதிர்பாராதனவற்றையும் வெளிக்கொணருவதில் பின்ரருக்கு நிகர் பின்ரரே ஆவார். இந்த வகையில் அவரது தலைமுறையில் அவருக்கு இணையான நாடகவியலாளராக எவரையும் ஒப்பிடுவது அரிதாகும்.

20ஆம் நூற்றாண்டின் பிற்கூறான 1957 இலிருந்து 2000 ஆம் ஆண்டுவரை 30க்கும் மேற்பட்ட நாடகங்களை பின்ரர் எழுதியிருந்தார். அவருடைய படைப்புலகம் மிக விரிந்தது. அதன் மூலம் அக்காலப் பகுதியில் நூலிழையில் ஊசலாடிக் கொண்டிருந்த நிச்சயமின்மை யினையும், பதற்றங்களையும் அடியாளத்திற்குள் புதைந்து ஆனால் வெடிப்பதற்கு கனன்று சீறிக் கொண்டிருக்கும் வன்முறைக்கான தகிப்பினையும், வெம்மையினையும் வெளிக் கொண்டு வர அவர் தவறவில்லை. அதற்கான சவாலை எதிர் கொள்ளும் விதமாக அழகியல் உணர்வு கெடாது அவற்றைப் படைப் பாற்றலுடன் தன்வயப் படுத்தி வெளிப்படுத்துவதற்கு உயிர்ப்பு மிக்க ஊடகமாக மிக அருமையான நாடக மொழி யொன்றினை அவர் நன்கு வசப்படுத்திக் கையாண்டிருந்தார்.

பின்ரரின் படைப்பியக்க அணுகுமுறை அபாரமானது. பிரமிப்பினை ஊட்டக் கூடியது. அவர் அறிமுகப் படுத்திய உரையாடற் கூறுகள் தற்புதுமை வாய்ந்தவை. அவரால் நவீன நாடகத்துறை நவீன பாங்கில் எழுச்சியும், உத்வேகமும் பெற்றது. அந்தவகையில் அவர் விமர்சகர்கள் மற்றும் சக படைப்பாளிகளது கூர்மையான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டிருந் தார். பன்முகத் தன்மை வாய்ந்த ஆளுமையாள ரான அவருடைய படைப்பாக்க மேதமைக் கூறுகளை பல கோணங்களிலிருந்து அணுகி அவர்கள் ஆராய்ந்திருந்தார். அவை குறித்த பெருக்கமே அவருடைய தனித்துவ மேதமைக்கு சான்றெனலாம்.

பின்ரரது பெற்றோர்களான ஹெமன் தம்பதி கள் கிழக்கு ஐரோப்பிய யூத இனத்தவர்கள். அவர்கள் போர்த்துக்கல்லிலிருந்து இங்கிலாந் துக்கு குடிபெயர்ந்து வந்தவர்கள். அவர்கள் இருவருமே கல்வி, கலாசார மேம்பாடுகளில் அக்கறை கொண்டோராயிருந்தனர். பின்ரது தகப்பனாரான ஹெமன் பெண்களது ஆடை வகைகளை வடிவமைத்துத் தயாரிக்கும் ஒரு தையற்காரர். தாய் எப்போதும் பின்ரருக்கு ஆதரவாக நெருக்கமும், நெகிழ்ச்சியும் கொண்ட வராயிருந்த அதேவேளை தகப்பனாருக்கும் மகனுக்குமிடையே இட்டு நிரப்ப முடியாத விரிசல் ஒன்று எப்போதுமே இருந்து வந்துள்ளது. அதற்கு அவர் அதீத கண்டிப்பாளராக பின்ரரைக் கட்டுப்படுத்தி வளர்க்க முற்பட்டிருந்தமையே பெரும்பாலும் காரணமெனலாம். ஆனால் ஒரு சந்தர்ப்பத்தில் தேசிய சேவைக்கு அழைக்கப் பட்டு பின்ரர் போக மறுத்ததால் பெருந்தொகை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தண்டப்பணம் அவர் சார்பில் தந்தையாரால் செலுத்தப்பட்டது. இல்லையேல் பின்ரர் சிறை செல்ல நேர்ந்திருக்கும்.

ஒன்பது வயதுக்கு மேற்பட்ட சிறுவராயிருந்த காலத்தில் இரண்டாம் உலக மகாயுத்தம் மூண்டது. அதனால் அவர் கடும் பாதிப்புக் குள்ளாகியிருந்தார். பாதுகாப்புக் கருதி லண்டனி லிருந்து அப்புறப்படுத்தப்பட்டு ஹேன்வெலுக்கு ஏனைய லண்டன் சிறுவர்களுடன் சேர்த்து அவர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். அவ்வாறு பெற்றோரிடமிருந்து பிரிய நேர்ந்ததும் விடுதி யொன்றில் தங்கியிருந்து படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதும் அந்த வயதில் அவருக் குத் தாங்க முடியாததொரு தாக்கத்தை ஏற்படுத்தி யிருந்தது. ஜேர்மனிய குண்டு வீச்சு விமானங்கள் ஏற்படுத்திய மரணபீதியினாலேயே அவ்வாறு சிறுவர்கள் ஹேன்வெலுக்கு அப்புறப்படுத்தப் பட்டிருந்தனர். அதன் பின்னர் பன்னிரண்டு வயதிலேயே அவர் லண்டன் திரும்ப முடிந்தது. வளரும் பருவத்தில் தமக்கேற்பட்ட தாம் எதிர் கொள்ள நேர்ந்த அனுபவங்கள் குறித்துப் பின்ரர் பிற்காலத்தில் நினைவு கூர்ந்திருந்தார். குண்டு வீச்சு விமானங்கள் சிறுபராயத்தில் ஏற்படுத்திய பீதியிலிருந்து இன்று கூடத் தம்மால் முற்றாக விடுபட முடியாதிருப்பதாக அவர் கூறியிருந்தார்.

யுத்த காலப் பேரழிவுகள், அவலங்கள், விமானக் குண்டு வீச்சுகள் ஆகியனவற்றுடன் யூதர் என்ற ரீதியில் அனுபவிக்க நேர்ந்தவையும் பின்னாளில் நாடகவியலாளராக, ஒரு எழுத்தாள ராக படைப்பாற்றலுடன் முகிழ்த்து வருவதற்கு ஒரு வகையில் காரணமாக இருந்திருக்கலாமென அவர் கூறியிருந்தார். ஆரம்பத்தில் அவருக்கு நடிப்புக்கலை மீதே கூடிய ஆர்வம் இருந்து வந்தது. ஹெக்னியில் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலத்தில் நாடகங்களில் நடிப்பதற்கு அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. மக்பெத்தாகவும் ரோமியோவாகவும் நடித்தார். 1948 காலப் பகுதியில் றோயல் நாடக அக்கடமி யில் இணைந்து கொண்டு முறையாக அத் துறையில் கல்வியும் பயிற்சியும் பெற்றோர். 1950 காலப்பகுதியில் தொழில் ரீதியான தேர்ச்சி கொண்ட ஒரு நடிகராக நாடகத்துறைக்குள் பிரவேசித்தார். அப்போது அவர் பல கவிதை களையும் எழுதியிருந்தார். "டேவிட் பேறன்' என்ற புனைபெயருடன் சேக்ஸ்பியர் நாடகக் கம்பனி யொன்றில் இணைந்து கொண்டு அக்குழுவின ருடன் மேடையேற்றங்களின் பொருட்டு அயர்லாந்தில் சுற்றுப் பயணமும் செய்தார். அக்காலப் பகுதியிலும் அதற்குப் பின்னரும் பல தரப்பிலான மக்களுடனான நேரடிச் சந்திப்புகளும் அவர்களுடனான உறவாடல்களும் அவருக்கு இருந்த மொழியியல் நுட்பங்களுக்கு கண் திறந்து விட்டன என்றே கூற வேண்டும். பின்னர் ஒரு முழுநேர நாடக ஆசிரியராக அவர் முற்பட்ட தற்கும் கூட அத்தகையதொரு வளமார்ந்த பின்புலமும் உந்துதலாக இருந்திருக்கலாமென எண்ணத் தோன்றுகிறது.

அந்த வகையில் நாடகத்தின் படைப்பாக்க கூறுகள் பலவற்றிலும் அவருக்கு இருந்து வந்த நேரடியான அனுபவங்களும், தேர்ச்சியும் அசாத் தியமான படைப்பாற்றலொன்று சகல தளத்திலும் பின்ராரிடம் இருந்து உருவாவதற்கான முனைப் பினை மேலும் வேகப்படுத்தியிருந்தன. 1955, 56 களில் பின்ரர் தலைமுறையினரை முக்கியத்துவம் வாய்ந்த இரு நிகழ்வுகள் வெகுவாகப் பாதித் திருந்தன. முதலாவதாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வான சுயஸ் நெருக்கடியினைக் குறிப்பிடலாம். காலனித்துவ காலத்திற்குப் பிற்பட்ட சக்கராதிபத்திய கனவிற்குள் மூழ்க்கிப் போயிருந்த ஐக்கிய இராச்சியத்திற்கு சுயஸ் நெருக்கடி பலத்தவொரு மரண அடி எனலாம். ஏகாதிபத்திய தலைமுறையினராகப் பிரபலம் பெற்றிருந்த அன்றைய பிரதமர் அன்ரனி ஈடனையும் அவரின் வழிகாட்டியாகவும், ஆதர்ச நாயகனாகவும் இருந்த வின்சன்ட் சேர்ச்சிலையும் அது நிலைகுலையச் செய்திருந்தது. அடுத்தது படைப்பாக்கத் தளத்திலும், கலாசாரத் தளத்திலும் ஜோன் ஒஸ்போனின் படைப்பான "Look Back In Anger" ஏற்படுத்திய புரட்சிகரமான மாறுதலாகும். வாழ்வியல் நெருக்கடிகள் அவற்றின் ஏற்ற இறக்கங்கள் அதிகாரத்துவ மையங்களது அடக்கு முறை அரசியல் அவற்றுக்கு எதிரான போராட் டங்கள் போன்றன குறித்து ஆழ்ந்த பரிசீலனை களிலும் நீண்ட விசாரணைகளிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்த பின்ரர் இடதுசாரித்துவ சிந்தனை வயப்பட்டவராக மாறியதில் எத்தகைய ஆச்சரிய மும் இல்லை.

1957இல் பிரிஸ்டல் பல்கலைக்கழகத்தில் பின்டரின் முதலாவது நாடகமான The Room மேடையேற்றப்பட்டது. நாடகத்துக்கான கரு ஒன்று தம் வசம் உள்ளதாக பிரிஸ்டல் பல்கலைக் கழக அரங்கியல் துறையைச் சேர்ந்த நண்ப ரொருவரிடம் எதேச்சையாக பின்ரர் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார். ஒருவாரத்துக்குள் நாடகத்தை எழுதித் தயார்படுத்துமாறு அந்த நண்பர் விடாப்பிடியாகப் பின்ரரைப் பல தடவைகள் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதுடன் அரங்கியற் துறையின் அங்கீகாரத்தினையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாமுல் பெக்கற்

அப்பணியின் பொருட்டு அவரிடம் முறையாகக் கையளித்துமிருந்தார். நண்பர் விதித்திருந்த குறுகிய கால எல்லைக்குள் நாடகத்தை எழுதி முடிக்க முடியுமோ என்ற சந்தேகம் ஆரம்பத்தில் ஏற்பட்டிருந்தாலும் உற்சாகம் குன்றாது அவர் செயற்பட்டார். ஆனால் எதிர் பார்த்ததற்கு முற்றிலும் மாறாக நான்கு நாட்களுக்குள்ளேயே அவரால் நாடகத்தை எழுதி முடிக்க முடிந்தது. ஓரங்க நாடகமாக அது மிகக் கச்சிதமாக அமைந்திருந்தது. புகழடைந்த இடைக்காலத்தில் எழுதிய அவருடைய ஏனைய நாடகங்களுக்கு நிகராக அவருக்கே உரிய தனித்துவமான பல அம்சங்களையும் எடுத்த எடுப்பிலேயே அவரது முதலாவது படைப்பான The Room கொண்டிருந்த தாக விமர்சகர்கள் ஒரே முகமாகச் சிலாகித் திருந்தனர். அந்த வகையில் "பின்ரர்", பின்ரரா கவே ஆரம்பத்திலிருந்து இறுதிவரை இருந்து வந்திருக்கிறார்" என்று மான்கட்டனைச் சேர்ந்த பெண் கவிஞரும், நாடகவியலாளரும், விமர்சகரு மான விக்ரோறியா சுலிவான் கூறுவது இளவயது மேதையான பின்ரருக்கு முற்றிலும் பொருந்தக் கூடிய தொன்றாகும். எந்த விதத்திலும் மிகையான கூற்று அல்ல.

இரண்டாவது ஓரங்க நாடகத்தை பின்ரர் அதே ஆண்டில் எழுதினார். அதற்கு Dum Waiter என தலைப்பிட்டிருந்தார். அது ஒரு வகையில் அபத்த நாடக பாணியைச் சேர்ந்தது. பின்ரர் கையாளும் தற்புதுமை வாய்ந்த உரையாடற் கூறுகளும் பதற்றங்களும் அபத்த நிலைக்கு மெருகூட்டின. அவரது முதலாவது முழு நீள ஆனால் வரிசையில் மூன்றாவது படைப்பான The Birth Day Party கேம்பிறிட்ஜ் கலைக்கூடத்தில் 1958ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்டது. பின்ரர் அவரது மதிப்பிற் குரியவரும் நண்பருமான சாமுல் பெக்கற்றை அடியொற்றியதாக அந்த அபத்த நாடகத்தைப் படைத்திருந்தார். மூன்று அங்கங்களைக் கொண்ட அந்த நாடகம் கடற்கரையோர விடுதியொன்றைக் களனாகக் கொண்டிருந்தது. நாடகத்தில் பங்கு கொண்ட பாத்திரங்களது இயக்கங்களுக்கு ஸ்தூல மான விளக்கங்களோ வெளிப்பாடுகளோ இருக்க வில்லை. புதிரானதொரு இருண்மைத் தன்மை கலந்திருந்தது. பெரும்பாலான விமர்சகர்களுக்கு நாடகம் புரிபடாததால் கடுமையாகச் சாடியிருந் தனர். இலண்டன் பத்திரிகைகளில் எதிர்மறை யான விமர்சனங்கள் வெளியானதை அடுத்து நாடகம் உரிய கவனிப்பினைப் பெறத் தவறி யிருந்தது. உண்மையில் இலண்டன் விமர்சகர் களின் அவசரத்தினாலும், ஒரு வகையில் அவர் களது அனுபவக் குறைவினாலும் பாரதூரமான ஒரு விபத்து நேர்ந்திருந்தது. சண்டே ரைம்ஸ் விமர்சகரான ஹரோல்ட் கொப்சன் என்பவர் மாத்திரமே பின்ரரின் படைப்பாற்றலை இனங் கண்டு சர்ச்சைக்குரிய நாடகத்தை வெகுவாகப் பாராட்டியிருந்தார். கொப்சனின் விமர்சனம் பத்திரிகையில் வெளிவந்தபோது ஒரு வாரம் கூடத் தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் The Birth Day Party அரங்கை விட்டு வெளியேறி யிருந்தது. அந்த நூற்றாண்டின் அதியுன்னத படைப்புகளில் ஒன்றாக சற்றுப் பிந்தி விமர்சகர் களால் ஏகோபித்த நிலையில் போற்றப்பட்டுக் கொண்டாடப்பட்ட அந்த நாடகத்திற்கு ஆரம்ப மேடையேற்றத்தில் நேர்ந்த கதி அதுதான். முதற்தடவை மேடையேற்றத்தில் இலண்டன் அரங்கில் முற்றாகவே தோல்வியைத் தழுவிக் கொண்ட அந்த நாடகம் பின்பு தொலைக்காட்சித் தயாரிப்பாக வெற்றிவாகையும் சூடியிருந்தது. அப்போது 11 மில்லியன் பார்வையாளர்கள் அதனைப் பார்த்தனர். அண்மையில் 50 வருட பூர்த்தியின் பொருட்டு இலண்டன் அரங்கில் அதே நாடகம் எதுவித மாற்றங்களுமின்றி மேடை யேற்றப்பட்டபோது காலங்கடந்த நிலையிலுங் கூட அதன் செல்லுபடியாகும் தன்மையினை அதற்குரிய வீரியத்தினை நாடகம் இழந்து விடாதிருந்தது ஒரு புதுமையெனலாம். அவர் எழுதிய நாடகங்களுக்குள் Care Taker, Home Coming, Vetrayal, No Mans Land ஆகியன விமர்சகர்களது ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்ற படைப்பு களாகக் கருதப்படுகின்றன.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடகங்கள் எழுதியது மாத்திரமன்றி பின்ரர் அவற்றை இயற்றியும் இருக்கிறார். அந்த வரிசையில் அவர் இயக்கியவை எல்லாமாக 23 ஆகும். ஜேம்ஸ் யோய்ஸ், டேவிட் மமற், சிமோன் கிறேயன்ட் ஆகியோரின் படைப்பு களுடன் தமது படைப்புகளில் பலவற்றையும் அவர் இயக்கியிருக்கிறார். 1960 காலப் பகுதிகளில் தமது புதுமையான திரைக்கதைகளின் மூலம் திரையுலகப் பிரவேசம் செய்த பின்ரர் தமது தனித்துவ ஆளுமையின் மூலம் தனக்கென தனியிடத்தை நிறுவிக் கொண்டார். அந்த வகையில் அவர் எழுதிய திரைக்கதைகளில் பெரும்பாலானவை அவருக்குப் புகழ் தேடிக் கொடுத்தன எனலாம். எல்லாமாக 21 திரைக் கதைகளை அவர் எழுதியிருந்தார். அவற்றுள் *The Servant, Accident, The Go – Between, French Lieuttenant's Woman, Pumpkin Eter, Betrayal* ஆகிய படைப்புகள் குறிப்பிடத்தகுந்தனவாகக் கருதப்படுகின்றன. திரைப்பட நெறியாளராக உச்சமான செல்வாக் கினைப் பெற்றிருந்த எலியா 'ஸன் போன்றோ ரால் கூட பின்ரர் எழுதிய திரைக்கதையில் வேண்டிய மாற்றமொன்றினை செய்து கொள்ள முடியாமற் போயிருந்தது ஒரு வரலாறாகும். இதற்கு புகழ்பெற்ற தயாரிப்பாளரான சாம் ஸ்பீகல்ஸ் ஆகியோர் பின்ரரை அதிமேதையாகக் கருதி வழிபட்டு வந்தமையே காரணமாயிருந் ததாக நெறியாளர் எலியா 'ஸன் தான் எழுதிய சுயசரிதை நூலொன்றில் மனக்குமுறலுடன் சுட்டிக் காட்டியிருந்தார்.

ஜனவரி 2003இல் பின்ரர் நாடக விழா மனிற்றோலீவா நாடக அரங்கில் நடைபெற்றது. அவருடைய படைப்புகள் பல மேடையேற்றப் பட்டன. 1995க்கான லோறன்ஸ் ஒலிவியா; விருது நாடக உலக வாழ்நாள் சாதனைப் பங்களிப்புக் காக பின்ரருக்கு வழங்கப்பட்டது. கான்சர் நோயினால் பீடிக்கப்பட்டு சக்கர நாற்காலியில் நடமாடிய போது கூட பின்ரர் ஒருபோதும் அரங்கை விட்டு விலகியது கிடையாது. அந்த வகையில் அத்தகைய விருது வழங்கப்படுவதற்கு பின்ரரே முற்றிலும் பொருத்தமானவர். கான்சர் நோய் முற்றி மரண நிழலின் கீழிருந்த நிலை யிலும் கூட அவர் சோர்வடைந்து விடவில்லை. அந்த நிலையிலும் பெக்கற்றின் நாடகமொன்றில் முக்கிய பாத்திரமொன்றை அவரே ஏற்று சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தவாறு நடித்தார். மீள முடியாத பிடிக்குள் வீழ்த்திய கான்சர் நோய் அவரை ஒவ்வொரு கணமும் அச்சுறுத்திக் கொண்டிருந்த தருணத்திலும் கூட படைப்பு மனோநிலையினை இழந்து விடாது கவிதை யொன்றினை எழுதினார். அக்கவிதை கான்சர்



அன்ரோனியா பிரேசர், ஹெரோல்ட் பின்ரர்

நோய் பற்றிய கவிதையாகும். பின்ரர் 1956 இல் விவியன் மேர்ஜ் என்ற நடிகையை திருமணம் செய்த பின்ரர். 1980ஆம் ஆண்டில் அவருடனான விவாகரத்தை அடுத்து, அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய அன்ரோனியா பிறேசரைத் திருமணம் செய்தார். இத் திருமணம் பின்ரர் இறுதியில் மரணமடையும் வரையில் நீடித்தது. நேர்காணல் ஒன்றின் போது அவருடைய கான்சர் நோய் அனுபவங்கள் குறித்து கேள்வி கேட்கப் பட்டபோது கான்சர் நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவருக்கு இரு விடயங்கள் மிகவும் முக்கிய மாகும். ஒன்று திறமை வாய்ந்த சத்திர சிகிச்சை யாளர், மற்றது நேசத்துடனும், பரிவுடனும் பராமரிக்கும் அன்பான மனைவி. இந்த இரு விடயத்திலும் என்னைப் பொறுத்தவரையில் நான் அதிர்ஷ்டசாலியென்றே கூற வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

2005இல் பின்ரருக்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு கிடைத்தது. அதைத் தடுப்பதற்கு செல்வாக்கு மிக்க அதிகாரத்துவ பிரதிநிதிகள் சிலர் முற்பட்ட போதிலும் கூட அவர்களையும் மீறி பின்ரருக்கே அது கிடைத்தது. அப்போது அவருக்கு வயது 75 ஆகும். நோய்வாய்ப் பட்டிருந்த காரணத்தினால் நோபல் பரிசைப் பெறுவதற்கு ஸ்ராக்காமிலுள்ள சுவீடிய அக்கட மிக்கு நேரில் செல்ல அவரால் முடியவில்லை. எனினும் ஆஸ்பத்திரியில் சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தவாறு அவருடைய நோபல் பரிசு ஏற்புரையினை வீடியோ பதிவின் மூலம் நிகழ்த்தினார். அந்த ஏற்புரையின் போது கூட அமெரிக்கத் தலையீட்டினையும் அதன் வெளி விவகாரக் கொள்கையினையும் கடும் தொனியில் விமர்சிக்க தவறவில்லை. பல தசாப்தங்களுக்கு முன்னரே பின்ரருடைய முக்கியத்துவம் வாய்ந்த புகழ்பெற்ற படைப்புகள் வெளியாகிவிட்டன. எனினும் சுவீடிய அக்கடமி காலம் தாழ்த்தியே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பரிசினை பின்ரருக்கு அளித்ததாக பலர் அபிப்பிராயப்பட்டாலும் கூட காலாவதியாகி விடாத அவரது படைப்புகள் எக்காலத்திற்கும் பொருத்தப்பாடுடையனவாகவே இருப்பதாக சுவீடிய அக்கடமி தெரிவித்திருந்தது. மேலும் எக்கணத்திலும் நிச்சயமின்மையாலும், தொந்தரவு பயங்கரங்களாலும் முற்றுகை இடப்பட்டுள்ள இன்றைய உலகிற்கான பொருத்தப்பாட்டினை அவருடைய நாடகங்கள்; இழந்து விடவில்லை என்றும், இதற்கெல்லாம் மூல காரணம் பின்ரரின் படைப்பியக்க வலிமையேயன்றி வேறில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. யுத்தம் என்ற தலைப்பில் 2003ஆம் ஆண்டு வெளியாகிய அவருடைய கவிதைத் தொகுதிக்கு கவிதைக்கான வில்பிரட் ஓவன் விருது வழங்கப்பட்டது.

பின்ரரின் பெரும்பாலான படைப்புகளை மேடையேற்றிய நெறியாளராகிய பீற்றார் றோல், அவரின் நாடகங்களில் கதாபாத்திரங்கள் ஒன்றை யொன்று அசௌகரியப்படுத்துவதற்கோ, காயப் படுத்துவதற்கோ அல்லது நிர்மூலமாக்கு வதற்கோ பயன்படுத்தும் உரையாடற் கூறுகள் மற்றும் சொற்கள் உண்மையிலேயே மிகப் பயங்கரமான கூரிய ஆயுதங்களாக அச்சுறுத்தும் தன்மை வாய்ந்தவை என்பதுடன் கடினமும் பரிகசிப்பும் நிரம்பியதான அவை ஏற்படுத்தக் கூடிய பாதிப்பைவிட அவற்றினிடையே வரும் அவகாசங்களும், நிறுத்தங்கள் மற்றும் ஓய்வு களும் படுபயங்கரமானவை என்கிறார். அவரது படைப்புகளில் விரவியிருக்கும் மனித இருப்புக் கான அச்சங்கள், அச்சுறுத்தல்கள் அமானுஷ்ய மானவையோ அல்லது அரூபமானவையோ அல்ல, மாறாக அவை அன்றாட வாழ்வின் ஸ்பரிசக் கூறுகளே என்றும் அங்கிருந்துதான் அதற்குரிய அசாத்தியத்தன்மை வாய்ந்த வலிமை யினை பின்ரரின் படைப்பு சுவீகரித்துக் கொள் கிறது என மார்ட்டின் எஸ்லின் கூறுகிறார். பின்ரரை, பெக்கற் போன்றோருடன் பட்டிய லிட்டு அபத்த நாடகவியலாளர்களின் வரிசையில் சேர்ப்பது ஒரு வகையில் பொருத்தமற்றது எனக் கூறும் விமர்சகர் ஒருவர், பின்ரர் தம்மை ஒரு யதார்த்தவாதியாகவே கருதியதாகவும் தெரிவிக் கிறார்.

அவருடைய நாடகமோ அல்லது திரைக் கதையோ எப்போதுமே எதிர்பாராத ஒன்றினையே பார்வையாளர்களிடம் விட்டுச் செல்லுமென ஆங்கில நாடக ஆசிரியரான டேவிட் கெயர் குறிப்பிடுகிறார். அடிப்படையில் பின்ரர் ஒரு அறிவு சார்ந்த நாடகாசிரியர் என்பதிலும் பார்க்க உள்ளுணர்வு சார்ந்த ஒரு படைப்பாளியே எனக் கூறப்பட்டபோதிலும் உண்மையில் அவர் இரண்டும் கலந்த ஒருவரே என மேலும் ஒரு விமர்சகர் அவரைக் கணிப்பிடுகிறார். ஒரு நாடகவியலாளர் என்ற ரீதியில் பின்ரரில் தம்மைக் கவர்ந்ததும் பிரமிப்பிலாழ்த்தியதுமான அம்சம் இயல்பாகவே அவர் கையாளும் சாதுரியமான பரிகசிப்பும், உலகின் உக்கிரமான பயங்கரங் களின் மீது அவர் செலுத்தியதான அரசியல் தரிசனமும் ஆகுமென நாடகாசிரியரும், கவிஞரு மான சுலிவான் கூறுகிறார். பின்ரர் குறித்து மேலும் அவர் விபரிப்பதாவது, '1960 இலிருந்து 70களில் அவருடைய படைப்புகள் இருண்மைத் தன்மை வாய்ந்த படிமங்களுடன் கடுமையாக இருந்தனவாக சில விமர்சகர்கள் ஒருவகை நிராகரிப்பு மனப்பாங்கில் அவருடைய படைப்பு களில் பலவற்றை சிரத்தையுடன் பார்ப்பதற்கு மறுப்புத் தெரிவித்திருந்தனர். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் எனக்குக் கிடைத்த அனுப வமோ வேறு. அவருடைய நாடகங்கள் மிகப் புதுமை வாய்ந்தனவாகக் கட்டுக்கடங்காத வீரிய மும் பரிகசிப்பும் கொண்டனவாக இருந்தன. விமர்சகர்கள் சிலர் குழம்பியிருந்தமையால் ஒவ்வொரு நாடகத்தையும் தனித்தனியே உணர்வு ரீதியாகப் பார்த்தேன். ஏனையோருடைய அபிப்பிராயங்களைப் புறந்தள்ளி, என்னளவில் சுய தன்மையை முன்னிறுத்திப் பார்த்தேன். பின்ரரின் உலகம் என்னை ஈர்த்தது. முழுமையாகக் கட்டுண்டு போனேன். உண்மையில் நான் எனது இருக்கையின் நுனிக்கே வந்து விட்டேன். அரங்கக் காட்சிகளிலும் படிமங்கள் மற்றும் உரையாடற் கூறுகளிலும் என்னால் முற்றாக ஒன்றிக்க முடிந்தது. குறிப்பாக பின்ரரின் முத்திரை அம்சங்களான ஓய்வுகள், நிறுத்தங்கள் மற்றும் மௌனங்கள் போன்றன என்னை வெகுவாக உலுக்கின. அவருடைய நகைமுரண், தொந்தரவு, தொனி அவற்றிற்கிடையே குதிர்ந்து வரும் அரசியல் தரிசனம் ஆகியன படைப்புகளுக்கு கனதியான பரிமாணங்களை அளித்தன' என்றார்.

பின்ரரும் அவருக்கு நெருக்கமான சக படைப் பாளியுமான சாமுல் பெக்கற் ஆகியோர் நவீன நாடக ஆசிரியர்களாக விமர்சகர்களால் பெரிதும் மதிக்கப்பட்டார்கள். 'பின்ரர்ஸ்கியூ' என்ற பதம் நாடக உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒன்றாகும். இலக்கிய உலகில் எழுத்தாளரான காப்காவுக்கு 'காப்ஸ்கியூ என்றது போல 'பின்ரர்ஸ்கியூ' என்ற பதம் கலாச்சாரத்தளத்தில் மிகவும் பரிச்சயத்திற்குரிய வலிமை வாய்ந்த சொல்லாக, விபரிக்க முடியாத புதிரான தொந்த ரவைச் சுட்டும் சொல்லாக அது பரிணாமம் பெற்றுள்ளது. இச்சொல் இப்போது ஒக்ஸ்போட்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அகராதியில் ஆங்கில மொழியில் பிரிக்க முடியாத ஒரு கூறாக ஒரு அடைமொழியாக சேர்க்கப் பட்டுள்ளது. 1950களின் பிற்கூறுகளில் இருந்து ஜோன் ஒஸ்போர்ன் மற்றும் பின்ரர் போன்ற நாடக ஆசிரியர்கள் ஆங்கில நாடக அரங்கை மேட்டுக்குடி வர்க்கப் படைப்புகளின் ஆதிக்கத் திலிருந்து சாமானிய மக்களிடம் மீட்டு வந்தனர். வர்க்க பேதங்களுக்கும், பாரபட்சமான அரசாங் கங்களுக்கும் எதிராக இளம் தலைமுறையினரை எழுச்சி கொள்ளச் செய்வதில் அவர்களுடைய படைப்புகள் சமூகத்தில் காத்திரமான தாக்கத் தினை ஏற்படுத்தின. நாடகாசிரியர்களான டேவிட் மபற், பற்றிக் மாபர், யெஸ் பட்டர் வேர்க் போன்ற படைப்பாளிகள் தவிர்க்க முடியாத வகையில் பின்ராரின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தனர் என்பதை ஏற்றுக் கொள்வதில் தயக்கம் தேவை யில்லை. எந்த விதத்திலும் அவர்கள் மீதான பின்ரரின் செல்வாக்கினை நிராகரிக்கவும் முடியாது.



அபத்த நாடகப் படைப்பாளிகளான சாமுல் பெக்கற், இயனஸ்கோ மற்றும் ஜெனற் ஆகியோ ரின் பாரம்பரிய வரிசையில் சௌகரியம் கருதி பின்ரரைச் சேர்த்துக் கொண்டாலும் அவர்கள் எல்லோரிலும் இருந்து விலகிய, வேறுபட்ட, தனித்த ஆளுமையாகவே பின்ரரை மதிப்பிடு வதே பொருத்தமானதாகும்

பல தசாப்தங்களுக்கு முன்னதாக எழுதப்பட்ட பின்ரருடைய படைப்புகள் என்றும் காலாவதி யாகிவிடாத நீடித்த பொருத்தப்பாட்டினை கொண்டிருக்கின்றன. எக்கணமும் சதா நிச்சய மின்மை, தொந்தரவு, மற்றும் உக்கிர பயங்கரங் களால் முண்டியடிக்கப்பட்ட இன்றைய உலகிற்கு பொருந்தக்கூடிய விதத்தில் அப்படைப்புகள் தமக்குரிய வீரியத்தை இன்னமும் இழக்காதிருக் கின்றன. இதற்கான காரணம் பின்ரரின் அசாத்திய தன்மைமிக்க படைப்பியக்க வலிமையே அன்றி வேறில்லை.

▣




## ஏவிவிடப்பட்ட கொலையாளி

90 களில் இலங்கைத் தமிழ் சிறுகதைத் துறையில் உருவாகி, பெரும்பாலும் பரிசோதனையாக முயற்சித்து வரும் திசேராவின் முதலாவது நாவல் அமைப்புக்கு நெருக்கமான படைப்பு இது. பொதுவாக இலக்கியத்தின் வடிவமாதிரியில் அக்கறையற்ற திசேராவின் கபாலபதி வெள்ளைத்தோல் வீரர்கள் ஆகிய சிறுகதைத் தொகுப்புக்கள் ஏற்கனவே வெளியாகியிருக்கின்றன கபாலபதி அவரது சிறுகதை விநோதம் என்றால் ஏவிவிடப்பட்ட கொலையாளி ஒரு நாவல் விநோதம் விநோதங்களைக் கலையாக்கும் அவரது விஞ்ஞானசாயல் படிந்த எழுத்துப்பாணி 2004இல் இலங்கையைத் தாக்கிய சுனாமியுடன் தொடர்பான கதைகளை முன்மாதிரிகளற்ற விதத்தில் இந்நாவலில் எடுத்தாள்கிறது.

□

## இது நதியின் நாள்

இலங்கை கவிஞர் பெண்ணியாவின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு. முதல் தொகுப்பு **'என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை'** 2006 இல் ஊடறு வினால் வெளியிடப்பட்டது 'இது நதியின் நாள்' 2008 டிசம்பரில் சிறகுநுனி வெளியீடாக வந்திருக்கிறது

□

**வெளியீடு:**

**சிறகுநுனி**

நூல்கள் தொடர்பான விபரங்கட்கு:
sirahununi@gmail.com, srthisera@gmail.com
071 439 9249, 071 828 8627



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அனார் கவிதைகள்



## குறிஞ்சியின் தலைவி

இரண்டு குன்றுகள்
அல்லது தளும்பும் மலைகள் போன்ற
முலைகளுக்கு மேல் உயர்ந்து
அவள் முகம் சூரியனாக தக தகத்தது

இரண்டு விலா எலும்புகளால் படைக்கப்பட்டவள்

பச்சிலை வாடைவீசும் தேகத்தால்
இச்சையெனப் பெருக்கெடுத்தோடும்
மலையாற்றைப் பொன்னாக்குகிறாள்

வேட்டையின் இரத்தவீச்சத்தை உணர்ந்து
மலைச்சரிவின் பருந்துகள் தாளப்பறக்கின்றன

மரக்குற்றிகளால் உயர்த்திக்கட்டப்பட்ட
குடில்களில் படர்ந்த மிளகுப்பற்றை
மணம்கசியும் கறுவாச்செடி
கோப்பிப்பழங்களும் சிவந்திருந்தன

நடுகைக் காலத்தில் தானியவிதைகளை வீசுகிறாள்

சுட்டகிழங்கின் மணத்தோடு
பறைகளுடன் மகுடிகளும் சேர்ந்து ஒலியெழுப்ப
ஆரம்பமாகின்றது சடங்கு

களிவெறி... கள் சுகம்...
மூட்டிய நெருப்பைச்சுற்றி வழிபாடு தொடங்கிற்று
வளர்ப்பு நாய்களும்... பெட்டிப்பாம்புகளும்...
காத்துக்கிடக்கின்றன
மாயஆவிகளை விரட்டி
பலிகொடுக்கும் விருந்துக்காக

தீர்ந்த கள்ளுச்சிரட்டைகளைத் தட்டி
விளையாடுகிற சிறுசுகள்
வாட்டிய சோளகக்கதிர்களை கடித்துத்திரிகின்றனர்

பிடிபட்டு வளையில் திமிறும் உடும்பை
கம்பினில் கட்டிஞ் தீயிலிட்டு...
அதன் வெந்த இறைச்சியை மலைத்தேனில் தொட்டு
கணவன்மார்களுக்கு பரிமாறுகின்றாள் குறத்தி

தும்பி சிறகடிக்கும் கண்கள்விரித்து
இரவுச் சுரங்கத்தின் கறுப்புத்தங்கமென எழும்
தலைவியை மரியாதை செய்கின்றனர்

மலைத்தேன் அருந்தியவாறு இருப்பவளை
புணர்ச்சிக்கு அழைத்தவன் கூறுகின்றான்
'போர் தேவதையின் கண்களாக உருண்ட
உன் முலைகளால்
குறிஞ்சி மலைகளையே அச்சுறுத்துகின்றாய்'

அவளது குரல்... மலைகளில் சிதறி ஒலிக்கின்றது

'பெண் உடல் பூண்ட முழுஇயற்கை நான்'

காற்றில் வசிப்பவன்...
காலத்தை தோன்றச் செய்பவன்...
இன்றென்னைத் தீண்டலாம்!!

ஓ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அனார் கவிதைகள்



## நடனம்

ஊறும் தன்மையாய்
கட்டுப்படாத தன்மையாய்ப் பெருகி
என் நீர்உடல் நடனமிடுகின்றது
கடவுளின் கனவென வடிவங்கள் வெவ்வே[illegible] எடுத்து

காட்டின் மறைவில் ஒளிந்து
பாறைகளில் கசிந்து வடியும் அபிநயம்
அந்தரங்கங்களைத் தொட்டு மூண்டெழும் பரவசம்
தெளிந்த தண்ணீர்த் தேக்கத்தின் ஆழ்ந்த சமநிலை

ஓடிச் சுழித்து ஒன்றிணைந்தாடுகின்றன
தசையணிந்த நீர்ச் சுனைகள்

சாரலாய்... தூவலாய்...
சலசலக்கும் சிற்றாறுகளாய்... புலன்கள் பிரிந்து
முன்வைக்கும் நீரின் கலைகள்

நீச்சலிடும் தண்ணீர்ப் பாதங்கள்
சூட்சுமமாய் நெருங்கியும்... விலகியும்...
குமிழிகள் கொப்பளித்து வெள்ளமாய் திளைக்கும்

கோடி வேட்கையின் இணைவு சூழ...
நிலத்தில் ஒட்டிக்கிடந்தாடும் நீர்

மூழ்கடிக்கும் வசீகர வளம்
முழுமை அழகு பொலிந்த மகாநதி
தன்னை நிகழ்த்துகின்றது மந்திர மண்டபத்தில்

சுவையில் மதர்த்த நடனம்
மேன்மையின் திறவுகோலாகி
தன்னையே திறக்கின்றது





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம்

# பிரச்சினைக்கான தீர்வு?

எஸ்.ரி.ஆர்

இலங்கையின் பாராளுமன்ற அரசியலானது அன்றிலிருந்து இன்று வரை பெரும்பான்மை சிங்கள அரசியல் அதிகாரத்தின் கீழ் தேசிய சிறுபான்மை இனங்கள் இருக்க வேண்டிய வகையிலேயே அமைந்துள்ளது. இந்த நிலைமையே தேசிய சிறுபான்மை இனங்களின் அதிருப்திகளுக்கும், மனக்கவலைக்கும் காரணமாகும். இந்த முறைமையை மாற்றி அமைக்குமாறு கோருவதே சிறுபான்மை தேசிய இனங்களின் அரசியல் கோரிக்கையாக இருந்து வருகிறது.

1932ம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு அரசியல் அமைப்பை வரைவதற்கு வந்த போது இந்த நிலைமையை மாற்றுமாறு கேட்கப்பட்டது. 1947ல் சுதந்திர கால கட்டத்தின் போது சோல்பரி கமிஷன் முன் இக்குறைபாடுகளை நீக்குவதற்கான பரிந்துரைகளை முன்வைத்த போதும் அவை கவனத்திற் கொள்ளப்படவில்லை.

பிரித்தானிய காலனித்துவ அரசியல் தலைமைகள் முன்வரைந்த அரசியல் அமைப்பின் வழியே தான் சிங்கள சுதேசிய அரசியல் தலைமைகள் பின்வந்த அரசியல் அமைப்புகளை தொடர்கின்றனர் (1972, 1978). தேசிய இனப்பிரச்சினைக்கும் இலங்கை இன முரண்பாடுகளுக்கும் இந்த அரசியல் அமைப்புகள்தான் அடிப்படையாக உள்ளன. இந்த முறைமையை மாற்றுமாறு தமிழ், முஸ்லிம், மலையக மக்கள், அவர்களுடைய அரசியல் தலைமைகள் தொடர்ந்தும் கோரி வருகின்றன. சிங்கள முற்போக்கு ஜனநாயக சக்திகளும் தேசிய சிறுபான்மையினரின் இக் கோரிக்கையை மிகப் பகிரங்கமாகவே ஆதரித்தும் வந்துள்ளன.

இந்த அரசியல் அமைப்பின் நேரடி விளைவாக வந்த அரசியல் நடைமுறைகள் மேலும் மேலும் நிலைமையை சிக்கலாக்கியே வந்துள்ளது. 1956ல் சிங்களத்தை அரச கரும மொழியாக்கியது, இந்திய வம்சாவழியினரின் வாக்குரிமையை பறித்தது, வடக்கு, கிழக்கு பிரதேசத்தின் குடிப்பரம்பலை மாற்றி அமைப்பதற்கான திட்ட மிட்ட சிங்கள குடியேற்றங்கள் என்பன இந்த நிலைமை ஏற்படுவதற்கு துணைக் காரணங்களாக அமைந்தன.

அன்று இருந்த தேசிய சிறுபான்மை இனங்களின் அதிருப்திகளையும் மனக்குறைகளையும் தீர்ப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட பண்டா - செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தங்களையும் இணக்கப் பாடுகளையும் சிங்கள அரசியல் தலைமைகள் உதாசீனம் செய்ததன் அரசியல் விளைவுதான் 1976 மே மாதம் 17ம் திகதி முன்மொழியப்பட்ட "வட்டுக்கோட்டை" தீர்மானம் ஆகும்.

சாத்வீக அரசியல் போராட்டங்கள் கவனத்திற் கொள்ளப்படாத சூழலில் ஆயுத போராட்டத் திற்கும் பிரிவினை வாதத்திற்குமான கோரிக்கையின் அத்திவாரமே இத்தீர்மானங்களாகும். இங்கு இன்னுமொரு விடயத்தினையும் சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாக இருக்கும். சிங்கள அரசியல் தலைமைகளை நோக்கி தமிழர் தலைமையால் முன்னெடுக்கப்பட்ட சாத்வீக வழியிலான அரசியல் போராட்டங்களாக இருக்கட்டும், ஆயுத வழிப்போராட்டங்களாக இருக்கட்டும் அவை வெறும் இன உணர்ச்சி சார்ந்தும் தீர்க்க தரிசன மற்றும் நெகிழ்ச்சியற்றதுமான எதிர்ப்பு அரசியலையே மேற் கொண்டிருந்தன. ஜனநாயக தமிழ் தேசிய தலைமைகள் தொடக்கம் ஆயுதவழியிலான பிரபாகரன் தலைமை வரை கைக்கொண்ட இறுக்கமான போக்கு தோல்வியிலேயும் மிகப் பெரும் ஆபத்திலேயும் முடிந்திருக்கிறது.

இப்படியானதொரு கைவிடப்பட்ட சூழலில் உள்ள தேசிய சிறுபான்மை இனங்கள் (தங்கள் தங்கள் மீட்பர்களால் கூட) தமது இருப்பையும் கௌரவத்தையும் அரசியல் உரிமைகளையும் பெற்று பாதுகாத்து கொள்ள புதிய வழி முறைகள், செயற் திட்டங்களைப் பற்றி யோசிப்பது முன்பினை காட்டிலும் இன்று காலத்தின் கட்டாயமாக உள்ளது. இந்த பணி தமிழ், முஸ்லிம், மலையக தமிழர்களை சமத்துவமாக அங்கீகரிப்பதற்கான, அவர்களது தனித்துவங்களை, பிரச்சினைகளை ஏற்றுக் கொண்டு முன்செல்வதற்கான அரசியல் சமூக நிபந்தனைகளிலேயே தங்கியுள்ளது.

சுமார் 20 வருடங்களுக்கு மேற்பட்ட ஆயுத போராட்ட காலகட்டத்தில் பல்வேறு அரசியல் பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. பல்வேறு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்வு யோசனைகளும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான முன்வரைவுகளும் முன்வைக்கப் பட்டுள்ளன. இவைகளை அமுலுக்கு கொண்டு வருவதில் சிங்கள அரசியல் தலைமைகள் கொண்டிருந்த உதாசீன போக்குகள் மட்டுமல்ல, தமிழ் தேசிய அரசியல் தலைமைகளின் போக்கும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இந்த முன்வரைவுகளை, தீர்வுகளை கவனத்திற்குட்படுத்தி ஆராய்வது இன்று அவசியமானது. தனி நாடு என்பது சாத்தியமற்றது. அதேவேளை ஒற்றையாட்சி அரசியல் அமைப்பின் கீழ் தேசிய இனங்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆலோசிப்பது தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாகாது. இந்த இடத்தில் ஒற்றையாட்சியற்ற, (சமஷ்டி) அரசியல் அமைப்பு முறைக்கும் ஒற்றையாட்சி அரசியல் தீர்வு முறைக்குமான வேறுபாடுகளை நாம் கவனத்தில் கொள்வது அவசியம்.

ஏலவே நாம் குறிப்பிட்டது போல் ஒற்றையாட்சி முறையின் கீழான அதிகாரப் பரவலாக்கம் என்பது முடக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கமாகவே அமையும். ஒற்றையாட்சியின் கீழ் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட்டாலும் அது தேசிய சிறுபான்மை இனங்களுக்கான முழுமையான அதிகாரப்பரவலாக்கமாக அமையப் போவதில்லை என்பது தெளிவு.

இனங்களுக்கிடையே சமத்துவ வாய்ப்புகள், புரிந்துணர்வுகள், மனித உரிமைகள் மதிக்கப் படுகின்ற நாடுகளில் ஒற்றையாட்சியின் கீழான அதிகாரப்பகிர்வு திருப்தியானதாக இருக்கலாம். ஆனால் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே அரசியல் சந்தேகங்களுடனும் இன முரண்பாடும் அரசியல் தீர்வை காண்பதற்கு அக்கறையற்ற நிலை தொடரும் நாடொன்றில் சமாதானத்திற்கு வாய்ப்பாக அரசியல் தீர்வை அடைவதற்கு அறுதியும் உறுதியுமான அதிகாரப் பரவலாக்கல் திட்டம் அவசியம்.

ஒற்றையாட்சி அல்லாத ஒரு அரசியல் தீர்வின் கீழ் அதிகாரப்பகிர்வு என்பது மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீது மத்திய அரசு அத்தியவசிய தருணங்கள் தவிர, வேறு எச்சந்தர்ப் பத்திலும் தலையீடு அற்றதாக இருத்தல் வேண்டும். இலங்கை இனப்பிரச்சினை தீர்வில் மாநில சபைகளுக்கு இந்த வகையான ஏற்பாடு அவசியமானதாகும். இங்கு நாம் கருத்தில் கொள்ள வேண்டியது சமஷ்டி ஆட்சி முறையா, சமஷ்டி அற்ற ஆட்சி முறையா என்பதல்ல. அதிகாரப்பரவலாக்கம் மாநிலங்களுக்கு எந்த அளவு வழங்கப்பட்டுள்ளது என்பதும் அதில் மத்திய அரசுக்கு இருக்கின்ற எல்லைப்பாடு களுமேயாகும்.

இலங்கையில் நிலவுகின்ற தேசிய இனப் பிரச்சினைக்கு இதுவரை பல தீர்வு யோசனைகள், முன்மொழிவுகள் மொழியப்பட்டுள்ளன. இத் திட்டங்கள் எவையேனும் (13வது திருத்தத்தை தவிர) பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கோ, மக்களின் ஆணைக்கோ முன்கொண்டு செல்லப் படவில்லை எனினும் இவற்றை தேசிய சிறுபான்மை இனங்களின் அபிலாசைகளோடு ஒப்பீட்டு பரிசீலிப்பது அவசியம். இவைபற்றி கவனம் செலுத்துவது அவசியம்.

## முன்மொழியப்பட்ட தீர்வுகள்

### 1. இலங்கை இந்திய ஒப்பந்தம்

ஆயுதப்போராட்டமும் இனப்பிரச்சினையும் தீவிரமடைந்திருந்த ஒரு கால கட்டத்தில் 1987ல், இந்திய அரசின் தலையீட்டினால் இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவானது. இதன் மூலம் 13வது அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது.

இவ்வொப்பந்தமானது வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு அமைய தாயக கோட் பாட்டிற்கு அங்கீகாரத்தை கொடுத்த போதிலும் தமிழ் பேசும் மக்களுக்கு (வடக்கு கிழக்கு) கூடிய அரசியல் நிர்வாக அதிகாரங் களை வழங்க வழி செய்யவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தின் முக்கிய குறைபாடுகளாக கருதத்தக்கவை.

- ஒற்றை ஆட்சி அரசியலமைப்புக்குள் அதிகாரப் பரவலாக்களை ஏற்படுத்தியமை, அதாவது மத்திய அரசானது மாநிலங்களுக்கு வழங்கிய அதிகாரங்களை கையகப்படுத்தக் கூடியதாக உள்ளமை.
- மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட / பரவலாக்கப்பட்ட அதிகார நிரல்கள் தெளிவற்றதாகவும் மத்திய அரசின் கட்டுப் பாட்டின் கீழும் இருந்தமை.

13ஆவது திருத்தம் இந்திய அரசின் அழுத்தத் தினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் திருத்தம் என்ற முறையாலும் மேற்குறிப்பிடப்பட்ட முக்கிய குறைபாடுகள் காரணமாகவும், இதனை அமுல்படுத்துவதில் மாறி மாறி பதவிக்கு வந்த இரண்டு தசாப்த கால அரசியல் தலைமைகளின் அசமந்த போக்கும் இதனை பலவீனப்படுத்தியே வருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 2. மங்கள முனசிங்க கமிஷன்

இப்பரிந்துரையானது இந்திய அரசியல் அமைப்பு முறையை ஒத்த அதிகாரப் பரவலாக்கத்தை இலங்கையின் சகல மாகாணங்களுக்கும் பரிந்துரை செய்கின்றது. இப்பரிந்துரை முக்கியமான அரசியல் கட்சி கள் அனைத்தும் ஏற்றுக் கொண்டு ஒப்ப மிட்டுள்ளன. தமிழ்க்கட்சிகள் இப்பரிந்துரை யில் கூறப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் முறைக்கு ஆதரவு வழங்கி இருந்தும், வடக்கு கிழக்கு தனித்தனி மாகாணங்களாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை மாத்திரம் ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்திய அரசியலமைப்பானது ஒற்றை யாட்சியோ அல்லது சமஷ்ட்டி ஆட்சியோ அல்ல. அந்தளவில் இவ்வரசியல் பரிந்துரை ஒற்றையாட்சிக்குட்பட்ட 13ஆவது திருத்தத் தை விட முன்னேற்றகரமானது என்றே கருதப்படல் வேண்டும்.

## 3. 1995 சந்திரிக்கா முன்மொழிவு *(Union of Regien)*-2000 ஆகஸ்ட் சந்திரிக்கா பிரேரனை

தேசிய சிறுபான்மை இனங்களுக்கு ஒற்றை யாட்சியற்ற அமைப்பின் கீழ் (வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அரிகாரங் கள் உட்பட) கூடிய அதிகாரங்களை வழங்கக் கூடியதாக (1995 ஆகஸ்ட்) முன்மொழிவு இருந்தது. ஆனால் சந்திரிக்கா இம்முன் மொழிவை பிரேரித்ததன் பின் சிங்கள அரசியல் மட்டங்களிலிருந்து எழுந்த எதிர்ப்பு, அழுத்தங்களின் காரணமாக இந்த யோசனை பின்னர் கைவிடப்பட்டது.

அதன்பின் 1995 ஆகஸ்ட் யோசனையிலிருந்து மிகவும் பலவீனப்படுத்தப்பட்ட ஒரு முன் மொழிவை 2000 ஆகஸ்டில் சந்திரிக்கா முன் வைத்தார். இம்முன்மொழிவு 1995 முன் மொழிவை விட அதிகாரங்கள் குறைந்ததாக இருந்த போதிலும் 13ஆவது திருத்தத்தை விடவும் முன்னேற்றகரமானது.

இம்முன்மொழிவில் ஒற்றையாட்சி அற்ற ஒரு அரசியல் அமைப்பின் கீழ் அதிகாரங்களை பகிர்வதற்கான ஏற்பாடுகளும் பல்லினங்களின் பன்மைத்துவம், சுயாதீனம் என்பவற்றை ஏற்று உறுதிப்படுத்தக் கூடிய "பல்லினங்கள் கொண்ட மக்கள் கூட்டமைப்பு'' என்பதை தெளிவுற கூறியிருந்தது.

## 4. புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால வரைபு

இது ஒரு அரசியல் தீர்வுத் திட்ட முன் மொழி வாக இல்லாது இருப்பினும், வடக்கு கிழக்கு பிராந்தியத்திற்கு நிர்வாக அதிகாரங் களை வழங்கக் கோருவதற்கு பிரேரிக்கப் பட்டது என்கின்ற வகையில் முக்கியத்துவ மாகிறது. வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு கூடிய அதிகாரங்களைக் கோரி இருந்ததுடன், ஒற்றையாட்சி முறையின் கீழ் நடைமுறைப் படுத்தப்படுவதை ஏற்றுக் கொண்டிருந்தது. வடக்கு கிழக்கு உட்கட்டமைப்பு முறைக்குள் மத்திய அரசு தலையிட முடியாது என்பதனை வலியுறுத்தியும் இருந்தது.

இந்த முன்மொழிவானது வடக்கு கிழக்கின் நிருவாக அதிகாரத்தை எல்.டி.டி.ஈ-க்கு வழங்கக் கோரியதுடன் வடக்கு கிழக்கு பிராந்தியத்தின் இன / பிரதேச பன்மைத்துவங் களுக்கும் செயற்பாடுகளுக்கும் அடிப்படை மறுப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது.

## 5. அனைத்துக் கட்சி/ நிபுணத்துவக்குழுவின் அறிக்கை (2006)

மஹிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின், சர்வகட்சி பிரதிநிதிகளின் யோசனைகள் திரட்டப்பட்டது. இக்குழுவானது இரண்டு வகைகளில் செயற்பட்டது.

*i* அனைத்து கட்சி பிரதிநிதிகளைக் கொண்ட குழு.

*ii* நிபுணத்துவக்குழு.

நிபுணத்துவக் குழுவானது தனது அறிக்கை களை 2006 டிசம்பரில் வெளியிட்டது. இக்குழுவினுள் ஒருமித்த கருத்து வராத காரணத்தால் மூன்று அறிக்கைகள் சமர்ப் பிக்கப்பட்டன.

- *13* பேர் கொண்ட பெரும்பான்மை அங்கத்தவர்களின் அறிக்கை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

● 3 பேர் கொண்ட அங்கத்தவர்களின் அறிக்கை.

● ஒருவரைக் கொண்ட தனி அறிக்கை.

பெரும்பான்மை நிபுணத்துவக் குழு உறுப்பினர்களைக் கொண்ட அறிக்கையானது ஒற்றையாட்சியற்ற அமைப்பின் கீழ் கூடிய அதிகாரங்களை வழங்குமாறு பரிந்துரை செய்கின்றது. இவ்வறிக்கையானது 13ஆவது திருத்தம், 2000 ஆகஸ்ட் முன்மொழிவுகளை விட முன்னேற்றகரமானது. 2007 ஜனவரியில் அனைத்துக் கட்சிக் குழுத்தலைவர் என்கின்ற வகையில் திஸ்ஸ விதாரண ஒரு முன்மொழிவை சமர்ப்பித்தார். இவரின் முன்மொழிவானது பெரும்பான்மை நிபுணத்துவக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதாகவே உள்ளது.

**6. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்மொழிவு**

2007 மே 01ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீ.ல. சுதந்திரக்கட்சி தனது முன்மொழிவை அனைத்துக்கட்சிக் குழுவின் முன் வைத்தது. இந்த முன்மொழிவானது அனைத்துக் கட்சி பெரும்பான்மை அங்கத்துவ நிபுணத்துவக் குழுவின் முன்மொழிவிலிருந்து, அனைத்துக் கட்சித்தலைவர் திஸ்ஸ விதாரணவின் முன்மொழிவிலிருந்தும் பெருமளவு அதிகாரங்களை குறைப்புச் செய்வதாகவே உள்ளது.

ஒற்றையாட்சி முறைமையின் கீழ் மாவட்டங்களுக்கு அதிகாரங்களை வழங்கக்கோருவதாகவே இம்மும்மொழிவு உள்ளது. இதனை சிறுபான்மை தேசிய இனங்களின் அரசியல் தலைமைகள் ஏற்றுக்கொள்ள மறுத்துவருகின்ற நிலையிலும், இதுவரை ஸ்ரீ.ல. சுதந்திரக்கட்சித் தலைமை தனது முன்மொழிவில் எவ்வித திருத்தத்தையோ மாற்றத்தையோ செய்ய முன்வரவில்லை.

● ● ●

இவ்வாறான பல்வேறு அரசியல் தீர்வு முன்மொழிவுகள் ஆயுதப்போராட்ட காலத்தின் போது முன் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் இவற்றை அமுல்படுத்துவதிலும் சம்மந்தப்பட்ட தரப்புகளை ஏற்கச் செய்வதிலும் பெரும் தோல்வியே காணப்பட்டுள்ளது.

**தேசிய சிறுபான்மை இனங்களின் அரசியல் உரிமைகளை பாதுகாப்பதில் மத்திய அரசுடன் கண்ட தோல்வியும், பிரிந்து போவதை முன்னிலைப்படுத்தி நடாத்தப்பட்ட ஆயுதப் போராட்டத்தின் தோல்வியும் மக்களை அரசியல் தீர்வற்ற சூன்ய நிலைக்கு தள்ளியுள்ளதே இன்றைய யாதார்த்தமாகும்.**

பிரிந்து போகாமல் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதா? பிரிந்து போவதற்கான அரசியல் வாய்ப்புகள் உள்ளதா? என்கிற இரு தேர்வுகளுள் தனி நாடானது சாத்தியமற்றது என்பது தெளிவானது. (இது பற்றி தனியே எழுதப்படல்வேண்டும்) இந்த இடத்தில் நமக்கு முன்னுள்ள தெரிவு ஒற்றையாட்சி அற்றவகையில், ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வை ஏற்படுத்துவதே. இதற்கு சிங்கள அரசியல் தலைமைகள் / மக்கள், வடக்கு கிழக்கு முஸ்லிம் அரசியல் தலைமைகள் / மக்கள், கிழக்கு தமிழ் அரசியல் தலைமைகள் / மக்களின் இணக்கமும் இவர்களுக்கிடையிலான வேலைத் திட்டமும் அவசியமானதாகும்.

தற்போதைய அரசியல் சூழலில் நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளில் அகபுறச் சூழல்களை சீர்செய்வதும் பலப்படுத்துவதும் அதனூடாக மக்களைச் சூழ்ந்துள்ள பேரழிவிலிருந்தும் துன்பத்திலிருந்தும் மீட்டெடுப்பதும் இக்காலத்தை உருவாக்க உழைப்பதுமே வித்தியாசமான செயற்பாடாகவும் சிந்தனையாகவும் இருக்க முடியும்!

இதனை சாத்தியப்படுத்துவதற்கு பின்வரும் விடயங்கள் துணைபுரியும்.

- கூடிய அதிகாரப்பகிர்வுடைய ஒரு அரசியல் தீர்வுக்காக முஸ்லிம், மலையக, கிழக்கு அரசியல் தலைமைகளுடன் உரையாடலை தொடங்குதல். இணைந்து செயறபடுதல். இம்மக்களின் ஆதரவைப் பெறுதல். பெரும்பான்மை சிங்கள மக்களை இதற்கு தயார் படுத்த அவர்களுடனான உரையாடலைத் தொடர்தல் (அச்சங்கள், சந்தேகங்கள் தீர்க்கப்படுவதுடன், அரசியல் உரிமைகள் / தனித்துவங்கள் ஏற்கப்படுவது முதல் அவசியம்)
- 1980, 1985 காலப்பகுதியிலிருந்த சர்வதேச சமூகத்தின் ஆதரவு நிலை, பின்னர் நிகழ்ந்த பல்வேறு போராட்டத்திற்கான தார்மீக ஆதரவு பலம் இழக்கப்பட்டதுடன் வேண்டத்தகாத தாகவும் பயங்கரவாதமாகவும் வெறுப்புணர்வுடனும் பார்க்கும் நிலைக்கு தள்ளப்பட்டது. இத்தவறுகளை திருத்தி, பன்மைத்துவத்தையும்/ மனித விழுமியங்களுக்கு மதிப்பளிக்கக் கூடியதுமான அடிப்படைகளை ஏற்படுத்தி சர்வதேசத்தின் ஆதரவைப் கோருதல் வேண்டும்.

▣




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சி. ஜெயசங்கர்



# ஆலகால ஊடகங்கள்

சுட்டப்பட்ட கதைகளில்
இல்லாதது போல
மலையை மத்தாக்கி
பாம்பைக் கயிறாக்கி
கடையாமலே
நஞ்சைக் கக்கிப் புரள்கின்றன
வணிக ஊடக மலைப்பாம்புகள்
காவற் கோல்களைக் கைகளில் ஏந்தி
மழவருக்கு இரை தேடி
பக்கங்களை விரிக்க விரிக்க
எழுத்துக்கள் சொற்கள் வரிகள்
இன்னும் வரைவுகள் வரிப்படங்கள்
நச்சு நாகங்களென
சீறிச் சிதைந்தெழுந்து
துயரத்திற்கு குள்ளானவரை
சந்தேகத்திற் குள்ளாக்கி
புரள்கின்றன... புரள்கின்றன....
பணத்தில் அதிகாரத்தில்
பொய்மையில்

# அல்லோல ஆலோலம்

கவண் வீச்சில்
குருவிகள் பறக்க
ஆலோலம் பாடி
அகம் மகிழ்ந்த வாழ்க்கை
கதையாக்கிப் பின்
ஆடி மகிழ்ந்த வாழ்க்கை
கனவாக
பின்னம் அல்லோல கல்லோலமாக...

சந்தேகம் கண்களில்
பறண் கட்டிக் காவலிருக்க
நெஞ்சக் கூட்டினுள்
அச்சக் குருவிகள்
விறைப்பெடுத்து நடுக்கமுறும்
சனநாயகம்
இராணுவத் தொடரணிகளில்...

எதிர்பார்த்துக் காத்திருக்கும்
அனர்த்தங்களை
முகர்ந்து... முகர்ந்து...

# சர்வம் அம்மணம்

வடகிழக்கில் வெலிக்கடை
படுகொலைத் திருவிழா
பூட்டிய சிறையுள் சிந்திய குருதி
திறந்தசிறைப் பெருவெளி எங்கணும்
குருதியாற்றுப் பெருக்கம்
விடாது, வெட்டித் தொடரும்
மின்னற் கொடிப் படர்வாய்
தேச வரைபட எல்லைகள் கிழித்து
வெட்டித் தெறிக்கும் அவலக் குரலோல
துயரகிர்வில்
"உலக நீதி"யின் அம்மண ஊர்வலம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டுரை



# இன்றைய தேவை: ஆத்ம சுத்தியுடன் கூடிய யதார்த்தபூர்வமான மீளாய்வு!

பி.ஏ. காதர்

நாம் எமது போராட்டத்தின் இன்றைய நிலைமையையும் அதற்கான காரணத்தையும் ஆத்மசுத்தியுடன் ஆய்ந்து பார்ப்பது அவசிய மாகும். இச் சிறுகட்டுரையால் அப்பாரிய பணியை பூர்த்தி செய்ய முடியாதபோதும் இத்திசையில் ஒரு சிறு தீப்பொறியை மூட்ட முடியும் என நம்புகிறேன். தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தில் புலிகள் மாத்திரந்தான் பங்களிப்பு செய்துள்ளார்கள் எனபதைப்போன்ற பிரச்சாரம் ஒரு வரலாற்றுத் திரிபாகும். அதே போல தமிழ் பேசும் மக்களின் போராட்டத்தில் நிகழ்ந்த தவறுகளுக்கு புலிகள் மாத்திரமே பொறுப்பாளிகள் எனக் கூறுவதும் வரலாற்றுத் திரிபேயாகும். மறுபுறத்தில் இன்றைய போராட் டத்தில் புலிகளின் பாத்திரம் எந்தளவுக்கு முக்கியமோ அதே அளவுக்கு நிகழ்ந்த தவறுகளுக் கும் அவர்களே பெரும்பகுதி பொறுப்பேற்றாக வேண்டும்.

உலக கொரில்லா போராட்ட வரலாற்றில் புலிகளுக்கு நிச்சயமாக ஒரு முக்கிய இடம் உண்டு. மலைகள் இல்லாத சமதரையில் கொரில்லா போராட்டம் சாத்தியமில்லை என்ற கருத்தை பொய்மையாக்கி வடக்கு-கிழக்கின் சமூக-புவியியல் அமைப்பிற்கேற்ப வடிவமைத்து உலகின் மிக உறுதிவாய்ந்த கொரில்லா இயக்கமாக அதனை வளர்த்த பெருமையும்; சொந்த விமானப்படை ஒன்றை முதன்முதலாக நிறுவிய சாதனையும் புலிகளையே சாரும். ஆனால் இராணுவரீதியில் புலிகளால் சாதிக்கப் பட்ட அபார சாதனைகளோடு ஒப்பிடுகையில் அரசியல்ரீதியாக அவர்களால் ஈட்டப்பட்ட வெற்றிகள் பொருட்படுத்த தக்கவையல்ல. எப்படி புலிகளின் இராணுவ கட்டமைப்பும் உத்திகளும் அதன் பலமோ அதேபோல புலி களின் சுத்த இராணுவ கண்ணோட்டம் அவர் களின் பலவீனமாகும்.

துப்பாக்கி குழலில் இருந்து தான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது என்ற மாவோவின் தத்துவத்தை அவர்கள் எப்படி அறைகுறையாகப் புரிந்து கொண்டார்களோ நிச்சயமாக மக்களுக் காகத்தான் ஆயுதமே தவிர ஆயுதத்திற்காக மக்கள் அல்ல என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். விடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் என்பது அரசியல் நோக்கத்தை அடைவதற்காக வும் கைப்பற்றிய அரசியல் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு கருவியே தவிர மக்களை நசுக்கும் கருவியல்ல. மக்களைக் காப்பாற்றவும் அடக்குமுறையிலிருந்து அவர்களை விடுவிக்கவும் அது பயன்படுத்தப் படும் வரைக்கும் தான் அதனால் ஒரு முற்போக்கு பாத்திரத்தை வகிக்க முடியும். அது எப்பொழுது மக்களுக்கு எதிராக திரும்புகிறதோ அப்பொழுதே அது திசைமாறி கொடுங்கோன்மைக்குள் பிரவேசிக்கிறது.

எமது போராட்டத்தின் பிரதான வெற்றி இனி முன்னரைப்போல இரண்டாந்தர பிரஜைகளாக தமிழ் பேசும் மக்களை ஆளமுடியாது என ஆளும் வர்க்கத்தை உணரவைத்ததுதான். முன்னர் மாவட்ட சபையைக் கூட தர மறுத்தவர்கள் பின்னர் மாகாணசபையை கொடுத்தும் வடக்கு கிழக்கு மக்களைத் திருப்திபடுத்தமுடியவில்லை. எமது போராட்டத்தின் பிரதான தோல்வி; ஒரு பகுதி சிங்களமக்களின் அனுதாபத்தோடு முழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் பேசும் மக்களின் போராட்டமாக ஆரம்பித்த எமது பயணம் இன்று சிறு நிலப்பரப்பில் குறுகிய இனவாதத்துக்குள் முடங்கிக்கிடப்பதாகும். முஸ்லீம்களும் கிழக்கு மாகாண மக்களும் இன்று இப்போராட்டத்திலிருந்து அந்நியப் படுத்தப்பட்டுள்ளனர். சிங்களமக்கள் அனைவரும் எதிரிகளாக்கப்பட்டுள்ளனர். இதனை ஆளும்வர்க்கத்தின் சூழ்ச்சியால் ஏற்பட்ட தற்காலிக பின்னடைவு என எதர்ச்சையாகக் கூறிவிட முடியாது. மக்கள் மத்தியிலான முரண்பாட்டை சரியான முறையில் கையாள்வது எப்படியென்ற பிரச்சினையில் இழைக்கப்பட்ட பாரிய தவறின் விளைவே இதுவாகும். மக்கள் மத்தியிலான சாதாரண முரண்பாட்டைக் கூட துப்பாக்கியால் தீர்க்க முற்பட்டதன் பெறுபேறே இதுவாகும். எதிரி யார் நண்பர் யார் என்பதை அரசியல்ரீதியாக பகுத்தாய்ந்து பாராமல் அனைவருக்கும் எதிராக துப்பாக்கியை பயன்படுத்தியதன் சாபக்கேடே இதுவாகும். மொத்தத்தில் சுத்த இராணுவ கண்ணோட்டத்தின் தவிர்க்க இயலாத விபரீதமே இதுவாகும். இப்போக்கு ஒருபகுதி எதிரிகளை நண்பர்களாக்குவதற்கு பதிலாக நண்பர்களையும் அநாவசியமாக எதிரிகளாக்கியுள்ளது.

இன்று பாதிமக்கள் சிங்கள மேலாதிக்க அரசின் ஈவிரக்கமற்ற தாக்குதலாலும் அடக்குமுறையாலும் தமது குடும்பத்தில் குறைந்தது ஒரு அங்கத்தவரையாவது பறிகொடுத்து கண்ணீர் வடிக்கும் அதேசமயம் மீதிபேர் புலிகளின் துப்பாக்கிக்கு பலியான தமது குடும்ப அங்கத்தவருக்காக கண்ணீர் வடிக்கின்றனர். மறுபுறத்தில் சிங்கள மேலாதிக்க அரசைக் கட்டுப்படுத்தும் எண்ணிக்கையில் சிறுபான்மையான சிங்கள ஆளும்வர்க்கம் பலவீனமடையவில்லை 'தனிமைப்படவில்லை' மாறாக பலமடைந்துள்ளது. புலிகளின் இராணுவ வெற்றிகளால் ஏற்பட்ட யுத்த பின்னடைவுகளும் பொருளாதார நெருக்கடிகளும் ஆட்சிபீடத்தில் கட்சிகளை மாற்றியுள்ளன ஆட்சியை மாற்றவில்லை. இரு பெரும்-இனவாத கட்சிகளும் போட்டி போட்டுக் கொண்டு இனவாதத்தைக் கக்கியபடி மாறிமாறி ஆட்சிக்கு வருவதற்கும் பேரினவாத நஞ்சை தேசியவாதத்துடன் கலந்து அப்பாவி சிங்கள மக்களை பணயக் கைதிகளாக்கி தமது பிடிக்குள் வைத்திருப்பதற்கும் தான் இப்போக்கு உதவியுள்ளது.

முக்கிய சிங்கள தலைவர்களை ஆயுதத்தால் அழிப்பதன் மூலம் மத்திய அரசை வீழ்த்த முடியும் அல்லது பலவீனப்படுத்த முடியும் என கருதினால் அது குழந்தைத்தனமான கற்பனையேயாகும். அத்தந்திரோபாயம் எதிர்விளைவையே கொண்டுவரும் என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. பிரேமதாசவும் காமினியும் லலித்தும் கொல்லப்பட்டார்கள் - கொரில்லா தாக்குதல் வெற்றி பெற்றது. ஆனால் மத்தியில் அரசு வீழ்ந்துபட்டதா? பிரேமதாச அழிந்தார் சந்திரிகா பதவிக்கு வந்தார். ஆள்மாற்றம் நடந்தது அமைப்பில் மாற்றம் ஏற்படவில்லை. அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசிய அரசு தற்காலிகமாக பலவீனப்பட்டு சந்திரிகா 'அனுருத்த தலைமையிலான கூட்டணி பெரும் பலத்துடன்' ஆட்சிக்கு வந்து முன்னொருபோது இல்லாத அளவுக்கு பாரிய யுத்தத்தை முன்னெடுத்தது.

நீண்ட யுத்தத்தின் முடிவில் அரசின் படைகள் தோல்வியடைந்து பின்வாங்கின என்பதும் புலிகளின் இராணுவ யுத்திக்கும் மனவுறுதிக்கும் வீரத்திற்கும் கிடைத்த வெற்றி இது என்பதும் உண்மைதான். ஆனால் இராணுவம் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டதா? இல்லை பின்வாங்கியது. மீண்டும் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் தன்னை புதுப்பித்துக் கொண்டு மறுபடியும் பாரிய அளவில் தாக்குதலைத் தொடங்கியுள்ளது. இவ்வாறு இராணுவத்தின் கை ஓங்கும்போது புலிகள் பின்வாங்குவதும்; பின்வாங்கிய புலிகள் இராணுவத்தை உள்ளே வரவிட்டு - தமது பலத்தைக் குவித்துக்கொண்டு மீண்டும் தாக்கி இராணுவத்தைப் பின்வாங்கச் செய்வதும்; பின்வாங்கிய இராணுவம் மீண்டும் தன்னைப் பலப்படுத்திக் கொண்டு மறுபடியும் தாக்கி புலிகளை பின்வாங்கச்செய்வதும் இருதரப்பு இராணுவ - அரசியலாகிவிட்டது.

சுருங்கச் சொன்னால் புலிகளை முற்றாக அழிக்க பேரினவாத அரசால் முடியாது. ஆனால் காலத்திற்குக் காலம் அதன் மீது தாக்குதலைத் தொடர்ந்து தொடுத்து பின்வாங்கச் செய்ய முடியும். தொடர்ச்சியாக நிலைகொண்டு கைப்பற்றிய பகுதிகளைத் தக்கவைத்துக் கொள்ள

> புலிகளை முற்றாக அழிக்க பேரினவாத அரசால் முடியாது. ஆனால் காலத்திற்குக் காலம் அதன் மீது தாக்குதலைத் தொடர்ந்து பின்வாங்கச் செய்யமுடியும். தொடர்ச்சியாக நிலைகொண்டு கைப்பற்றிய பகுதிகளைத் தக்கவைத்துக் கொள்ள அரசால் இயலாது. அதே சமயம் புலிகளால் இராணுவத்தை முற்றாக அழித்து விட முடியாது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசால் இயலாது. அதே சமயம் புலிகளால் இராணு வத்தை முற்றாக அழித்து விட முடியாது. இராணுவத்திடமிருந்து தமிழ் பேசும்மக்களின் நிலப்பரப்பில் ஒரு பகுதியை மீட்டு தற்காலிக மாக தமது பிடியில் வைத்திருக்கவும் பாரிய இராணுவ தாக்குதல் மேற்கொள்ளப்படும்போது அவற்றின் பெரும் பகுதியை விட்டு பின்வாங்க வுமே இயலும். இந்த முடிவற்ற யுத்தத்தில் நிர்ணயமான வெற்றி எவருக்கும் கிடையாது ஆனால் நிச்சயமான தோல்வியும் அவலமும் தமிழ் பேசும் மக்களுக்குத்தான். இத்தகைய அடிக்கடிமாறும் தேக்க நிலைமைக்கு முடிவே கிடையாதா?

புலிகளின் எதிரிகளைக் கேட்டால் "பாவம் தமிழ் மக்களுக்கு புலிகளால்தான் இந்த நிலைமை; புலிகள் அழிக்கப்பட்டால் மாத்திரமே இந்த நிலைமை மாறும்" என்பார்கள். புலிகளுக்கு வால்பிடிப்போரைக் கேட்டால் 'இவர்களை எல்லாம் கொல்ல வேண்டும்; சிங்களவர் அனைவரையும் கொல்ல வேண்டும்; முஸ்லிம் கள் அனைவரையும் கொல்ல வேண்டும்; கிழக்கு மாகாணத்தவர் அனைவரையும் கொல்ல வேண் டும். புலிகளை விமர்சிக்கும் அனைவரையும் கொல்லவேண்டும்... அப்போதுதான் எமக்கு விடுதலை கிடைக்கும்" என்பார்கள். இப்போது எவர் வாயிலிருந்தும் 'அடிக்க வேண்டும் உதைக்க வேண்டும்' என்ற வார்த்தை வருவதில்லை. "கொல்ல வேண்டும் சுட வேண்டும்" என்ற வார்த்தையே வெளி வருகிறது. சுடுவதும் கொல்வதும் கன்னத்தில் அறைவதைப் போன்ற சராசரி விடயமாகிவிட்டது. மனித நேய அரசிய லுக்கு பதிலாக கொலைக்கார அரசியல் நிகழ்ச்சி நிரலாகிவிட்ட அவலநிலையின் வெளிப்பாடே இதுவாகும்.

இந்த போக்கின் நிரந்தரமான இராணுவ வெற்றியும் நிரந்தர அமைதியும் மத்திய அரசின் நிரந்தர விழ்ச்சியுடன் சம்பந்தப்பட்டது. ஆனால் மத்திய அரசின் வீழ்ச்சி என்பது ஒருபோதும் சாத்தியமாகப் போவதில்லை. ஏனெனில் இங்கு நடைபெற்றுக் கொண்டிருப்பது ஒருநாட்டின் ஒட்டு மொத்தமான விடுதலைக்கான போராட்ட மல்ல - ஒரு நாட்டின் ஒரு கோடியில் ஒரு சிறுபான்மை தேசிய இனம் தனது விடுதலைக்காக நடத்தும் போராட்டமாகும். பெரும்பான்மை தேசிய இனத்தின் ஒட்டு மொத்தமான எதிர்ப் பையும் துப்பாக்கி கலாச்சாரத்தால் பாதிக்கப் பட்ட ஒரு பெரும் பகுதி தமிழ் பேசும் மக்களின் ஆத்திரத்தையும் எதிர்கொண்டு இன்னும் பல தசாப்தங்கள் போராடினால் கூட மத்திய அரசை வீழ்த்த முடியாது.

> மத்திய அரசை இராணுவரீதியில் வீழ்த்த முடியாதுதான் ஆனால் அரசியல்ரீதியாக கைப்பற்ற முடியும் - மாற்ற முடியும். தீவிர சிங்கள இனவாத சக்திகளை 'பிரதான எதிரியை - தனிமைப்படுத்தக் கூடிய பரந்துபட்ட விரிவான அரசியல் ஐக்கிய முன்னணி ஒன்றின் மூலம் மாத்திரமே இது சாத்தியம்.

அப்படியானால் அடுத்த மாற்றுவழி என்ன? மத்திய அரசை இராணுவரீதியில் வீழ்த்த முடியாதுதான் ஆனால் அரசியல்ரீதியாக கைப் பற்ற முடியும் - மாற்ற முடியும். தீவிர சிங்கள இனவாத சக்திகளை 'பிரதான எதிரியை - தனிமைப்படுத்தக் கூடிய பரந்துபட்ட விரிவான அரசியல் ஐக்கிய முன்னணி ஒன்றின் மூலம் மாத்திரமே இது சாத்தியம். இத்தகைய - பொதுக்கொள்கை அடிப்படையிலான ஐக்கிய முன்னணியின் அடிப்படை கோரிக்கைகள் கோட்பாடுகள் யாவை என்பதைப்பற்றி ஆராய இங்கு அவகாசம் கிடையாது. ஆனால் அம் முன்னணியானது சிங்கள மக்களைப் பிரதான மாகவும் சகல சிறுபான்மை சமூகங்களையும் உள்வாங்கியதாகவும் - அனைத்து தரப்பினரது அபிலாசைகளையும் அடிப்படை உரிமை களையும் மதித்து அரவணைத்து அனைத்து நேச சக்திகளையும் ஒன்றிணைக்க வல்ல கட்டுக் கோப்பைக் கொண்டதுமான ஒரு விரிவான வெகுஜன அமைப்பாகவே இருக்க முடியும். இம்முன்னணி இலங்கைக்கேற்ற மாற்று நிருவாக ஆட்சிமுறை ஒன்றையும் சகல சிறுபான்மை இனங்களும் தம்மைத்தாமே நிருவகிக்கக் கூடிய கட்டமைப்புகளையும் பற்றிய பொதுவான இணக்கப்பாட்டின் மீது ஆதாரப்பட்டிருக்க வேண்டும். இத்தகைய ஐக்கிய முன்னணி ஒன்றின் மூலம் மத்தியில் ஏற்படுத்தப்படும் அடிப்படை மாற்றம் மாத்திரமே - அனைத்து இலங்கை மக்களுக்கும் நியாயம் வழங்குவதன் மூலம் மாத்திரமே நிரந்தர தீர்வு காணமுடியும் - இந்த தேக்க நிலைமையை மாற்ற முடியும். எமது போராட்டம் இதுவரை கொடுத்த விலைக்கும் இத்தனை அழிவுகளுக்கும் இழப்புக்களுக்கும் நிச்சயாக அர்த்தமுள்ளது. இனி இப்போராட்டம் தேர்ந்தெடுக்கும் திசைமார்க்கத்தில் தான் அதனை அர்த்தமற்றுப் போகாமல் தடுக்கமுடியும். ▣





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

**கவிதை**

நவாஸ் சௌபி

# விலைப் பாம்பின் படம்

அரச புற்றுக்குள்ளிருந்து வெளியான
விலைப் பாம்பு பற்றி
ஒவ்வொருவரும் பேசுகிறார்கள்
அவர்களின் ஆக மொத்த அச்சமும் அதுவாகவே இருக்கிறது.



வாசலின் முன் விரிந்த தலையுடன்
படம் எடுத்தாடும் பாம்பை
துவம்சம் செய்யும் குடிகள்
பாம்பின் விஷம் தலைக்கேறாமல்
வயிற்றை இறுகக் கட்டிக் கொள்கிறார்கள்.

வீட்டுக் கூரையின் மீது உலாவும்
பாம்புக்கு அஞ்சி
மல்லாந்து படுத்த வாழ்க்கை குப்புறப் படுக்கிறது.
நீண்ட பெருத்த பாம்பு
எல்லாப் பொருட்களையும் நக்கி
அரிசிப் பானைக்குள் தன் முட்டைகளிட்டு
அடுப்புக் கல்லை சுற்றி வளைத்து சுருள்கிறது.

ஒன்றும் முடியாமல் பெருமூச்சுவிடும் வாழ்வு ஒரு புற்றாகி
அதன் மீது விலைப் பாம்பு படம் எடுத்தாடும்...

சுகன்



அதியற்புதமான ஓவியமொன்றை என்னை முன்னிலைப்படுத்தி
எதிரி வரைகின்றான்
வேகமாய் ஓடி இளைத்து மூச்சுவாங்கி நின்று நிதானித்து
நடந்து களைத்து ஊர்ந்து முடியாது இயக்கமிழந்து
வீழ்ந்து கிடக்கையில் எதிரி வந்து ஆதரவோடு பற்றுகிறான்
எனது தஞ்சக்கேட்டை அவன் எப்போதுமே சுட்டிக்காட்டியவனல்ல
என்னோடு அவன் எப்போதும் பேசியதுமில்லை
நாம் ஒருவரை ஒருவர் நேரில் பார்த்ததுமில்லை
நாம் ஒருவருக்கொருவர் கண்ணிற்குத் தெரியாத எதிரிகளுமல்லர்
ஒரு துரும்பாகக்கூட மதிக்காத அவன் கைகளைத் தட்டிவிடுகிறேன்
இம்மியளவும் பிசகாது இவ்விடத்திற்தான் நான் வீழ்ந்துகிடப்பேன்
இவ்விடத்திற்குத்தான் நான் வந்துசேர்வேன்
இந்தக்கோலத்திற்தான் நான் வந்துசேர்வேனென
எதிரி எனது தஞ்சக்கேட்டை இப்போதும் சுட்டிக்காட்டவில்லை
ஆனால் நான் அவன் அப்படிச்சொல்லவேண்டுமென எதிர்பார்த்தேன்
அவனைக் காறித்துப்புவதற்கு எனக்கு ஆயிரங்காரணங்கள் இருக்கின்றன
என்னை உதாசீனப்படுத்த அவன் ஒருபோதும் முயல்வதில்லை
எனது நேர்மையான எதிரி என்னை முன்னிலைப்படுத்தி
அதியற்புதமான ஓவியமொன்றை வரைகிறான்

**(தோழர் பரா அவர்களின் முதலாண்டு நினைவாக)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எம்.ஜி.ஆர். கொலைவழக்கு



**ஷோபாசக்தி**

கேளுங்கள் பௌசர்! இதுதான் கதை. இந்தக் கதையை நீங்கள் நம்பலாம் அல்லது நம்பாதிருக்கலாம். இந்தக் கதையை நீங்கள் உங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பதும் பிரசுரிக்காமல் விடுவதும் உங்கள் பிரச்சினை. இந்தக் கதை நடந்து அதிக நாட்களாக வில்லை. நீங்கள் பெரியார் நினைவு விழாவுக்குப் பாரிஸுக்கு வந்துவிட்டுப் போனீர்களே, அதற்கு இரண்டு நாட்கள் கழித்து எனக்கொரு தொலைபேசி அழைப்பு வந்தது.

அன்று கடும் குளிர்நாள். மைனஸ் ஏழு என்றளவில் குளிர் வதைத்தது. நான் வெளியே எங்கேயும் போவ தில்லை என்ற முடிவுடன் அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தேன். தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகிய மஹ்முட் தர்வீஷ் பற்றிய விவரணப் படம் ஒன்றை நான் பார்த்துக் கொண்டிருந்த போது எனது சொந்தக்காரப் பொடியன் நியூட்டன் என்னைத் தொலைபேசியில் அழைத்து "மாமா நாங்கள் டொனாஸைப் பிடிச்சு வைச்சிருக்கிறம். நீங்கள் ஒருக்கா என்ர வீட்ட வரவேணும்" என்றான்.

எனக்கு டொனாஸ் என்றால் யாரென்று தெரியவில்லை. நான் "அது ஆர் டொனாஸ்?" என்று கேட்டேன்.

"அது மதிலேனம் அன்ரியின்ர கடைசி மகன் மாமா, அவன் ஊரில இயக்கத்திலயிருந்து கன சனத்தைக் கொலை செய்திருக்கிறான்" என்றான் நியூட்டன். எனக்கு இப்போது ஞாபகம் வந்தது. நான் தொலைக்காட்சியை அணைத்துவிட்டு உடைகளை அணிந்துகொண்டு வெளியே கிளம்பினேன். நியூட்டனின் வீடு பாரிஸின் புறநகரான மூலோனில் இருந்தது. அந்த வீட்டில் எங்கள் ஊர்ப் பொடியன்கள் ஆறுபேர் சேர்ந்திருக்கிறார்கள். எல்லோருக்குமே இருபதிலிருந்து இருபத்தைந்து வயதுக்குள்தானிருக்கும்.

நான் அவர்கள் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்றபோது நேரம் இரவு ஏழாகியிருந்தது. அங்கிருந்த பொடியன்கள் ஒரு விறுவிறுப்புடன் என்னை வரவேற்றார்கள். அந்த வீட்டின் ஹோலில் நடுவாகயிருந்த ஒரு நாற்காலியில் டொனாஸ் என்ற அந்த அழகிய இளைஞன் கண்களில் மிரட்சியுடன் உட்கார்ந்திருந்தான். அவன் அசாதாரணமான அழகன். நெற்றியிலும் பிடரியிலும் புரளும் அடர்த்தியான தலைமுடியும் உருளைக் கண்களும் ஓங்குதாங்கான உடலும் பவுண் நிறமுமாக அடிவாங்கிய ஒரு பந்தயக் குதிரைபோல அவன் நாற்காலியில் அமர்ந்திருந்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவனின் உதடுகள் வீங்கிக் கிடந்தன. இடப்புறக் கண் அடியால் சிவந்திருந்தது. அவன் என்னைப் பார்த்ததும் எழுந்திருக்க முயன்றான். அவனின் வாயில் ஒரு பரிதாமான இளிப்பு வந்து போயிற்று. அவன் என்னிடம் மாமா "என்னைத் தெரியுதா?" என்று கேட்டுக் கேட்ட வாயை மூட முன்பே நியூட்டன் அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். டொனாஸ் என்னைப் பார்த்ததும் நான் தன்னைக் காப்பாற்றக்கூடும் என்று நம்பியிருக்கலாம். நியூட்டனின் அந்த அடியுடன் அவனின் நம்பிக்கை சிதறிப்போயிருக்கும்.

பதினைந்து வருடங்களிற்கு முன்பு நான் வெளிநாட்டுக்கு வரும்போது டொனாஸுக்கு அய்ந்து அல்லது ஆறு வயதிருக்கும். வறுமையாலும் வெயிலாலும் வாடி வதங்கிக் கருவாடாயிருந்த எங்கள் ஊர்ச் சிறுவர்களிடையே இவன் ஒரு தேவதையைப் போல திரிந்துகொண்டிருந்தான். எல்லோருக்கும் அடித்த வெயில்தான் இவனுக்கும் அடித்தது. எல்லோர் வீட்டுக் குழந்தைகளைப் போலவே இவனும் வீசிக் கந்தோரில் கொடுக்கப்படும் திறிபோசா மாவைச் சாப்பிட்டுத்தான் வளர்ந்தான். ஆனாலும் இவன் பனங்குருத்துப் போல இருப்பான். மதிலேனம் மாமி நல்ல அழகி. அவரிலிருந்து அந்தச் சிவப்பும் பொலிவும் இவனுக்கும் கிடைத்திருந்தது. நான் அவனைப் பார்க்கும் போதெல்லாம் அவனைக் கைகளில் தூக்கி முத்தமிடுவேன்.

நான் டொனாஸையே பார்த்துக்கொண்டிருந்தேன். மற்றைய பொடியள் மௌனமாக டொனாஸைச் சுற்றி நின்றிருந்தார்கள். திரைப் படங்களில் குற்றவாளியைப் பெரிய பொலிஸ் விசாரணை செய்யும்போது சின்னப் பொலிசுகள் கைதியைச் சூழ அடிப்பதற்குத் தயாராக நிற்பார்களே அப்படியிருந்தது அந்தக் காட்சி. நான் எழுந்து போய் டொனாஸின் முன்னால் நின்றேன். நானும் அவனுக்கு அடிக்கப் போவதாக அவன் நினைத்திருக்கலாம். அவனின் இமைகள் வெட்டித் தெறிக்க அவனது தேகம் ஒருமுறை நடுங்கி நின்றதை நான் பார்த்தேன். அவன் மெதுவாக "மாமா நான் விரும்பி இயக்கத்தக்குப் போகயில்ல, என்னை வைபோசாய்தான் பிடிச்சு வைச்சிருந்தவங்கள்" என்றான். அவன் அடுத்த வார்த்தை பேசினால் அது அழுகையாகத்தான் இருக்கும் போலயிருந்தது.

அவனுக்குப் பின்னால் நின்றிருந்த பொடியன் ஓங்கி அவனின் பிடரியில் குத்தினான். சாதாரணமாக அந்த அடிக்குப் பொறி கலங்கி டொனாஸ் முகங்குப்புற விழுந்திருக்க வேண்டும். ஆனால் ஒரு சிறிய அசைவுடன் டொனாஸ் அடித்தவனைத் திரும்பிப்பார்த்தான். அடித்தவனுக்கு அவமானமாயிருந்திருக்கும். அடித்தவனிடம் டொனாஸ் "மச்சான் உங்கள் எல்லாரையும் நம்பித்தானே நான் பிராஞ்சுக்கு வந்தனான்" என்றான்.

அல்லைப்பிட்டியிலோ மண்கும்பானிலோ ஒவ்வொரு அனர்த்தமும் கொலையும் கைதும் நடக்கும்போது இயக்கத்தின் பெயர் செய்திகளில் அடிபடும். இயக்கத்திலிருந்த டொனாஸின் பெயரையும் இணைத்தே எங்கள் ஊர்ச் சனங்களிடமிருந்து எங்களுக்குச் செய்திகள் வரும். டொனாஸ் இலங்கையிலிருந்து சென்ற கிழமைதான் பிரான்ஸுக்கு வந்திருக்கிறான். இன்று காலையில் 'லாச்சப்பல்' கடைத்தெருவில் நியூட்டன் இவனைக் கண்டிருக்கிறான். பார்த்தவுடனேயே "என்ன மச்சான்? எப்ப வந்தனி?" என்று பாசத்தைக் பொழிந்து தனது வீட்டுக்கு வருமாறு நியூட்டன் கேட்டிருக்கிறான். முதலில் டொனாஸ் நியூட்டனுடன் வர மறுத்திருக்கிறான். நியூட்டன் கொஞ்சம் தந்திரமாக அவனுக்குத் தங்குவதற்கு நல்ல இடமும் நல்ல வேலையும் ஒழுங்குசெய்து தருவதாக நாடகமாடியிருக்கிறான். அதை நம்பி டொனாஸ் நியூட்டனோடு கிளம்பி வந்திருக்கிறான். வரும் வழியிலேயே நியூட்டன் தொலைபேசியில் தன்னுடைய நண்பர்களுக்குத் தான் டொனாஸை அழைத்துவரும் செய்தியைச் சொல்லியிருக்கிறான். டொனாஸ் நியூட்டனின் வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்ததுமே எல்லாப் பொடியன்களுமாகச் சேர்ந்து டொனாஸை அடித்திருக்கிறார்கள். அதற்குப் பின்பு அவனை என்ன செய்வது என்று அவர்களுக்குத் தெரியாததால் எனக்குப் போன் செய்திருக்கிறார்கள்.

நான் டொனாஸிடம் "ரத்தினத்தின்ர கடைக்குள்ள எட்டுப்பேரை நீதான் சுட்டனியாம்?" என்று கேட்டேன்.

"இல்லை மாமா, அது என்ன நடந்ததெண்டால் வேவியற்ற மகள் ஒரு நேவிக் காரனைக் கலியாணம் கட்டியிருக்கிறாள். அதுக்குப் பிறகு அல்லப்பிட்டியில் வேவியும் அவற்ற மகளும் வச்சதுதான் சட்டம். அவையளும் ஒரு கடை வைச்சிருந்தவை. பிஸினஸ் பிரச்சினையிலதான் வேவியற்ற மகள் நேவிக் காரன்கள வைச்சு ரத்தினத்தின்ர கடைக்குள்ள சுடப் பண்ணினவள்" என்றான்.

"நேவியோட நீங்களும் போனது எண்டுதானே சொல்லுறாங்கள்?"

"அது எனக்குத் தெரியாது மாமா நான் அது நடக்கயிக்க நெடுந்தீவில இருந்தனான்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


"சில்வஸ்டர நீதானே சுட்டனி?"

"இல்லை மாமா அவர் என்ர தொட்டையா. எனக்கு அவர்தான் தலை தொட்டவர். அவர நான் சுடுவனா? அவரைக் கொட்டிதான் சுட்டது" பொடியன் புலிக்குக் 'கொட்டி'யென்று சொல்கிறான்.

எல்லாக் கேள்விக்கும் டொனாஸ் இல்லை என்ற வார்த்தையுடனேயே பதிலைத் தொடங்கினான். பதிலை முடிக்கும்போது மாமன், மச்சான், சித்தப்பா என்று பதிலை முடித்தான். எங்கள் விசாரணைக்குழு சோர்ந்துவிட்டது. அப்போது கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. நியூட்டன் போய்க் கதவைத் திறந்ததும் திறக்காததுமாகக் கதவைத் தள்ளிக்கொண்டு எங்க அவன் எங்க அவன் என்று கேட்டுக்கொண்டே திரவியம் உள்ளே ஓடிவந்தார். திரவியத்திற்கு அய்ம்பது வயதுக்கு மேலேயிருக்கும். உயர்ந்த ஒல்லியான பலவீனமான மனிதர். இரண்டு வருடங்களிற்கு முன்பு அவரின் பதினைந்து வயதான மகனைக் கடத்தி வைத்துக்கொண்டு அய்ந்து இலட்சம் ரூபாய்கள் பணயத் தொகையாகக் கேட்டிருக்கிறார்கள். அந்தத் தொகையைத் திரட்டுவதற்காக அந்த மனிதர் பாரிஸ் முழுவதும் ஓடித்திரிந்தார். நான்கூட ஆயிரம் ஈரோக்கள் கட ாகக் கொடுத்திருந்தேன். அவர் பணயத்தொகையை அனுப்ப முன்னமே அவரின் மகன் சடலமாக வேலணைக் கடற்கரையில் கிடந்தான். அந்த ஆயிரம் ஈரோக்களை என்னிடம் திருப்பித் தந்த நாளில் திரவியத்தின் முகத்தில் ஒட்டிக்கிடந்த துயரப் புன்னகை என்னைத் தலைகுனிய வைத்தது. திரவியத்தின் மகனைக் கடத்துவதற்கும் கடத்தினால் வெளிநாட்டிலிருந்து காசு வருமென்றும் டொனாஸ்தான் துப்புகள் கொடுத்ததாக அப்போதே திரவியம் என்னிடம் சொல்லியிருந்தார்.

ஓடிவந்த திரவியம் முதலில் டொனாஸின் முகத்தில் காறி உமிழ்ந்தார். பின்பு அவனின் தலைமுடியை பற்றிப்பிடித்து அவனின் முகத்தில் கைகளால் அறைந்தார். திரவியம் அவனின் சட்டையைப் பற்றி இழுத்தபோது அவன் நாற்காலியிலிருந்து முன்னே விழுந்தான். அவனை இழுத்து விழுத்துமளவிற்குத் திரவியம் பலசாலியல்ல. அவர் அடிப்பதற்கும் உதைப்பதற்கும் விழுத்துவதற்கும் தோதாகத் தன்னுடைய தேகத்தை டெனாஸ் அப்போது வளைத்துக் கொடுத்துக் கொண்டிருப்பதாகவே எனக்குப் பட்டது. நான் திரவியத்தைத் தடுக்க முயற்சித்தபோது திரவியம் அழத் தொடங்கினார். பின்பு தளர்நடையுடன் போய்க் கைகளைக் கழுவிவிட்டு வந்தார். பின் அமைதியாக ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். அதற்குப் பின்பு அவர் ஒரு வார்த்தை பேசவில்லை. அவர் அங்கே வரும் போதே என்ன செய்ய வேண்டும் என ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துக்கொண்டுவந்து அதன்படி நிகழ்ச்சிகளை நடத்தி முடித்ததும் திருப்பதியாக அமர்ந்திருப்பது போலத் தோன்றியது.

டொனாஸ் தரையில் மல்லாக்கக் கிடந்தான். அவனது ஆடைகள் தும்பு தும்பாகக் கிழிந்திருந்தன. உண்மையில் அவனை அடிக்கிறேன் என்ற பெயரில் திரவியம் அவனது ஆடைகளைத் தான் கிழித்திருந்தார். டொனாஸ் மெதுவாக எழுந்து தலையைக் குனிந்தவாறே தரையில் சப்பணம் கட்டி அமர்ந்தான். நான் அவனிடம் "இப்ப நீ என்ன சொல்றாய்? உன்ர முகத்தைப் பார்த்தாலே ஆயிரம்பேரைக் கொலை செய்த வன்ர முகம் மாதிரி இருக்கு, நீ ஒருத்தரையும் கொலை செய்ய இல்லையோ?" என்று கேட்டேன்.




டொனாஸ் நிமிர்ந்து என்னைப் பார்த்தான். பின்பு கண்களைத் தாழ்த்திக்கொண்டு "மாமா நான் உண்மையச் சொல்லுறன், அந்தோனியார் சத்தியமா நான் எம்.ஜி.ஆரை மட்டும்தான் கொலை செய்தனான், வேற எதிலும் எனக்குச் சம்மந்தமில்லை" என்றான்.

அங்கிருந்த நாங்கள் எல்லோருமே அப்போது திடுக்கிட்டோம். ஏனென்றால் எம்.ஜி.ஆர் தற்கொலை செய்ததாகத்தான் எங்களுக்குச் செய்தி வந்திருந்தது. அவர் தலையில் தொப்பியுடனும் கண்களில் கறுப்புக் கண்ணாடியுடனும்தான் தூக்கில் தொங்கிக்கொண்டிருந்தாராம்.

## 2

பழைய கதை சொல்கிறேன் கேளுங்கள் பௌசர்! எங்கள் ஊருக்கு அல்லைப்பிட்டி என்று பெயர் வைத்ததற்குப் பதிலாக எம்.ஜி.ஆர். பட்டி என்று பெயர் வைத்திருக்கலாம். அப்போது எங்கள் கிராமம் எம்.ஜி.ஆர். ரசிகர்களாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பக்தர்களாலும் நிரம்பியிருந்தது. ஒரு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்:

எனது அண்ணனுக்குப் பதினைந்து வயதிருக்கும்போது வீட்டை விட்டு ஓடிப்போனான். அப்போது எங்கள் கிராமத்துச் சிறுவர்களுக்கு இரண்டு பொழுதுபோக்குகள்தான் வழமையாயிருந்தன. ஒன்று, சூள் கொளுத்தி நண்டு பிடிக்கப்போவது. இரண்டாவது, வீட்டை விட்டு ஓடிப்போவது. சினிமா பார்ப்பது என்பது எங்களைப் பொறுத்தவரை பொழுதுபோக்கு என்ற வகைக்குள் அடங்காது. அது வாழ்க்கை முறைமை, கடமை, இலட்சியம்.

வீட்டை விட்டு ஓடிப்போவதில் மூன்று முக்கியமான படிகள் இருந்தன. முதலாவதாக வீட்டிலிருந்து கொஞ்சம் பணம் திருடவேண்டும். வீட்டில் எப்போது பணம் திருட வாய்ப்பிருக்கிறதோ அதுவே ஓடிப்போவதற்கான நாளாக அமையும். இரண்டாவது படியாக யாழப்பாணம் போய் இரவுவரைக்கும் தொடர்ச்சியாகப் படம் பார்க்க வேண்டும். மூன்றாவது படியாக இரவு ரயிலைப் பிடித்துக் கொழும்புக்குப் போக வேண்டும். கொழும்பில் நான்காம் குறுக்குத் தெருவிலோ, அய்ந்தாம் குறுக்குத் தெருவிலோ அரிசிக் கடைகளில் வேலை கிடைக்கும்.

வீட்டை விட்டு ஓடிப்போன எனது அண்ணன் இரண்டாவது படியை நிறைவேற்றுவதற்காகப் படம் பார்க்கப் போயிருக்கிறான். அன்று அவன் எம்.ஜி.ஆரின் 'அன்னமிட்ட கை' படம் பார்த்திருக்கிறான். படத்தைப் பாரத்ததும் அண்ணனுக்குள் தாய்ப்பாசம் பொங்கிவிட்டது. அவன் கொழும்புக்குப் போகாமல் அம்மாவைத் தேடித் திரும்பவும் வீட்டுக்கே வந்துவிட்டான்.

ஒரு ஊரென்றால் அங்கே எம்.ஜி.ஆர் ரசிகர்களும் சிவாஜி கணேசன் ரசிகர்களும் ஜெய்சங்கர் ரசிகர்களும் கலந்திருப்பதுதானே வழமை. ஆனால் அந்த வழக்கமெல்லாம் எங்கள் கிராமத்தில் கிடையாது. சிவாஜி கிவாஜி என்று யாராவது முணுமுணுத்தால் நாங்கள் முளையிலேயே அந்தக் குரலைக் கிள்ளியெறிவதுதான் வழக்கம். எம்.ஜி.ஆரைத் தவிர வேறு எவருக்கும் எங்கள் ஊரில் ரசிகர்கள் இருக்கக் கூடாது என்பது எங்கள் கொள்கை. ஏக பிரநிதித்துவக் கொள்கை. 1979ல் யாழ்ப்பாணத்தில் தொலைக்காட்சியும் டெக்கும் அறிமுகமாகி கிராமங்கள் தோறும் திருவிழாக அது கொண்டாடப்பட்டபோது 'அண்ணன் ஒரு கோயில்' என்ற சிவாஜியின் படமே முதன் முதலாக எல்லா இடங்களிலும் காண்பிக்கப்பட்டது. அப்போது வேறு படப் பிரதிகள் புழக்கத்திலில்லை. நாங்கள் காத்திருந்து 'மீனவ நண்பன்' என்ற எம்.ஜி.ஆரின் படத்துடன் தான் மாதா கோயில் பெருநாளில் எங்கள் ஊரில் தொலைக்காட்சியை அறிமுகப்படுத்தினோம். அப்போது காலையில் எழுந்ததும் உத்தரியமாதா, அந்தோனியார் இவர்களுடன் சேர்த்து எம்.ஜி. ஆரையும் வணங்கும் பழக்கம் எனக்கிருந்தது.

அப்போதெல்லாம் இந்தியாவில் படம் வெளியாகி நான்கு, அய்ந்து வருடங்களுக்குப் பிறகுதான் இலங்கையில் படம் வெளியாகும். அப்படியும் எம்.ஜி.ஆரின் 'சங்கே முழங்கு', 'பட்டிக்காட்டுப் பொன்னையா' என்ற இரு படங்களும் கடைசிவரை இலங்கையில் வெளியாகவேயில்லை. படம் வெளியாவதற்குச் சில மாதங்களுக்கு முன்னமே தியேட்டரில் படத்தின் சுவரொட்டியும் படத்தின் நான்கைந்து ஸ்டில்களும் ஒட்டப்பட்டிருக்கும்; அந்த ஸ்டில்களையும் சுவரொட்டியையும் வைத்தே நான் எனக்குள் அந்தப் படத்தைக் கற்பனை செய்துகொள்வேன். அப்போது படக்கதை சொல்வது என்றொரு அருமையான பழக்கமிருந்தது. வெறும் நான்கு ஸ்டில்களைப் பார்த்ததை வைத்துக்கொண்டே நான் என் பள்ளிக்கூடச் சிநேகிதர்களுக்கு முழு நீளப் படக்கதையும் சொல்வேன். படம் வெளியாகும்போது பார்த்தால் நான் சொன்ன கதை கிட்டத்தட்டச் சரியாகவேயிருக்கும். 'ராமன் தேடிய சீதை' மட்டும்தான் கொஞ்சம் மிஸ்ஸாகி விட்டது. சுவரொட்டியிலும் ஸ்டில்களிலும் எஸ்.ஏ.அசோகன் சக்கரநாற்காலியில் உட்கார்ந்திருந்ததால் அசோகனுடன் எம்.ஜி.ஆர். சண்டையிடும்போது எம்.ஜி.ஆரும் சக்கரநாற்காலியில் அமர்ந்துதான் சண்டையிடுவார் என நான் நினைத்திருந்தேன். இதற்கு ஒரு முன்னுதாரணமும் இருந்தது. 'அடிமைப் பெண்' படத்தில் ஒரு காலில்லாத அசோகனுடன் எம்.ஜி.ஆரும் ஒருகாலைக் கட்டிக்கொண்டுதான் சண்டையிடுவார். ஆனால் இந்தப்படத்தில் சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்த அசோகன் கடைசிக் கட்டத்தில் சக்கர நாற்காலியிலிருந்து துள்ளியெழுந்து இருகால்களையும் ஊன்றி நின்று சண்டை போடுவார் என்பதை நான் எதிர்பார்த்திருக்கவில்லை.

'ஒளிவிளக்கு' இரண்டாவது தடவையாக ராஜா தியேட்டரில் வெளியாகி நூறு நாட்களைக் கடந்தபோது நாங்கள் எங்களது கிராமத்தின் சார்பில் தியேட்டருக்கு முன்பு கஞ்சி காய்ச்சி ரசிகர்களுக்கு வழங்கினோம். 'நாளைநமதே' ராணி தியேட்டரில் தொடர்ந்து 140 காட்சிகள் ஹவுஸ்புல்லாகக் காண்பிக்கப்பட்டது. இது அகில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை வசூல் சாதனை. அப்போது எம்.ஜி. ஆரின் படங்களுக்குக் காட்சி நேரம் நிர்ணயிக்கப் படுவதில்லை. கொழும்பிலிருந்து ரயிலில் படப் பெட்டி வந்தவுடனேயே அதிகாலையிலேயே காட்சி தொடங்கிவிடும். இரவு முழுவதும் நாங்கள் தியேட்டருக்கு முன்புதான் படுத்துக் கிடப்போம். எம்.ஜி.ஆரின் புதிய பட விளம் பரங்களுக்குக் கீழே 'கொட்டகை நிறைந்ததும் காட்சிகள் ஆரம்பமாகும், பாஸ்கள் சலுகைகள் ரத்து' என்ற வரிகள் தவறாமல் இடம்பெறும்.

நாடக விழா
கேள்விப்பட்டிருப்பீர்கள்.
நாடகம் போடுவதையே
விழாவாகக் கொண்டாடுவதை
நீங்கள் எங்கள் ஊரில்தான்
பார்க்க முடியும்.
பரிமளகாந்தன்
நாடகம் எழுதும்போதே
எங்கள் மன்றத்திலுள்ள
எல்லோருக்கும் பாத்திரங்களை
உருவாக்கித்தான் எழுதுவார்.

எம்.ஜி.ஆர் ரசிகர்களுக்குப் புகழ்பெற்றிருந்த குருநகரில் கூட வாசகசாலைக்கு 'அண்ணா சனசமூக நிலையம்' என்றே பெயர் வைத்திருந் தார்கள். ஆனால் எங்கள் ஊர் வாசகசாலைக்கு நாங்கள் 'மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் சனசமூக நிலையம்' என்று கட்டன் ரைட்டாக பெயர் வைத்திருந்தோம். மட்டக்களப்பில் புயலால் ஏற்பட்ட சேதத்துக்கு நிவாரணமாக அப்போது எம்.ஜி.ஆர். பத்து இலட்சம் ரூபாய்கள் வழங்கிய தற்கு நன்றி தெரிவிப்பதற்காக மனோகரா தியேட்டரில் பத்து நாட்களுக்கு எம்.ஜி.ஆரின் பத்துப் படங்களை அரை ரிக்கட்டுக்குக் காண்பித் தார்கள். எம்.ஜி.ஆர். மட்டக்களப்புக்கு நிதி வழங்கியதையொட்டி நாங்களும் எங்கள் வாசகசாலையின் பெயரிலிருந்த 'மக்கள் திலகம்' என்ற பட்டத்தை நீக்கிவிட்டு 'பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். சனசமூக நிலையம்' எனப் புதிதாகப் பெயரிட்டோம். அந்த வாசக சாலைக் கும் நாங்கள் நடத்திவந்த எம்.ஜி.ஆர். கலாமன்றத் துக்கும் பரிமளகாந்தன் தான் தலைவர்.

எம்.ஜி.ஆர். கலாமன்றத்திலிருந்த நாங்கள் எல்லோரும் விடலைகளாகவேயிருந்தோம். பரிமளகாந்தன் மட்டுமே எங்களில் வயதில் மூத்தவர். பரிமளகாந்தனுக்கு அப்போதே முப்பது வயதுக்கு மேலிருக்கும். எங்கள் ஊர் கிராமசபைக் கட்டடத்தில் அவர் இரவு நேரக் காவலாளியாக வேலைபார்த்து வந்தார். எம்.ஜி.ஆர் போலவே பரிமளகாந்தனுக்கும் குழந்தைகள் கிடையாது. பரிமளகாந்தன் எம்.ஜி.ஆருக்கு ரசிகர் என்றால் பரிமளகாந்தனின் மனைவி பரிமளகாந்தனுக்கு ரசிகை. மாலைநேரங்களில் இரண்டுபேருமாகச் சோடிபோட்டுக்கொண்டு கையில் தேநீர் குடுவை யுடன் கடற்கரைக்குப் போய் மணலில் உட்கார்ந் திருப்பார்கள். கடற்கரைக்குப் போய்க் காற்று வாங்கும் பழக்கமெல்லாம் எங்கள் ஊரில் அப்போதும் கிடையாது, இப்போதும் கிடை யாது. இவர்கள் ஏன் கடற்கரையில் உட்கார்ந் திருக்கிறார்கள் என்று எங்கள் ஊர்ச் சனங்களுக்குக் கடைசிவரை விளங்கவேயில்லை. பரிமள காந்தனின் வீட்டில் பக்கத்துக்குப் பக்கம் எம்.ஜி.ஆரின் படங்கள் மாட்டப்படடிருக்கும். எல்லாப் படங்களுக்கும் நடுவாக அறிஞர் அண்ணாவின் படமும் மாட்டப்பட்டிருந்தது. எம்.ஜி.ஆர். படங்களின் பாடல் புத்தகங்கள் அழகாக பைன்ட் செய்யப்பட்டு அவரிடமிருந்தன.

எங்கள் எம்.ஜி.ஆர். கலாமன்றத்தால் 'காதலா கடமையா', 'விமலாவின் வாழ்வு', 'பெண்ணின் பெருமை', 'இரு துருவங்கள் இணைந்தபோது' போன்ற நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. எல்லா நாடகங்களிற்கும் பரிமளகாந்தன்தான் கதை, வசனம், டைரக்சன். 'பெண்ணின் பெருமை' நாடகத்தில் நீதிதேவதை பாத்திரத்தில் பரிமளகாந்தன் தன் மனைவியை நடிக்க வைத்தார். எங்கள் கிராமத்திலெல்லாம் கல்யாணமான ஒரு பெண் மேடையில் ஏறி நடிப்பதைக் கற்பனை செய்யவே முடியாது. ஆனால் பரிமளகாந்தனின் மனைவி நடித்தார்.

நாடக விழா கேள்விப்பட்டிருப்பீர்கள். நாடகம் போடுவதையே விழாவாகக் கொண்டாடு வதை நீங்கள் எங்கள் ஊரில்தான் பார்க்க முடியும். பரிமளகாந்தன் நாடகம் எழுதும்போதே எங்கள் மன்றத்திலுள்ள எல்லோருக்கும் பாத்திரங்களை உருவாக்கித்தான் எழுதுவார். ஒத்திகை அவர் வீட்டில்தான் நடக்கும். அவரின் மனைவி கணவரின் முகத்தையே பூரிப்போடு பார்த்த வாறிருப்பார்.

அநேகமாக மாதா கோயில் பெருநாள் அல்லது அம்மன் கோயில் திருவிழா இரவில் நாடகம் மேடையேறும். நாடகத்தில் நடிப்பவர்களின் வீட்டில் அன்று பெருவிழாவே நடக்கும். "எங்கிட மகன் நாடகம் நடிக்கிறான், நீங்கள் கட்டாயம் வரவேணும்" என்று அயலூர்களி லுள்ள உறவனர்களுக்கெல்லாம் அழைப்புப் போகும். நாடகத்தின் ஒரு பாத்திரம் மேடையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோன்றும்போது அந்த நடிகனின் உறவினர்கள் பட்டாசு வெடிப்பார்கள். சரவெடி தூள் பறக்கும். மேடையில் மன்னாதி மன்னன் தோன்றும் போதும் வெடிதான், வில்லன் தோன்றும்போதும் வெடிதான், துறவி தோன்றும்போதும் வெடிதான். அநேகமாக நாடகத்தின் கடைசிக் காட்சியில் பொலிஸாக நடிக்கத்தான் எங்கள் பொடியன்கள் விருப்பப்படுவார்கள். பொலிஸ் யூனிபோர்மும் சப்பாத்துகளும் அணிந்து மிடுக்காக நடிப்பதில் அவர்களுக்கு ஒரு விருப்பம். ஒத்திகை தொடங்கு வதற்கு முன்பே அவர்கள் சீருடைகளைத் தயார் செய்து விடுவார்கள். அநேகமாக எங்கள் ஊர் தபால்காரரின் மற்றும் நுளம்புக்கு மருந்தடிப் பவரின் காக்கிக் காற்சட்டைகளையும் மேற் சட்டைகளையுமே அவர்கள் இரவல் வாங்கு வார்கள். ஒத்திகைக்கு வரும்போதே காக்கிச் சீருடை தரித்துக் கையில் பெற்றன் பொல்லு களுடன் மிடுக்காக வருவார்கள். நாடகம் நடத்தும் நாள்வரை அவர்கள் அந்த உடைகளுட னேயே ஊருக்குள் சுற்றிக்கொண்டிருப்பார்கள்.

ஒருமுறை எனக்கு நீதிக்காகப் போராடி பொலிஸாரிடம் அடிவாங்கும் தியாகி பாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் என் அப்பாவுக்கு நான் அந்தப் பாத்திரத்தில் நடித்தது பிடிக்க வில்லை. என்னை அடிக்கும் பொலிஸ் பாத்திரத் தில் நடித்தவன் அய்ந்தாம் வகுப்போடு படிப்பை நிறுத்தியிருந்தான். நான் அப்போது ஒன்பதாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தேன். என் அப்பா "அவன் அஞ்சாம் வகுப்புப் படிச்சவன் அடிக் கிறான், நீ படிச்ச முட்டாள் அடிவாங்கிறாய், நீயெல்லோ பொலிசுக்கு நடிச்சிருக்க வேணும், வேலணை சென்றல் ஸ்கூலில என்னதான் படிக்கிறியோ" என்று சலித்துக்கொண்டார்.

நாடகம் நடக்கும் நாளன்று அங்கே இணைக்கப் பட்டுக்கொண்டிருக்கும் மேடையாலும் கட்டப் பட்டுக்கொண்டிருக்கும் திரைச்சீலைகளாலும் இறுதி நேரத்தில் கவரப்படும் மன்றத்தில் இல்லாத பொடியன்கள் தங்களுக்கும் அன்றிரவு நாடகத்தில் நடிக்க வாய்ப்பு வேண்டுமெனப் பரிமளகாந்தனிடம் கேட்பதுண்டு. உடனேயே பரிமளகாந்தன் நாடகத்தில் அவர்களுக்கு ஒரு சிறிய பாத்திரமும் ஒன்றிரண்டு வசனங்களும் கொடுத்துக் கெட்டிக்காரத்தனமாக அவர்களையும் நாடகத்தில் நுழைத்துவிடுவார். அது அநேகமாக மேடையில் சிக்கலில்தான் முடியும். நாடகம் குழம்புகிறதே என நாங்கள் துடிப்போம். ஆனால் பரிமளகாந்தனுக்கு நாடகம் முக்கியமில்லை. அதில் நடிப்பவர்களின் மகிழ்ச்சியே அவருக்கு முக்கியம். அவருக்குக் கோபமே வராது.

பரிமளகாந்தனுக்கு ஒருமுறை கோபம் வந்தபோது அது அடிதடியில்தான் முடிந்தது. அந்தச் சண்டை வாசகசாலையில்தான் நடந்தது. வாசகசாலைக்கு முன்னால் பரிமளகாந்தனுடன் நாங்கள் நின்றிருந்தபோது மத்தியாஸ் கொஞ்சம் வெறியில் அந்தப்பக்கம் வந்தான். மத்தியாஸ் கொஞ்சம் சண்டியன். அவனுக்கு என்ன கோபமோ எங்களைப் பார்த்துக் காறித் துப்பி விட்டு வாசகசாலைக்குள் போனவன் அங்கே யிருந்த வாங்கில் நீட்டி நிமிர்ந்து படுத்து விட்டான். பரிமளகாந்தன் உள்ளே போய் அவனின் தோளில் தட்டி "இஞ்ச படுக்கக் கூடாது, வெளிய போ!" என்றார். மத்தியாஸ் ஏன் படுக்கக் கூடாது என்றான். அவனின் கேள்வி நியாயமான கேள்விதான். எங்கள் வாசகசாலையில் ஒரு எம்.ஜி.ஆர். படத்தையும் ஒரு மேசையையும் இரண்டு வாங்குகளையும் தவிர வேறெதுவு மில்லை. முன்னொரு காலத்தில் 'ஈழநாடு' பத்திரிகை மட்டும் வாசகசாலையில் போடப் பட்டது. பின்பு பணமில்லாததால் அதுவும் நிறுத்தப்பட்டுவிட்டது. நாங்கள் எங்கள் கலா மன்றக் கூட்டங்களை நடத்தவும் ஒரு கௌரவத் திற்காகவும்தான் அந்த வாசகசாலையை நடத்தி வந்தோம். வாசகசாலையின் கௌரவத்தை மிகக் கண்டிப்புடன் பரிமளகாந்தன் காப்பாற்றி வந்தார். எங்களைக் அங்கே கடதாசி விளையாடக்கூட அவர் அனுமதிப்பதில்லை.

வாசகசாலையிலிருந்து வெளியே வந்து மத்தியாஸ் காலைத் தூக்கி வாசகசாலை வேலியை உதைத்தான். ஒரு உதையில் வேலி பாட்டில் பாறி விழுந்தது. பரிமளகாந்தன் அமைதியாகக் கை களைக் கட்டியவாறே மத்தியாஸைப் பார்த்து அங்கிருந்து போய்விடும்படி சொன்னார். மத்தி யாஸ் அங்கிருந்து போவதாயில்லை. அவன் பரிமளகாந்தனை 'மலடன்' என்று ஏசினான். பரிமளகாந்தன் அமைதியாகக் கையைக் கட்டிக் கொண்டு நிதானமாக மத்தியாசுக்கு அருகில் வந்து அவனுக்குப் புத்திமதி சொன்னார். "நீதிக்கு முன்பு அநீதி ஜெயிக்காது", "அநீதிக்கு முன்பு நீதி தோற்காது", "என் பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு" என்று அவர் சொன்னதெல்லாம் எம்.ஜி.ஆர். பட வசனங்களாகவேயிருந்தன. மத்தியாஸ் திடீரெனப் பரிமளகாந்தனின் கன்னத்தில் ஒரு அறைவிட்டான். நாங்கள் பொடியன்கள் கொதித்துப்போய் மத்தியாஸை நோக்கிப் பாய்ந்தோம். பரிமளகாந்தன் தனது வலது கையால் அடிபட்ட கன்னத்தைத் தடவிக் கொடுத்தவாறே இடது கையால் எங்களைத் தடுத்து நிறுத்திவிட்டு "இது எனக்கும் மத்தியாசுக் குமான பிரச்சினை நீங்கள் தலையிட வேண்டாம்"






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**அப்போது யாழ்ப்பாணத்தில் 'கிழக்கே போகும் ரயில்' படம் ஓடிக்கொண்டிருந்தது. எங்கள் ஊர் குமர்ப்பெண் ஒருத்தி தனது சிநேகிதிகளுடன் சேர்ந்து அந்தப் படத்திற்குப் போவதற்கு அனுமதி கேட்டபோது அவளின் தாயார் அனுமதி மறுத்து விட்டார். அந்தப் பெண் உடனே பொலிடோல் குடித்துச் செத்துப்போனாள். அந்தப் படம் ஓடிய தியேட்டரில் 'இந்தப் படத்தைக் காண முடியாத தால் நஞ்சு குடித்துக் காலமான அல்லைப்பிட்டி சூரியகலாவுக்கு இந்தப் படம் சமர்ப்பணம்' என்று ஸ்லைட் போட்டுவிட்டே காட்சியைத் தொடங்கினார்கள். மித்திரன் பேப்பரில் தலைப் புச் செய்தியாக அவளின் சாவு எழுதப்பட்டது.**

என்றார். இதுவும் எம்.ஜி.ஆர். பாணிதான். இதைக் கேட்டவுடன் மத்தியாஸ் துள்ளி இன்னொரு அறைவிட்டான். பரிமளகாந்தன் அடுத்த கன்னத்தைத் தடவிக் கொடுத்தார். அவரின் கண்களில் கோபம் கொப்பளித்தது. மூன்றாவது அடியையும் மத்தியாஸ் அடித்தபோது பரிமள காந்தன் பொறிகலங்கி மல்லாக்க நிலத்தில் விழுந்தார். அதற்குமேல் எங்களால் பொறுக்க முடியவில்லை. எல்லாப் பொடியன்களும் ஒருசேரப் பாய்ந்து மத்தியாஸைக் கும்மி விட்டோம். அடிப்பதை நாங்கள் நிறுத்தினால் மத்தியாஸ் எங்களைத் திரும்ப அடிப்பான் என்ற பயத்திலேயே நாங்கள் நிறுத்தாமல் அடித்தோம். கடைசியில் தன்னை விட்டுவிடுமாறு மத்தியாஸ் கெஞ்சியபோதுதான் நாங்கள் அடிப்பதை நிறுத்தினோம். எங்கள் அடியின் வேகத்தில் மத்தியாஸ் ஒட்டகப்புலத்தாரிடம் போய் புக்கை கட்டினான் என்று கேள்விப்பட்டோம். அவனின் மனைவி எங்கள் வாசிகசாலைக்கு வந்து நாங் களும் எங்கள் மன்றமும் தொலைய வேண்டு மென மண்ணள்ளி எறிந்து சாபமிட்டாள்.

அவளின் சாபம் பலிக்கத் தொடங்கியது. அப்போது யாழ்ப்பாணத்தில் 'கிழக்கே போகும் ரயில்' படம் ஓடிக்கொண்டிருந்தது. எங்கள் ஊர் குமர்ப்பெண் ஒருத்தி தனது சிநேகிதிகளுடன் சேர்ந்து அந்தப் படத்திற்குப் போவதற்கு அனுமதி கேட்டபோது அவளின் தாயார் அனுமதி மறுத்து விட்டார். அந்தப் பெண் உடனே பொலிடோல் குடித்துச் செத்துப்போனாள். அந்தப் படம் ஓடிய தியேட்டரில் 'இந்தப் படத்தைக் காண முடியாத தால் நஞ்சு குடித்துக் காலமான அல்லைப்பிட்டி சூரியகலாவுக்கு இந்தப் படம் சமர்ப்பணம்' என்று ஸ்லைட் போட்டுவிட்டே காட்சியைத் தொடங்கினார்கள். மித்திரன் பேப்பரில் தலைப் புச் செய்தியாக அவளின் சாவு எழுதப்பட்டது. இதற்குப் பிறகு ஊருக்குள் தொலைக்காட்சியில் படம் ஓடுவதையோ நாங்கள் கலாமன்றம் நடத்துவதையோ சனங்கள் கொஞ்சம் கடுப்புடன் தான் பாரத்தார்கள். அடிமேல் விழுந்த அடியாகப் பரிமளகாந்தனின் மனைவியும் திடீரென இறந்து போனார். அம்மாள் வருத்தம் என்று படுத்தவர் செங்கமாரி மங்காமாரியாக்கி இறந்துபோனார். பரிமளகாந்தன் தனித்துப் போனார். அவர் தனியாக வீட்டிலிருந்து எம்.ஜி.ஆரின் போட்டோ வோடு பேசிக்கொண்டிருப்பதைப் பொடியன்கள் பார்த்திருக்கிறார்கள்.

எங்கள் ஊரில் நடந்த முதலாவது இயக்கக் கூட்டம் எங்கள் வாசகசாலைக்குள்தான் நடந்தது. அப்போதெல்லாம் இயக்கக் கூட்டங்கள் திடீரெனத்தான் ஏற்பாடு செய்யப்படும். கூட்டத்துக்குப் பதினைந்து இருபதுபேர்கள்தான் வருவார்கள். அவ்வளவுபேரும் இளந் தரவளி களாக இருப்பார்கள். அன்றைய கூட்டத்திற்கு இரண்டு இயக்க இளைஞர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவரின் கையில் ஒரு பையிருந்தது. அந்தப் பைக்குள்தான் துவக்கு இருக்கும் என நாங்கள் இரகசியமாகப் பேசிக்கொண்டோம். ஆனால் அந்தப் பையை அவர் திறந்தபோது அதற்குள் பத்திரிகைகளும் தமிழீழப் படம் அச்சடிக்கப்பட்ட 1984ம் ஆண்டுக்கான கலண்டர் களுமேயிருந்தன. அன்று கூட்டத்தில் அந்த இளைஞர்கள் பேசியதில் முக்கால்வாசி எங்க ளுக்கு விளங்கவில்லை. ஆனால் அவர்கள் பேசி முடித்தபின்பு அவர்களில் எங்களுக்கு மிகப் பெரிய மரியாதை வந்தது. கூட்டத்திற்கு பரிமள காந்தன் வரவில்லை. கூட்டம் முடிந்ததும் வந்திருந்த இரண்டு இயக்கப் பொடியன்களும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர். சனசமூக நிலையம்' என்றிருக்கும் வாசகசாலையின் பெயரை மாற்றியமைப்பது நல்லது என்றார்கள். எங்களின் மதிப்புக்குரிய அந்த இளைஞர்களுக்கு என்ன பதிலைச் சொல்வது எனத் தெரியாமல் நாங்கள் தடுமாறினோம். நாங்கள் அவர்களைச் சற்றுக் காத்திருக்குமாறு கூறிவிட்டு பரிமள காந்தனை அழைத்துவர ஆள் அனுப்பினோம்.

பரிமளகாந்தன் தூய வெள்ளை வேட்டியும் வெள்ளைச் சட்டையும் தோளில் சால்வையும் அணிந்து வரும்போதே அந்த இளைஞர்களை நோக்கிக் கைகளைத் தனது முகத்துக்கு நேராகக் கூப்பிக் கும்பிட்டவாறே வந்தார். அந்த இளைஞர் கள் தமிழ்ப்பற்று, விடுதலை, புரட்சி இவை களைக் குறிக்கும் வகையில் வாசகசாலையின் பெயரை மாற்றலாம் என்றார்கள். அந்தப் பண்புகள் ஒன்றாகக் குவிந்திருக்கும் முன்றெழுத்து மந்திரம்தான் எம்.ஜி.ஆர். என்றார் பரிமள காந்தன். அந்த இளைஞர்கள் கொஞ்சம் யோசித்து விட்டு வாசகசாலையின் பெயரை 'புதியபூமி சனசமூக நிலையம்' என மாற்றலாம் என்றார்கள். அதுவும் எம்.ஜி.ஆர். நடித்த படம்தான் என்றார் பரிமளகாந்தன். கடைசிவரை வாசகசாலையின் பெயரை மாற்றப் பரிமளகாந்தன் மறுத்து விட்டார். எங்களாலும் இயக்க இளைஞர்கள் தங்களது உடல்களில் எங்கே துப்பாக்கிகளை ஒளித்து வைத்திருந்தார்கள் என்பதைக் கடைசி வரை கண்டுபிடிக்க முடியவில்லை.

அடுத்தடுத்த வருடங்களில் எம்.ஜி.ஆர். கலா மன்றத்தின் பாதிப்பொடியன்கள் இயக்கத்துக் கென்றும் பாதிப்பொடியன்கள் வெளிநாடுகளுக் கென்றும் தெறிக்கத் தொடங்கினார்கள். வெளிநாடுகளுக்குப் போனவர்கள் சவூதி அரேபியா, அய்ரோப்பா, கனடா என்று பல நாடுகளுக்கும் போனார்கள். ஆனால் இயக்கத்துக் குப் போன நாங்கள் அப்படியே 'செட்'டாக ஒரு இயக்கத்துக்குத்தான் போனோம். எங்கள் ஊரில் நாங்கள்தான் கடைசி எம்.ஜி.ஆர். ரசிகர்களாக இருந்தோம். இரண்டு வருடங்கள் கழித்து நான் ஊருக்குத் திரும்பிவந்தபோது எங்கள் ஊரில் டி.ராஜேந்தருக்கும் கராட்டி மணிக்கும்தான் அதிகமான ரசிகர்கள் இருந்தார்கள். அப்போது 'தங்கக் கோப்பை', 'அதிசயப் பிறவிகள்' போன்ற படங்களில் நடித்துக் கராட்டி மணி பிரபலமா யிருந்தார். ஊருக்குள் தொலைக்காட்சியில் படம் போட்டு இந்த ரசிகர்கள் கூடியிருந்து பார்க்கும் போது நாங்கள் அந்த இடத்தைச் சுற்றி வளைத்து அவர்களைப் பிடித்துச் சென்றி பார்க்கக் கூட்டிச் சென்றோம்.

எங்களுக்கு ஒரு காரியமாகத் தீவுப்பகுதியின் நிலவியல் வரைபடம் தேவைப்பட்டது. அதை எங்கே எடுக்கலாம் என்பது எங்களுக்குத் தெரிய வில்லை. ஒரு பொடியன் அது கிராமசபை அலுவலகத்தில் இருக்கலாம் என்றான். கிராம சபைக்குப் புதிய ஓவிசியர் வந்திருந்தார். அவர் வெளியூரிலிருந்து எங்கள் ஊருக்கு வேலைக்கு வந்து போய்க்கொண்டிருந்தார். நான் கிராமசபை அலுவலகத்திற்குப் போய் இன்ன இன்ன மாதிரி நான் இன்ன இயக்கம் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு எங்களுக்கு அவசரமாகத் தீவுப் பகுதியின் நிலவியல் வரைபடம் தேவையாயிருக் கிறது என்றேன். ஓவிசியர் முதலில் முழித்தார். பின்பு மென்று விழுங்கி அது தன்னிடமில்லை என்றார். அவரின் முகத்திலிருந்தே அங்கே நில வியல் படம் இருக்கிறது என்று நான் விளங்கிக் கொண்டேன்.

இரவு, நாங்கள் கிராமசபைக் கட்டடத்துக்குச் சென்றோம். கட்டடத்தின் வாசலில் இரவுக் காவலாளி பரிமளகாந்தன் தூங்கிக் கொண்டிருந் தார். அவரைத் தட்டியெழுப்பி ஒரு பொடியன் கட்டத்தின் சாவியைக் கேட்டான். பரிமளகாந்தன் கையைக் கட்டிக்கொண்டு உதட்டைக் கடித்துக் கொண்டு தலையைச் சாய்த்துப் பார்த்தார். அது அச்சொட்டான எம்.ஜி.ஆர். பார்வை. நான் சிரித்தக்கொண்டே கையை நீட்டினேன். பரிமள காந்தன் என்னை முறைத்துப் பார்த்துவிட்டு "நீ கொள்ளையடிக்கவும் தொடங்கிற்றியா?" எனக் கேட்டார். நான் "அண்ணே இது 'மலைக்கள்ளன்' படம்மாதிரி" என்றேன். அரைமணிநேரம் பேசிய பின்பு அவர் சாவியைத் தந்தார். நான் கதவைத் திறந்து உள்ளே போனேன். உள்ளே அலுமாரி பூட்டப்பட்டிருந்தது. அலுமாரியை உடைக்க வேண்டியதாயிருந்தது. அங்கே நிலவியல் வரை படம் இருந்தது.

*1987* நத்தாருக்கு முதல்நாள் எம்.ஜி.ஆர். இறந்துபோனார். எம்.ஜி.ஆர். இறந்த செய்தி வந்ததுமே பரிமளகாந்தன் மொட்டையடித்துக் கொண்டார். என்னைத் தெருவில் கண்டபோது என்னிடம் "அவர் இப்படித் திடீரெண்டு போவார் எண்டு நான் எதிர்பார்க்கயில்ல" என்றார். மொட்டைத் தலையை மறைப்பதற்காக பரிமளகாந்தன் தொப்பியணியத் தொடங்கினார். அது எம்.ஜி.ஆர். அணியும் அதேபாணியிலான வெள்ளைத் தொப்பி. சில நாட்கள் கழித்து அவர் கறுப்புக் கண்ணாடியும் அணியத் தொடங்கினார். இப்படித்தான் அவரை ஊருக்குள் பொடியன்கள் எம்.ஜி.ஆர். என்று அழைக்கத் தொடங்கினார்கள். எங்கள் ஊரில் மலேரியாக் காய்ச்சலும் பட்டப் பெயரும் டக்கெனப் பரவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் பிரான்சுக்கு வந்ததற்குப் பிறகும் பரிமள காந்தனைப் பற்றி அவ்வப்போது கேள்விப் பட்டுக்கொண்டிருந்தேன். அவர் பென்ஷன் வாங்கி விட்டார் என்றும் இப்போதும் அதே அழுக்குத் தொப்பியுடனும் கறுப்புக் கண்ணாடி யுடனும்தான் திரிகிறார் என்றும் கேள்விப் பட்டேன். ஒரு வருடத்திற்கு முன்பு பரிமள காந்தன் தனது வீட்டில் தூக்கில் தொங்கித் தற்கொலை செய்துகொண்டார் என்ற செய்தி வந்தது. அந்தச் செய்தியைக் கதையோடு கதையாக எனக்குத் தொலைபேசியில் சொன்ன எனது அம்மா "எம்.ஜி.ஆர். தூக்குப் போட்டுச் செத்துப் போனான்" என்றுதான் சொன்னார். அவர் சாகும் போதும் தொப்பியும் கறுப்புக் கண்ணாடியும் அணிந்திருந்தாராம்.



ஒரு வருடத்திற்கு முன்பு பரிமளகாந்தன் தனது வீட்டில் தூக்கில் தொங்கித் தற்கொலை செய்துகொண்டார் என்ற செய்தி வந்தது. அந்தச் செய்தியைக் கதையோடு கதையாக எனக்குத் தொலைபேசியில் சொன்ன எனது அம்மா "எம்.ஜி.ஆர். தூக்குப் போட்டுச் செத்துப் போனான்" என்றுதான் சொன்னார். அவர் சாகும் போதும் தொப்பியும் கறுப்புக் கண்ணாடியும் அணிந்திருந்தாராம்.

### 3

டொனாஸ் தலையைக் கவிழ்ந்தவாறே தரையில் அமர்ந்திருந்தான். நியூட்டன் 'அடிக்க வோ' என்று என்னிடம் சைகையால் கேட்டான். நான் அவனைப் பொறுத்திருக்குமாறு சொல்லி விட்டு டொனாஸின் அருகில் சென்று அவனுக் குப் பக்கத்தில் தரையில் உட்கார்ந்துகொண்டேன். பின்பு அவனிடம் "அது தற்கொலையில்லையா?" என்று கேட்டேன்.

டொனாஸ் தலையை நிமிர்த்தாமலேயே "இல்லை. நான்தான் கழுத்தை நெரிச்சுக் கொலை செய்துபோட்டு எம்.ஜி.ஆரின்ர கழுத்தில கயிறுபோட்டு முகட்டில கட்டித் தூக்கினான்" என்றான்.

"ஏன் அப்பிடிச் செய்தனி?" என்று கேட்டேன்.

டொனாஸ் முகத்தை நிமிர்த்தாமலேயே "எம்.ஜி.ஆர். கொட்டிக்கு ஆதரவு" என்றான்.

"என்ன கதை சொல்லுறாய், தீவுப் பகுதி முழுக்க உங்கிட கட்டுப்பாடு அங்க எங்க புலி வந்தது?" என்று நான் கேட்டேன்.

டொனாஸ் தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்தான். அவனின் உருண்டைக் கண்கள் விரிந்திருந்தன. அவன் ஒரு இரகசியத்தை வெளியிடும் தோரணையில் குரலைத் தாழ்த்தி "உங்களுக்குத் தெரியாது மாமா, எம்.ஜி.ஆர். கோடி கோடியாய் கொட்டிக்குக் காசு குடுத்தவர்" என்றான்.

நம்ப முடிகிறதா பௌஸர்? அந்தக் கொலைக்கு அவன் சொல்லும் காரணத்தை உங்களால் நம்ப முடிகிறதா? டொனாஸை நியூட்டனின் பொறுப்பிலேயே விட்டுவிட்டு நானும் திரவியமும் அங்கிருந்து புறப்பட்டோம். நாங்கள் வெளியே வந்தபோது என் பின்னாலேயே வந்த நியூட்டன் "மாமா அவனை என்ன செய்யிறது" என்று கேட்டான். "அவன் இரவுக்கு இஞ்சயே இருக்கட்டும் நான் விடியப் போன் செய்யிறன்" என்று சொல்லிவிட்டு வந்தேன்.

நான் காலையில் ஒன்பது மணிக்குப் போன் செய்தபோது நியூட்டனின் வீட்டில் யூட்டைத் தவிர மற்ற எல்லோரும் வேலைக்குப் போயிருந் தார்கள். யூட்டும் வேலைக்குப் போகும் அவசரத்தி லிருந்தான். "டொனாஸ் எங்கே?" என்று கேட் டேன். "அவனைப் பார்க்கப் பாவமாயிருந்தது, அவனை விடியப்புறமே விட்டுட்டம்" என்றான் யூட்.

இது நடந்து நான்கு நாட்களுக்குப் பிறகு நான் டொனாஸை லாச்சப்பல் தெருவில் கண்டேன். என்னைக் கண்டதும் டொனாஸ் ஓடிவந்து என் பக்கத்தில் நின்றான். "எப்படியிருக்கிறாய்?" என்று கேட்டேன் "நல்ல சுகம் மாமா" என்றவன் கொஞ்சம் நிறுத்தி, "அண்டைக்கு நீங்கள் போன பிறகும் யூட் மச்சான் எனக்கு அடிச்சவர்" என்றான். தலையசைத்து விட்டு நான் அங்கிருந்து நடக்க முயன்றபோது டொனாஸ் என்னை 'மாமா' என்று மெதுவாகக் கூப்பிட்டான். நான் நின்றேன். டொனாஸ் என் கண்களைப் பார்த்த வாறே "மாமா நான் இப்ப ரெண்டு மூண்டு எம்.ஜி.ஆரின்ர படம் பார்த்தனான். எம்.ஜி.ஆர். உண்மையிலேயே நல்ல ஆள்" என்றான். எனக்கு அப்போது ஏற்பட்ட உணர்வுக்கு என்ன பெயர் என்று தெரியவில்லை. அந்தரம் என்பதுகூட எனது உணர்வை விளக்கப் போதுமான சொல்லல்ல. நான் எம்.ஜி.ஆரும் புண்டையும் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நடந்தேன்.

▣



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழமும் தமிழர்களும்
# உலகமய-காலனீயத்தின் சோதனை விளையாட்டுகள்

ஜமாலன்



சிங்களருக்கு என்று உலகில்
வேறு நாடுகள் இல்லை,
இது மட்டுமே தங்களது நிலம்,
தாங்கள் இதைவிட்டால் உலகில்
தஞ்சம் புகுவதற்குக்கூட
ஒரு மாற்று நிலம் தனது மொழி,
இன அடிப்படையில் இல்லை
என்கிற முற்றுகையிடப்பட்டுள்ள
ஒரு மன நிலையும் அதை
ஒட்டிய அச்சமும்
பெருக்கிக் காட்டப்பட்டது.
(இதில் பௌத்த
மீட்டெடுப்பாளரான அனகாரிக
தர்மபாலாவின் பங்கு
மிகமுக்கியமானது.
தமிழன் இல்லாத நாடில்லை
தமிழனுக்கென்று ஒரு நாடில்லை
சிலவேளை நாதியில்லை என்கிற
கோஷத்துடன் இது இணைத்து
நோக்கத்தக்கது.)





எந்த ஒன்றைப்பற்றியும் எழுதுவதற்கு முன்பாக எனது மனதில் ஓடும் முதல் வாசகம் 'check your politics, before you enter it' என்கிற எட்வர்ட் சைத்தின் வாசகம்தான். முதலில் எனது அரசியலை நான் பரிசோதித்துக் கொள்வது அவசியம். காரணம் நான் ஏற்றுக்கொள்ளும் அரசியல் குறித்து எப்பொழுதும் ஒருவகை சந்தேகம் எனக்கு உண்டு. அந்த சந்தேகத்துடன் எனது அரசியலை முதலில் சரிபார்த்துக்கொள்வது அவசியம். குறிப்பாக இங்கு குறிப்பிடப்படும் 'நான்' என்பது ஒருவகை அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டே தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது. இவ்வாறு வெளிப்படும் தன்னடையாளம் குறித்து ஒரு விமர்சனத்துடன் எழுதத் துவங்குவது அவசியம். இந்த நானிற்குள் மதம், தேசியம், இனம், மொழி, பால், சாதி எனப் பல பிறப்படிப் படையிலான அடையாளங்கள் உள்ளன. மற்ற வகை வர்க்கம் உள்ளிட்ட துணை அடையாளங்கள் இதன் மேல்தான் கட்டப்பட்டுள்ளது மற்றும் கட்டப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆக அடையாளம் என்பது பல பிடிப்புகளாக ஒன்றின்மீது ஒன்றாக அடுக்கப்பட்டுள்ளது. இவ்வடுக்கில் சமூக இயக்கமானது ஒற்றை அடையாளத்தை இயக்கத்தளத்திற்கு கொண்டு வந்து மற்ற அடையாளங்களை உள்ளே மடிக்கிறது. அடையாளம் என்றவுடன் ஏதோ இது காலகாலமாக நமது உடலுடன் பிறந்த அல்லது நமக்குள் இருத்தப்பட்டுள்ள சராம்ச உணர்வாகக் கருத வேண்டியதில்லை. யதார்த்தத்தில், அப்படி ஒரு சாராம்ச அடையாளம் இருப்பதாக நம்பப் படுவதிலும், அதற்கான கருத்தியல், வரலாற்று, இலக்கிய, பண்பாட்டு வேர்தேடி அலைந்து வரலாற்றை அடையாளத்திற்கேற்ப மறுவாசிப்பு செய்து கட்டமைப்பதின் வழியாக அதனை உடலின் ஓர் அரசியல் நிலையாக மாற்றுவதிலும் தான், அடையாள அரசியலின் மையமான இறுகலும், பாசிச மனப்போக்கும் உருவாகுகிறது.

அடையாளம் என்பது இரண்டு உடல்கள் ஒன்றை ஒன்று எதிர்கொள்வதன் வழியாகவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாகுகிறது. இந்த எதிர்கொள்ளல் என்பது சமூக எதிர்வுகளாகக் கட்டப்படுகின்றன. இந்த எதிர்வுகள் தாம் X பிற என்கிற எதிர்வுகளாக அரசியல் வாசிப்பிற்கு உட்படுத்தப்படுத்துவதன் வழியாக அடையாளங்களாக இறுகுகிறது. இவ்வாறாக இறுகிய ஒரு அடையாளமே தமிழன் X சிங்களன் இன்னபிற இன அடையாளங்கள் எனலாம். உண்மையில் அடையாளம் நீக்கப்பட்ட ஒரு நிலையையே நமது அரசியலாக முன்வைக்க வேண்டும் என்பதே நமது நிலைப்பாடு, என்றாலும் தற்போதைய பேதமுள்ள சமூக இயக்கத்தில் அது சாத்தியமற்ற நிலையில் ஒடுக்கப் பட்ட மக்களின் அடையாளங்கள் அந்தந்த அரசியல் நிலைபாடுகளில் ஏற்பது என்பதே தற்போதைய நிலைப்பாடு. எனவே தமிழன் என்கிற அடையாளம் ஒடுக்கதலுக்குள்ளாகும் போது அதனை ஏற்று அதன் அரசியல் நிலையில் நிற்பது தவிர்க்க முடியாதது. அதே நிலை சிங்கள இன அடையாளத்திற்கும் நடக்குமெனில் நாம் சிங்கள அடையாளத்தை ஏற்பதுவே ஜனநாயக அரசியலாக இருக்கும். தமீழீழப் பிரச்சனையில் தமிழகத்தில் பின்னப்படும் வலையில் எனது பிறப்படிப்படையிலான தமிழன் என்கிற இன அடையாளத்தை தவிர்த்து புறநிலையில் நின்று இதனை எழுத முனைவதற்கான ஒரு அலைதலே இது.

*1983*-ஜூலைக் கலவரம் ஏற்படுத்திய பாதிப் பில் முக்கியமானது நண்பர் எஸ். சண்முகம் குறிப்பிட்டதுபோல தமிழகத்தில் தமிழக அறிவுஜீவி கள் பலரும் தமிழ்தேசியம் நோக்கி நகர்ந்ததுதான். குறிப்பாக மார்க்சிய அறிவஜீவிகள்கூட இந்த தேசிய உணர்வால் பாதிக்கப்பட்டு பின் தேசிய வாதத்தால் பீடிக்கப்பட்டனர். 1969-களில் உருவான தமிழ்தேசிய அலையை மட்டுப்படுத்தி மார்க்சிய மற்றும் தமிழக இந்தியப் பிரச்சனை களை மையமாக வைத்து எழுந்த அறிவுஜீவிகள், திடிரென இப்பிரச்சனையால் பாதிக்கப்பட்டு தமிழ்தேசியம் பற்றிய மறுவாசிப்பை நிகழ்த் தினர். இந்த 25-ஆண்டுகளில் தமிழகத்தின் பல முக்கியப் பிரச்சனைகள் குடிநீர், மணல்வேட்டை, விளைநிலங்கள் அழிப்பு, பண்ணாட்டு மூலதனக் குவிப்பு, சூழல் சீர்கேடுகள், பெருகிவரும் வறுமை என பலவும் பின்னுக்குத் தள்ளப்பட்டன அல்லது தமிழகத்தின் பிரச்சனகைளை அணுகுவதற்கான ஒரு ஆதிக்க கருத்தியலாக இந்த இனப் பிரச்சனை முன்னுக்கு வந்து, ஆழ்மனத் தணிக்கையாக இதனை ஒட்டியும் வெட்டியும் விவாதங்களை கட்டமைத்தது எனலாம். இந்நிலையில் இன்று இலங்கையில் நடைபெறும் யுத்தத்தால் மீண்டும் தமிழ்தேசிய உணர்வு ஒன்று மேலெழும்பி வந்துள்ளது. திலீபனின் உண்ணா விரத மரணம், திருச்சியைச் சேர்ந்த அப்துல் ரஹீமின் தீக்குளிப்பு ஆகியவற்றின் தொடர்ச்சி யாக இன்று முத்துக்குமார், மதுரை ரவி, மலேசியத்தமிழர் என தீக்குளிப்புகளும், மரண மும் நிகழ்ந்துள்ளது. இவை தமிழ் தேசியம் வினைபுரியம் ஈழம், தமிழகம், இந்தியா ஆகியவற்றின் அரசியல் நிலைபாடுகள் குறித்து புரிந்துகொள்ளத் தூண்டுவதாக உள்ளது.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் தெற்காசியாவில் *1947*-ல் இந்தியா பாகிஸ்தான் என்று இந்து, முஸ்லிம் என்கிற மத அடிப்படையில் இரண்டு நாடுகளையும், *1948*-ல் தமிழ் சிங்களம் என்கிற இன அடிப்படையில் இருந்த இலங்கை என்கிற நிலப்பரப்பை சிலோன் என்கிற ஒரே நாடாகவும் விடுதலை செய்துவிட்டதாக அறிவித்துவிட்டு வெளியேறியது. இந்த "விடுதலை" என்கிற காலனிய அரசியலில் மத அடிப்படையில் இரண்டு நாடுகளிலும் அமைதியின்மைக்கான விதையையும், இன அடிப்படையில் இலங்கை யில் அமைதியின்மைக்கான விதையையும் ஊன்றிவிட்டு சென்றது. "சர்வதேசியம்" என்கிற உலகஅமைப்பிற்குள் இரண்டாம் உலகப் போருக்கு பின்பாக விடுவிக்கப்பட்ட பல காலனிய நாடுகளில் உருவான பின்காலனிய அரசியலின் மையமாக மதவாதம் மற்றும் இனவாதம் என்கிற சொல்லாடல்கள் கட்டமைக் கப்பட்டு, உலகம் மற்றும் இச்சமூக மனிதர்களின் தினவாழ்வு உட்பட அனைத்தும் இச்சொல் லாடல்கள் வழி அடையாளமாக்கப்பட்டு அர்த்தமாக்கப்பட்டன. காலனியம் தான் கொன்று புதைத்த நவீனத்திற்கு முந்தைய மனித உடலை தனது இச்சொல்லாடல்கள் வழி உயிர்ப்பிக்க முனைவதற்கான ஒரு பின்காலனிய அரசியலை உருவாக்கி தந்தது. இந்தியா என்கிற தீபகற்பத்தை மதபிரிவினைகள் மூலமும், இலங்கை என்கிற தீவை இனஅடிப்படையிலும் அதாவது ஒன்றை பிரிப்பதன் மூலமும், மற்றொன்றை பிரிக்காமல் இணைப்பதன் மூலமும் இந்நாடுகளை அமைதி யற்ற நாடுகளாக இருக்க வைத்ததுதான் பிரித்தா னிய காலனியத்தின் மிக முக்கிய அரசியல் ஆகும். அதன் தொடர்ச்சியே இன்றைய பிரச்சனைகளாக வடிவெடுத்துள்ளன.

இன்று இலங்கையில் உருவாகி உள்ள தமிழ் இனவாதம் என்பது சிங்கள இனவாதத்திற்கு ஒரு எதிர் குரலாகவே உருவானது. இந்த சிங்கள இனவாதம் என்பது ஆங்கிலேயக் காலனியக் காலங்களிலேயே கட்டமைக்கப்பட்ட ஒன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகும். ஆங்கிலேயே காலனிய ஆட்சியில் புராட்டஸ்டன்ட் கிறித்துவ மதத்தை தழுவியதால் உருவான தமிழ் மற்றும் சிங்கள மேட்டிமைக்குடி ஒன்று கல்வியில் வளர்ச்சிப்பெற்று அரசின் முக்கியப் பணியிடங்களில் அமர்ந்து ஒரு மத்தியதரவர்க்க அதிகார வர்க்கம் ஒன்று

> தேசியஇனச் சொல்லாடல் மதவாத சொல்லாடலுக்கு எதிர்சக்தியாக அல்லது பிறிதொரு அரசியல் துருவமயமாக்கலுக்கான சக்தியாக உள்ளது. அதே நேரத்தில் ஈழத்தில் முன் வைக்கப்பட்ட தமிழ்தேசியம் என்கிற சொல்லாடல் முற்றாக முஸ்லிம்களை வெளித்தள்ளி ஒரு மதவாதச்சொல்லாடலுக்கான தேசியமாக மாறியது.

உருவாகியது. அந்த அதிகார வர்கக்த்திற்கு எதிராகவே, சிங்கள இனஉணர்வு கொண்டவர்களாலும், பௌத்த துறவிகளாலும் சிங்கள இனவாதம் என்பது கட்டமைக்கப்பட்டதாக குமாரி ஜெயவர்த்தனா விவரிக்கிறார். இந்த இனவாதம் சிங்கள மொழி, சிங்கள இனம், பௌத்தம் என்கிற அச்சில் தனது அடையாளத்தை கட்டமைத்தது. காலனீய அரசை எதிர்ப்பதைவிட கிறித்துவ வளர்ச்சிக்கு எதிரான "தர்மயுத்தம்" எனப்படும் புனிதப்போர் ஒன்றை இந்த மேட்டிமை கிறித்தவர்களுக்கு எதிராக துவக்கினர். இந்த சிங்களர்களுக்கான பிரதிநிதித்துவத்தைக் கோரும் இன உணர்வு என்பது ஆரிய-பௌத்த அதாவது இன-மத மேலாண்மை என்கிற உணர்வின் அடிப்படையில் இனவாதமாக வளர்கிறது. இலங்கை என்பது தம்மதிவிபா *(dammadvipa - island of faith)* என்கிற புத்த-சிங்கள-ஆரிய மேலாண்மை என்கிற கருத்துருவாக்கத்தால் இனவாதமாகவும், பௌத்தத்தை காப்பது என்பது தனது இனத்தூய்மைக்கான அடிப்படை என்கிற உணர்வுடன், கிறித்துவத்திற்கு எதிரானப் போராட்டம் புனிதப்போராக பௌத்த துறவிகளால் கட்டமைக்கப்பட்டது. 1880-ல் கலோனல் ஓல்காட் மற்றும் பிளாவட்ஸ்கி அம்மையாரால் பரப்பப்பட்ட தியாசபிகல் சொசைட்டியின் புத்தகல்வியால் ஊட்டம் பெற்ற சிங்கள சுதந்திர சிந்தனையாளர்களின் வளர்ச்சி என்பது இந்த சிங்கள இனவாதக் கருத்தியலை இனவெறியாக காலனியத்திற்கு பிந்தைய சமூகத்தில் கட்டமைத்தது. இக்கட்டமைவு கீழ்கண்ட காரணங்களால் கட்டப்பட்டதை விளக்குகிறார் குமாரி ஜெயவர்த்தனா.

1. தென்னிந்திய மன்னர்களின் தொடர் படையெடுப்புகள் பௌத்த வரலாற்றை அழித்ததாகவும், அதனால் சிங்கள இனம் ஒடுக்கப்பட்டதாகவும் ஆன தமிழ் வரலாற்றுடன் சேர்ந்து கட்டமைக்கப்பட்ட வரலாறு, பாடநூல்கள் வழியாக சிங்களரிடம் தென்னிந்திய பற்றிய ஒரு வரலாற்று அச்சத்தைக் கட்டமைத்தது. (இங்குதான் ராஜராஜன்-புலிக்கொடி-புலிச்சின்னம்-வெற்றிவாகை-தமிழினப்பெருமை இன்னபிற பிம்பங்களின் மீள்கண்டுபிடிப்பும் ஊடாட்டமும் முக்கியமான தமிழனப் பெருமையாக முன்வைக்கப்பட்டதை இணைத்து காணவேண்டும்.)

2. 2500 ஆண்டுகளுக்கு முந்தைய ஆரிய வரலாற்றுடனும், இந்திய பெங்கால் பகுதியிலிருந்து வந்து பூர்வீகக் குடிகளான சிங்களவர்கள், பௌத்தத்தினால் அதன் தூய்மையை காப்பதற்கான தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாக தங்களை உணரும்படியும், இலங்கை வரலாற்றில் பூர்வீக வரலாறு தங்களுடையதே என்கிற மரபின் அடிப்படையிலும் சிங்களம் என்கிற இனப்பெருமிதம் கட்டமைக்கப்பட்டது. தங்களை ஆரியர்களாக அவர்கள் அடையாளப்படுத்திக் கொண்டனர். இந்தியாவில் உருவான ஆரிய-திராவிட என்கிற காலனியக் கருத்தாக்க கட்டுமானத்தில் ஆரியர்களாக தங்களை உணருமாறு வரலாறு வாசித்துக் காட்டப்பட்டது. (தமிழின மேலாண்மை கைக்கொண்ட சைவமதப் பெருமிதத்திற்கு எதிராக இந்த ஆரிய-பௌத்த மேலண்மைக் கட்டப்பட்டது.)

3. சிங்களருக்கு என்று உலகில் வேறு நாடுகள் இல்லை, இது மட்டுமே தங்களது நிலம், தாங்கள் இதைவிட்டால் உலகில் தஞ்சம் புகுவதற்குக்கூட ஒரு மாற்று நிலம் தனது மொழி, இன அடிப்படையில் இல்லை என்கிற முற்றுகையிடப்பட்டுள்ள ஒரு மன நிலையும் அதை ஒட்டிய அச்சமும் பெருக்கிக் காட்டப்பட்டது. (இதில் பௌத்த மீட்டெடுப்பாளரான அனகாரிக தர்மபாலாவின் பங்கு மிகமுக்கியமானது. தமிழன் இல்லாத நாடில்லை தமிழனுக்கென்று ஒரு நாடில்லை சிலவேளை நாதியில்லை என்கிற கோஷத்துடன் இது இணைத்து நோக்கத்தக்கது.)

4. இலங்கையில் உருவான இந்திய முதலாளி வர்க்கம் ஒன்று அந்த மக்களை சுரண்டுவதும், தங்களது வளங்களை கொள்ளையிட்டு இந்தியாவில் ஒருகால் இலங்கையில் ஒருகால் என வாழும் அவர்களுக்கு சிங்களநாட்டின்

www.tamilarangam.net

தனிச்சிறப்பு தெரியாமல் அது அழிக்கப்படுவதான உணர்வு மேலெழும்பியது. (இதில் இந்திய சிந்திகள், பார்சிகள், தமிழக செட்டியார்கள், மலையாள மேனன்கள் என இந்தியாவிலிருந்து பல சாதியப்பரிவினர் சிலோனின் வணிகப்பொருளதாரத்தை தங்கள் கையில் வைத்திருந்தனர்.)

5. பௌத்தம் என்பது தனிச்சிறப்பான மதமாக தன்னைக்காப்பதற்கான நிலமாக இலங்கையை தேர்ந்துகொண்டது என்பதால் அதனை அந்நிய மதங்களான, கிறித்துவம், இந்து, இஸ்லாம் போன்ற மதங்களின் தாக்குதலி லிருந்து காக்க அம்மதங்களை எதிர்த்து தர்மயுத்தம் (புனிதப்போர்) செய்யவேண்டும் என்றும் பௌத்த துறவிகளால் இந்த இன வாதம் ஊட்டி வளர்க்கப்பட்டது. (இது நவீன சமூகத்தின் மதஅடிப்படைவாதக் கருத்திய லான "மத-காப்புறுதி(இன்சூரன்ஸ்) புனிதப் போர்" என்கிற "கருத்தியல் பண்டத்தின்" ஒரு பின்காலனியத் தாக்கமாகும்.)

அனகாரிக தர்பாலாவின் புராட்டஸ்டண்ட் புத்தமதம் என்று அழைக்கப்பட்ட சீர்திருத்த வாதம், பௌத்த பொற்காலம் பற்றிய கனவுகளை பரப்பி சிங்களவரிடம் பௌத்த அடையாளத்தை ஆழப்படுத்தி ஒன்றிணைத்தது. ஆக, சிங்கள இன வாதம் என்பது ஒரு காலனிய எதிர்ப்பு வடிவமாக இல்லாமல், காலனியக்கால வர்க்க கட்டமைப்பில் முகிழ்த்து வந்த சிங்கள தேசியமுதலாளி வர்க்கத்தின் அதிகார பகிர்வுக்கான ஒரு பேரியக்கமாகவே உருவானது. (இதற்கு சமகாலத்தில்தான் இந்தவகை பேரியக்கமாக உருவானதே பெரியாரால் முன்வைக்கப்பட்ட தமிழ்தேசிய முதலாளித்துவக் குரலான திராவிட நாடு என்கிற கருத்தாக்கமும் என்பதை நினைவில் கொள்வது நல்லது.) இப்பேரியக்கம், காலனியம் உருவாக்கிய கிறித்துவ அதிகார வர்க்கத்திற்கு எதிரானதாக உருவானது. வரலாற்றின் நகைமுரண் என்னவென்றால், ஒரு மரபான கிறித்துவ குடும்பத்தில் பிறந்தவரான ஜெயவர்த்தனேதான் தமிழர்களுக்கு எதிரான சிங்கள் இனவெறியை அதன் முழுவீச்சில் கட்டமைத்து, சிங்கள இனத்தின் ஒரு ஒருமித்த குறியாகவும், பௌத்த துறவிகளின் மதவெறிக்கு ஒரு வடிகாலாகவும் இருந்தார். மதம் என்பதை இனம் என்பதால் மாற்றீடு செய்த பெருமை இவருடையதே. தனது சிங்கள இனவெறியின் தூய்மையைக் காக்கவும், அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்ளவும் அவர் பின்னால் பௌத்த மதத்தை தழுவினார்.

காலனியக்காலத்தில் 1883 ஏப்ரல் மாதம் நடந்து மிகப்பெரும் கலவரம் பௌத்தர்களுக்கும் கிறித்துவர்களுக்கும் இடையில் நடந்தது என்றால், சரியாக 100 ஆண்டுகள் கழித்து 1983 ஜூலையில் தமிழர்களுக்கும் சிங்களருக்கும் இடையில் மிகப்பெரும் கலவரம் நடந்தது. இரண்டு கலவரங்களில் ஒன்று மத அடிப்படையிலும், பிறிதொன்று இன அடிப்படையிலும் நிகழ்ந்தது. காலனியத்திற்கு பிறகான தேசம் மற்றும் தேசியம் பற்றிய சொல்லாடல்கள் இந்த கலவரங்களுக்கான அடிப்படை கருத்தியல் கட்டுமானமாக இருந்தன. ஆக, சிங்கள இனஅடையாளம் தவிர்க்க முடியாமல் இலங்கையில் அடுத்து பெரும்பான்மையாக உள்ள தமிழ் என்கிற இன அடையாளத்தை தனது மற்றமையாகக் கட்டியது.

இனஅடையாளம் என்பது ஒரு கற்பிதம். அதற்குள் இனம் சார்ந்ததான எந்தவொரு சாராம்ச உணர்வும் இருப்பதில்லை என்பதை முன்பே சொன்னோம். தேசியவாதம் தனது வேர்தேடிச் சென்று ஒரு பூர்வீக வரலாற்றை, தேசம், தேசியம், இனம் என்கிற நவீன சொல்லாடல்கள் வழி மீள்வாசிப்பு செய்து, இந்த இனம் என்கிற உணர்வை வரலாற்றுக்கு முந்தையதான சாராம்சமான ஒரு அடிப்படை உணர்வாக, ஒரு உடலுக்குள் கண்டடைகிறது. ஒரு மக்கள் தொகுதியை உருவாக்கும், ஒரு அடையாளக் காரணியே இனம் என்பதற்கு பதிலாக, இனம் என்கிற அடையாளத்தால்தான் ஒரு மக்கள் தொகுதி உருவாகுகிறது என்பதாக இது சொல்லப்படுகிறது. இந்த கற்பித அடையாளத்தைக் கொண்டுதான் சிங்கள இனம் என்கிற பேரினவாதம் தன்னை அடையாளப்படுத்தி தமிழர்களை அழித்தொழிக்கிறது.

எதிரி ஒரு அடையாள நெருக்கடியை நோக்கி உந்தி தள்ளும் ஒரு நிலையில் தவிர்க்கமுடியாமல் ஒரு தன்னடையாளத்தைப் பெற்று தன்னை ஒரு இனமாக உணரும் நிலை தமிழர்களுக்கு ஏற்படுகிறது. ஒருவன் தன்னை "தமிழனாக" ஒரு தேசிய இனத்தவனாக உணர்வது என்பது இன்றைய அரசியல்-சமூக-பொருளியல்-உளவியல் வலைப்பின்னலில் தவிர்க்க முடியாததாக உள்ளது. அல்லது அந்த வலைப்பின்னலுக்கு ஏற்ப ஆடும் பாத்திரங்களாக மக்கள் ஆக்கப்பட்டுள்ளனர். இந்த வலைப்பின்னலூடாக பிறிதொரு இணை வலைப்பின்னலை கடந்த 25 ஆண்டுகளாக தமிழ் இன உணர்வினால் அச்சமூட்டப்பட்ட சக்திகள் தமிழீழத்திற்கு எதிரான தங்களது "வஞ்சம்" தீர்க்கும் நிலைப்பாட்டால் பின்னலாக்கி உள்ளன என்பது மிகையாகாது. இந்திய தேசியத்தில் தமிழ்

www.tamilarangam.net

தேசியம் கரைக்கப்பட வேண்டும் என்கிற கருத்துடன் இந்த வலைப்பின்னல் பின்னலாக்கப் பட்டு வருகிறது. இவ்வலைப்பின்னலினை உருவமைக்கும் சக்தியாக இந்தியாவின் ஆதிக்க சொல்லாடலாக உள்ள மதவாதம் உள்ளது. அதாவது, இனம் சார்ந்த சொல்லாடல்களை இந்திய தேசியம் என்கிற ஒரு கலாச்சார தேசியத் தின் அடிப்படையாக உள்ள மதவாத சொல்லாடல் தனக்குள் அடக்க முனைகிறது.

ஆனால், தேசியஇனச் சொல்லாடல் மதவாத சொல்லாடலுக்கு எதிர்சக்தியாக அல்லது பிறி தொரு அரசியல் துருவமயமாக்கலுக்கான சக்தி யாக உள்ளது. அதே நேரத்தில் ஈழத்தில் முன் வைக்கப்பட்ட தமிழ்தேசியம் என்கிற சொல் லாடல் முற்றாக முஸ்லிம்களை வெளித்தள்ளி ஒரு மதவாதச்சொல்லாடலுக்கான தேசியமாக மாறியது. இம்மாற்றத்தை குறிப்பாக விடுதலைப் புலிகள் முன்னின்று தீவிரமாக நடத்தி முடித்தனர். ஆக, ஈழத்தமிழ் தேசியம் என்பதற்குள் முஸ்லீம் கள் உள்ளடக்கப்படாத ஒருவகை தூய-மதவாத-தேசியத்தை புலிகளின் ஈழத்தமிழ் தேசியவாதிகள் முன்வைத்தனர். இது ஈழத் தமிழ் தேசியத்தின் முதல் சக்திச் சிதறலாக ஈழப்போராட்டத்தை பலவீனப்படுத்தியது. அதன்பின் இலங்கை புவிப்பரப்பில் யாழ்ப்பாணத் தமிழர்கள் அல்லது உயர்சாதி சைவவெள்ளாள தமிழர்கள் பிறசாதி மற்றும் தலித் தமிழர்களை தங்களது சொல்லாட லிலும், பொருளியல் மற்றும் வாழ்வியல் நிலையிலும் விளிம்பிலேயே வைத்திருந்தனர். இந்த சாதிய மனோபாவம் விடுதலை இயக்கங் களுக்குள் ஒரு சாதிய மனோபாவமாக மாறி யதில், வரலாற்றில் ஒடுக்கப்பட்ட இச்சக்திகள் வெளியேறியதன் மூலம் மற்றொரு பலவீனத்தை சந்தித்தது. மலையகத் தமிழர்களை புறம் ஒதுக்கி அவர்களது வாழ்வியலுக்கான உத்திரவாதத்தை உருவாக்கும் கோரிக்கைகளை இணைக்காமல் ஈழத்தமிழ்தேசியம் அவர்கள இந்திய வம்சாவழி யினர் என்று பிரித்ததின் வழியாக மூன்றாவது பலவீனத்தை சந்தித்தது. அதன் பின் மற்ற விடுதலை இயக்கங்களையும், அவற்றின் பிரதி நிதித்துவக் குரல்களையும் ஒடுக்கியதன்மூலம், ஒற்றை பிரதிநிதியாக மாறியதன்மூலம், விடுதலைப்புலிகள் அமைப்பு ஈழத் தமிழ் தேசியத்தின் ஒற்றைக்குரலாக மாறியது. அவ் வியக்கம் வெறும் இராணுவப் போர்தந்திரங்களை மட்டுமே நம்பியதின் விளைவாக, தமிழ் தேசியத்தை பண்டைய புறநானூற்றுக்கால போர்பரணி பாடும் நிலைக்கு பின் தள்ளியது. சிங்கள இனத்தின் கொடுங்கனவுகளில் ஒன்றான ராஜராஜன் படையெடுப்பை நினைவூட்டும் வண்ணம் தன்னை புலியாக ராஜராஜனாக புலிக் கொடியுடன் அடையாளப்படுத்திக் கொண்டது. ஒரு தேசிய இனத்தையே இராணுவமாக (போராளிகளாக அல்ல) மாற்ற முயன்றது. ஒவ்வொரு குடும்பத்தினரும் இவ்வியக்கத்துடன் தொடர்பு கொண்டவர்களாக, அக்குடும்பத்தில் ஒருவரை தனது இராணுவத்திற்குள் இணைத்தது. போராளிகள் வேறு பொதுமக்கள் வெறு அல்ல என்ற நிலையை உருவாக்கியது. போராளிகள் மக்களிடம் தங்கியிருப்பது என்பது மக்கள் சக்தியின் பலத்தைப்பெற்று மக்களைப் பாதுகாக்க என்கிற கோட்பாட்டை, மக்களை ஆயுதம் கொண்டு அச்சமூட்டி ஆதரவு திரட்டும் ஒரு சர்வாதிகாரப் போக்காக நடைமுறைப்படுத்தியது.

> வாழ்வதற்கு இடமற்றதாக துரத்தப்பட்ட
> ஈழத் தமிழர்கள் இன்று சாவதற்கும்
> தனது சொந்த மண்ணற்றவர்களாக
> சிதறடிக்கப்படுகிறார்கள்.
> மரணம் என்பது எண்ணிக்கையாக
> மாறிவிட்ட இந்த அவலத்தில்
> மனிதம் என்பது வெறும் காட்சிகளின்
> நகல்களாக மாறிவிட்டது.

ஜனநாயகத்தின் அனைத்து வழிகளையும் அழித்தொழித்துவிட்டு பின், தவிர்க்க முடியாமல் இன்று தமிழீழப் பிரச்சனை ஒரு சிக்கலான காலகட்டத்தில் சிக்கவைக்கப்பட்டுள்ளது.

ஈழத்துயரம், மனித அவலம் பற்றிய பெருந் துயரை நமக்குள் உறையச் செய்கிறது. வாழ் வதற்கு இடமற்றதாக துரத்தப்பட்ட ஈழத் தமிழர்கள் இன்று சாவதற்கும் தனது சொந்த மண்ணற்றவர்களாக சிதறடிக்கப்படுகிறார்கள். மரணம் என்பது எண்ணிக்கையாக மாறிவிட்ட இந்த அவலத்தில் மனிதம் என்பது வெறும் காட்சிகளின் நகல்களாக மாறிவிட்டது. தமிழக மக்களிடம் இந்தபோர் பெரும் பதற்றத்தை உருவாக்கவில்லையே ஏன்? என்கிற கேள்வி நம்முன் எஞ்சியுள்ளது. "புலியை முறத்தால் அடித்து துரத்தியதாக புறநானூற்றுப் பெருமை பேசும் நாம் இன்று ஏன் இந்த நிலைக்கு ஆளானோம்" என்கிற கேள்வி நமது தமிழ் சமூகவரலாற்றை சமூக உளவியல் மற்றும் அரசியல் ஆய்விற்கு உட்படுத்த வேண்டிய அவசியத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்து கிறது. இதன்பொருள் புலியை முறத்தால் அடித்தவனும் இன்றைய தமிழனும் உடலினால் ஒன்றாக இருக்கலாம் உணர்வினால் ஒன்றல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருவரிடமும் ஒரு வரலாற்று தொடர்ச்சியின்மை உள்ளது என்பதுதான். மணிரத்தினத்தின் 'இருவரி' -ல் வரும் தமிழ்ச்செல்வன் பேசும் கவிதை வரிகள் போல "நமது புறநானூற்று வீரம் எங்கே? போர்பரணி எங்கே?" தமிழ்த்திரையின் பாத்திரங் களாக மாறிப்போன நமது அரசியல் வரலாற்றுத் தலைவர்கள் உருவாக்கி உள்ள ஒரு மீ-யதார்த்த (ஹைபர்-ரியல்) உலகில் தமிழனின் அகம் புறம் எல்லாம் அதீத உணர்விற்கு ஆட்பட்டு உண்மை களின் நகல்களின் நகல்களின்... நகல்களை அடைந்து, அது ஏற்படுத்தும் அதீ-யதார்த்த உணர்விலும்/உலகிலும் சஞ்சரிக்கும் நிலைக்கு ஆளாகிவிட்டோம். போர் என்பது தொலைக் காட்சியின் மின்திரைப்பரப்பில் வந்துபோகும் ஹாலிவுட் படக்காட்சிகளைப் போல எந்த உறைப்பும், உணர்வும் இல்லாமல் ஒரு "காட்சி காணும் எந்திரமாக" மாறிவிட்டோம். தொலைக் காட்சியின் நெடுந்தொடர், விளம்பரம் மற்றும் திரைப்படங்களுக்கு மத்தியில் கட்டமைக்கப் படும் செய்திகள் என்கிற "உண்மைகளில்" வரும் காட்சிகள்கூட நம்மை உறையவோ அல்லது உலுப்பவோ இல்லை என்பது கடந்த 25 ஆண்டு காலமாக ஈழத்தை வைத்து செய்யப்பட்ட தமிழக அரசியலின் ஒரு உச்ச விளைவு எனலாம். இந்த உணர்வு புலிகளையும் அவர்களது செயல்பாடு களையும் முன்வைத்து சிறுக சிறுக கட்டமைக்கப் பட்டது. இன்று ஈழத்தமிழினம் என்கிற ஒன்றே இல்லை அவர்கள் இலங்கைத் தமிழர்கள்தான் என்று திராவிடர்கள் பெயரில் கட்சி நடத்தும் அம்மையார் ஜெயலலிதா பி.பி.சி. என்கிற உலகச் செய்தி நிறுவனத்திற்கு பேட்டியளிக்கும் ஒரு வெளிப்படையான நிலையை அடைந்துள்ளது. தமிழகமக்களிடம் இதற்கு ஒரு முணுமுணுக்கும் எதிர்ப்புக்கூட இல்லை என்பது அதைவிட வியப்பளிக்கக் கூடியது.

ராஜிவ் கொலை என்பதை முன்வைத்து ஒரு இன அழிப்பிற்கு தூபம்போடும் கட்சிகள், ராஜிவைக் கொல்லவேண்டிய தேவை ஏன்? அதில் உண்மையில் நலம் அடைந்தவர்கள் யார்? அதை செய்யத் தூண்டிய சக்திகள் எவை? அச்செயலால் பலன் அடைந்தவர்கள் யார்? என்பதை வெளிப் படையாக அறிவிக்கவுமில்லை. குறிப்பாக, ராஜிவ் கொலைக்குப் பிறகான இந்திய அரசு முற்றிலும் வேறுமுகம் கொள்வதை நுட்பமாக அவதானிக்க முடிகிறது. இந்திய அரசியிலில் மதச் சார்பற்ற குரல்கள் அதோடு ஒருமுடிவிற்கு கொண்டுவரப்பட்டது என்பது முக்கியமான விஷயம். அதன்பின் காங்கிரஸ் என்கிற ஒரு பேரியக்கம், பிராந்திய கட்சிகளின் அளவிற்கு சுருங்கியும், பாரதிய ஜனதா ஒரு தேசியக் கட்சிக்கான அந்தஸ்த்தையும், ஆதரவையும் பெற்றது. ராஜிவிற்கு பின் உடனடியாக ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியவர்கள், பாபர் மசூதி இடிப்பினால், ஒரு அமைதியற்ற மதவாத நாடாக இந்தியாவை மாற்றியதும், உலக பொருளா தராத்திற்கு இந்திய சந்தையை திறந்துவிட்டதும் அவதானிக்க வேண்டிய முக்கியமான பிரச்சனை களாகும். ஈராக்கை ஆதரித்த ராஜிவ், அமெரிக்கா விற்கு எதிரான தெற்காசிய சக்தியாக வளரத் துவங்கியதையும் இதனுடன் இணைத்து நோக்கு வது அவசியம். ராஜிவ் கொலை என்பதன் பின்னணியில் உள்ள பல அரசியல் சார்ந்த நகர்வுகள், இயக்கங்கள் அலசப்படவேண்டியவை. அதற்காக அந்த ஒரு காரணத்தை முன்வைத்து ஒரு இனத்தை அழிப்பதற்கு அனுமதி தருவது போல நடந்துகொள்ளும் இந்திய அரசின் நிலை என்பது இந்திய தெற்காசிய வல்லரசுக் கனவுத் திட்டத்தின் ஒரு பகுதியே.

இங்கு இந்திய தேசவெறியில் இந்திய ஆதிக் கம் ஈழத்தில் ஏற்படுவதால் இந்திய ஸ்திரத் தன்மை காக்கப்படும் என்பதான ஒரு இராஜதந்திர விவாதம் முன்வைக்கப்பட்டு, இந்தபோர் ஆதரிக்கப்படுகிறது. இந்திய அரசு என்பதன் ஆதிக்கம் ஈழம் போன்ற நாடுகளில் உருவாகுவது என்பது எந்தவகையில் இந்திய மக்களுக்கு சாதக மாகும் என்பது கேள்விக்குறியே? அப்படியே இந்திய மக்களுக்கு சாதகம் என்பதாக வைத்துக் கொண்டாலும், மற்றொரு நாட்டை அடிமை யாக்க முனைவது இந்தியா தன்னை ஏகாதிபத்திய மாக மாற்றிக்கொள்வதற்கான முயற்சியே. இந்தியாவின் இந்த ஏகாதிபத்தியக் கனவு அடிப்படையில் மக்கள் விரோதமானது என்ப தால் இது உடனடியாக எதிர்க்கப்பட வேண்டியது இந்திய ஜனநாயகவாதிகளின் கடமையாகும்.

தற்சமயம் அழுத்தம் திருத்தமாக பத்திரிக்கை கள் கூறும் அமெரிக்க இராணுவ அமைச்சகம் திருகோணமலை படைத்தளத்தை பார்வையிட்டது தளம் அமைக்கும் நோக்கில் இல்லை என்பது மற்றுமொரு அவதானத்திற்குரிய முக்கிய விஷய மாகும். திடீரென அமெரிக்கா புலிகளின் ஆதரவுநிலையிலிருந்து சிங்கள இராணுவப் பக்கம் சாய்ந்தது ஏன்? என்பதும் இதனுடன் இணைத்து சிந்திக்கத் தக்கது. உண்மையில் ஈழப் பிரச்சனையின் மையமாக கருதத்தக்கது அதன் திருகோணமலைப் படைத்தளத்தைதான். இஸ்ரேல் போன்ற ஒரு முக்கிய புவிசார் அரசியல் புள்ளி அது. அங்கு உலக ஆதிக்கம் தெற்காசிய நாடுகளின் பிராந்திய அமைதியை குலைப் பதற்கான முயற்சியில் இந்த பிரச்சனையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கையாளுவதாக ஒரு சந்தேகம் 1983-லிருந்தே உண்டு. ஒருவகையில் சோவியத்-இந்திரா அரசு புலிகளை 70-களில் அமெரிக்க-திருகோணமலை-படைத்தளம் என்கிற கோணத்தில்தான் அணுகின வோ என்கிற ஐயம் உண்டு. இன்றும்கூட சீன-பாகிஸ்தான்-உறவை சொல்லி சிங்கள அரசு இந்திய அரசை "பிளாக்-மெயில்" செய்வதாகவே கருத இடமிருக்கிறது.

இந்திய அரசின் நிலை இது என்றால், தமிழினம் குறிப்பாக இந்திய தமிழர்கள் ஏற் படுத்தி உள்ள அரசியல் கசப்புணர்ச்சியின் விளைவாக, இன்று இந்தியாவின் எந்த மாநில மும் குரல்கொடுக்கத் தயாரில்லை என்பது மற்றொரு பேரவலம். இந்திய அரசின் வெளி யுறவுக் கொள்கைகளை தீர்மானிப்பவர்களின் சொந்த வெறுப்புணர்ச்சியின் விளைவாக, சிங்கள பேரினவாத அரசு இன்னும் ஊக்கமும் உற்சாக மும் பெற்று புவியியல்ரீதியாக நெருக்கி முல்லைத் தீவு என்கிற சிறு நிலப்பரப்பிற்குள் அடைத்துவிட்டது. உணவு, மருந்து மற்றும் வாழிடம் என்கிற எந்த அடிப்படை வசதியுமற்ற நிலையில் நெருக்கடியான நிலையில் மக்கள் வசிக்கும் ஒரு பெரிய சிறைச்சாலையாக மாறியுள்ளது முல்லைத்தீவு.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மேனன், ராஜபக்ஷே சந்திப்புக்குப் பின்னர் "இந்திய, இலங்கை உறவு வரலாறு காணாத அளவுக்கு வலுவடைந்துள்ளது. இரு நாடுகளுக் கும் இடையிலான நட்பு பாரம்பரியமானது. ஆழமானது. காலத்தையும் கடந்து இது நிலை பெற்றுள்ளது. சர்வதேச அளவிலான தீவிரவாதத் திற்கு எதிரான போரில், இலங்கை, இந்தியாவுக்கு உற்ற துணையாக இருந்து வருகிறது" என்றார் மேனன். இலங்கை வெளிஉறவு அமைச்சர் ரோகித போகல்லகாமா, "நிலைமையைப் புரிந்து கொண்டு இந்தியா, இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவு அளித்து வருவது பாராட்டுக்குரியது. இலங்கை இனப் பிரச்சினைக்கு இரு நாடுகளுக் கும் இடையே ஏற்பட்ட அமைதி ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே தீர்வு காண வேண்டும். இந்திய, இலங்கை ஒப்பந்தம்தான் தீர்வுக்கான சாத்தியமாகும்". என்று கூறியுள்ளார். இந்திய அரசின் தமிழினம் மற்றும் இலங்கை குறித்த வல்லாண்மை செய்யும் அல்லது தெற்காசிய பிராந்தியத்தில் தன்னை ஒரு "தாதாவாக" மாற்றிக்கொள்ளும் நிலையை வெளிப்படையாக அறிவிக்கும் ஒரு பேச்சே இது. உண்மையில் தற்போதையபோர், இந்தியாவின் ஆசியுடன் நடத்தப்படும் அல்லது இந்தியாவே நடத்தும் ஒரு மறைமுகப்போர் (proxy war) எனலாம். அதற்கான அறிவிப்பே இது. அதாவது, இலங்கை அரசு இன்று பிரிட்டன், பாகிஸ்தான், சீனா, ஜப்பான், ஈரான், இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு இலங்கையின் தமிழ் மற்றும் முஸ்லிம்களின் வடகிழக்கு பகுதிகளை பங்கிட்டு கொடுத்து இந்த யுத்தபேரத்தை நடத்திவருகிறதோ என்கிற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. காரணம், இப்பகுதிகளை உலக நாடுகளுக்கு திறந்துவிட்டு, அதன்மூலம் சிங்களப் பகுதிகளை ஸ்திரமானதாக மாற்ற முனைவதற்கான ஒரு திட்டம் யுத்தம் ஆரம்பித்த நாள்முதல் சர்வதேச அமைப்புகளிடம் கொண்டுள்ள இலங்கை அரசின் இராஜாங்க உறவில் வெளிப்படுவதாக உள்ளது. இது ஒரு புதுவகையான உலக-ஆதிக்கத்தையும், புதுவகை யான உலகமய-காலனியமுறையையும் உருவாக்கு வதாக உள்ளது.

இந்நிலையில், இலங்கையின் இந்த யுத்தம் ஈழ மக்கள் மட்டுமின்றி இந்திய தமிழர்களுக்கும், இந்தியாவிற்குமான ஒரு யுத்த அச்சத்தை எதிர்காலத்தில் உருவாக்கும் ஒன்றாக மாறிவிடக்கூடிய சாத்தியங்களைக் கொண்டிருக் கிறது. இச்சூழலில், தமிழக மக்களை அரசியல் படுத்தி பரவலான எதிர்ப்பை நாடு தழுவிய அளவில் இந்தியா முழுமைக்குமானதாக கொண்டு செல்வதற்கான ஒரு மக்கள் கட்சி என்பதோ ஒரு மக்கள் முன்னணி என்பதோ இல்லை. இந்நிலையில் தமிழகத்தின் பெரிய இரண்டு கட்சிகள் கள்ள மௌனமும் நல்ல மௌனமும் சாதிக்கின்றன. மற்ற கட்சிகள் புலிகளின் தேசியவாதத்தால் பீடிக்கப்பட்டு ஒட்டு அரசியல் நடத்துவதாக உள்ளன. எதிர்கட்சித் தலைவரான ஜெயலலிதா நேரடியாக எதிர் நிலையை எடுத்துள்ளார். ஆளுங்கட்சியான கருணாநிதியோ இந்திய அரசையும் உள்ளடக்கிய ஒருவகை தேசியத்தை பேசிக்கொண்டும், தனது பழம்பெருமையைக் கூறிக்கொண்டும் அறிக்கை விட்டுக் கொண்டுள்ளார். தமிழக மக்களிடம் 25 ஆண்டுகாலமாக ஏற்படுத்தப்பட்ட புலிகள் மீதான பல அபிப்பிராயங்கள், தமிழ் ஈழம் என்றாலே புலிகள் என்பதான ஒரு சங்கேதமாக மாறி விட்டது. ஒருவகையில் புலிகள் தவிர பிற ஜனநாயக அமைப்புகளோ அல்லது ராணுவ அமைப்புகளோ இல்லை என்கிற ஒரு தனிமைப் படுத்தப்பட்ட நிலைக்கு ஈழப்பிரச்சனை கொண்டு செல்லப்பட்டுவிட்டது. பலகுரல்களை நசுக்கி தன்னை ஒற்றைக் குரலாக மாற்றிக் கொள்ளும்போது பேச்சின் பிரதிநிதித்துவம்கூட அந்த ஒற்றைக் குரலின் பிரதிநிதித்துவமாக மாறிவிடுவதும், அந்த ஒருவரின் பலம் பலவீனம்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த பேச்சின் நியாயத்தை சிக்கலாக்கிவிடுவதும் ஆன ஒரு கையறுநிலைதான் இன்று எஞ்சி உள்ளது. புலிகளின் பலவீனம் தமிழினத்தின், ஈழ விடுதலை என்கிற உணர்வின் பலவீனமாக மாற்றப்படுகிறது.

தமிழகம், இந்தியா, சர்வதேசநாடுகள் மற்றும் தமிழீழப் பிரச்சனைக் குறித்த பல விஷயங்களை இந்த யுத்தம் தெளிவாக்கியுள்ளது.

1. இந்தியா தனது மேலாதிக்கத்தையும் இலங்கை யுடன் ஆன நட்பையும் உறுதிப்படுத்திக் கொண்டுவிட்டது. தமிழர்கள் குறித்து இந்திய தேசியம் கொண்டிருக்கும் அலட்சியமும், தமிழர்களின் உணர்விற்கு ஒரு போலித் தனமான மதிப்பளிக்கக்கூடத் தயாரில்லை என்பதை அறிவித்துவிட்டது. பிரச்சனை இந்திய அரசிற்கு எதிரானதாக தமிழக மக்களின் உணர்ச்சிகள் கிளர்வதற்கு வழி வகுத்துவிட்டது.

2. தமிழக மக்களிடம் வழுக்குரைஞர்கள் மற்றும் மாணவ சமதாயம் ஏற்படுத்திய எழுச்சி இன்று பல போராட்ட வடிவங்களையும் மேலே கொண்டுவரத் துவங்கி உள்ளது.

3. இப்போரை அடிப்படையாகக் கொண்டு உள்ளடங்கியிருந்த தமிழின விரோத சக்திகள் ஒன்றிணைந்து தமிழ் என்கிற இனத்திற்கு எதிராக இதனை பயன்படுத்த முனைப்பு கொள்கின்றன.

4. தமிழக ஓட்டுக்கட்சிகள் தமிழினத்தை எப்படி தங்களது அதிகாரத்திற்கு பயன்படுத்தகின்றன என்பது அம்பலமாகி உள்ளது.

5. புலிகள் மீது தமிழ் மக்கள் கொண்டிருந்த ஒருவித "வெறுப்பும், எரிச்சலும்" கலந்த ஆழ் மன உணர்வு மக்களிடம் கட்டிப்போட்டிருந்த செயலின்மையால் தங்களுக்கு கீழ் திரட்ட முடியாமல் இருந்த தமிழக ஓட்டுக்கட்சிகள், திகைத்துப்போய் உள்ளன.

6. மீண்டும் வரலாற்றில் மாணவர்கள் தலைமை ஏற்கும் ஒரு அரசியல் நிகழ்வாக இது மாறி யுள்ளது. 1983- ஜூலைக் கலவரத்தில் பாதிக்கப் பட்ட மாணவர்கள்தான் இன்றைய அரசியல் சக்திகளாக உள்னர். தற்சமயம் அடுத்த பத்திருபது ஆண்டுகளுக்கான அரசியல் சக்திகளை தயாரித்தளிக்க இவை உதவி உள்ளது.

7. மறந்துபோன தமிழ் இனநினைவை கட்ட மைக்க மீண்டும் இந்திய தேசியம் தனது ஈழப் பிரச்சனையின் மீதும், அதை ஒட்டிய தமிழர் களது உணர்வுகளிலும் காட்டிவரும் மெத்தனத் தால் காரணமாகிவிட்டது.

8. இரண்டரை லட்சம் மக்கள் பலி பீடத்தில் இருத்தப்பட்டுள்ளனர். சிங்கத்திற்கும் புலிக் கும் நடுவில் சிக்கிக்கொண்டுவிட்ட அப்பாவி மக்களை சர்வதேச சமூகமும் கண்டு கொள்ளா மல் தங்களது மேலாதிக்கத்திலேயே குறியாக உள்ளது. புலிசார் அரசியலின் இராணுவ முக்கியத்துவத்திற்கான ஒரு பரப்பாக இலங்கை மாற்றப்பட்டுள்ளது.

9. மனிதசமூகத்திற்கு வரப்போகும் பேரவலங் களை சுட்டிக்காட்டும் ஒரு நிகழ்வாக இது மாறிவிட்டது. உலக அதிகாரம் மக்கள் சார்ந்த ஜனநாயகப் போராட்டங்களை, அதற்கான முன்னணிகளாக கட்டப்படும் இயக்கப் போராளிகளை அவர்களது இயக்கத்தை கொன்றொழிக்க ஒரு இராணுவ நுட்பத்தை கண்டடைவதற்கான சோதனையாக இப்போர் மாறி உள்ளது.

10. மனித அறம் பற்றிய அக்கறை உள்ள அரசு எதிர்ப்பு மற்றும் விடுதலை மீது நம்பிக்கைக் கொண்டவர்கள் ஒரு விடுதலைப் போராட்ட இயக்கத்தை எப்படி கட்டமைக்கக்கூடாது என்பதை கற்றுக் கொள்வதற்கான படிப்பினை களை இது வெளிப்படுத்தி உள்ளது. உலக வரலாற்றில் முதன்முறையாக ஒரு போராளி இயக்கம் தனது கடந்தகால மற்றும் அடிப் படை மக்கள் நலக் கருத்தியலற்ற நடவடிக்கை களால் இன்று தனது மக்களாலும், மற்ற உலக ஜனநாயக அமைப்புகளாலும் தனிமைப்படுத் தப்பட்ட நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறது.

11. இந்தியாவில் தனது சொந்த சாதிய முரண்பாடு களால் சிக்கித்தவிக்கும் தமிழ் தன்னிலை களில், அரசு அதிகாரத்தில் ஆதிக்கம் வகிக்கும் மேல்சாதி குறிப்பாக பார்ப்பனீயத் தன்னிலை கள் தங்களது மனிதநேயத்தையும் மீறி பழி உணர்ச்சியில் திளைப்பதை இது வெளிப் படுத்தி உள்ளது. அதே நேரத்தில் அ-பார்ப் பனிய மேல்சாதி சக்திகள் மீண்டும் தங்களை ஒருங்கிணைத்துக் கொள்ள ஒரு தளத்தை உருவாக்கி உள்ளது.

12. தமிழின் உன்னதம், வீரம், மறம் போன்ற சங்ககால இனநினைவு ஒன்று மீண்டும் முன்னணிக்கு வந்துள்ளது.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

13. 1967- இந்தி எதிர்ப்பு போராட்டத்தினால் கட்டமைக்கப்பட்ட தமிழ் இன உணர்வு என்பதும் மீண்டும் முன்னணி அரசியலுக்கான சொல்லாடல்களமாக வந்துள்ளது. இதனை ஒட்டி கட்டமைக்கப்பட்ட ஆரிய திராவிட முரண் என்பது மீண்டும் புதிய தலைமுறைக்கு நினைவூட்டப்பட்டுள்ளது.

புலிகள் தற்கொலை என்கிற நிபந்தனையுடன்தான் போராட்டத்தை துவக்கினார்கள். அச்சடங்கின் இறுதிநிலைக்கு இயக்கம் வந்துள்ளது. இராணுவ பலத்தில் மட்டுமின்றி மக்களிடமும் அவர்களது செல்வாக்கு சரிந்துவிட்ட நிலையே உள்ளது. இப்போதைய போர்நிறுத்த நடவடிக்கையும் மக்களை மீண்டும் வாழ்க்கைக்கு திருப்புவதும் மட்டுமே புலிகளை ஒட்டுமொத்தமாக மக்களி



டம் அந்நியப்படுத்தும் நடவடிக்கையாக அமையும். அதேநேரத்தில் சிங்கள இராணுவம் தொடர் போரினால் மனநோய்க்கொண்ட இராணுவமாக மாறிவிட்ட நிலையில் முற்றிலுமாக இராணுவம் பின்வாங்கி சிங்கள அரசு அதனை சீரமைப்பது அவசியம். சமீபத்தில் கொழும்பில் தங்களது உறவினரான இறந்த இராணுவத்தினர் உடலைக்கோரி சிங்கள மக்கள் பேரணி நடத்தி உள்ளனர். யாழ்பாணத்தில் தங்கள் உறவினரை விடுதலைப்புலிகள் விடுவிக்க வேண்டும் என்று கோரி தமிழர்கள் பேரணி நடத்தி உள்ளனர். இதுதான்நிலை. இந்த இரண்டு பேரணிகளும் ஒன்றாக நடத்தப்பட முடியாத நிலைதான் இதன் அடிப்படை சிக்கல்.

14. இலங்கை உலகமய-காலனியமாதல் என்கிற ஒரு புதிய சர்வதேச ஆதிக்க முறைக்கான சோதனைக்களனாக மாற்றப்பட்டுள்ளது.

ஆக.. இந்நிகழ்வுகள் படிக்க பல பாடங்களை ஒரு சமூகவிஞ்ஞான பார்வையாளர்களுக்கு தந்தாலும், இம்மக்களின் பிரச்சனைக்கு என்ன தீர்வு? அவர்களை எப்படி காப்பாற்றுவது என்பது கேள்விக்குறியாகி ஒரு தீர்க்க இயலாத குழப்பமான பிரச்சனையாக மாறி உள்ளது. இந்நிலையில் புலிகள் செய்த அரசியலற்ற இராணுவத்தனமும் பாசிச மனமும்தான் காரணம் என்று விமர்சித்துக் கொண்டிருப்பதோ அல்லது சிங்கள இராணுவத்தின் பாசிச போக்கை பற்றி கதைப்பதோ காரிய சாத்தியமான தீர்விற்கு வழியாகாது. இந்திய அரசின் துரோகத்தனத்தை அம்பலப்படுத்தவதும், சர்வதேசத்தின் மனசாட்சியை உலுக்கி அம்மக்கள் காப்பாற்றப்படுவதும் உடனடியாக செய்யப்பட வேண்டியது. புலிகள் தங்கள் இறுதி நிலையை அடைந்துள்ளனர். தனது கருத்தியல் மேல் நம்பிக்கை அற்றவர்கள் மட்டுமே காட்டிக்கொடுத்து விடக்கூடிய அச்சத்திற்கு ஆளாக நேரிடும். அதன் ஒரு விளைவே சாவைக் கோரும் சயனைட் குப்பி மாலைகள்.

கடந்த சில மாதகாலமாக கடுமையான போரில் எண்ணற்ற தமிழர்கள் கொல்லப்பட்டும், துரத்தப்பட்டும் ஒரு அவலநிலைக்கு ஆளாக்கப் பட்டபோது, தமிழகத்தில் எந்தவிதமான கொந்தளிப்பையும் அது ஏற்படுத்தவில்லை. தமிழக மக்களிடம் ஒரு நாடகத்தின் உச்சக் காட்சிக்காக காத்திருக்கும் உணர்வற்ற மரத்த நிலையே நிலவியது. ராஜிவ் கொலை மற்றும் புலிகள் குறித்து நிலவிய அதிருப்தி ஆகியன இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனநிலைக்கு ஒரு காரணம் எனலாம். பிறகு, கொந்தளிப்பான ஒரு நிலையை ஏற்படுத்த முத்துக்குமாரின் "உயிராயுதம்" தேவைப் பட்டுள்ளது. இன்று மக்கள் விழிப்புக் கொள்ளச் செய்வது என்பது இதுபோன்ற ஒரு மிகை நாடகத்தின் உச்சக்கட்ட விளைவுகளால் மட்டுமே சாத்தியம் என்கிற நிலை உருவாகி உள்ளது. இதன்பொருள் முத்துக்குமாரின் மரணத்தை நாடக மாக கருதுவது அல்ல, மாறாக, முத்துக்குமாரின் மரணம் அவர் முன்வைத்த தெளிவான அரசியல் பிரதியின் வழியாக, ஒரு உணர்வுப் பெருக்கத் தையும், மரணத்தின் காரணத்தையும் ஆழமாக மக்கள் மனதில் எழுதிச் சென்றுள்ளது என்பதே. இதையே முத்துக்குமார் மரணம் இல்லாமல் பிரதியாக எழுதி பரப்புரை செய்திருந்தால் இந்த கொந்தளிப்பை தமிழகத்தில் ஏற்படுத்தியிருக்க முடியாது என்பதுடன் அதை ஒரு அரசியல் பிரதியாகக் கருதக்கூட மக்கள் தயாராக மாட்டார் கள் என்பதும் இணைத்து சிந்திக்கத்தக்கது. முத்துக்குமார் தனது உடல் என்கிற வரைதோலில் நெருப்பால் எழுதிச்சென்ற பிரதி என்பதால்தான், அது தமிழக மக்களிடம் ஒரு பற்றிப் படர்ந்த போராட்ட மனநிலையை உருவாக்கியது.

ஆக, முத்துக்குமாரின் மரணம் எழுப்பும் பல கேள்விகளில் ஒன்று. தீர்விற்கான வழி என்ன? முத்துக்குமாரின் மரணநிலை என்பது இந்த தீர்க்க இயலாத முட்டுச் சந்தில் கொண்டுபோய் தமிழக மக்களையும், பலிகடாவாக தமிழீழ மக்களையும் நிறுத்தியதன் கையறுநிலைதான். உலக நாடுகள் இந்தப் போரை நிறுத்திவிட்டு புலிகளை தனி மைப்படுத்த முனைவதோ அல்லது தமிழீழ மக்களிற்கு ஒரு பாதுகாப்பான வாழ்வை உத்திர வாதப்படுத்துவதன் மூலம், புலிகளை மக்களிட மிருந்து கருத்தியல்ரீதியாக அந்நியப்படுத்த முனைவதோ தான் இப்பிரச்சனைக்கான உடனடி தீர்வாக அமையும். அதைவிட்டு இராணுவ ரீதியான தீர்வு என போர் செய்வது அனைத்து மனித அறத்திற்கும் எதிரானது. இராணுவரீதியான மற்றும் அரசியல்ரீதியான தீர்விற்கு முன்பாக மனிதநேயரீதியான தீர்வு இன்று அடிப்படை தீர்வாக உள்ளது என்பதை புரிந்துகொள்வது அவசியம். அதை புரிந்துகொள்வதற்கான ஒரு அடையாள-அரசியலற்ற மனநிலையே இன்றைய தேவை என்பதை வரலாறு மீண்டும் சொல்லிக் காட்டியுள்ளது.

▣

கவிதை

கல்லூரன்



# மௌனங்களுக்கு அப்பால்...

எழுத முடியாதபடி
பேச முடியாதபடி இருக்கிறது
என் துயரம் ஒரு இனிய மொழியில்,
தண்ணீர் நிரம்பிய
அக்கண்ணாடிக் குவளைக்குள்...
மௌனங்களுக்கு அப்பாலும்
நான் வெகு தூரம்
எடுத்துச் சென்றுவிட்டேன்,
யாரும் காணாதபடி...
வாழ்வை வெட்டிச் சிதைத்து
வெறும் கற்சுவர் அறைக்குள் திணிக்கும்
உன் பாய போதனையில்
நான் ஒரு வெற்று மனிதனே.
எல்லையற்ற இப்பெருவாழ்வை
அளந்து கொள்ள யாரடி தந்தது
உனக்கும் ஒரு அகப்பையை
அவ்வப்பொழுது
மேகங்கள் கொணருமடி,
எனக்கான சில பாடல்களை...
ஆழ்கடலுக்குள் இழுத்துச் சென்று
புசித்து மகிழ்வேன்
ஒரு சிறு கை விளக்குடன்
எப்போதாவது அந்த ஒற்றை நிலவுடன்
என் கல்லறையிலும்
ஒரு புல் முளைக்காமலா போய்விடும்
இரவுகள் கலைந்துதானே
ஆக வேண்டும்
ஒவ்வொரு அதிகாலைச் சூரியனுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இத்தாலியன் குடுமி சும்மா ஆடாது

கலையரசன்



**இத்தாலியின் அனுபவத்தில் இருந்து நாம் பாடம் கற்றுக் கொண்டால், இலங்கை தொடர்பான ஐரோப்பிய ஒன்றிய நிலைப்பாட்டை புரிந்து கொள்வது எளிது. எண்பதுகளுக்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளிற்கு வந்த, இன்னும் வந்து கொண்டிருக்கும் இலங்கை அகதிகள் தொகை அதிகரித்து வந்துள்ளது. அதிகளவான அகதிகள் வரும் நாடுகளில் இலங்கையும் அடங்குகின்றது. ஒரு காலத்தில் அதிகளவில் வந்து குவிந்து கொண்டிருந்த ஈராக், பொஸ்னிய, ஆப்கானிய அகதிகளின் வருகையை கட்டுப்படுத்துவதற்காக; ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு குறிப்பிட்ட நாடுகளின் பிரச்சினைகளை ஒரு முடிவுக்கு கொண்டு வர ஆற்றிய பங்கைப் பற்றி நிறைய எழுதலாம்.**

கடந்த வருடம், உலகில் இதற்கு முன்னர் நடைபெறாத அதிசயம் ஒன்று நடந்தது. இத்தாலி தனது காலனியாதிக்க ஆக்கிரமிப்பிற்கு நஷ்ட ஈடாக, லிபியாவிற்கு 5 பில்லியன் டாலர் வழங்கியது. லிபிய மாணவர்களுக்கு இத்தாலியில் உயர்கல்வி பெறுவதற்கு புலமைப்பரிசில் திட்டம் ஒன்றையும் கூடவே அறிவித்தது. அகமகிழ்ந்த லிபிய தலைவர் கடாபியும் ஒகஸ்ட் 30 ம் திகதியை, இத்தாலி-லிபிய நட்புறவு நாளாக அறிவித்தார். இத்தாலி லிபியாவை முதலாம் உலகப்போருக்கும், இரண்டாம் உலகப் போருக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆக்கிரமித்து பல அழிவுகளை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மேலெழுந்தவாரியாக பார்க்கும் போது, முன்னாள் ஐரோப்பிய காலனியாதிக்க நாடான இத்தாலி, மனம்திருந்திவிட்டதாக தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல. இத்தாலி அதே கால கட்டத்தில், எத்தியோப்பியாவையும், சோமாலியாவின் பகுதியையும் அடிமைப்படுத்தி வைத்திருந்தது. ஆனால் இந்த நாடுகளுக்கு ஒரு சதமேனும் நட்டஈடு வழங்கவில்லை. கடாபியின் இராஜதந்திரம், லிபியாவின் எண்ணெய் வளம் இவையெல்லாம் இத்தாலியை நட்டஈடு வழங்க நிர்ப்பந்தித்தது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அதையெல்லாம் விட, இத்தாலிக்கு இன்று தலையிடியாக இருக்கும் பிரச்சினை ஒன்றை தீர்ப்பதற்காகத் தான், நட்டஈடு நாடக மாடியது.

இத்தாலி ஐரோப்பிய யூனியனை சேர்ந்த நாடு, ஐரோப்பாக் கண்டத்தின் தெற்குப்பகுதியில், மத்திய தரைக்கடலில் அதன் அமைவிடம் காரணமாக ஆசியா, ஆப்பிரிக்க கண்டங்களில் இருந்து இலகுவாக வரக்கூடியதாக உள்ளது. இதனால் சில நூறு கடல்மைல் தூரத்தில் உள்ள, ஆப்பிரிக்க கண்ட நாடான லிபியாவில் இருந்து, பெருமளவு அகதிகள் வள்ளங்கள் மூலம் இத்தாலிக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான அகதிகள் வந்து குவிகின்றனர். இவர்கள் பெரும்பாலும் ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருந்த போதும், கணிசமான அளவு பாகிஸ்தானிய, இலங்கை அகதிகளும் வருகின்றனர்.

தொண்ணூறுகளில் லிபியா மீதான சர்வதேச பொருளாதாரத் தடை காரணமாக, கடாபி ஆப்பிரிக்க நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வந்தார். இதனால் ஆப்பிரிக்க பகுதி எல்லைகள் தளர்த்தப்பட்டதால், ஒரு தொகை ஆப்பிரிக்கர்கள் தனிநபர் வருமானம் அதிகமாகவுள்ள லிபியாக்கு வேலை தேடி வந்தனர். பல்லாயிரக்கணக்கான ஆப்பிரிக்கர்கள், ஐரோப்பா செல்வதற்கு இடைத்தங்கல் நாடாக பயன்படுத்தினர். இதனால் 5 மில்லியன் லிபிய பிரசைகளைக் கொண்ட நாடு, மிகச் சிறிய காலத்தினுள் 2 மில்லியன் (ஆப்பிரிக்க) குடிவரவாளர்களை சேர்த்துக் கொள்ள வேண்டி ஏற்பட்டது.

இனவிகிதாசார சமன்பாடு குழம்பியதன் காரணமாக, லிபிய சமூகத்திற்குள் ஏற்பட்ட முறுகல் நிலை, ஆப்பிரிக்கர்களுக்கு எதிரான இனவெறி கலவரத்தில் கொண்டு போய் விட்டது. ஆப்பிரிக்க தொழிலாளரின் முகாம்கள் லிபிய காடையரினால் தீக்கிரையாக்கப்பட்டன. 2000 ம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தில் சாட், நைஜீரிய நாடுகளைச் சேர்ந்த 500க்கும் அதிகமான குடிவரவாளர்கள் கொல்லப்பட்டனர். லிபிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொலிஸ் வேடிக்கை பார்த்தது, கலவரத்தை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. நிலைமையை இன்னும் மோசமாக்கும் வகையில், லிபிய அரசு அதிகாரிகள், 14000 ஆப்பிரிக்கர்களை நாடு கடத்த ஆரம்பித்தது. ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று பாராது, அனைவரையும் டிரக் வண்டிகளில் ஏற்றி, எல்லை யைக் கடந்து பாலைவனத்தில் கொண்டு போய் கொட்டி விட்டு வந்தனர். அரசின் மனிதாபி மானமற்ற நாடுகடத்தலின் போது, ஆயிரத் திற்கும் அதிகமானோர் கொல்லப் பட்டனர்.

லிபிய அரச ஆசீர்வாதம் பெற்ற இனக்கலவர மும், இனச்சுத்திகரிப்பு நாடுகடத்தலும், ஏதோ லிபிய அரசின் உள்வீட்டு பிரச்சினை என்று நினைக்க வேண்டாம். அப்படி இருப்பின், அன்று மேற்குலக எதிரியான கடாபியின் அரசை குற்றவாளியாக காட்டுவதற்கு இது தான் தருணம் என்று மேலைத்தேய ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டிருக்கும். இந்தக் கட்டுரையை வாசிக்கும் பலர் இப்போது தான் முதன்முதலாக கேள்விப்படுமளவிற்கு, சர்வதேச ஊடகங்கள் அந்த செய்தியை வெளி உலகம் அறியவிடாது இருட்டடிப்பு செய்திருந்தன. அதற்கு காரணம், இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை யில் ஒரு மேற்கு ஐரோப்பிய நாடான இத்தாலியின் பங்கு.

2003 ம் ஆண்டிற்கும், 2006 ம் ஆண்டிற்கும் இடையில், சுமார் இரண்டு லட்சம் ஆப்பிரிக் கர்கள் விமானம் மூலம் நாடுகடத்தப்பட்டனர். இதற்கு நிறைய செலவாகியது. இந்த செலவை இத்தாலி பொறுப்பெடுத்துக் கொண்டது. மொத்தம் 47 Air Lybia விமானங்கள், இத்தாலி யினால் வாடகைக்கு அமர்த்தப்பட்டன. இவ் வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்களுள் எரித்திரியாவை சேர்ந்த, இராணுவத்தில் இருந்து தப்பியோடிய அகதிகள் பலரின் நிலை கவலைக் கிடமானது. எரித்திரிய அரசு அவர்களை பொறுப் பெடுத்து, இராணுவத்தை விட்டோடியதன் தண்டனையாக சுட்டுக்கொலை செய்து விட்ட தாக, சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்தது. மனிதாபிமானம் பேசும் இத்தாலிக்கும், மேற்கு ஐரோப்பாவிற்கும் இந்த விடயங்கள் தெரியாம லில்லை.

நாடுகடத்தலை எதிர்நோக்கி அறுபதாயிரம் குடிவரவாளர்கள், லிபிய பாலைவனத்தில் கட்டப்பட்டுள்ள 20 முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். அங்கே அவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில், மாதக்கணக்காக அல்லது வருடக்கணக்காக சிறை வைக்கப் பட்டுள்ளனர். எந்தக் குற்றமும் செய்யாத "கைதிகள்" பாதுகாவலரின் வன்முறைக்கு இலக்காவதும், பெண்கள் பாலியல் தொல்லைக் குள்ளாவதும் வழமையான நிகழ்வுகள். சிறை முகாம்களில் உணவுப்பற்றாக்குறை நிலவுகிறது. இத்தாலிக்கு அகதிகளாக சென்று பிடிபட்டு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் பலர் இங்கே அடைக்கப்பட்டுள்ளனர். இந்த சிறை முகாம் களை பராமரிக்க நிதி உதவி வழங்குவது யார்? இத்தாலியைத் தவிர வேறு யார்?

இத்தாலியில் வலதுசாரி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், வெளிநாட்டவருக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் படு கின்றன. முன்னாள் பாஸிச சர்வாதிகாரி முசோலினியின், கொள்கைகளை பகிரங்கமாகவே பின்பற்றும் "லீகா நோர்ட்" வட பகுதி இத்தாலி யில், அதிக வாக்குகளைப் பெற்று, தற்போது ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றது. இவர்களது ஆட்சியில் மிலான் நகர பெரிய மசூதி பூட்டப்பட்டு, தொழுகை நடத்தும் முஸ்லிம்கள் விளையாட்டு மைதானத்திற்கு செல்ல நிர்ப்பந் திக்கப்பட்டார்கள். தற்போது பொது இடங்களில் தொழுகை நடத்துவதை சட்டம் போட்டு தடுக்க முயன்று வருகின்றனர். இது மேலெழுந்த வாரியாக பார்க்கும் போது, முஸ்லீம்களை மட்டுமே தாக்குவதாக தெரிந்தாலும், கத்தோலிக்க கிறிஸ்தவத்தை சேராத இந்து, புத்த வழி பாட்டாளருக்கும் எதிர்காலத்தில் இது தான் விதி. உலகில் வேறெங்கும் இல்லாதவாறு, இனவாத சட்டம் நாம் உண்ணும் சாப்பாட்டிலும் புகுந் துள்ளது. இத்தாலியில் இருக்கும் உணவுவிடுதிகள் இனிமேல் இத்தாலிய சாப்பாட்டு வகை தான் பரிமாற்ற வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

ரோம் நகர நடுத்தர வயது பெண்மணி ஒருவர், ருமேனிய நாட்டை சேர்ந்த ஜிப்சி இன கிரிமினல்களால் கொடூரமாக கொலை செய்த சம்பவம் தேசத்தை உலுக்கியது. இது போன்ற சம்பவத்தை எதிர்பார்த்து காத்திருந்த தீவிர வலதுசாரிக் கட்சிகள், இத்தாலிய மக்களை ஜிப்சிகளுக்கு எதிராக கிளர்ந்தெழ வைத்தன. தொடர்ந்து இத்தாலிய பொலிஸ், ஆயிரக் கணக்கான ருமேனிய ஜிப்சிகளை சுற்றிவளைத்துப் பிடித்து நாடுகடத்தியது. ஜிப்சி அல்லது ரோமா என அழைக்கப்படும் இந்த நாடோடி இன மக்கள், ருமேனியாவில் மிகவும் ஏழ்மையான நிலையில் வசிப்பவர்கள். ஐரோப்பிய ஒன்றியத்தில்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருமேனியா சேர்ந்ததன் பின்னர் கிடைத்த சலுகையை பயன்படுத்தி, பெருமளவில் இத்தாலியில் குடியேறினர். ஐரோப்பிய ஒன்றிய சட்டப்படி, ஒரு ஐரோப்பிய உறுப்பு நாட்டு பிரசை, தான் விரும்பிய எந்த நாட்டிலும் போய் இருக்கக்கூடியதாக, அங்கத்துவ நாடுகளுக்கிடையில் சுதந்திர போக்குவரத்து இருக்க வேண்டும். ஆனால் அந்த சட்டத்தை இத்தாலி காலில் போட்டு மிதித்ததைப் பற்றி, இதுவரை எந்த நாடும் கண்டனம் தெரிவிக்கவில்லை. இந்த சட்டம் எல்லாம் ஏட்டில் மட்டும் தான். நடைமுறையில் பணக்காரர்களுக்கு தான் அது செல்லுபடியாகும். ஏழைகளையும், அகதிகளையும் யார் கவனிக்கப் போகிறார்கள்? இருந்தாலும் ஐரோப்பிய ஜனநாயகத்தை யாரும் குறை சொல்லக் கூடாதப்பா.

இத்தாலியின் அனுபவத்தில் இருந்து நாம் பாடம் கற்றுக் கொண்டால், இலங்கை தொடர்பான ஐரோப்பிய ஒன்றிய நிலைப்பாட்டை புரிந்து கொள்வது எளிது. எண்பதுகளுக்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளிற்கு வந்த, இன்னும் வந்து கொண்டிருக்கும் இலங்கை அகதிகள் தொகை அதிகரித்து வந்துள்ளது. அதிகளவான அகதிகள் வரும் நாடுகளில் இலங்கையும் அடங்குகின்றது. ஒரு காலத்தில் அதிகளவில் வந்து குவிந்து கொண்டிருந்த ஈராக், பொஸ்னிய, ஆப்கானிய அகதிகளின் வருகையை கட்டுப்படுத்துவதற்காக; ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு குறிப்பிட்ட நாடுகளின் பிரச்சினைகளை ஒரு முடிவுக்கு கொண்டு வர ஆற்றிய பங்கைப் பற்றி நிறைய எழுதலாம்.

இன்று பல ஐரோப்பிய நாடுகளின் படைகள், பிரச்சினைக்குரிய நாடுகளில் நிலை கொண்டிருக்கும் வேளை, அகதிகளின் வருகை குறைந்துள்ளது. அது போலவே இலங்கையில் பேச்சுவார்த்தை மூலம் ஒரு தீர்வை எட்டுவதற்கு, நோர்வே தலைமையிலான இணைத்தலைமை நாடுகள் முயன்றன. அந்த முயற்சியில் தோல்வியடைந்தாலும், இலங்கையின் பிரச்சினையை ஏதாவதொரு வகையில் தீர்வுக்கு (அது உங்களுக்கு ஏற்புடையதா இல்லையா என்பது பற்றி யாரும் கவலைப்படவில்லை) கொண்டுவந்து, அகதிகள் வருகையை கட்டுப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து அவை மாறவில்லை. ஐரோப்பியர்கள் இதுவரை எந்த ஒரு நாட்டிலும் மனிதாபிமான காரணங்களுக்காக தலையிடவில்லை. மாறாக ஐரோப்பிய நலன்கள் மட்டுமே எப்போதும் முதன்மைப்படுத்தப்பட்டன. ▣

**கவிதை**

## மருதமுனை விஜிலி



# அந்நியம்

நிம்மதிப் புள்ளியினை
ரசித்தல் கொள்வதற்கான முனைவில்
நிதமும் அங்கலாய்த்து
சுழல்கிறது மனசு!

போர் முகங்களுக்குள்
காலங் கடத்துதலில்
அந்நியப்படுகிற உணர்வுகளே
இன்னும் மையங்கொண்டு!

உறுத்துதலுக்குள் புதையுண்டழியும்
இருப்போடு
இருப்பின் சுய வாழ்வியலுக்கான
காத்திருப்பென்பது
கடிவாளமிடப்பட்ட
கனவொன்றைப் போலாயிற்று!

பெரும் பிரயத்தனங்களோடு
முன்னெடுப்புக்கள் நகர்ந்திடினும்
உயிர்கள் காவுகொள்ளலென்பது
இன்னும் மாபெரிய கீறலாய்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பெரிய மரைக்கார் சின்ன மரைக்கார் தனிவரைவா? இனவரைவா?



## சாய்மனை எழுத்துக்கு மிகச் சிறந்த உதாரணம்

**எம்.ஐ.எம். றவூப்**

இரண்டாயிரத்து எட்டாமாண்டு நவம்பர் மாதம் 8ம், 9ம் திகதிகளில் கிழக்கு மாகாண சபையின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கல்முனையில் நடாத்தி முடிக்கப்பட்ட இலக்கியப் பெரு விழாவின் ஆய்வரங்கில், கிழக்கு மாகாணத்தின் நாவல் இலக்கியம் பற்றி ஆய்வுரை செய்வாரென்று அழைப்பிதழின் நிகழ்ச்சி நிரலில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த எழுத்தாளர் எஸ்.எல்.எம். ஹனிபா அவர்களை 07.11.2008ம் திகதி இரவு நான் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடிய போது பின் வருமாறு அவர் கூறினார்.

"ஜோன் ராஜனின் 'போடியார் மாப்பிள்ளை', வை. அஹ்மதின் 'புதிய தலைமுறைகள்', விமல் குழந்தைவேலின் 'வெள்ளாவி' என்பவைகளைத் தவிர குறிப்பிட்டுச் சொல்லும்படியான நாவல்கள் எதுவும் கிழக்கிலங்கையில் எழுதப்படவில்லை. வேண்டுமானால் ஜுனைதா சரீபின் 'பெரிய 'மரைக்கார் சின்னமரைக்கார்' ரையும் சேர்த்துக் கொள்ளலாம்'' என்றார்.

பட்டியலிடுவதற்கான இலக்கிய நியாயங்களை முன்வைக்கத் தவறிவிடுகின்றன என்ற காரணத்துக்காக, பெயர்களைப் பட்டியலிடுவதுடன் மட்டுப் பட்டுவிடும் கருத்துரையை, குறைபாடான ஒரு கருத்துவைப்பு முறையாகவே இன்றுவரை விமர்சிக்கப்பட்டு வருகின்ற போதிலும் மேற்படி எஸ்.எல்.எம். ஹனிபாவின் பட்டியலின் தொடக்கமாக வ.இ. இராசரத்தினத்தின் 'கொழு கொம்பு' வையும், சண்முகம் சிவலிங்கத்தின் 'நாலாண்டுகளை'யும் சேர்த்துக் கொள்ளலாம் என்பது என் திடமான கருத்தாகும்.

மேற்படி பட்டியலில் சொல்லப்பட்ட புனை பிரதிகளை நுணுக்கமாக வாசிப்புச் செய்யும் வாசகன் ஒருவன், பலவிதமான இலக்கிய அனுபவங்களையும், கலாசாரத் தன்மைகளையும் நிச்சயமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

கடலும் கடல் சார்ந்த களப்பும் நதியும் நதி சார்ந்த கழிமுகமுமான ஒரு நீர்க்கரை நாகரீகத்தை அணுக்கமாகக் கெண்ட ஒரு மக்கள் கூட்டமொன்று இயற்கையைக் கையகப்படுத்தி, அதனை மாற்றியமைத்து, அபிவிருத்தி செய்து ஆதி பத்தியம் செய்து கொண்ட ஒரு நிலஉருவாக்கத்தினை இப்புனைவுகளிலிருந்து கண்டு கொள்ளலாம். சிறப்பாகக் கிழக்கிலங்கையினை நிலக் குறியாகக் கொண்ட தமிழ் பேசும் மக்களின் பல நூற்றாண்டுகால வாழ்க்கை வரலாற்றினை இப்புனைவுகளில் தோண்டி எடுக்கலாம். கிழக்கிலங்கையின் நிலக் குறிக்குள் வேறுபடும் வெவ்வேறு புனைகளங்களை தரிசித்தனுபவிக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொட்டியராக் கடலோரமும், மகாவலி ஆற்றுப்படுக்கையின் விவசாய வாழ்வும் வ.அ. இராசரத்தினத்தின் ‘கொழுகொம்பில்’ காணக் கிடைக்கின்றது என்றால் கல்லோயா ஆற்றுப் படுக்கையின் விஸ்தரிப்பு விவசாய வாழ்வை விமல் குழந்தைவேலின் ‘வெள்ளாவி’ சொல்ல முனைந்துள்ளது என்று கொள்ளலாம்.

கடலேரியை நிலக்குறியாகக் கொண்ட மட்டக் களப்பு தமிழகத்தின் விவசாய வாழ்வை ஜோன் ராஜனின் ‘போடியார் மாப்பிள்ளை’ சொல்ல விளைகின்றது என்று சொன்னால், தமிழ் பேசும் மக்கள் கூட்டத்தினரில், ஒரு பகுதியினரான முஸ்லிம்களின் வாழ்வை வை. அஹ்மதின் ‘புதிய தலைமுறைகள்’ எடுத்துச் சொல்கிறது எனலாம்.

பொதுச் சராசரி எழுத்துப் பொறிமுறையின் வாசிப்பனுபவத்தைக் கடந்து, பேச்சு மொழியிலான வாசிப்பனுபவத்தை இலக்கிய அழகியலாக்கிய பிரதி என்று வெள்ளாவியைச் சொன்னால், ஈழத்து தமிழிலக்கியத்தின் நவீனகால இலக்கிய அழகிய லுக்கு மிகச்சிறந்த உதாரணமாக சண்முகம் சிவலிங்கத்தின் ‘நாலாண்டு’களைச் சொல்லலாம்.

மட்டக்களப்பு கடலேரி வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ள முக்குலத்தவர்களின் மானத்தை கடற் கொள்ளையர்களிடமிருந்து காப்பாற்றி மானங் காத்தவர்களின் பூர்வீகத்தை ஜுனைதா செரீபின் ‘பெரிய மரைக்கார் சின்னமரைக்கார்’-ல் நாம் தேடிக் கண்டு கொள்ள முயற்சிக்கலாம்.

கூட்டு மொத்தத்தில் கிழக்கின் பண்பாட்டு வாழ்க்கையை வெட்டுமுகம் செய்து பார்ப்பதற்கு வாய்ப்பளிக்கின்ற, ஈழத்துத் தமிழ் இலக்கியத் திற்கு நிறையவே இலக்கிய அழகியல் பங்களிப்புச் செய்கின்ற பிரதிகள் உண்டென்று இப்பட்டியலைச் சொல்லலாமா? சொல்லலாம்.

எனவே இப்பட்டியலில் கூறப்பட்ட புனை பிரதிகளை தனித்தும், ஒருமித்தும் வாசிப்பதன் ஊடாக அளவுகளில் வித்தியாசப்படுகின்ற பிரதிக்குள் வேறுபடும் குரல்களையும், பிரதிகளுக் கிடையில் வேறுபடும் குரல்களையும் ஒரு வாசகனால் கண்டுகொள்ள முடியும்.


விமல் குழந்தைவேலின் வெள்ளாவியைப் பற்றிய எனது மதிப்பீடு மூன்றாவது மனிதன் இதழில் வெளியான பிற்பாடு நேரடியாகவும், தொலைபேசியிலும் இலக்கிய ஆர்வலர்கள் தந்த உற்சாகம் ஜுனைதா செரீபின் பெரிய மரைக்கார் சின்ன மரைக்காரைப் பற்றி எழுதும்படி என்னைத் தூண்டியிருந்த போதிலும் அப்போது அது சாத்தியப்படவில்லை.

ஆனால் இலங்கையின் இன முரண்பாடு முக்கோணவரைநிலையை அடைந்துள்ள இன்றைய சமகாலத்தில், ஈழத்து தமிழ் இலக்கிய பரப்புக்குள் முஸ்லிம் தேச இலக்கியம் என்றொரு கதையாடல் பேசுபொருளாக வந்துவிட்ட இந்த நேரத்தில், அழகியல் ஆய்வுக்கு அப்பால் இலக்கியத்தில் காலாச்சார ஆய்வினை நிகழ்த்த வேண்டியது மிக மிக அவசியமானதாகும்.

ஈழத்துத் தமிழ் இலக்கியத்தினைப் பொறுத்த மட்டில் கலாச்சார ஆய்வுக்குட்படுத்த வேண்டிய எழுத்துக்களும், எழுத்தாளர்களும் நிறையவே இருக்கிறார்கள் எனலாம். குறிப்பாக இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு அக்கோட்பாட்டுக்கான அர்ப்பண எழுத்துக்களை எழுதியவர்களின் எழுத்துக்கள் கலாச்சார ஆய்வின் பாற்பட்டவைகள் என்பது என் கருத்தாகும். எனவே இனிமேலாவது அ.ஸ. அப்துல் ஸமது, எஸ். முத்துமீரான், ஜுனைதா செரீப் போன்றவர் களின் எழுத்துக்களைப் பற்றிப் பேசாமல் விடுவது பல இலக்கிய விபத்துக்களுக்கு இடமளித்து விடலாம்.

ஜுனைதா செரீப் அவர்கள் சொல்லுவது போன்று எமது பல்கலைக்கழகங்களில் எழுத்துக் களைப் பற்றிய கற்கைச் செயற்பாடுகள் எல்லாம் இலக்கிய விபத்துக்களே தான். பல்கலைக் கழகங்களில் ஆய்வு மாணவர்களை வழி நடாத்தும், மேற்பார்வை செய்யும் முறைமை யியல்களின் காலங்கடந்த தன்மை, எம் சூழலுக்குப் பொருந்திவராத ஒவ்வாத்தன்மை என்பன இத்தகைய இலக்கிய விபத்துக்களை உருவாக்கக் காரணமாக அமைந்துவிடுகின்றன எனலாம்.

எண்ணிக்கையில் அதிகமான எழுத்துப் பிரதிகளை எழுதியவர்களான, இஸ்லாமியர்களின் வாழ்க்கையினை எழுதியவர்களான அ.ஸ. ஜுனைதா செரீப் போன்றவர்களின் எழுத்துக்களை நிராகரிக்கப்பட்ட எழுத்துக்களாகவே ஈழத்து










தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நவீன இலக்கிய மனோபாவம் இன்று வரை கருதிவருகின்றது. இந்த நிராகரிப்பினை நியாயப் படுத்துவதற்குத் தோதான அளவுகோல்களாக நவீன காலத்தின் இலக்கிய அழகியலையும், நுணுக்கமான வாசிப்பையும் இம்மனோபாவம் கொண்டிருந்தது. மரபான கதை சொல்லும் முறையினை மீறிய, கதை சொல்லியின் மொழிதலில் விரியும் கதை அலகுகளும், உருவத்தைத் திரித்த புனைநுட்பமும் இம்மனோ பாவத்திற்குத் துணைநின்றன.

**ஈழத்தின் நவீன இலக்கிய மனோபாவம் சொல்லுவது போலவே, கதை சொல்லியின் மொழிதலில் விரியும் கதை அலகுகள் அரிதாகவும், கதை மாந்தர்களின் உரையாடல்களில் விரியும் கதை அலகுகள் அதிகமாகவும் காணப்படும் புனைபிரதிகள் பெரும்பாலும் பொதுச் சராசரி வாசகனை கவர்ந்துவிடத் தவறிவிடுகின்றன தான். பொதுச் சராசரி வாசிப்புக்கு ஊறு செய்யும் எழுத்து முறையாக மரபுச் சொற்கள், வட்டாரச் சொற்கள், பேச்சு வழக்கு என்பன அமைந்தும் விடுகின்றனதான்.**

**என்றாலும் நெருடலற்ற கன கச்சிதமான உரை யாடல்கள், புனைகளத்துடன் சுவறிக் கலந்த மரபுச் சொற்கள், வட்டாரச் சொற்கள், பேச்சு வழக்கு மொழிதல் என்பவைகள் மூலம் புனை பிரதிகளில் வியப்புறு கதைக் கணங்களை நிகழ்த்திவிட முடியும் என்பதற்கு ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்புக்குள்ளிருந்தே நிறைய உதாரணங்களைச் சொல்ல முடியும்.**

அத்தகைய கதைக் கணங்கள், புனை தருணங்கள் ஜுனைதா செரீபின் பெரிய மரைக்கார் சின்ன மரைக்கார் புனைபிரதியில் இல்லைதான் என்றபோதும், நிராகரிக்கப்பட்ட எழுத்து வகைக்குள் இப்பிரதியை அடக்க முடியாது என்பது எனது கருத்தாகும்.

இதுவரை எழுபது நாவல்கள், எண்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகள், சுமார் நூற்றிஐம்பது வானொலி நாடகங்கள் என நிறைய எழுதியவரும் தனது இலக்கியச் செயற்பாடுகளுக்காக பல சாகித்திய விருதுகளையும், பரிசில்களையும், பட்டங்களையும் பெற்றவரான ஜுனைதா செரீப் அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் வாழ்ந்த கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ள தனது சாணைக்கூறை நாவலைப் படிக்கலாம் என்றும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ள தனது பெரிய மரைக்கார் சின்ன மரைக்கார் நாவலைப் படிக்கலாம் என்றும் கூறுகிறார்.

மேலும், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நூறு வருடங்களுக்கு முந்திய வாழ்க்கையை நாவலாக எழுதுவதற்கு அவர்களின் அப்போதைய கலாச்சாரம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், பேச்சு முறை, ஈடுபட்ட வர்த்தகம், விவசாயம், போக்குவரத்து, கல்வி, விழா நிகழ்ச்சிகள், அணிந்த உடுப்புகள், ஆபரணங்கள் எனப் பலதையும் தான் ஆய்வு செய்ததாகவும், அவ்வாய்வின் போது கிழக்கிலங்கையின் பல கிராமங்களிலும் வாழ்ந்து கொண்டிருந்த பல வயதான பெரியோர்களைச் சந்தித்ததாகவும், அவர்களோடு உரையாடி, அளவளாவி தேவை யான தகவல்களைப் பெற்றுக்கொண்டதாகவும், கதைக்கான கருவுக்காகவும், நிகழ்வுகளைக் கோர்வைப் படுத்துவதற்காகவும் தனக்கு மிக நீண்ட காலம் தேவைப்பட்டதாகவும் ஜுனைதா செரீப் அவர்கள் தன்னுரையில் கூறுகின்றார்.

இக்கூற்றுக்கள் ஈழத்தில் தமிழ் பேசும் மக்கள் பெருந்திரளின் மறு பகுதியினரான கிழக் கிலங்கை மக்களினது பண்பாட்டினை, அப் பாண்பாட்டின் முக்கிய அம்சங்களை எழுத்து வடிவில் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு இன வரைவியல் போன்று தன் எழுத்துக்கள் இருப்ப தாக ஜுனைதா செரீப் அவர்கள் அறிக்கையிடுவது போன்று தோன்றுகின்றது.

உண்மையில் ஜுனைதா செரீபின் இவ்வெழுத் துப் பிரதியானது இனவரைவியல் எழுத்து வகையினைச் சேர்ந்ததுவா? களப்பணி அனுபவங் களையும், பண்பாட்டு அம்சங்களையும் ஒன்றிணைக்கக் கூடிய எழுத்து வல்லமை ஜுனைதா செரீபிடம் கைவரப் பெற்றுள்ளதா? இப்பிரதியில் கிழக்கு முஸ்லிம்களின் பண் பாட்டுத் தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளனவா? தகவல்களின் தொகுப்பு, தரவு நிலைப்படுத்தப் பட்ட வாதமுறையாக எழுதப்பட்டிருக்கின் றனவா? களப்பணியாளனின் காலத்தின் மீதான அக்கறை, ஈடுபாடு, தரவுகளைத் தகவல்களை வைத்துக்கொண்டு நிகழ்வுகளை உற்றுநோக்கும் கூர்மை, ஆய்வறிக்கை தயாரிக்கும் வினைத்திறன் என்பவைகள் ஜுனைதா செரீபின் எழுத்தில் கூடி வந்துள்ளனவா?

இக்கேள்விகள் அனைத்துக்கும் ஒரே பதிலாக இல்லை என்று கூறிவிடலாம். இவரிடம் மட்டுமல்ல இவரைப்போன்று, முஸ்லிம்களின் வாழ்க்கையை எழுதுகிறோம் எனச் சொல்லிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு இலக்கியம் படைக்கும் கிழக்கின் ஒரு பெருந்தொகை இலக்கியச் செயற்பாட்டாளர்களின் எழுத்துக்களிலும், முஸ்லிம் தேச இலக்கியம் எனச் சொல்லிக்கொண்டு அவ்விலக்கியத்திற்கு உதாரணங்களாக புனைவுகள் எழுதிக் கொண்டிருக்கிறோம் என்பவர்களது எழுத்துக்களிலும் மேற்படி கேள்விகளுக்கான பதிலாக இல்லை என்றே சொல்லிவிடலாம்.

ஜுனைதா செரீப் அவர்கள் தான் பெற்ற தகவல்களை ஆய்வலசலின்றி இரண்டாம் நிலைத் தரவுகளாக வைத்துக் கொண்டு ஒரு நாவல் எழுதுவதாக நினைத்துக்கொண்டு பெரிய மரைக்கார் சின்ன மரைக்காரை எழுதியிருக்கின்றார். எவ்விதமான இலக்கிய அழகியலுமற்ற, கோட்பாட்டுத் திறனாய்வு முறை சாராத, களப்பணி அனுபவங்களை அல்லது தனது வாழ்பனுபவங்களை வெளிப்படுத்தும் புலப்பாட்டு முறையிலல்லாத சாய்வு நாற்காலி எழுத்து வடிவமாக இப்பிரதியினை எழுதியிருக்கின்றார். இவரிடம் மட்டுமல்ல இவரைப்போன்று பெரும் இலக்கியச் செயற்பாட்டாளர்கள் என மற்றவர்களால் கணிக்கப்பட்டிருப்பவர்கள் தொடங்கி, இன்றைய பயில்நிலை இலக்கியச் செயற்பாட்டாளர்களிடமும் சாய்வு நாற்காலி எழுத்து முறையே காணப்படுகின்றது.

சிந்திப்பதற்கும், எழுதுவதற்கும் சாய்மனை இருப்பு உதவக்கூடியதுதான், அதற்காகத் தன்னை ஒரு வரகவியாக நினைத்துக்கொண்டு, தான் கருவிலேயே திருவுற்றவன் எனச் சொல்லிக் கொண்டு, உண்மை இலக்கியகாரன் என உன்னதம் பேசிக்கொண்டு, உண்மை இலக்கியகாரன் வாழும் உலகம் சுவையானது, மணம் வீசுவது என இலக்கியப் பிரகடனங்கள் எழுதிக் கொண்டிருப்பதெல்லாம் கூட சாய்மணைப் பேச்சுக்கள்தான். மனித நாகரீகத்தினது மக்கள் பண்பாட்டினது சமூக அசைவியக்கத்தை எழுதப் புகும் எழுத்தாளன் ஒருவன் நிச்சயமாக சாய்மணை எழுத்து முறையினைப் பின்பற்றி அதனை எழுத முடியாது என்பது என் திடமான கருத்தாகும்.

விடயப் பொருத்தம் கருதி இந்த இடத்தில் கிழக்கிலங்கையினை பிறப்பிடமாகவும், வாழிடமாகவும் கொண்டிருக்கும் கிழக்கின் முஸ்லிம் இலக்கியவாதிகளான ஜுனைதா செரீபையும், சோலைக்கிளி அவர்களையும் ஒப்பிட்டுப் பேசுவது உசிதமாக இருக்குமென நினைக்கின்றேன்.

நான் ஏற்கனவே சொன்னது போல ஈழத்து நவீன காலத்து இலக்கிய மனோபாவத்தினால் நிராகரிக்கப்பட்ட எழுத்துக்கு உதாரணமாக ஜுனைதா செரீபின் எழுத்தையும், அங்கீகரிக்கப்பட்ட எழுத்துக்கு உதாரணமாக கவிஞர் சோலைக்கிளியினது எழுத்துக்களையும் சொல்லலாம்.

மரபை நிராகரித்த நவீன புனைநுட்பம், வன்முறை எதிர்ப்பம்சம் கொண்ட பாடுபொருள், இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காற்பகுதியில் ஈழத்தில் காணப்பட்ட ஆயுதக் கலாச்சாரம் என்பனவெல்லாம் சோலைக்கிளியை ஒரு பெருங் கவிஞனாக அங்கீகரித்தன. மரபான கதை சொல்லும் புனைநுட்பம், இஸ்லாமிய இலக்கியச் சாயல் கொண்ட எழுதுபொருள், அதிகளவிலான சராசரி எழுத்துமுறை என்பனவெல்லாம் ஜுனைதா செரீபை நிராகரித்தன. கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கையை எழுதிக் கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கும் ஜுனைதா செரீபும், கிழக்கின் பெருங்கவிஞரென மற்றவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கும் சோலைக் கிளியும் உண்மையில் கிழக்கு மக்களின் வாழ்க்கையை இன்னும் இலக்கியத்தில் எழுதவில்லை என்பதே என் கணிப்பாகும்.

சோலைக்கிளியிடம் கவிதை படைப்பதில் கூடிவந்திருக்கும் புனைநுட்பம், கிழக்கு முஸ்லிம்களது வாழ்க்கையைக் கவியாக்குவதில் பிரயோகிக்கப்படவில்லை என்பதனை ஒரு பெருங் குறையாகவே சொல்ல வேண்டும். சோலைக்கிளிக்கு கிழக்கு முஸ்லிம்களது வாழ்க்கைக் கோலம் மிக நன்றாகவே தெரியும். அதை அவர் இன்னும் தன் கவிதைகளில் எழுதிக் காட்டவில்லை. ஆனால் அவர் அறிந்த வாழ்க்கையை வீரகேசரியில் வெளியான உயிரெழுத்துப் பகுதியில் "பத்திக்கை" எழுத்தாக எழுதிக் காட்டினார். சோலைக்கிளியின் கவிதைப் புனைநுட்பத்தினால் அவரறிந்த கிழக்கு முஸ்லிம்களின் வாழ்க்கையை கவிதையாகப் பாடமுடியாது போயிற்று என்பதே வரலாறு.

ஜுனைதா செரீப் அவர்கள் முஸ்லிம் அடையாளத்துடனான வாழ்க்கை நிகழ்வுகளை தன் புனைவுகளில் அதிகமாகவே எழுதியுள்ளார் தான். ஆனால் ஒரு புனைவினை நுண்வாசிப்புக் குட்பட வைக்கும் புனைநுட்பங்கள், இலக்கிய அழகியல்கள் எதையும் புத்திபூர்வமான முறையில் எழுதப்படவில்லை. எனவே ஈழத்தின் நவீன காலத்து இலக்கிய மனோபாவத்தால் அங்கீகரிக்கப்பட்ட, நிராகரிக்கப்பட்ட எழுத்துக்கள் இரண்டினாலும் கிழக்கு முஸ்லிம்களின் பண்பாட்டுக் கோலத்தை இலக்கியமாக்க முடியவில்லை என்பதனைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் ஏற்கனவே சொன்னது போல வரலாற்றுப் புத்தகம் ஒன்றினால் தந்துவிட முடியாத வாழ்க்கை அனுபவத்தை, தந்துவிட முடிகின்ற ஒரு புனைவின் ஆசிரியன் ஒரு சாய்மனை எழுத்தாளனாக இருந்த வரலாறு எதிலும் இல்லை.

தமிழின் நவீன இலக்கியகாரர்களான பாரதி, புதுமைப்பித்தன், சுந்தர ராமசாமி, இன்றைய ஜெயமோகன், கோணங்கி, எஸ்.ராமகிருஷ்ணன், ரமேஷ்-பிரேம் என்பவர்களெல்லாம் சாய்மனை எழுத்தாளர்கள் அல்ல. இவர்களது எழுத்துப் பிரதிகளைப் படிக்கும் போது எண்ணற்றவர்களின் மூச்சுக்காற்றின் உஷ்ணத்தை உணர்ந்துகொள்ள முடியும். இவர்கள் அனைவரும் அடுத்தவர்களின் எழுத்துக்களைப் படித்தவர்கள், ஆய்வறிந்து கொண்டவர்கள் என்பது மிக முக்கியமான விடயமாகும்.

மேற்படி விளக்கங்களின் பின்னணியோடு பெரிய மரைக்கார் சின்ன மரைக்காரைப் படித்த பின்னர் எனக்குள் நிகழ்ந்த இலக்கிய உரையாடல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது இப் பிரதியின் எண்ணமாகும்.

ஊரவர்களால் பெரிய மரைக்கார் என அழைக்கப்படும் முகம்மது இப்றாகிம் (மம்முறாயிம்) காத்தவர்கள் குடியில் வாழும் பெரும் பணக்காரர்களில் ஒருவர். அவருக்கு புன்னங்குடாவிலும், கிரான் குளத்திலும் பெருந் தென்னந் தோட்டங்கள். கரைவாகு, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, படுவாங்கரை ஆகிய இடங்களில் பெருந் தொகையில் நிலபுலன்கள். இவருக்கு சபியா என்கின்ற மனைவி. இவர்கள் இருவருக்கும் மூன்று பெண் பிள்ளைகள். செல்லப் பிள்ளையாக ஆண் மகன் முகம்மதுக் காசிம். அவன்தான் சின்ன மரைக்கார். செல்லப்பிள்ளையான முகம்மதுக் காசிமுக்கு மம்மலி என்கின்ற இணைபிரியாத கூட்டாளி.

அவக்கன், உதுமான் என்பவர்கள் பெரிய மரைக்காரின் மருமக்கள். மம்முக்காசிமின் ராத்தாமார்களின் புருஷன்மார்கள். குணத்தில் இருவரும் நேரெதிர் புத்திகொண்டவர்கள். அவக்கன் மாமனாருக்கு ஒத்துப் போகக் கூடியவன். மச்சினன் மம்முக்காசிமின் கல்யாண விருப்பத்தை நுணுக்கமாகச் செய்து முடித்தவன். உதுமான் அப்படிப்பட்டவன் அல்ல. மாமனார், மாமியாவின் மரணத்துக்குப் பின்னர் மம்முக்காசிமோடு சிவில் வழக்குப் பேசி கோட்டு மூலமாக ஆதனங்களை அபகரித்துக் கொண்டவன்.

கலந்தன் கங்காணி கரைவாகுப்பற்றைச் சேர்ந்தவன். பெரிய மரைக்காரின் கரைவாகுப் பற்றுக் காணிகளுக்கு கங்காணி, முல்லைக்காரன், செய்கைக்காரன், எல்லாமே அவன்தான். தந்திரவாதி, காரியவாதி, அதற்காக எதையும் செய்யத் துணிந்தவன். பெரிய மரைக்காரின் சொத்துக்களை அபகரிக்க பெரிய மரைக்காரின் செல்ல மகனுக்கு தன் மகள் செல்லக்கிளியை கட்டி வைப்பதன் மூலமாக காரியமாற்றப் பெருந்திட்டம் போட்டவன். அதற்காக கோளாவில் பரியாரி மந்திரவாதியின் வீட்டுக்கு அலையாய் அலைந்தவன். மம்மதுக்காசிமின் துப்பலை எடுத்து செய்வினை செய்தவன். ஆனால் அவனது எண்ணங்கள் எதுவுமிமே சித்திக்கவில்லை. பிரயாசைகள் எதுவும் பலனளிக்கவில்லை. இறுதியில் அவனுக்கேற்பட்ட பாம்புக் கடியின் போது தன் தவறை உணர்ந்து பிராயச்சித்தம் தேட முயற்சிக்கிறவன்.

மூத்த தம்பிப் போடியார் பெரிய மரைக்காருக்கு நிகரான பணக்காரன். தன் மகளை மனப்பூர்வமாக மம்முக்காசிமுக்குக் கொடுக்க விரும்பியிருந்தார். ஆனால் மம்முக்காசிமோ மைமூனாச்சியை விரும்பி விட்டான். மம்மலியோடு சேர்ந்து கொண்டு முசுப்பாத்தித் தனமாக ஊரழுந்து கொண்டிருந்த மம்முக்காசிம், மம்மலியின் தங்கச்சியின் கலியாண மதிரோண்டி நிகழ்வின் போது தலைமை தாங்கிவந்த மைமூனாச்சியின் அழகில் மையல் கொண்டு விட்டான்.

மைமுனாச்சியின் தகப்பன் ஆலிம் தம்பி லெவ்வை சாந்தமானவர். நடந்த இடத்துப் புல்லுஞ்சாகாத மனிதர். ஏழை எளியவர். பொன்வைக்க வேண்டிய இடத்தில் பூவையாவது வைக்கவேண்டும் என்ற நினைப்பில், புன்னங்குடாவில் இருக்கும் தனக்குச் சொந்தமான ஆறு ஏக்கர் வயற்காணியை, அக்காணியை காலாகாலமாகக் குத்தகை செய்துவரும் நாகமுத்துப் போடிக்கே விற்றுவிட முடிவெடுத்தவர்.

மூத்த தம்பிப் போடியாரின் வாப்பா. சீனித் தம்பிப் போடியார், குஞ்சித்தம்பி மரைக்கார் என்பவர்கள் தங்கள் பேச்சுக்களால் மற்றவர்களைக் கவரக்கூடியவர்கள். தங்களது முன்னோர்கள் செய்த வீரதீர சாகசங்களை சுவைபடச் சொல்லிக் காட்டத் தெரிந்தவர்கள். குஞ்சுத்தம்பி மரைக்காரின் வாப்பா சீனடி மரைக்கார் மறியலிலிருந்து தப்பியோடிய குற்றத்தைப் போக்க, வெள்ளைக்காரத் துரைக்கு சீனடியடித்துக் காட்டி மன்னிப்புப் பெற்றுக்கொண்டவர். சீனித்தம்பிப் போடியார் மத யானையைச் சுட்ட கதையும், ஒற்றைத் தனியாளாக நின்று கிணறு வெட்டி, மரக் கொட்டுப் பதித்து, கொப்புத்திலா போட்ட கதையும் மிக சுவாரஸ்யமானவைகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மம்முக்காசிமின் மூத்த மகன் சுல்தான், மம்மலியின் மகன் மஜீது என்பவர்கள் இருவரும் தங்களது தகப்பன்மாரின் நட்புக்கு அடையாள மாக தங்களது பதுளைக் கடையில் கூட்டாக வியாபாரம் செய்பவர்கள். ஆனால் நாளடைவில் சுல்தான் ஏமாற்றுக்காரனாகி விடுகின்றான். மஜீதை கடையினின்றும் தந்திரமாக விரட்டி விடுகின்றான். அதனால் மஜீதின் வாப்பா மம்மலி மரணமாகக் காரணமாகியும் விடு கின்றான். ஈற்றில் தாய் தகப்பனுக்குத் தெரியாமலேயே பதுளையில் பெண்ணெடுத்தும் கொள்கிறான்.

கரைவாகுக் கண்காணி கலந்தனின் இளைய மகன் ஓர் ஆசிரியர். உத்தியோகம் பார்க்கவந்த இடத்திலேயே மம்முக்காசிமின் மகள் இளைய வளைக் கல்யாணம் முடித்துக் கொள்கிறான். மம்முக்காசிமின் இளைய மகன் அப்துல் சலாம் ஒரு அப்புக்காத்து. தகப்பன் சொல் கேளாமல் தேர்தலில் போட்டியிட்டு தோற்றுப் போனவன். சொத்துக்கள் பலதை இழந்து தலைக்கு வந்தது தலைப்பாகையுடன் போனது என்ற எண்ணத்தில் கொழும்பில் வாழ்பவன். தாயின் மௌத்துக்கு வந்த அவனால் பிறந்த வீட்டில் தங்க விரும்பவில்லை. மட்டக்களப்பு வாடி வீட்டில் றூம் எடுத்து பிள்ளை குட்டிகளுடன் தங்கினான்.

தனது மூத்த மகன் சுல்தான், தன் உயிர்த் தோழன் மம்மலியின் மகனுக்குத் துரோகம் இழைத்ததை மம்முக்காசிமால் தாங்கமுடிய வில்லை. சொந்தமாகத் தொழில் செய்ய மஜீதுக்கு உதவி செய்கிறார். எப்போதும் மம்முக்காசிமுக்கு உறுதுணையாக மஜீதே இருக்கின்றான். தன் மனைவி மைமூனாச்சிக்கு வாங்கிக் கொடுத்த சிவப்பு நிற கல்யாணக் கூரைச்சேலையை எடுத்துக்காட்டி தனது மையத்தை போர்த்திவிடும் படி ஒசியத்துச் சொன்னான் மம்முக்காசிம். மம்முக்காசிம் மரணத்தின் போது அவனது மையத்தினை மூட கூரைப் புடவையை மஜீது எடுத்துக் கொடுத்த போதும் யாரும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. சிவத்தப் புடவையால் பொம்பள மையத்தைத்தான் மூடுற இல்லை என்று தட்டிக்கழித்துவிட்டார்கள்.

இப்படியாக சராசரி மனித விருப்பு வெறுப்புக் களினால் நிர்ணயமாகும் மனிதர்கள்தான் ஜுனைதா செரீபின் கதை மாந்தர்கள். ஆனால் பெரிய மரைக்கார் முகம்மது இப்றாகிமும் சின்ன மரைக்கார் முகம்மதுக் காசிமுமேதான் புனைவின் நாயகர்கள். முகம்மது இப்றாகிமுக்கும் முரண் பாத்திரமாக கரைவாகுக் கலந்தன் கங்காணி வந்து போனாலும் நிறைவானதாக அவன் சித்தரிக்கப் படவில்லை. மற்றப்படி புனைவில் வரும் பாத்திரங்கள் அனைவரும் பெருமரத்தைச் சுற்றிய கொடிகளாக பெரிய மரைக்கார் சின்ன மரைக்காரைச் சுற்றியவர்கள்தான். இவைகளினால் கதம்ப குணங்கொண்ட நாவல் தன்மை இப் பிரதியில் இல்லை. சிறு நாவலுக்குரிய பண்பே மிகைத்துக் காணப்படுகிறது. இத்தகைய பண்பினைக் கொண்ட இப்பிரதியை ஒரு மக்கள் கூட்டத்தின் பண்பாட்டைக் கூறும் இனவரை வென்று சொல்ல முடியாது.

எனினும், கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப் பிலிருந்து அக்கரைப்பற்று வரை நீண்ட நிலக்குறியினை ஜுனைதா செரீப் அவர்கள் வரைவு செய்து காட்டியிருக்கிறார். அந்நிலக் குறியுடன் உறவு கொண்ட பாத்திரங்களையும் உருவாக்கிக் காட்டியிருக்கிறார். கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம்களின் பண்பாட்டை, பூர்வீகத்தை தொல்லாய்வு செய்ய விரும்பும் அல்லது புனைவு செய்ய விரும்பும் ஒரு இலக்கியச் செயற்பாட்டா ளனுக்கு உதவக்கூடிய வகையில் முதல்தரவாக பல விடயங்களை ஜுனைதா செரீப் பிரதியில் எடுத்துக் கூறியிருக்கின்றார். அந்த வகையில் நிராகரிக்கப்பட முடியாத ஒரு பிரதியாக இது காணப்படுகிறது எனலாம்.

தமிழ் முஸ்லிம் மக்கள் உடன்பிறவாச் சகோதரர்கள் போன்று வாழ்ந்து வந்ததை இப்பிரதியில் ஜுனைதா செரீப் அவர்கள் வெறும் குறிப்பாக மட்டுமே கூறுகின்றார். இவர்களது உறவு முறை பெரிதும் வியக்கத்தக்கதாக இருந்தது என்பதனைக் காட்டுவதற்கான கதை நிகழ்வுகள் எவையும் விரிவானதாக இல்லை. மலை நாட்டை நோக்கிச் சென்ற தாவள வியாபாரப் பயணங் களில் தமிழ் வியாபாரிகள் கலந்து கொண்டார்கள் என்ற தகவலும், தாவளப் பயணத்தின் வழிகாட்டியான செல்லன், அவனது உதவியாளன் கோவிந்தன் சிறுத்தைப் புலியைச் சுட்டுக் கொன்றான் என்பவைகளும், புன்னங்குடாத் தோட்டத்தின் காவல்காரனான மணியன் வரும் இடங்களும் தமிழ் முஸ்லிம் உறவை விளக்கிக் காட்டப் போதுமானவைகளல்ல.

இருப்பினும் பெரிய மரைக்காரின் சம்பந்தி யான ஆலிம்லெவ்வைத் தம்பியின் படுவான் கரைப் பூமியை குத்தகைக்குச் செய்துவரும் கன்னங்குடா நாகமுத்துப் போடியின் இரக்க செயல் ஜுனைதா செரீப் சொல்வது போன்று மனிசனை மனிசன் அறிந்து கொள்ளும் வியத்தகு தருணங்களுக்குரியவைதான். என்றாலும் அதன் விபரணம் போதாது என்றே சொல்ல வேண்டும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிழக்கில் வாழும் தமிழ் முஸ்லிம் மக்களின் உறவை உடன் பிறவாச் சகோதரர்கள் எனக் கட்டமைத்துப் பேசுவதை இனியாவது நாங்கள் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும் என்பது எனது வினயமான வேண்டுகோளாகும். இலங்கையின் பல பாகங்களிலும் வாழ்கின்ற முஸ்லிம்களின் பூர்வீகம் ஒரே நேரத்தில், ஒத்த தன்மையாக இல்லை என்பதனை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பாக கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம்களின் பூர்வீகம் வேறுபட்டதாகும்.

**இப்பிரதியில் ஜுனைதா செரீப் அவர்களால் வரைவு செய்து காட்டப்படும் புனைகளத்தின் வரைபடத்தினை உற்றுநோக்கினால், கிழக்கு மாகாணத்தின் கைத்தொழில், பெரும் வர்த்தகப் பட்டணமாக இன்று விளங்கும் காத்தான்குடியின் பழைய வரைபடத்தினைக் காணலாம். தமிழ் முஸ்லிம் மக்களின் உறவை எழுத முனைபவர்கள் இப்புனைகளத்துக்கும், முக்குலத்தவர்களின் இயற்கை வாழ்வுக்கும் இடையில் தொன்ம உறவைப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும்.**

**மட்டக்களப்புத் தமிழகத்தின் பூர்வ குடிகளான முக்குலத்தவர்களுக்கு அக்காலத்தில் கடற்திமிலர்களால் செய்யப்பட்ட அட்டூழியங்கள், அழிச்சாட்டியங்கள், பேராபத்துக்கள் என்பவைகளை வாய்மொழியாகக் கேட்டுள்ளோம், படித்துள்ளோம். அப்பேராபத்துக்களில் முக்குலத்தவர்களுக்கு உதவி செய்து, அவர்களின் மானத்தைக் காத்தவர்களின் வாழ்விடமே இப்பிரதியின் புனைகளமாகும்.**

மானத்தைக் காத்தவர்கள் குடியிருக்கும் இடமே காத்தவர்கள் குடி............ காத்தான் குடியான வரலாற்று நிகழ்வுகளை நாங்கள் மீட்டெடுக்க வேண்டும். அத்தகைய மீட்டெடுப்பின் போது முக்குலத்தவர்களின் புதல்வியர்களே காத்தவர்களின் தாய் வழியினர் என்பதனைக் கண்டுகொள்ள முடியும்.

தாய் வழி சமூகமும், தந்தை வழி சமூகமும் ஈழத்தின் சரித்திரத்தில் இணைந்து கொண்டதனால் உருவான ஒரு புதிய கலாச்சார மக்கள் தொகுதியினரே கிழக்கிலங்கை முஸ்லிம்கள் என்பதில் கடுகளவும் சந்தேகமில்லை. இக் காரணங்களினால்தான் சொல்கிறேன் கிழக்கில் தமிழ் முஸ்லிம் உறவென்பது உடன் பிறவாச் சகோதர உறவன்று. உடன் பிறந்த சகோதர உறவேதான். இத்தொன்மத்தை இனிமேலாவது, இலக்கியத்திலாவது நாங்கள் கண்டடைந்து பேசுதல் வேண்டும்.

கிழக்கிலங்கையில் வாழும் முஸ்லிம்களின் வாழ்வினை எழுத்தில் காட்ட முனைகின்ற ஒரு பொதுவான பிரதியா? அல்லது பெரிய மரைக்காரிலிருந்து சின்ன மரைக்கார் வரை, சின்ன மரைக்காரிலிருந்து அவர்களது புதல்வர்களாக பதுளைக் கடை வியாபாரி சுல்தான், அப்புக்காத்தர் அப்துல் சலாம் வரையிலான இரண்டு தலைமுறைகளின் வாழ்க்கையை பிரதிநிதித்துவப்படுத்த முனைகின்ற ஒரு பிரதியா? என்கின்ற இரண்டு கேள்விகளுக்கும் இரண்டுமேதான் என்பது என் பதிலாகும்.

ஆனால், பெரிய மரைக்கார், சின்ன மரைக்கார் ஆகிய நிலச்சுவாந்தர்கள் பள்ளிவாசல் மரைக்கார்களாக, தலைவர்களாக, இணக்க சபையின் முக்கியஸ்தர்களாக இருந்த விடயங்கள் விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்ட அளவுக்கு, நிலச்சுவாந்தர்களின் விவசாய வாழ்வு துலக்கமாகப் பிரதியாக்கப்படவில்லை. விதைப்புக் காலங்களில், அறுவடைக் காலங்களில் வயலிலும் வரப்பிலும் நின்றுகொண்டு மேற்பார்வை செய்யும் போடிகளின், முல்லைக்காரர்களின் வாழ்க்கை பூரணமாகத் தொகுக்கப்படவில்லை.

அக்காலத்து முஸ்லிம் பெண்கள் அணியும் வண்ண வண்ணச் சோமன்கள், தோப்புளாச் சாரிகள், பட்டுப் பிடவைகள் என்பனவும், ஆண்கள் அணியும் சாரன், சால்வை, பெனியன், வார், மிருவடிக் கட்டை என்பனவும், தொழில்கள், வாகனங்கள், வைபவங்கள், நோய் நொடிகள் எனப் பலதும் திரட்டித் தொகுக்கப்பட்டுள்ள போதிலும் வாழ்க்கை நிகழ்வுகளுடன் பொருந்தக் கூடிய வகையில் பொருத்தமாகப் பிரயோகித்து எழுதப்படவில்லை.

'அக்காலத்தில் பருவமடையாத பெண்களைத் திருமணம் செய்யும் இளைஞர்கள் தங்களது மனைவிமார்களுடன் வாழ்ந்த காதல் வாழ்க்கை அறியுந்தோறும் இனிக்க வைப்பவை' எனச் சொல்லும் ஜுனைதா செரீப் அவர்கள் தனது இப்பிரதியில் அத்தகைய காதல் கணங்களை எழுதத் தவறிவிட்டார். சின்ன மரைக்காரான மம்முக்காசிமின் மனைவி பருவ வயதை அடையும் முன்னமே திருமணமானவள். திருமணமாகி இரண்டு வருடங்களின் பின்பே வயதுக்கு வருபவள். தாய் தகப்பன் பேசிய பெண்ணை அல்லாமல் வசதியில் குறைந்தவரான ஆலிம் தம்பிலெவ்வையின் மகளான மைமுனாச்சியை மம்முக்காசிம் திருமணம் செய்து

www.tamilarangam.net

கொண்டது பெரும் காவிய ரசனைக்குரிய ஒன்றுதான். ஜப்பானிய எழுத்தாளரான கவத்த பாயாவின் (House of the Sleeping Beauties) தூங்கும் அழகிகளின் இல்லத்தில் வரும் எடுத்துரைப்புக்கள் போன்று எழுதப்பட்டிருக்க வேண்டியவைகள் தான். ஆனால் அவைகளை ஜுனைதா செரீபால், அவர் சொல்வது போல கதைக்கருவுடன் இணைந்த வகையில் நிகழ்வுகளைத் தொகுக்க பெரும் கால அவகாசம் எடுத்துக்கொண்ட போதும், மம்முக்காசிம் மைமுனாச்சி என்பவர்கள் காதலித்துக் கட்டுண்டு, காமுறும் கணங்களை அவர் புனைந்துகாட்டவில்லை.

களப்போரம் சடைத்துப் பெருத்திருக்கும் கண்ணாப்பத்தைகளையோ, கிண்ணங்காடுகளையோ, திப்பிலிப் பத்தைகளையோ, தாளஞ் செடிகளையோ, மேட்டு நிலத்தில் பூத்துக் குலுங்கும் புனைமுருக்கு மரத்தினையோ, முள்முருக்கு மரத்தினையோ, மரமுந்திரிகைத் தோப்பினையோ ஜுனைதா செரீப் நிலக்குறியுடன் இணைந்த வகையில் புனைவு செய்துகாட்டவில்லை. நான் ஏற்கனவே சொன்னது போல, தகவல்கள், தரவுகளைத் திட்டிய இவரால் அதனைச் சொல்லோவியமாக்க முடியவில்லை. மொழியின் அதிகபட்சமான தேவையை கோருகின்ற இடங்கள், சாத்தியப்பாடுகள் இப்பிரதியில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

உலகில் முஸ்லிம்கள் வாழும் இடங்களை, பிரதேசங்களை எடுத்துக் கொண்டால், முஸ்லிம் தேசம், முஸ்லிம் தேச இலக்கியம் என்கின்ற கதையாடல்கள் அனைத்தும் இலங்கையின் வடகிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு மட்டுமே பொருந்தி வரக்கூடியது என்பதனை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் தேசிய இலக்கியத்திற்கு உதாரணமான இலக்கியப் பிரதிகளைச் செய்து கொண்டிருக்கிறோம் எனச் சொல்லிக்கொண்டு பின்நவீனச் சிந்தனை முறைமையின் கூறுகளில் ஒன்றான வித்தியாசப்படுதலை பிழையாகப் பிரயோகம் செய்துகொண்டு மத அடையாளத்தை முதன்மைப்படுத்திய வித்தியாசத்தைக் கொண்டாடும் பிரதிகளை எழுதிக்கொண்டு எங்கள் பூர்வீகத்தை மதத்தில் தேடிக் கொண்டிருக்கிறோம்.

வடகிழக்கில் எழுச்சி கொண்டிருக்கும் முஸ்லிம் தேசத்தின் பூர்வீகத்தை மதத்தில் தேடிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, உலகப் பொது ஆட்சியில் பங்குகோரும் மதங்களில் ஒன்றான அரசியல் இஸ்லாதத்துடன் இணைவதனையும் விட்டுவிட்டு முஸ்லிம் பூர்வீகத்தை நாங்கள் வாழுகின்ற நிலத்தில், பேசுகின்ற மொழியில் தேடுதல் செய்ய வேண்டும். இந்த வகையில் முஸ்லிம் தேச இலக்கியம் என்ற கதையாடலுக்குப் போதுமான நாட்டுக்கவி, நாட்டார் பாடல்கள், தொல்கதைகள், சிந்துகள், மழைப் பாட்டுக்கள், மரபுச் சொற்கள், பழமொழிகள் என ஒரு பெருந்தொகை இலக்கியத்திரட்டு கிழக்கு முஸ்லிம்களின் பண்பாட்டு வாழ்க்கையுடன் கலந்திருப்பதனை நாங்கள் மறந்துவிடுதல் கூடாது.

**வித்தியாசத்தைக் கொண்டாடும் பின்நவீனச் சிந்தனையை விட்டுவிட்டு பூகோவின் அகழ்வாராய்ச்சி முறைமையியலை நாங்கள் இவைகளில் பிரயோகிக்கும் போது ஆரோக்கியமான முடிவுகளை அடைய முடியும். இந்தமட்டில் நிராகரிக்கப்பட்ட ஈழத்து இலக்கியத்துக்கு உதாரணமாகச் சொல்லப்பட்ட ஜுனைதா செரீப் இலக்கிய அழகியல் ஆய்வுக்கு அப்பால் கலாச்சார ஆய்வின் நிமித்தம் கவனத்தைப் பெறும் பிரதியாளராகியிருக்கிறார். கிழக்கு வாழ் முஸ்லிம்களின் பண்பாட்டுக் கோலத்தை எதிர்வரும் நாட்களில் எழுத்தில் வடிக்க இருக்கும் இலக்கியகாரர்களுக்கு ஒரு நிலவுருவினை நிச்சயப்படுத்திக் காட்டியுள்ளார்.**

எனவே, இதனூடு பயணிக்கும் ஓர் இலக்கியச் செயற்பாட்டாளன் நான் எங்கோ ஓரிடத்தில் சொன்னது போல முக்குலத்தோரின் வாழ்வுடன் மட்டுமல்ல, போருக்குப் போனவர்களின் இன் பட்டியலிலும் பங்காளிகளாக கிழக்கு முஸ்லிம் இளைஞர்கள் இருக்கின்றார்கள் என்ற உண்மையை கண்டடைய முடியும்.

கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம்களைப் பற்றிய ஒரு பண்பாட்டுப் புனைவினை அ.ஸ. அப்துஸ் ஸமது, பித்தன், மருதூர்க் கொத்தன், யுவன் கபூர், அண்ணல், புரட்சிக் கமால் போன்றவாகளாலேயே எழுதி முடிக்கப் பட்டிருக்க வேண்டும். அவர்களில் எவரும் அதனைச் செய்யவில்லை. ஆனால் அவர்களின் கடைக்குட்டியான எஸ்.எல்.எம். ஹனிபா அவர்கள் இன்று உயிரோடு இருக்கின்றார். வியத்தகு மொழியாளுகை கொண்ட இவர் இனியாவது சின்னப்பணிக்கர் என்கின்ற புனைவினை எழுதி முடிப்பாராக. ▣





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தீபச்செல்வன்

# முத்தமிடக் காத்திருந்த நாள்



01

உன்னை முத்தமிடக் காத்திருந்த
நாளில்
என் கடைசிக் கவிதை
கொலை செய்யப்பட்டிருந்தது.

விஷர் பிடித்த
மோட்டார் சைக்கிள்
விழுங்கிய நகரத்தில்
எனது முகம்
தனியே தொங்குகிறது.

ஆட்களில்லாதவர்களின்
வார்த்தைகளை கொலுவிய
புத்தகக் கடையில்
புத்தகங்களினிடையில்
சொருகப்பட்டிருந்தது
ஒரு துப்பாக்கி.

ஆமணக்கம் விதைகளை
தின்று மயங்கிய
குழந்தைகள் திரும்பி
அழும் சத்தத்திற்கு அருகில்
கிடந்தன சவப்பெட்டிகள்.

உன் முத்தத்திற்கும்
என் கவிதைக்கும் இடையில்
ஒரு நூல் வளருகிறது.

அந்த நூலை அறுக்கிறது
என்னை அவர்களின்
குருதிச் சொற்களால்
எழுதிய சுவர்களிலிருந்து
திரும்புகிற துப்பாக்கி.

என் கடைசிக் கவிதையை
எழுதிய தாள்களினை மூடுகிறது
ஒரு இராணுவத் தொப்பி.

02

நான் உன் முத்தத்திற்காகவும்
பேனாக்களை எடுத்துச் செல்கிறேன்.

நாம் குழந்தைகள் நிறைந்த வீட்டில்
சோறுசமைத்துக்
கொண்டிருந்த பொழுது
படலை துண்டு துண்டாய்
சிதைந்து போனதை நீ கண்டாய்.

சிதைந்த நகரத்தில்
திறந்திருக்கும் தேனீர்க்கடைக்கு
உன்னை இன்னும் அழைத்துச் செல்லவில்லை
நான் இன்னும்
உன்னை முத்தமிட வேண்டும்
குழந்தைகள்
அழைத்து வரப்பட்ட நகரத்தில்.

மிகவும் பிரியத்துடன்
முத்தமிடக் காத்திருந்த நாளில்
குருதி கசிந்த கைகளினால் எழுதிய
கடைசிக் கவிதையினோடு
நான் கொலை செய்யப்பட்டிருந்தேன்.

உடைந்த வானத்தின் கீழாக
நிலவு
தொங்கிக் கொண்டிருந்தது
நட்சத்திரங்கள்
பேரிரைச்சலோடு
புழுதியில் விழுந்து கிடந்தன.

ஆ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சிறுகதை**

# விட்டு விடுதலையாகி...



**தீரன். ஆர்.எம். நௌஸாத்**

**இங்கே..,**

பூமியில், ஆசியாக் கண்டத்தில், இலங்கையில், கொழும்பில், பழைய டப்ளியு பெரேரா மாவத்தையில், 186/2 இலக்க அறையில், கணிணி முன் உட்கார்ந்து, தலைநகரில் தற்கொலைத் தாக்குதல் பற்றிச் சிறுகதை எழுதிக் கொண்டிருக்கிறேன்...
இப் பெருவெளிச் சுழற்சி முடிவடைந்து, இதனை விட்டு விடுதலையாகி விட மட்டும்... இன்னும் ஒரு மணி நேரத்தில் தலைநகரில், ஒரு இராணுவ உயர் அதிகாரியைக் குறி வைத்து வெடித்துச் சிதறவிருக்கிறேன். உலகில் வாழும் கடைசி மணித்துளியில், ஒரு சிறுகதை எழுதிக் கொண்டிருக்கிறேன்.. கதைக்கு விட்டு விடுதலையாகி என்று தலைப்பு வைத்திருக்கிறேன். கொஞ்சம்தான் எழுதியிருக்கிறேன். இன்னும் முற்றும் போட வில்லை. ஆனால், இலக்கை நெருங்கும் நேரம் நெருங்குகிறது.

என் நேரமும் என் விதியும் என்னை அழைத்தன. எழுந்தேன். சிறுகதை இன்னும் எழுதி முடியவில்லை. ஆயினும், ஆயத்தமானேன். தற்கொலை அங்கியை அணிந்தேன். பயனித்தேன்.. இடத்தை அடைந்தேன். இலக்கை நெருங்கினேன். எனக்கான சமிக்ஞை கிடைத்ததும், முழு மூச்சுடன் உந்திப் பாய்ந்தேன். என்னை ஏற்றி வந்த வாகனச் சாரதி.. இலக்கு வைக்கப்பட்ட அரசியல்வாதி.. அவரது காவலர்கள்.. செருப்புத்தைக்கும் தொழிலாளி.. பள்ளி மாணவி.. கர்ப்பிணிப் பெண்ணொருத்தி.. தெருப்பிச்சைக்காரன்.. பாதையில் விரையும் மனிதர்கள்... எவரைப்பற்றியும் யோசிக்க எனக்கு சொல்லித்தரப்படவில்லை. ஒரு எக்காளப் பேரிடியொலி இறுதியாகச் சிதறிய எனது காதுகளில் கேட்....

••

**அங்கே...**

ஒரு ஏகாந்தப் பெருவெளியில், வெற்றிடத்தில் மிதந்து கொண்டிருந்தேன் நான். மேலே என்றும் சொல்ல முடியவில்லை. கீழே என்றும் சொல்ல முடியவில்லை. ஒளி இல்லை. இருள் இல்லை. காற்று இல்லை. உஷ்ணம், குளிரில்லை; இல்லை. பொதுவில் எந்த ஒரு சுற்றுப்புறச் சூழலுமே இல்லை. ஏகாந்தப் பெருவெளி! நானே "வெளி" ஆகியுமிருந்தேன். ஒருதனியான ஏகாந்த வெற்றிடத்தில் தரித்திருந்தேன். ஆனால், எனது உடம்பைக் காணவில்லை. அது பூமியில், ஒருமரத்தில், தலைப்பகுதி ஒரு கிளையிலும், ஒரு கையும் மார்பின் சிறு பகுதியும் வேறொரு கிளையிலும் தொங்கிக் கொண்டிருந்தன. நான் இருக்கிறேன் என்றுணர்ந்தேன்; உயிருடன் இருக்கிறேன் என்றும் மனம் சொன்னது. ஆனால், உடம்புடன் இல்லை என்றும் புரிந்தது. உடம்பு தான் ஒரு கணத்தில் வெடித்துச் சிதறி விட்டதே. ஒருகணக் குழப்ப நிலையின் பின் என்னுடைய சில புலன்கள் மட்டும் கூர்மையாகின. "உமது பார்வையைக் கூர்மையாக்கி விட்டோம்.." என்று யாரோ சொல்வது போலிருந்தது. யாரென்று தெரியவில்லை. ஒலியாகக் கேட்டதா.. அல்லது, வசனங்கள் உணர்வில் பதிந்ததால் மொழி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






புரிந்ததா என்று நிர்ணயிக்க முடியவில்லை. நன்றாக உற்றுணர்ந்து பார்த்த போது, சம்பவங்கள் கனவு போல ஞாபகத்தில் மெல்லியதாக தெளிவாகின.

ஒரு கணம் முன்னர் நான் வாழ்ந்த உலகம் வேறு இந்த உலகம் வேறு என்று விளங்கியது. என்ன உலகம் இது...? இதுதான் நிரந்தர உலகமா..? ஒரு கணத்தின் முன் நான் வாழ்ந்த பூமியை கோடானுகோடிக் கிரகங்களையும் தாண்டிப் பார்த்தேன். இப்போது பூமியின் சகல காட்சிகளும் தெளிவாகத் தெரிந்தன. பூமியில் தொலைக்காட்சி பார்ப்பதைப் போல பூமியையே ஒரு தொலைக் காட்சியாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். பூமியின் எந்தப் பகுதியையும், புரட்டிப் பார்க்கக் கூடியதாக இருந்தது. காலபேதமின்றி, பூமியைப் புரட்டிப் புரட்டி, இரவு பகல்களை, இடி மின்னல், மழை பெருவெள்ளத்தை பார்க்க முடிந்தது. பக்கத்துக் கோடிக் கிரகங்கள் விரைந்தோடும் காட்சிகள் தெரிந்தன. ஓடும் கிரகங்களின் வேகத்தில் எழுந்த ஒலி எல்லாம் கலந்து ஒரே ஒலியாக ஓங்காரமாகக் கேட்டன. கேட்டன என்று சொல்ல முடியாது.. கேட்பதாக உணர்ந்தேன். கோடிக் கிரகங்கள்.. கோள்களில் சீறியெழும் இராட்சத நெருப்பலை கள் தெரிந்தன. உருகிப் பிரவாகித்துப் பெரு வெள்ள மெனத் திரண்ட பனிக்கடல் தெரிந்தது.. "எங்கெங்கு நோக்கினும் சக்தி" கொண்டு தத்தம் குடும்பத்தினரோடு அதி விசையாய் விரையும் கோடான கோடிச்சூரியன்கள்... எண்ணி முடிக்க முடியாத எண்ணிக்கையில்.. மாபெரும் ஆழிச் சமுத்திரங்கள் ஒரு துளி நீராய் கிரகங்களின் ஈர்ப்பால் ஒட்டிக் கிடந்தன.

இதுவரை கண்டேயிராத நிறங்கள்... நீலம், சிவப்பு, பச்சை, மற்றும், ஓளம், கடிதால், சுட்டிப்பு என்றெல்லாம் உலகத்தோருக்குத் தெரியாத இன்னும்.. இலட்சக் கணக்கான வர்ணங்களை வாரியிறைத்தபடி கோள்கள்.. கிரகங்கள்.. நட்சத்திரங்கள்.. உடுத் தொகுதிகள்.. ஏதோ சப்தம் தொடராகக் கேட்டபடியே இருந்ததாக எண்ணினேன். அதனால். உணர்வற்றிருந்தேன். தொலைக்காட்சியில், ஒலிமறிப்பான் (Mute) போல இருந்தது. அதை விடுவிக்கச் சொல்லவும், விரும்பாது ஏன் அதற்காக முயற்சிக்காது சும்மாவே பார்த்துக்கொண்டிருந்தேன்..

• •

**இங்கே..,**

இலக்கைச் சரியாக இனம் கண்டு நான் நடத்தி முடித்திருந்த தற்கொலைத் தாக்குதலால், தலைநகர் அதிர்ந்தது. தலை தெறிக்க ஓடியது. வெடித்த சுற்றுச் சூழலில் மரண ஓலங்களுடனும் அலறல்களுடனும் மனிதர்கள் ஓடினர்.. வாகனங்கள் முண்டியடித்து முந்தியடித்துப் பறந்தன.. யாரோவெல்லாம் யாரைப் பார்க்கவோ ஓடினர்.. அழுதனர்.. தூக்கினர்.. இரத்த விளாறாய் மயங்கினர்.. தெளிவற்ற குரல்களில் பரபரப்பின் உச்சத்தில் கத்தினர். உளறினர்.. செல்லிடப் பேசிகள் ஒரே சமயத்தில் உயிர் பெற்றுப் பேசிச் செயலிழந்தன. முப்படைகளும், கட்டளை அதிகாரிகளின், தாறுமாறான கட்டளைகளின் படி பரபரப்பாக ஓடியாடின. சிவப்பொளிர் தொப்பிகள் அணிந்த அம்பியூலன்ஸ் வண்டிகள், தீயனைப்பு வாகனங்கள் நீளமாய்க் கத்தியபடி பறந்து வந்தன. ஏற்றின.. இறக்கின.. தூக்கின.. நெருப்பணைத்தன.. உள்ளூர் அரசியல்வாதிகள் பாதுகாப்பான தூரங்களில் நின்று கொண்டு சிப்பாய்களை வேலை வாங்கினர்.. தாறுமாறாகப் பிய்ந்து தெறித்துக் கிடந்த மானுடத் துண்டங்களைப் பார்த்து வயிறு குமட்டினர்.
தம் மனைவியருக்கு நேர்முக வர்ணிப்புச் செய்தனர். பகல் சாப்பாட்டுக்கு இறைச்சி வேண்டாம் என்றனர்..

முக்கால் மணி நேரத்திற்கு தலைநகர வீதிகளில், ஒருவருக்கும் தலை சரியாக வேலை செய்யவில்லை. தத்தமது உறவினர் நண்பர் கதியறிய மக்கள் படையெடுத்துப் பாதையடைத்தனர்.. பாதைகள் மூடப்பட்டன. வாகனங்கள் திருப்பியனுப்பப்பட்டன. இனம் தெரியாத ஆட்களால் சுற்றிலுமிருந்த கடைகள் சந்தடி சாக்கில் உடைக்கப்பட்டன. காவலர் பயமின்றி, பொருட்கள் கொள்ளை போயின. ஆஸ்பத்திரி வட்டாரங்கள் உஷாரடைந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதி தீவிர கவனிப்புப் பிரிவில் கட்டில்கள் நிறைந்தன.. காயங்களுடனும், அரைகுறை உயிர்களுடனும் எழுந்த ஈனமான ஒப்பாரி ஒலிகள் வைத்தியசாலையெங்கும் அவலச் சத்தங்களாய் செவிகளைக் கிழித்தன. தாதிகள் புறாக்களாய்ப் பறந்து திரிந்தனர்.. அத்தனை வைத்தியர்களும் அதி விரைவில் வந்திறங்கி அதிசயிக்க வைத்தனர். சின்னக் காயங்கள் பட்டோர், வெளிச்சிகிச்சை பெற்று, சாட்சி சொல்லப் பயந்து வெளியேறிப் பறந்தனர்.. தனியார் வைத்தியசாலைகள் காயப் பட்டோருக்கு, திடீர் இலவச மருந்துகள் கட்டி மலிவான குளிகைகள் வழங்கிப் பேர் வாங்கின. எல்லாவகை மருந்துகளும் விலை உயர்ந்து பதுங்கின.

• •

**அங்கே...**

தாக்குதலில் என்னோடு கூடவே, உயிரிழந்த பதினைந்து பேரும், என்னுடனேயே இங்கே மிதந்து கொண்டிருந்தனர். எல்லாவற்றையும், என்னைப் போலவே, பார்த்துக் கொண்டிருந் தனர். இவர்களின் முகங்களைக் காணமுடிய வில்லை. உடல்களும் இல்லை. ஆயினும் ஆத்மாக்களை அடையாளம் காண முடிந்தது. பூமியில் என்னை ஏற்றி வந்த வாகனச் சாரதி,.. அரசியல்வாதி.. அவரது காவலர்கள்.. செருப்புத் தைக்கும் தொழிலாளி.. பள்ளி மாணவி.. கர்ப்பிணிப்பெண்ணொருத்தி.. தெருப் பிச்சைக் காரன்.. பாதையில் விரைந்த மனிதர்கள்... எல்லோரும் மிதந்து கொண்டிருந்தனர்.. ஆளடை யாளம் காண முடியாவிட்டாலும், உணரக் கூடிய தாகவிருந்தது. ஆயினும், எவ்விதமான பய உணர்வும் இல்லை. நட்பும் இல்லை. எல்லோரும் சும்மா பூமியைப் பார்த்துக் கொண்டிருந்தோம். அல்லது விரும்பிய கிரகங்களில் விரும்பிய காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

தலைநகரின் வெடிப்புச் சம்பவம் ஏற்படுத்திய அதிர்வுக் கணங்களை உணர்ச்சியற்றுத் தெளி வாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.. என்னைச் சார்ந்தவர்களின், தற்கொடைப் போராளிகட்கான வீர வணக்கமும், என்னைச் சேர்ந்தவர்களின், பாசவெளிப்பாட்டுக்கான, ஒப்பாரி அழுகையும், இங்கே என்னைத் துளியும் பாதிக்கவில்லை. இரண்டு நிகழ்வுகளும் ஒன்றே, அதேசமயம், இரண்டும் எனதல்ல, என்று உணர்வு கூறியது. யாருக்கோ யாரோ அழுகிறார்கள்.. "..எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.." என்று, மிக நிம்மதியாகவிருந்தது. பயங்கரக் கன வொன்றை விட்டும் விடுதலையாகி இருந்தாற் போலிருந்தது.. யாருக்கும் எக்கவலையும் இல்லை. ஆயின், சந்தோஸமும் இல்லை. எதையும் யோசிக்கவோ செற்படுத்தவோ முடியாத வகையில் எதனாலோ கட்டுண்டதைப் போலி ருந்தது.. விடுதலையும் தேவைப்படவில்லை. எனினும், எதற்கோ யாருக்காகவோ காத்திருப் பதைப் போலுமிருந்தது. அதுவரைக்கும், சும்மா பூமியைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர, எங்களுக்கு, வேறு எவ்வேலையும் இருப்பதாகத் தோன்ற வில்லை.

• •

**இங்கே..,**

அரச திணைக்களங்கள் அக்கணமே வெறிச் சோடின. அலறிய தொலைபேசிகள், அழைப்பிலிருந்தப்பட்டன. அரச ஊழியர்கள், கடமை நேரத்தைக் களவெடுத்த திருப்தியுடன், கடுகதியில், வீடு திரும்பி மனைவி பிள்ளைகளைச் சந்தோஷப்படுத்தினர். தம்முடைய சமயோசித மூளையால்தான் தாம் தப்பியமை பற்றிப் பேசி அதிசயிக்க வைத்தனர். இன்னும் மூன்று நாட்களுக்குத் தமக்கு விடுமுறையென தாமாகவே அறிவித்து மகிழ்ந்தனர். தனியார்கள் தாளாத மனத்தாங்கலுடன், தட்டிகளை இறக்கி மூடினர். வங்கிகள் தம் பணவெள்ளத்தை நிறுத்தின. திகதியிட்ட காசோலைகள் சிரித்தன. ஊடகங்கள் செய்தியை தத்தம் கொள்கைகளுக்கேற்ப ஊதிப் பெருப்பித்துப் பரப்பின. நேரடி வர்ணிக்க வந்தவர்கள் தம்மையே நெடுநேரமாய் காண்பித்து வெறுப்பேற்படுத்தினர். கேமராக்காரர்கள் சந்தடி சாக்கில் அழகான பெண்களைத் திருட்டுத்தனமாக காட்சிப்படுத்திப் பார்க்க வைத்தனர். சம்பவ இடத்தைக் காண்பிக்காமல் அரசியல்வாதிகளைக் காட்டினர்.

வதந்திகள் வாய்த்தந்திகளில் பறந்தன. வானொலிகள் சூடான செய்தியை சுடச்சுடப் பரிமாறின. அடுத்த கணமே சம்பந்தா சம்பந்தமற்ற சினிமாப் பாட்டுக்களை, நேயர்கள், இலங்கையின் அரைவாசிச் சனத் தொகையின் பெயர்களைக் கூறி, போதாதென்று, மற்றும் அப்பா அம்மா அக்காவுக்கும், மற்றும் நண்பர்களுக்கும், மற்றும் அறிவிப்பாளருக்கும், மற்றும் கலையுலக நண்பர்களுக்கும் விரும்பிக் கேட்டனர். குண்டு வெடிப்பையும், தமது கண்டு பிடிப்பையும் பொறுப்புணர்வற்றுப் பொது ஊடகங்களில், பேசினர்.. இணையத் தளங்கள் யாவும் முடுக்கப்பட்டு வெடி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பத்திரிகைகள் எனது சிதறிப் பறந்த தலையை இரத்த விளாறாகப் படம் பிடித்து "இந்தத் தற்கொலையாளியை அடையாளம் தெரிகிறதா?" என்று கேட்டன "தகவல் தருபவருக்கு இரண்டு இலட்சம் சன்மானம்!"



தளத்தைக் காட்சிப்படுத்தி காசு வாங்கின. பத்திரிகைகள் எனது சிதறிப் பறந்த தலையை இரத்த விளாறாகப் படம் பிடித்து "இந்தத் தற்கொலையாளியை அடையாளம் தெரிகிறதா.?" என்று கேட்டன "தகவல் தருபவருக்கு இரண்டு இலட்சம் சன்மானம்!" என்றன.. அரச பத்திரிகைகள் "பாதுகாப்பில் ஓட்டை! மேலும் நூற்றி இருபத்தேழு தற்கொலைதாரிகள் நகருக்குள் உள்ளனர்.?" என்று சந்தேகம் தெரிவித்தன. "துரித பொலிஸ் விசாரணைக்கு பாதுகாப்பமைச்சர் உத்தரவு!" என்றன.

• •

**அங்கே...**

ஒரு எக்காள ஒலி போலக்கேட்டது. இதுவரையும் கேட்டேயிராத வாத்தியத்திலிருந்து அது வாசிக்கப்பட்டது. உடனே, எனது மூன்றாம் கண்ணும் திறந்து கொள்ள மகா மைதானம் ஒன்று முதற் தடவையாகத் தெளிவாகப் புலப்பட்டது. மைதானத்தில், நான் கோடானு கோடிப் பேர்களுடன் நின்று கொண்டிருந்தேன். எனது வலது இடது பக்கங்களில், இரண்டு, பட்டோலைகள் முளைத்திருந்தன. அதில், புரிகிற எழுத்தில், என் சரித்திரமும், நான் தரித்து நிற்கும் இடமும் தெளிவாகக் குறிக்கப்பட்டிருந்தது. அடுத்த இடம் குறிப்பிடப்படவில்லை. ஏதோ எழுதப்பட்டிருந்தது தெரிந்தாலும், வாசிக்கவோ, புரிந்து கொள்ளவோ முடியவில்லை. அப்பட்டோலைகளைச் சிறகுகளாகக் கொண்டு மைதானத்தின் மத்தியிலிருந்த மாபெரிய தராசில் அமர ஆவலுடன், அசைந்தேன். அதுவும் என் வசத்தில்லை எனப் புரிந்தது. எனக்கான முறை வந்து நான் அழைக்கப்பட்டு விசாரணைகள் முடிந்து, கணக்குத் தீர்க்கப்படும் மட்டும் காத்திருக்க வேண்டியிருப்பதாகத் தோன்றியது.

இனி ஒன்றும் செய்வதற்கில்லை. "..நமக்குமது வழியே நாம் போகுமட்டும்.." சும்மா மிதப்பதை விட வேறென்ன வேலை..? கோடானுகோடிப் பேர்கள் வரிசையில் மைதானத்தில், மிதந்து கொண்டிருக்க திடீரென எனது நாமம் என் தந்தையின், பெயரோடு சேர்த்து அழைக்கப் பட்டது. மறுபடியும், அந்த எக்காள ஒலியில் என் உயிர் நடுநடுங்கி அச்சமுற்றுப் பரிதவிக்க, நான் தராசின் முன் கொணரப்பட்டேன்.. என்னிரு பக்கங்களிலும், சிலர் ஒளி வண்ணத்தில் நின்று கொண்டிருந்தனர். மறுபடியும் என் பெயர் மும்முறை யாராலோ உச்சரிக்கப்பட்டது. உடன், என் விசாரனை தொடங்கிற்று. என் முயற்சிகளின்றி என் வாக்குமூலம் பதிவாகிக் கொண்டிருந்தது. என் அந்தரங்க, பகிரங்க செயல்களும், என் நல்ல, தீய நினைவுகளும் கூட என்னாலேயே, ஒப்புவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றில், ஒரு குற்றெழுத்துக் கூட மாற்றமில்லை. யாவும் உண்மையே.

திடீரென என் பட்டோலைச் சிறகுகள் கழற்றப் பட்டன. அவை, தராசில் இடப்பட்டன.. தராசின் மேல் நாக்கு பயங்கரமாக இரு பக்கமும் ஆடியது. திடீரென, என்ன நடந்ததென்று புரியவில்லை. ஒரு மகா நீதிபதி வந்தாற் போல் உணர்ந்தேன். ஒரு கணக் குழப்பத்தில், யாரோ யாருக்கோ கட்டளையிட, நான் ஒரே விசிறலில் மைதானத்தை விட்டும், 'வெளி'யில், தூக்கியெறியப்பட்டேன். ஒரு இடமிலிக் குவியத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறேன்.. என்றும், அது அப்படித்தான் கோடான கோடி காலங்களாக நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது என்றும் உணர்ந்தேன். அது ஏனென்றெல்லாம் எண்ணவும் விரும்பவில்லை. விடையளிக்க முடியாத, விரிந்த வெளியில் விடை தேடி விரைந்து கொண்டேயிருந்தோருக்குச் சொல்லப்படும் ஒரு பதிலைத் தேடி... நானும் விரைந்து கொண்டேயிருந்தேன்..

• •

**இங்கே..,**

இரும்புத்திரைக்குள்ளிருந்தாலும், தலைமைப் பீடம் துணுக்குற்றுத் திடுக்கிட்டது. உயர் பீட மட்டத்தில் அவசர ஆலோசனை நடத்தியது. ஆட்சி கவிழாதிருப்பதை உடன் உறுதி செய்தது. தனது, மகிழ்ந்த சிந்தனையைச் சற்றே நிறுத்தி தனக்குள், முகிழ்ந்த அனுதாபத்தை தெரிவித்தது. ஆளும் கட்சிப்பிரதமர், கொல்லப்பட்ட முக்கிய நட்சத்திர அந்தஸ்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல்வாதிகளின், வீட்டுக்கு நேரில் சென்று, பளபள சவப் பெட்டியில், தன்முகம் பார்த்து, சோக மனைவியருக்கு கைகூப்பினார். எதிர்க்கட்சித் தலைவர், பொங்கிய மகிழ்ச்சியை மறைத்துச் சோகமாகி, திரண்ட மக்களிடையே, ஆவேசமாய்க் கையசைத்தார். தான் ஆட்சிக்கு வந்தால், ஒலிவ் மரங்கள் வாசலில் பூக்கும் என்றார்.

பாதுகாப்பு அமைச்சர் ஸ்தலத்தில் பாதுகாப்பாக வந்திறங்கி, பரபரப்பூட்டினார். பாதுகாப்பு உயர் அதிகாரிகளிடம் தாமதமான கட்டளைகள் பிறப்பித்தார். அரசாங்கப் பேச்சாளரான அமைச்சர் ஒருவர், "மூன்றே நாட்களில் அடக்குவோம்" என்று ஊடகங்களில், உறுமியதை நம்பாத மக்கள், மூன்று நாட்கள் ஊரடங்கு உத்தரவு என்று கொண்டதால் பரபரப்பு உச்சத்தை தொட்டது. மறுபடி நாடு முழுவதும் அத்தியாவசியப் பொருட்கள் பதுங்கின. மதுக்கடைகள் உச்சக் கட்டக் கொள்வனவில் தள்ளாடின. எல்லா வாகனங்களும், எரிபொருள் நிரப்பு நிலையங்களில், நீள் பாம்புகளாகி கார்பன் விஷம் கக்கின. பெற்றோல் தாங்கியில், வதந்தி நிரப்பி பீதிப் புகை கக்கிப் பறந்தன. வாயு விலை சந்தடி சாக்கில், புஸ்ஸென உயர்ந்தது. நகரின் பொருளாதார மையங்கள் ஒருகணம் ஸ்தம்பித்துப் பின் உயர்வடைந்தன. தூதுவராலயங்கள் தூக்கம் கலைந்து வழமையான, வன்மையான கண்டனங்களையும், அனுதாபச் செய்திகளையும், அச்சடிக்க ஆரம்பித்தன. "இருதரப்பும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும்." என்றன. கண்காணிப்புக் குழு கண்களைக் கூனிக் கொண்டு ஆங்கில வார்த்தைகளில் ஆதங்கப்பட்டது. "இது சமாதான முயற்சியைப் பாதிக்கும்" என்று எண்ணூற்றிச் சொச்சம் தடவைகள் சொன்னதைச் சொல்லின. வெள்ளைக்காரர் பயமும் பீதியுமாக களத்தில் நின்று கொண்டு முறைப்பாடு பதிந்து கொண்டிருந்தார்.

தீவிர அரசியற்கட்சித் தலைவர் ஒருவர், முழுமையான யுத்தத்தில் இறங்க மக்களை அழைக்க, இதனை நம்பிப் பாதாள உலகிலிருந்து, இனமுறுகல் தீப்பொறிகள் ஒன்றிரண்டாய் தெறிக்கத் தொடங்கின. பணப்பெட்டிகள் சவப்பெட்டிகளில் பரிமாறின. ஆயுதங்கள் சேகரிக்கப்பட்டு. பாதாளத் தாதாக்களின் உயர்மட்டச் சமிக்ஞைகாகக் காத்திருந்தன, இது புரியாத சிறுபான்மையினர் அவசர அவசரமாக சந்தையில் சாமான்கள் தேடி ஓடிக் கொண்டிருந்தனர். உள்நாட்டுப் பாதுகாப்பமைச்சின் உயர் செயலாளர்கள் குளிர் அறைகளுக்குள் 'வைப்புத்துணைகளுடன்' 'பூட்டிக்'கொண்டு, 'குண்டுகளையும்,' 'வெடிப்புகளையும்' ஆராய்ந்தனர். அடுத்த நிலை உயரதிகாரிகள், வீட்டிலிருந்து, காட்சிகளை தொலைக்காட்சியில் பார்த்து, செல் பேசினர். சிறிய செயலாளர்கள், சும்மா காரில், ஓடியாடிக் கொண்டிருந்தனர். கனிஷ்ட அதிகாரிகள், திடீர் சுகயீன விடுமுறையில், மனைவி பிள்ளைகளுடன், வாகனங்களில் காணாமல் போயினர். கீழ்நிலை இலிகிதர்கள் இதுவரை நடந்த தற்கொலைத் தாக்குதல்கள், காயப்பட்டோர் இறந்தோர் எண்ணிக்கை.. நிவாரண விடயங்கள் என்று தரவு நிரைப்படுத்த ஆரம்பித்தனர்.

• •

**அங்கே...**


விஸ்தார 'வெளி'யில் விசிறப்பட்டு திக்கற்ற சூன்யத்தில் விரைந்தேன். என்னோடு இன்னும் கோடிக் கணக்கானோரும் விசிறப்பட்டிருந்தனர்.. விரைந்த வேக தூரங்களில், அவர்களுடனும், பூமியில் விழாத இன்னும் கோடிப் பேருடனும், நானும் அந்தப் பாலத்தை நோக்கியே பயணித்துக் கொண்டிருக்கிறேன். மகாப் பிரமாண்ட கிரகங்களிலிருந்தும், பூமியிலிருந்தும் விசிறப்பட்டு இன்னும் கோடிக் கணக்கானவர்கள் என்னுடன் புதிதாகச் சேர்ந்து கொண்டேயிருந்தனர்.

ஒரு தலைமுடியை ஏழாகப் பிரித்த அளவிலான ஒடுக்கமான பாலத்தைக் கண்டோம். அதைக்கடக்கும் போது தாக்குப்பிடிக்க முடியாத, பல கோடிக்கனக்கானோர், மகாப் பிரமாண்டமான கிரகங்களிலும்.. பூமியிலும், சிதறி விழுந்தனர்.. விழுந்து சிதறினர்.. சிதறி உயிர்த்தனர்.. உயிர்த்து முளைத்தனர்.. முளைத்து மறுபடி எழுந்தனர்.. ஊர்ந்தனர்.. மேய்ந்தனர்.. பறந்தனர்.. நடந்தனர்.. சிலர், அசையாப் பொருளாகி ஸ்தம்பித்தனர். சிலர் அணுவாகி மறைந்தனர்.. சிலர் நட்சத்திரங்களாகி ஒளி வீசி விரைந்தனர். அதே சமயம் - பாலத்தைக் கடக்கையில், தவறி வீழ்ந்து, நானும், மறுபடி பூமிக்கே மீண்டு, மேய்வதற்கு, ஊர்வதற்கு, நடப்பதற்கு, நிற்பதற்கு அல்லது சும்மா கிடப்பதற்கு என்று விழுந்து விடலாம் போலிருந்தது. ஆனால் அது என் வசத்தியில்லை என்றும் புரிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




எங்கே விழுவேன்.. நடப்பேனா.. மேய்வேனா.. ஊர்வேனா.. நிற்பேனா.. கோடிக் கிரகங்கள் கடந்து பெருவெளிப் பயணம் செய்து, பாலம் நெருங்க - எனது மூன்றாவது கண் ஒளியிழக்கத் தொடங்கியது. காட்சிகள் மங்கின. ஞாபகம் மறந்து வேறேதோ பிரக்ஞை உண்டானது. பாலத்தைக் கடந்தபோது..,

• •

**இங்கே..,**

மறுபடி பூமியில்தான் வந்து விழுந்தேன்.. என் ஞாபகத் தொடர்கள் அறுந்திருந்தன.. என் மூன்றாவது கண் முற்றாக மூடிக் கொண்டது. யாரோ அதனை மறைத்து ஒரு பொட்டு இட்டார்கள். நான் அழுதேன்.. பலர் சிரித்தார்கள். பலர் கலகலத்தார்கள் பெண்பிள்ளை பிறந்திருக்கிறது என்றார்கள். என் தாயின் கதகதப்பையும் உணர்ந்தேன். "கண்ணே..! கண்ணே..!!" என்று ஏதோ ஒரு மொழியில் என் தாய், என்னை அழைத்துக் கொஞ்சுவது கேட்டது.. இனம் புரியாத பாசம் என்னுள் முகிழ்த்தது. கொஞ்சம் பசித்தது. தாய் முலை தேடினேன். அமிர்தம் பருகினேன். இதமாக ஒரு காற்று வீசியது.
எங்கிருக்கிறேன்... எப்போது பிறந்தேன்..? எப்படி வளர்ந்தேன்..? படித்தேன்..? வாய்ப்புகளில் இனமொதுக்கப்பட்டு, இனக்கலவரத்தில் பெற்றோரைப் பலி கொடுத்து.., விரக்தியாகி.., வாழ்வுரிமை பறிக்கப்பட்டு.., அகதியாய்த் துரத்தப்பட்டு.., உச்சக்கட்டத்தில், இயக்கத்தில் சேர்ந்து.., பயிற்சி பெற்று வெளியேறி..
இப்போது, இங்கு,

பூமியில், ஆசியாக் கண்டத்தில், இலங்கையில், கொழும்பில், பழைய டப்ளியு பெரேரா மாவத்தையில், 186/2 இலக்க அறையில், கணினி முன் உட்கார்ந்து, தலைநகரில் தற்கொலைத் தாக்குதல் பற்றிச் சிறுகதை எழுதிக் கொண்டிருக்கிறேன்... இப் பெருவெளிச் சுழற்சி முடிவடைந்து, இதனைவிட்டு விடுதலையாகி விட மட்டும்... இன்னும் ஒரு மணி நேரத்தில் தலைநகரில், ஒரு இராணுவ உயர் அதிகாரியைக் குறி வைத்து வெடித்துச் சிதறவிருக்கிறேன். உலகில் வாழும் கடைசி மணித்துளியில், ஒரு சிறுகதை எழுதிக் கொண்டிருக்கிறேன்.. கதைக்கு விட்டு விடுதலையாகி என்று தலைப்பு வைத்திருக்கிறேன். கொஞ்சம்தான் எழுதியிருக்கிறேன். இன்னும் முற்றும் போடவில்லை. ஆனால், இலக்கை நெருங்கும் நேரம் நெருங்குகிறது. என் நேரமும் என் விதியும் என்னை அழைக்கின்றன. எழுந்தேன். சிறுகதை இன்னும் எழுதி முடியவில்லை.

● ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**திறனாய்வு**

# கலாமோகனின் கதைகள்

சு. குணேஸ்வரன்




க. கலாமோகன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். புலம்பெயர்ந்த ஈழத்தமிழ்ப் படைப்பாளிகளில் ஒருவராக அறியப் பட்டவர். பிரெஞ்சு மொழியிலும் எழுதி வருபவர். 1983 இல் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து தற்போது பிரான்சில் வாழ்ந்து வருகின்றார்.

1999 இல் பிரான்சில் இருந்து எக்ஸில் வெளியீடாக வந்த 'நிஷ்டை' சிறுகதைத் தொகுப்பின் மூலம் தமிழ் இலக்கிய உலகின் கவனிப்பைப் பெற்றவர். இதன் பின்னர் 2003 இல் அவுஸ்திரேலியாவில் இருந்து மித்ர வெளியீடாக 'ஜெயந்தீசன் கதைகள்' தொகுப்பும் வெளிவந்துள்ளது. இவை தவிர 'வீடும் வீதியும்' என்ற நாடக நூலும், பிரெஞ்சு மொழியில் கலா மோகனால் படைக்கப்பட்ட *'Et damain'* (நாளையும்) கவிதைத் தொகுப்புமாக இதுவரை நான்கு நூல்கள் வெளியாகி யுள்ளன. கலாமோகனின் பிரெஞ்சுக் கவிதைத் தொகுப்பை பேராசிரியை கிறிஸ்டின் மார்ஸ்ரண்ட் *'Og I Morgen'* என்ற நூலாக டெனிஸ் மொழியில் மொழிமாற்ற மும் செய்திருக்கின்றார்.

நவீன தமிழ் இலக்கியத்தின் வீச்சான எல்லைகளைத் தொட்டுவிட முனையும் கலாமோகனின் படைப்புக்களில் நிஷ்டை, ஜெயந்தீசன் கதைகள் என்ற இரண்டு தொகுப்புக்களையும் முன்வைத்தே இக் குறிப்பு எழுதப்பட்டுள்ளது.

நிஷ்டை தொகுப்பில் உள்ள 12 சிறுகதைகளும் உதிரியாக வெளிவந்த புகார், பாம்பு, குளிர், 20 ஈரோ, ஆகியனவும் நவீன தமிழ்ச் சிறுகதை வடிவத்தின் சாத்தியப்பாடுகளை உள்வாங்கிய கதைகள். மறுபுறம் 'ஜெயந்தீசன் கதைகள்' என்ற தொகுப்பு, 67 குறுங்கதைகளைக் கொண்டமைந் தவை. இக்கதைகளை *Satire* (கேலி, வசை) வகைக் கதைகள் என எஸ்.பொ. குறிப்பிடுகிறார். இவை சிறுகதைகள் என்ற சட்டகத்துள் அமையாதவை. ஈழத்தில் காசி ஆனந்தன், செம்பியன் செல்வன் ஆகியோர் எழுதியுள்ள சில குறுங்கதைகளின் அமைப்பில் உள்ளன. ஆனால் கலாமோகன் இக்கதைகளில் சுட்டும் பொருட்பரப்பு வித்தியாச மானது. சமூகத்துள் உள்ளமுங்கியிருக்கும் பல விடயங்களை வெளிக் கொண்டு வருவதும் அவற்றை ஏளனம் செய்வதுமே ஜெயந்தீசன் கதைகளின் முதன்மையான நோக்கமாயுள்ளது.

இந்த வகையில் கலாமோகனின் அக்கறைகள் அதிகமும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற ஈழத் தமிழர்கள் மீதாகவும், தவிர்க்க முடியாத வகை யில் அவர்களின் தற்கால வாழ்வியல் மீதான விமர்சனமாகவும் எடுத்துக் கொள்வதற்குரிய சாத்தியம் அதிகமாயுள்ளது.

இளமைப் பருவம், தாயக நினைவு, அகதி வாழ்வு, அகதி அந்தஸ்து பெறுவதற்கான அவலம், தொழிற்தளம், தனிமை வாழ்வு, ஒழுக்கம் தவறல், மணப்பெண் தேடல், மணப்பெண் இறக்குமதி, சீதனம், சாதி, இளைஞர் நிலை, குடும்ப உறவு நிலை, குடும்ப உறவுமுறையின் குழப்பங்கள், போராட்ட அமைப்புகளின் பிரச்சனைகள், ஏமாற்றங்கள், பகட்டு வாழ்வு, பிரபல்ய முயற்சிகள் ஆகிய விடயங்களை கலாமோகன் தனது கதைகளுக்கு கருவாகக் கொள்கிறார்.

ஒருமித்த பார்வையில் கலாமோகனின் சிறுகதைகளும், குறுங்கதைகளும், பின்வருவன வற்றை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளதை அவதானிக்கலாம்.

ஆண் பெண் ஒழுக்கவியல் மரபினைக் கேள்விக்கு உட்படுத்துதல், குடும்ப உறவுநிலை யில் ஏற்படும் சிக்கல்களை உணர்த்துதல், குருட்டு நம்பிக்கையும், பிரபல்யத் தேடலும் வளர்ந்து வருவதை ஏளனஞ் செய்தல், சூழலின் யதார்த்தத் தைப் புரிந்து கொள்ளல்.

தமிழ்ப் பண்பாட்டால் கட்டமைக்கப்பட்ட மாந்தர்கள் முற்றிலும் வித்தியாசமான அந்நிய கலாசார சூழலிலே வாழ நேரிடுகின்றபோது

www.tamilarangam.net

அவர்தம் சுய அடையாளத்துடனான பண்பாட்டுப் பெறுமானங்கள் உடைந்து போகின்றன. ஒரு வகையில் முதலாளித்துவ உலகும், பல்கலாசாரச் சூழலும் ஏற்படுத்தும் தாக்கத்தினால் இந்த மாற்றங்கள் ஏற்படுகின்றன. இது தமிழ்ப் பண்பாட்டின் ஒழுக்கவியல் மரபிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இளைஞர்களாகவும் குடும்பமாகவும் புலம்பெயர்ந்துள்ள ஈழத் தமிழர்கள் வாழ்வை தாயகத்து சூழலிலிருந்து நோக்கும் போது இவ்வாறான கேள்வியே மிஞ்சுகிறது. நிஷ்டை தொகுப்பில் உள்ள இரா, கனி, இழப்பு, ஈரம், தெரு, மற்றும் உதிரியாக வெளிவந்த புகார், பாம்பு, 20 ஈரோ, ஆகிய சிறுகதைகளும் மேற்குறிப்பிட்ட ஒழுக்கவியல் மரபின் மீதான கேள்விகளையே முன் வைக்கின்றன.

"கலாமோகனின் கதைகள் பாலியல் சார்ந்த குழப்பங்களுக்கு இலக்காவதுண்டு. அவரின் பெரும்பாலான கதைகள் ஆண் பெண் உறவுநிலைகளை எந்தச் சட்டகங்களுக்குள்ளும் நில்லாமல் வெளிப்படையாக, இயல்பாகப் பேசிவிடுகிறது. சிலவேளை கலாமோகன் சமூகத்துள் மறைந்து கிடக்கின்ற, நிகழ்கின்ற கள்ள உறவுகளை எந்தப் பூச்சுகளுமின்றி சொல்ல வந்திருக்கிறார் என்று கருதவும் இடமுண்டு. எல்லாம் பிரதி மீதான வாசிப்பில்தான் உள்ளது."(எம்.கே.எம். ஷகீப், சரிநிகர், 6-19 ஜூலை 2000, ப.15)

கந்தபுராண கலாசார மற்றும் சாதிய வர்க்க சிந்தனைகளாலும் கட்டமைக்கப்பட்ட ஈழத் தமிழர் வாழ்வு அதற்குள்ளேயே ஒழுக்கவியலையும் எழுதாத விதியாக வரித்துக் கொண்டது. இதனை இன்னமும் ஆழமாக நோக்கின் பல விவாதங்களை ஏற்படுத்தும். எதிர்மாறான விடைகளையும் தரக்கூடும்.

இளைஞர்களாகச் சென்றவர்களுக்கு ஏற்றுமதியாகும் மணப்பெண்களும், அங்கு குடும்ப வாழ்வில் புகுந்து கொண்டவர்களும் பல சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். சந்தேகம், விவாகரத்து, தனித்து வாழ்தல், மணப்பெண் மாறுதல், திருப்பி அனுப்பப்படல் என்றவாறு பல்வேறு வடிவப் பரிணாமங்களை இந்தப் பந்தம் ஏற்படுத்துகின்றது.

பாரம்பரியமாக வாழ்ந்த தமிழ்ப் பிரதேசங்களில் குடும்ப உறவுகளை அனுசரித்தும், வாழ்வின் சுகதுக்கங்களில் இணைந்தும் தம் வாழ்வை அமைத்த தமிழர் சமூகம்; இன்று இயந்திர வாழ்வுக்குள் அந்நியப்பட்டுப் போன பின்பு அவசர அவசரமாக தமது அடையாளங்கள் எனக் கருதி வாழ்வுச் சூழலின் வசதியிலே குருட்டு நம்பிக்கையுடனும் பெரும் எடுப்பிலும் வீட்டு விசேடங்களை நிகழ்த்திக் காட்டலும், பிரபல்யப் பெருமை பேசுவதற்காக எதுவும் செய்யத் தயாராய் இருப்பதுவும் ஜெயந்தீசன் கதைகளின் குறுங்கதைகள் புலப்படுத்துகின்றன.

தற்கால வாழ்வின் அவசரக் கோலத்தில் உண்மைகளும் அர்ப்பணிப்புக்களும் தேவைகளும் பின்தள்ளப்பட்டு பொய்யும் பிரபலமும் பகட்டும் முன் நிறுத்தப்படுகின்றது. இவை தனியே புலம்பெயர் சூழல்தான் என்றில்லாமல் எங்கும் யதார்த்தமாகிப் போனதும் வேடிக்கையானதே.

சூழலின் யதார்த்தைப் புரிந்து கொண்டதான பல சிறுகதைகள் கலாமோகனிடம் வலுவாக உள்ளன. அது புகலடைந்த நாட்டு வாழ்வனுபவங்கள் ஊடாகப் புலப்படுத்தப்படுகின்றது. தொழிற்தளத்தை மையப்படுத்திய 'உருக்கம்' என்ற சிறுகதை மிகச் சிறந்த ஓர் அப்பாவித்தனமான சித்தரிப்பாக அமைந்துள்ளது.

'என்ர பத்திரோன் (முதலாளி) நல்லவர். அவர் மட்டுமே, அவற்றை மனிசி, மகன், மகள், நாய்க்குட்டி, பூனைக்குட்டி எல்லாந்தான். பிரெஞ்சு ஒழுங்காகப் பேசமாட்டன் எண்டதாலை, எங்க என்னை நிப்பாட்டிப் போடுவாரோண்டு வேலைக்குப் போய்ச்சேர்ந்த காலத்தில எனக்கு அவரிலை பொல்லாத பயம். அவர் கதைக்கிறது எனக்கு வடிவா விளங்குறதில்லை. நான் கதைக்கிறதெல்லாம் தனக்கு வடிவாக விளங்குதெண்டு - என்னைப்போலை கையையும் தலையையுமாட்டிச் சொல்லிறவர். இங்கிலீஸிலை பேச வெளிக்கிட்டாலும் அவரோ, நீ உன்ரை பிரஞ்சிலை பேசு, அது தனக்கு நல்லா விளங்குமெண்டிறவர். நல்ல பத்திரோன். அவர் எங்கட சனங்களைப் போலயில்லை. சனங்கள் எப்ப பார்த்தாலும், நான் முவா துவா (நான், நீ) எண்டுதான் பிரெஞ்சு பேசுறன் எண்டு சொல்லி என்னை நக்கலடிக்குங்கள். அதுகளுக்குப் பொய்தான் பேசத்தெரியும். பத்திரோன் மட்டும் தான் உண்மை பேசுறவர். நல்ல பத்திரோன். என்னோடை நல்ல நேசம். நான் கோப்பையள் கழுவிக் கொண்டிருக்கேக்கை - குசினீக்கை வந்தாரெண்டா என்ரை முதுகிலை தட்டிச் சிரிக்காமல் போக மாட்டார். நல்ல பத்திரோன்.' ('உருக்கம்', நிஷ்டை தொகுப்பு, ப.37)

இதுபோன்ற பல கதைகளை புகலிடத்தில் எழுத்துப் பயணத்தை ஆரம்பித்த இளைய பரம்பரை எழுத்தாளர்கள் பலரிடம் அவதானிக்க முடிகின்றது. அகதியாகிப் போன பரதேசி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தமிழ்ப் பண்பாட்டால் கட்டமைக்கப்பட்ட மாந்தர்கள் முற்றிலும் வித்தியாசமான அந்நிய கலாசார சூழலிலே வாழ நேரிடுகின்றபோது அவர்தம் சுய அடையாளத்துடனான பண்பாட்டுப் பெறுமானங்கள் உடைந்து போகின்றன. ஒரு வகையில் முதலாளித்துவ உலகும், பல்கலாசாரச் சூழலும் ஏற்படுத்தும் தாக்கத்தினால் இந்த மாற்றங்கள் ஏற்படுகின்றன. இது தமிழ்ப் பண்பாட்டின் ஒழுக்கவியல் மரபிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.**

வாழ்வைப் புலப்படுத்தும் வகையில் அமைந்த 'மூன்று நகரங்களின் கதை', 'எனது தேசம்'; தனிமைத் துயரையும் ஆழ்மன விசாரணையையும் வெளிப்படுத்தும் 'நிஷ்டை', 'நிழல்' ஆகிய சிறுகதைகளும் சூழலின் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டமைக்கு நல்ல உதாரணங்கள் ஆகும்.

தமிழில் ஏற்கனவே இருந்தான வடிவத்தை அனுசரித்துச் செல்கின்ற கலாமோகன் புனைவின் தருக்கத்திற்கு ஏற்ப புதிய வடிவங்களையும் கையாள்கின்றார். 'ஈரம், இழப்பு' இரண்டு சிறுகதைகளும் துண்டுதுண்டான கதை சொல்லலும், சாத்தியமானதை ஏற்றுக்கொள்ளலும் சாத்தியமற்றதை விலக்கலுமான வகையில் அமைந்துள்ளன. இது இன்றைய புனைவின் புதிய உத்தியாகவும், பின்நவீனத்துவக் கோட்பாட்டை அனுசரித்து மரபுவழிப்பட்டதை மறுப்பதுமாக அமைகின்றது. அவை கதைகளின் உள்ளடக்கத்தில் மட்டுமல்லாது உருவத்திலும் மாற்றத்தை வேண்டி நிற்கின்றன. புகலிடத்தில் ஏற்கனவே வெளிவந்த ஷோபாசக்தியின் தேசத்துரோகி சிறுகதைத் தொகுப்பில் உள்ள சில சிறுகதைகளில் இப்பண்பை அவதானிக்க முடியும்.

போதனையாகவோ சீர்திருத்தமாகவோ அமையாமல்; உள்ளதை உள்ளபடி எல்லோரிடமும் கொண்டு செல்லக்கூடிய ஒரு உத்தியாக 'ஜெயந்தீசன் கதைகள்' அமைந்துள்ளன. அவை வெகுஜன இதழியலுக்குரிய வடிவத்தையும் கொண்டுள்ளன. இத்தொகுப்பிலுள்ள குறுங்கதைகளில் சில தமிழ்ப் போராளி அமைப்புக்கள் சார்ந்த விமர்சனத்தை முன்வைப்பனவாகவும் உள்ளன. புலம்பெயர் படைப்பாளிகள் சிலரிடம் இருக்கும் மாற்றுக்கருத்து சார்ந்த நிலைப்பாடாக இதனைக்கருதலாம். ஆனாலும் அவற்றில் இருக்கும் மிகைப்படுத்தப்பட்ட கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

நிஷ்டை சிறுகதைகளின் உருவ உள்ளடக்கம் அவரின் குறுங்கதைகளில் இல்லாதபோதும் இரண்டுமே சொல்லவிழையும் செய்திகளில் ஒன்றுபடுவதை அவதானிக்க முடிகின்றது. அத்தோடு கலாமோகன் கதைகளின் நடையும் (*style*) கவனத்திற்கு உட்படுத்த வேண்டியவை. மேலே எடுத்துக் காட்டப்பட்ட 'உருக்கம்' கதையில் வரும் எளிமையான நடைக்கும் இவரின் 'கனி' கதையில்வரும் பைபிள்சார் நடைக்கும் இடையில் பெருத்த வித்தியாசத்தைக் கண்டு கொள்ள முடியும். ஏனைய கதைகள் இன்னோர் விதமானவை. இந்த ஏனையவை என்பவற்றுக்குள் வரும் கதைகளின் நடையே கலாமோகனின் அதிகமான கதைகளின் நடையாக உள்ளது. 'மூன்று நகரங்களின் கதை'யில் வரும் ஒரு பகுதி

'உடல்', எனது உடல். காசினால் காக்கப்பட்ட உடல். எனது உடல் கடல் கடந்து அகதியாகி விட்ட உடல். மூன்றாவது நகரில் நான் இப்போது அகதி. முதலாவது நகரிலோ அகதிப் பெருமை கிட்டாமல் எத்தனையோ உடல்கள் மண்ணிடை மண்ணாய்ப் புதைந்த வண்ணம். தப்புதல் கருத்துடனோ கட்சியுடனோ கடவுளுடனோ சம்பந்தப்பட்ட விஷயமல்ல. காசுடன் சம்பந்தப் பட்டது என்பதை மூன்றாவது நகரில் காலடி எடுத்து வைத்த முதல் நாளிலேயே புரிந்து கொண்டேன். எனது மூன்றாவது நகரம் பாரிஸ்' ('மூன்று நகரங்களின் கதை', நிஷ்டை தொகுப்பு *ப.34*)

என்றவாறு அமைவதனை உதாரணத்திற்காகக் குறிப்பிடலாம். இறுக்கமான கதைகளாயினும் சிக்கலற்ற மொழிக்கையாளுகை கதைகளில் வாசகனுக்கு ஏற்படும் ஈர்ப்பை அதிகரிக்கவே செய்கின்றன. கலாமோகனின் பின்நவீனத்துவ கதைகளுக்கும் இது பொருந்தக்கூடியது. முடிவாக; கதைகளின் உள்ளடக்கத்தில், அவற்றின் உருவத்தில், அவற்றின் நடையில், வித்தியாசங்களை முன் நிறுத்துவதாக கலாமோகனின் படைப்புலகம் அமைந்துள்ளது.

இவ்வகையில் கலாமோகனின் இரண்டு தொகுப்புக்களும் மூன்று வகையான வடிவப் பிரக்ஞையை வேண்டி நிற்கின்ற அதேவேளை உள்ளடக்க ரீதியில் இரண்டுமே முக்கியமானவையும்கூட. ஒருபுறம் தமிழ்ப் பண்பாட்டு ஒழுக்கவியலை கேள்விக்கு உட்படுத்தலும் மறுபுறம் தமிழர் தம் வாழ்வியற் செயற்பாடுகளும் குறிப்பாக ஈழத்தமிழ்ப் பண்பாட்டு மனங்களின் படிப்படியான சரிவினையே புலப்படுத்தி நிற்கின்றன. இதனை உறுதிப்படுத்துவனவாகவே கலாமோகனின் இரண்டு தொகுப்புக்களும் அமைந்துள்ளன.

▣





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கனவைப் பெய்த மழை



இன்றிரவு
திடீரென பெய்த மழையில்
நனைந்து போனது பேருறக்கத்தின் ஒரு பகுதி
இரண்டாய் பிளந்து கிடந்த அவ்வுறக்கத்தின் தேவைகளை
கையில் எடுத்துக் கொண்டு
இந்த நள்ளிரவில் எங்கே ஒதுங்குவது?
கடலென பெய்யும் கனவுகளைத் தடுக்க
வழியேதுமற்ற சிறு குடையுடன்
பூனை முழி முழித்த என்னுடலின் ஒரு பாதி
கரைந்து போக மீதி உடலை நந்தனுக்குப் பங்கு வைத்து
விரும்பியபடி கனவுகளை மீட்டெடுக்க
இரவுகளை அளைந்தபடி இருந்தேன்
கனவுகளாய் சரி பாதியாய் உடைந்து கிடக்கும்
பகல்களையும் இரவுகளையும் (சிறு சிறு கூறுகளாய்)
உண்டு முடித்தேன்.
எலி அளைந்த தேங்காய்ப் பாதியைப் போல
பிளந்து கிடந்த உறக்கத்தை
சரிபாதியாய் பகிர்ந்து கொள்ளும் (முயற்சியில்)
அறைக்குள்ளும் வெளியிலும் குறுக்கும் (மறுக்குமாய்)
அலைந்து திரிந்தன
இரு வேறு கறுப்பு வெள்ளைப் பூனைகள்
பெருமழை ஓய்ந்து கிழக்கே
வானம் வெளித்த போதும் இழந்து போன தூக்கத்தை
(மீளப்பெற முடியவில்லை)
மீட்டுத் தருவது யார்?
பூனையா?
கனவா?
மழையா?
எது?
இடியும் மின்னலுமற்ற சூட்சும வெளியில்
கனவை பெரு மழையாய் இறக்கியவள்
இவை ஏதுமற்ற நீர்ச்சலனத்துடன் இன்னொரு
பகலை திறந்து அதன்வழி வெளியேறுகிறாள்!

முழுமதி எம். முர்தளா



**உயிர் நிழல்**

**தொகுப்பாசிரியர்கள்:**
**லஷ்மி, சுசீந்திரன்**

ஓரளவு காலத் தொடர்ச்சியுடன் பிரான்சிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது உயிர்நிழல். கலைச் செல்வனாலும் அவரது நண்பர்களாலும் தொடங்கப்பட்ட இம்முயற்சி அவரின் மறைவின் பின்னும் தொடர்கிறது என்பது அவர் தொடர்பான நினைவுகளுக்கு மட்டுமல்ல அவர் கொண்டிருந்த குறிக்கோள்களையும் நமக்குள் பலப்படுத்துகிறது. பன்முகமான எழுத்துக்களுக்கும் கருத்துக்களுக்கும் களம் தரும் உயிர்நிழல் நமது அரசியல் சமூக பண்பாட்டுத் தளங்களில் நிகழும் பல்வேறு விடயங்களையிட்டு ஆழமாக கேள்வி எழுப்புகிறது.

தொடர்புக்கு:
*EXIL, 27, RUE JEAN MOULIN, 92400 COURBE VOIE FRANCE*
*Email: exilpub@gmail.com*
இணைய தளத்தில்: *www.uyirnizhal.com*

**காலம்**

**இதழ்-31, ஆசிரியர்: செல்வம்**

புலம் பெயர் தேசம், இலங்கை, தமிழகத்தைச் சேர்ந்த பல் வேறு எழுத்தாளர்கள், படைப்பாளிகளின் பங்காற்று தலோடு தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருக்கும் இதழ். இவ் விதழின் ஆசிரியர் தலையங்கம் இலங்கையில் இன்று எழுந்துள்ள மனித அவலத்தையும், தமிழக உணர்வுகளையும் கோடிட்டு காட்டுகிறது.

செல்வா கனகநாயகம், மு. புஷ்பராஜன், அ. முத்துலிங்கம், ஜெயமோகன், எஸ். ராமகிருஷ்ணன், மு.பொ, பொ. கருணாகரமூர்த்தி, வெங்கட்சாமிநாதன், என்.கே. மகாலிங்கம், சச்சிதானந்தன், சுகிர்தராஜா, எம்.கே. முரு கானந்தம், செழியன், டானியல் ஜீவா, மெலிஞ்சி முத்தன், பா. துவாரகன், மணி வேலுப்பிள்ளை, சேரன், வாசுதேவன், ராஜமகள், சோலைக்கிளி, அ. சிவானந்தநாதன், அனார், தீபச்செல்வன், ஆகியோரின் எழுத்துக்களை தாங்கி வெளி வந்துள்ளது.

தொடர்புக்கு:
*KALAM,*
*16, HAMPSTEAD COURT,*
*MARKAM, ONT L3R 3S7*
*CANADA*
*Email: kalam@tamilbook.com*






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்டுரை



# இலங்கையில் இன உறவுகளின் சாத்தியம்

ரவி சுந்தரலிங்கம்

இலங்கையில் இனங்களிடையே உறவுகள் சாத்தியமா? எமது பதில் வெறும் அகக்காரணிகளுள்ளே அடங்கியவை என்பதையும், வெளி நாட்டவரது நடத்தைகளை தவிர்த்து காணப்பட்டவை என்பதையும் வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

எரிந்து கொண்டிருக்கும் இனப் பிரச்சனையில் உணர்வுபூர்வமான ஏட்டுச் சரித்திரத்தையும் பொருளாதாரத்தையும் கொண்டு இன உறவுகள்பற்றி கருத்துச் சொல்பவர்கள் பலர். அவர்களில் இருந்து சற்றே விலத்தி நின்று இனங்களை இலட்சியக் கண்ணுடன் அவதானித்து கருத்துகள் சொல்ல வேண்டும் என்ற கடமையை உணர்ந்தவர்களும் உளர். அதில் பெரும் பாலானோர் மக்களை கூட்டங்களாக எடை போட்டு பேரியல் (macro) ரீதியில் காரணிகள் சொல்லும் கருவிகளை, அக்கருவிகளை சற்றும் புரிந்து கொள்ளாதவர் கூட, பாவித்து கருத்துகள் கூறும் நிலையே உள்ளது. இவ்வழியில் மார்க்ஸிசம் என்ற கருவி ஏதோ எமது சமூகத்தின் பொது அறிவு போல பலவழிகளில் போலிப் பிரதிப்பதிப்புகளாகின்றன.

இவர்களிலிருந்தும் சற்றே விலத்தி நின்று தனிமனிதரூடாக அணுகிட வேண்டும் என்பது எமது சர்ச்சையான முயற்சி. அதற்கு நாம் கொள்ளும் கருவி சுத்த-விஞ்ஞானம் (pure-science), அதிலும் இன்று விஞ்ஞான முன்னணியில் இடம்பெறும் மனித இயல்புகள் பற்றிய கருத்துகள்: அவனை இயக்கும் ஜீன்ஸ்கள் (genes), வர்க்கங்கள், இனங்கள், இன்னவும் பெரிய மக்கள் கூட்டங்கள் இவையனைத்தினதும் கூட்டு மனோவியலைக்கூட (swarm or heard behaviour) இவற்றின் செயற்பாடுகளால் விளக்கிடலாம் என்பது எமது அணுகுமுறையின் அடித்தளம்.

மனிதனது நடத்தைகளை ஆழும் விதிகளைக் கூறுவதால், இன்றையதும் நாளையினதும் முடிவுகளைக் முன்கூற முடியும் என்பதால், அவற்றிக்கு எதிராக இயங்க விளையும் அவனது செயற்பாடுகளைத் தடுத்துவிட முடியாது.

பனையால் விழுந்தபடி இருப்பவனுக்கு நியூற்றனது புவியீர்ப்பு விதியை கூறுவதால் என்ன பயன் என்பது ஒரு புறமிருக்க, அவனிடமோ வரவேற்பை எதிர்பார்க்க நிச்சயமாக முடியாது.

### சுயநல - ஜீன்ஸ் (selfish-genes)

பல்லாயிரம் ஆயிரம் ஆண்டுகளின் முன்னர் மிருகக் கூட்டு அமைப்பினுள் வாழ்ந்த மனிதன் கூட தனது தனிப்பட்ட அடையாளம்பற்றி (self-identity) நடைமுறையில் சிந்தித்திருப்பான். இல்லாவிட்டால் அவனது வாரிசுகளாக நாம் பரிணாம வளர்ச்சி (evolution) கண்டிருக்க முடியாது.

தனிமனித அடையாளம் என்பது அவனது பெறுமதி (self-worth) பற்றியது. அதுவோ தனித்து ஒரு மனிதனால் உருவாக்கிடக்கூடிய விடயம் அல்ல என்பதும் அவனைச் சார்ந்த மனிதக் கூட்டத்தின் வளர்ச்சியிலே தங்கியது என்பதும் திண்ணம். எனவே, தனிமனித பெறுமதியின் வளர்ச்சிகள் ஒரு கூட்டு முயற்சியின் இடைத் தோன்றும் சிறு குன்றுகள் மலைகளாகவே கருதிட முடியும்.

நவீன பௌதீகத்தின் (modern physics) ஆரம்ப கர்த்தா என்கிற ஐயின்ஸ்ரைன் வடஐரோப்பாவைத் தவிர்த்து வேறெங்கும் பிறந்திருப்பதற்கான நிகழ்தகவு (probability) மிகவும் குறைவே. அவரது காலத்தில் அதற்கான சமூக-கலாச்சார வளர்ச்சிகளும், உடந்தையான சமூக முரண்பாட்டுச் சூழலும், அடுத்தகட்ட வளர்ச்சிக்கான உத்வேகமும் அங்கேதான் அதிகளவில் இருந்தன என்பவை தான் நாம் இங்கு கவனத்தில் கொள்ளும் விடயங்கள்.

"தனிமனித அடையாளம்" எனப்படுவதும் "கூட்டான அடையாளம்" என்பதும் ஒரு நாணயத்தின் இரு புறங்களே. சமூக அடையாளத்தின் பெறுமதி ஏறும்போது தனிமனித அடையாளத்தின் பெறுமதியும் உயர்வதைக் காணலாம்.

**கோழியா முட்டையா என்ற கேள்வி இங்கு தகுமா? அப்படியாயின் எதனை முதலெடுப்பது?**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**சரி, தனிமனித முன்னேற்றத்தால் சமூகத்தின் பெறுமதி உயராதா? அதாவது சமூகம் என்பதை விட்டுவிட்டு, தனிமனிதரது உயர்வும் தாழ்வுமே சமூகத்தின் நியதி எனக் கொண்டால் எவ்வாறாகும்?**

எம்மைப் பொறுத்தவரை இது முடியாத காரியம் என்பதே அடிப்படையான வாதம். ஐயின்ஸ்ரையின் ஒரு யூதர் என்பதிலும் ஜேர்மானியன் என்பதே அவரது வளர்ச்சிக்கான காரணம் என்பது எமது விளக்கம். ஜேர்மானிய சமூகம் வளரச்சியில் பின் தங்கியதாக இருந்திருப்பின் ஐயின்ஸ்ரையின் (*Einstein*) என்பவவொருவன் உருவாகி இருக்க முடியாது என்பது எமது வாதத்தினாலாகும் நியதி.

அப்படியானால், மனிதன் தனது தனிமனித பெறுமதியைக் கூட்டிடவே சமூக அடையாளத்தின் பெறுமதியை எவ்வாறு கூட்டுவது என்று வியாபிக்கிறான், அல்லது இயற்கையின் விதிகளின் நகர்வுகளால் தன்னை அறியாதே செயலாற்றுகிறான்.

இதுவே நவீன டார்வனிசத்தின் (*modern Darwinism*) பொருளடக்கம்.

**இதனை மனிதன் எவ்வாறு செயற்படுத்துகிறான்? அல்லது அச் செயற்பாடுகளுக்கு எப்போது உட்படுகின்றான்? இதற்கு சுயநல-ஜீன்ஸின் விளக்கம்?**

ஐரோப்பிய நாடுகளுக்கு புலம் பெயரும் ஆபிரிக்க-கரீபிய (*Afro-Caribbean*) மக்களுள் குறிப்பாக ஆண்கள் வெள்ளைப் பெண்களுடன் வாழ விளைவதையும், அதனிலும் பார்க்க அவர்களுடன் பிள்ளைகள் பெறுவதையும் அவதானிக்கிறோம். அதன் நிமிர்த்தம் அவர்களை சமூகத் துரோகிகளென அவர் இனத்தவரும், நையாண்டித்தனத்துடன் மற்றவரும் கருத்துச் சொல்வது வழக்கம். ஆனால், இன்று இங்கிலாந்தின் பெரும் நகரங்களில் பிறப்புகளில் 30 சதவிகிதமானவை கலப்புப் பிள்ளைகளே என்று அறியும் போது டார்வினிஸத்தின் ஓட்டத்தையும், தனிமனிதரது சுயநலமான-ஜீன்ஸ் (*selfish-genes*) எனும் உயிரியக்கத்தின் ஊக்கங்களையும் ஊகித்துக் கொள்ளலாம். இதுபற்றி மேல்கொண்ட கருத்துக்களைத்தந்து விவாதச் சிக்கல்களுள் தங்கிவிடும் நோக்கோ எமக்கில்லை.

மனிதன் எதற்காக தனது தேவைகளுக்கு மேலாகு மிக அதிகமான பொருள் பணம் தேடுகிறான்? அதனையும் தாண்டி, எதற்காக தனது வாரிசுகள் பற்றி, அவர்களது எதிர்காலம் பற்றி கவலைப் படுவதுடன் அதற்காக எதனையும் செய்யத் துணிகிறான்? என்ற தர்க்கத் தொடர்பு கொண்ட கேள்விகளால் எமது தலைப்புக்கான பதில்காணும் வகைகளையும் மேலே பெற்றுக் கொள்ளலாம்.

இங்கேதான் தனிமனித அடையாளம் என்பதும் சமூக அடையாளம் என்பதும் சிலவேளைகளில் ஒன்றை ஒன்று அண்மிக்க முயலுவதையும், மறுவேளைகளில் பிரிந்து போவதையும் அவதானிக்க முடிகிறது, அவற்றின் பிரகாரமே திடமான பதில்களுக்கான ஆதாரங்களும் எமக்கு கிட்டுகின்றன. அந்தப் சமூக, தனிமனித அடையாளங்களின் பிரிவு-உறவுகளை நிச்சயிக்கும் சந்தியிலேயே மனிதனது பல்முகப்பட்ட அடையாளங்களின் (*multiple identities*) வர்ணங்களும் உருவாகுகின்றன, அல்லது தனிஅடையாளங்கள் விஸ்தரிப்புக் காண்கின்றன.


தனிமனிதன் முன்னேறும் போது, அதாவது தான் முன்னேற்றம் காண்கிறேன் என்ற உணர்வை ஏதோவிதத்தில் பெற்றுக் கொள்ளும் போது, அந்த முன்னேற்றத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் தனது அடையாளங்களின் தொகை கூடுவதையும் அதனால் தனது சாத்தியப்பாடுகள் உயர்வதையும் தானாகவே உணர்ந்து கொள்கிறான். வர்க்கங்களின் பிறப்புகளும் புதிய சமூக அமைப்புகளின் ஆரம்பங்களும் எவ்வாறு சாத்தியமாகின்றன என்பதற்கு இதற்குள்ளே பதில்கள் உண்டு.

புலம் பெயர்ந்த நாம் எமது முதற் தலைமுறையில் பல்வேறு சமூக வேறுபாடுகளால் தடைகளால் வெள்ளையருடனும் மற்றவரிலிருந்தும் பிறிதுபடுத்தி தமிழர் அல்லது பாக்கிஸ்தானியர் என இன்னபிற அடையாளங்களுள் பாதுகாப்பைத் தேடுவதையும் அதையே வாழ்க்கையின் விதியாகக் கொள்வதையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காண்கிறோம். வெள்ளையரை மணம் முடித்தால் இழிவாகப் பார்த்தோம் மேடைகளில் கூடப் பேசினோம். இன்று, அடுத்த தலைமுறையினர் குறிப்பாக பெண்கள் அதிகளவில் வெள்ளையரை மணமுடிப்பதையும் நாம் நன்கு அறிவோம். அன்று காரணங்கள் தேடி வசைபாடிய காலம் மறந்து இன்று வெள்ளைச் சம்பந்திகளின் குடும்பங்களையும் அரவணைத்துக் கொள் கிறோம். வெள்ளைப் பெண்களை வேசைகள் என வர்ணித்த தருணம் போய், தமது பிள்ளைகளும் வெள்ளையருடன் வாழ்வு நடத்தியபின் யாராவது ஒருவனை மணமுடிக்கும்போது பத்தினிக் கொண்டாட்டம் போடும் போலிப் பண்டிதர் களை நாம் கண்டிருந்தும், டார்வினிஸம் தெரிந்தமையால் காலத்தை மட்டுமே பார்த்திருந் தோம்.

இன்றோ, தம்மை வெறும் "தமிழர்கள்" என்பதிலும் அதிகமாக பலவிதமான அடை யாளங்கள் பெற்று, அவர்பால் பெருமை கொள்வதுடன் அவர்களது பிரச்சாரத் தொல்லை ஒழிந்தது என்ற நிம்மதிப் பெருமூச்சுடன் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

அவர்களென்ன? *Slumdog Millionaire* படத்தின் ஒஸ்கார் வெற்றியுடன் ஆயிரக்கணக்கில் மனத்தளவில் அமெரிக்கர் ஆகிவிட்ட இந்தியரை யென்ன? முதல் தரம் கைக்கெட்டிய *Coco-Cola* குடித்ததும் தான் விடுதலை பெற்றுவிட்டேன் என்ற உணர்வில் தன்மை மறந்து மயங்கிய சோவியத் கால ஹங்கேரியனையும்தான் நாம் அறிவோம்.

**தனிப்பட்ட ரீதியில் மனதினுள்ளேயும், புலம் பெயர்ந்ததால் கிடைத்த சுற்றாடலில் சிறு குழுக்களிலும், கட்டுப்பாட்டு விதிகளை உடைப் பதனால் உருவான சமூகங்களில் உடனடி யாகவும், வாழ்பவன் தனது சமூகபொருளாதார எல்லைக் கட்டுகளுக்கு அப்பால் புதிய அடையாளங்களை ஏற்படுத்திக் கொள்ள முடிகிறது. இவ்வாறு வெளிக்கொணரப் படாத வன், தங்கிவிட்டவன், சமூகங்களைத் தாண்டி என்ன அடையாளத்தைத் தேட முடியும்?**

பல்முக அடையாளங்களை தன்னகத்தே தன் சூழலில் காண முடியாதவன், அவற்றினை ஏதுவாக்கும் அரசியற்பொருளாதார சூழலில் வாழாதவன் "தனது" என்றும் "தான்" என்றும் எதனைத்தான் கூறுவான்?

**தன்நிலை ஸ்திரமாக**

அவன் முதலில் தன்னைச் சீர்செய்து "சமூக-ஒருநிலை" தேடி அதனைச் சாதகமாகப் பாவித்துக் கொள்ள முனைகின்றான். அதற்காக தனது சுற்றாடலையே சமூக வளர்ச்சியின் எல்லை என்றும் "எதுவரை" என்ற கேள்விக்கு தனது அச்சங்கள் அறியாமைகளின் நிமிர்த்தம் "இது வரைதான்" என்று தனது வீச்சின் விசாலமும் உணராது, தன்னுள்ளே தூண்டிய வண்ணமுள்ள சுயநல-ஜீன்ஸின் போக்கையும் உணராது உரைத்தே கூறி கலகங்களும் செய்கிறான்.

குறுகிய அடையாளத்தால் தன்னை ஸ்திர மாக்க முயல்வது காலப் போக்கில் தன் அடை யாளங்களின் தொகையை அதிகரிப்பதற்கான அல்லது அவற்றினை விஸ்தரிப்பதற்கான தேடலின் அடிப்படையில் எழும் முயற்சி என்பதே எமது வாதம்.

அதாவது, தன்னை யார் என்று அடியொட்டாக வரையறுக்க வேண்டும் என்பதை உணர்ந்தவன் பல்முக அடையாளங்களை தேடும், அதனூடாக தனது வளர்ச்சியை நாடும் மனிதன் என்பதையே சுயநல-ஜீன்ஸ் எமக்கு உணர்த்துகிறது. அதன் நிமிர்த்தம் பெற்றிடும் சுவாத்தியம் தனது சீரான வளர்ச்சியை தருவதாக அமையும் என்பது அவனது எதிர்பார்ப்பு. காலப் போக்கில் தான் அன்று உருவாக்கும் அடையாளம் பொருளாதார ரீதியிலும், அதன்படி அரசியல் ரீதியிலும் தொடர் பான கலாச்சார ரீதியிலும் உருவாகும் வளர்ச்சி களால் விஸ்தரிப்புக் காணக்கூடியதற்கான செயல் என்பதை உதாரணங்களுடன் தெரிந்து கொண்டி ருப்பான். ஆயினும், அவற்றினூடாக தனது சுயநல ஜீன்ஸின் நிலைகொள்ளலை ஊர்ஜிதம் செய்வதே தான் உணர்வால் அறிய முடியாத உள்நோக்கம் என்பதை அவன் புரிந்து கொண்டிருப்பான் என்பதற்கில்லை.

**நுண்ணியல் (micro) ரீதியில், அடையாளங்கள் தேடும் மனிதனது அவாவிற்கான காரணங்களை**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அவனது சுயநல-ஜீன்ஸ் நிர்ணயம் செய்கிற தாயின், பேரியல் ரீதியில் அவன் உருவாக்கும் சமூகக் கட்டுகளை ஆளும் விதிகளை எவை நிர்மாணம் செய்கின்றன?**

காலனித்துவ ஆதிக்கங்களால் நிர்வாகரீதியில் உருவாக்கப்பட்ட "போலி" நாடுகள் பல. இங்கெல்லாம் வெள்ளையரது சுரண்டல்களுக்கு எதிராக இடம்பெற்ற பெரும்பான்மை இனங்களது கிளரச்சிகளும் பல விதிவிலக்குகளும் சில. இவை அனைத்தையுமே ஒட்டு மொத்தமாக விடுதலைப் போராட்டங்கள் என்று வர்ணிப்பவர்களும் பலர்.

தேர்தலின் ஊழல் என்பதால் ஒருவரை ஒருவர் வெட்டிக் கொத்தி நாட்டையே துண்டாடிட கென்னியாவின் இனங்கள் தயாரென்றால், அவர்கள் "நாடு" என்ற அடையாளத்தை எவ்வாறு நடைமுறையில் புரிந்து கொண்டுள்ளனர்? அவர்களது "நாடு" பற்றிய வளர்ச்சிதான் எவ்வளவு? தமிழர்கள் சிறீ லங்காவின் மக்கள் என்றபடி அவர்கள் மீது முப்படைகளாலும் தாக்கிடும் சிறீ லங்காவினது சிங்கள அதிபதிகள் மக்கள் எனும்போது அவர்கள் உணர்வுகள்தான் என்ன? அதனிலும் பார்க்க அவ்வாறான அக்கிரமங்களை அறிந்தும் கண்ணால் கண்டும் "அதுதான் ஒரேவழி" என்று போகத்தயாராக உள்ள அந்தத் தமிழர்கள், தேசம் என்று உணர்வதும்தான் என்ன? தமிழீழக் கோரிக்கையுடன் தமிழ் மக்களது அழிவைப் பொருட்படுத்தாது, ஒட்டு மொத்தமாக ஒரு சமூகத்தையே நாடுகடத்திய புலிகள் போராட்டம் எனும் போது எதனைத்தான் கண்முன் வைத்துள்ளனர்?

இங்கெல்லாம் தோல்வியைத் தழுவி விடுவோமோ என்ற அச்சத்தில் உள்ள மனிதனது சுயநல-ஜீன்ஸின் உந்தல்களையே நாம் காண்கிறோம். நான் தப்பித்துக் கொள்வதாயின் எனது சமூகமும் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வின் எதிரொலிகளே அவை. இவ்வாறான மனிதனது நடத்தைகள் சமகாலத்தில் இழிவுகளுக்கு மக்களையும் அவற்றை விளைவிப்பவர்களையும் உட்படுத்தும் போதிலும் எதிர்காலத்தில் வாழ்வுக்கான வகைகள் தருபவை என்பது கசப்பாகினும் உண்மையான விடயங்கள்.

காலனித்துவ அரசுகளது கணிப்புகளுள் பிறந்தவையே இந்தியாவும் பாக்கிஸ்தானும். மத மொழி சார்புகளுக்குள் அடங்காத அரசியற் சாசனத்துடன் (secular) பிறந்தது இந்தியா. உடமைகள் பிடுங்கப்பட்டதால் மத மாற்றம் கொண்டவரது வம்சாவழிகள், குறிப்பாக வடக்கில் இந்துமதவாதிகளது அடகுதல்களை தவிர்த்திட, அந்த மக்கள் வேண்டிப் பெற்றது பாக்கிஸ்தான். சமூக ரீதியாகப் பெற முடியாத வளர்ச்சிகளை மனிதப் பெறுபேறுகளை, தனி மனித அடையாளங்களையும் சமூக அடையாளங்களையும் ஒருமுகப்படுத்திய மதரீதியில் அமைந்த அடையாளத்தின் ஊடாகப் பெற்றிடலாம் என்பதே நோக்கம், எதிர்பார்ப்பு.

ஆனால் அறுபது ஆண்டுகளின் பின்னர், அந்த நிலப்பரப்பில் என்றுமே இருந்தவர்கள், மதத்தை நம்பி புலம் பெயர்ந்தவர்கள், சுன்னி ஜியா என்று இஸ்லாமியராக பாகுபடுபவர்கள், இவ்வாறாக மனிதர்களது அநுபவங்களோ ஆரம்ப எதிர்பார்ப்புகளுடன் பாரிய முரண்பாடுகள் கொண்டவை. "தன்னை" அதன்பின் "தம்மை" அடையாளம் காட்டும் வளர்ச்சி கொள்ளாதவர்களுக்கு மத ரீதியிலான அரசியற் சித்தாந்தம் தரும் பொது அடையாளம் எவ்வளவிற்கு தாக்கு பிடிக்கும் என்பதற்கு பாக்கிஸ்தான் தகுந்த உதாரணம். இங்கே, சுயநல ஜீன்சுகள் பிரிவினைகளைத் தூண்டி நிற்கின்றன என்றால், அதற்கு நேர்எதிர் உதாரணம் இஸ்ரேல் ஆகும்.

உலகில் மத ரீதியில் உருவான மற்ற நாடுதான் இஸ்ரேல். ஆனால் அது ஐரோப்பா பூராக தேர்வுகண்ட சுயநல ஜீன்சுகளின் ஒருமைப்பாட்டால் அவற்றின் கூட்டால் ஏற்ப்பட்டமையால் வெற்றியாக உள்ளது என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

இந்திய உபகண்டத்தின் கலாச்சாரத்தில் பிறந்து வளர்ந்து உருது, சிந்து, பஸ்துன் போன்ற மிக அழகான காதுகளுக்கு இதமான மொழிகளுடன் பிறந்திருந்தும் கல்வி அறிவோ எழுத வாசிக்கவோ தெரியாதவர்களது மக்கள் கூட்டத்தைக் கொண்டமைந்தது பாக்கிஸ்தான். அவர்கள் இன்று "வகாபியிஸத்துள்" (Wahabism) சிதைந்து கொண்டிருப்பதை, இஸ்லாமியராகினும் வங்காளிகளாகவே வாழ விளையும் மக்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது புரியும்.

ஜின்னாவின் கற்பனையில் இஸ்லாமிய நாடாகத் தோன்றிய பாக்கிஸ்தானோ இன்று இரு சட்டங்கள் கொண்டு வழக்கே இல்லாத பாழடையும் பிரதேசமாகிக் கொண்டுள்ளது. ஆப்கனிஸ்தானை அண்டிய பஸ்துன் இனத்தவர் அதிகமாக வாழும் பிரதேசங்களில் இஸ்லாமிய "ஸரியா" சட்ட முறையும் மற்றைய பிரதேசங்களில் வேறுமொரு பாக்கிஸ்தானிய இஸ்லாமிய சட்ட முறையும் நிலவும் குதர்க்க நிலையே உள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தியாவினது கதையோ வேறு விடயம். பல நூறு மொழிகளும் பல்லாயிரம் பாசைகளும் அத்தொகைக்கு ஈடாக சமூகங்களையும் கொண்டு வறுமையில் இன்றும் வாழும் இந்தியா ஏன் இன்று முன்னரிலும் ஸ்திரமாக இருக்கிறது? உடைந்து சிதைந்து போக வேண்டியது எவ்வாறு தப்பியது?

இவற்றிக்கு பதில் வேண்டின் ஜம்மு-காஸ் மீரில் அண்மையில் இடம் பெற்ற தேர்தலையும் போட்டியிட்டவரது கோரிக்கைகளையும் சற்று உற்று நோக்க வேண்டும். தனிநாட்டுக் கோரிக் கையிலும் பார்க்க, இந்தியாவின் அடக்கு முறைகளால் குமுறும் ஆத்திரங்களையும் மீறிய, "இன்று வளர்ச்சி வேண்டும்" என்ற உந்துதலே மக்களுள் அதிகரித்துள்ளதை அங்கு காணலாம். ஆதலால், அவர்கள் தம்மை யார் என்று காலம் பூராகப் போராடி பெற்ற உணர்வை உதறிட வில்லை. ஆனால், பொது அடையாளம் வேண்டி யவர்கள் இன்று வேலைவாய்ப்பு, நாட்டு வளர்ச்சி என்பவற்றை குடும்பம் ஊர் பிராந்தியம் என்பவற்றினூடாகத் தேடும்போது, அவர்கள் தத்தமது தனிமனித அடையாளங்களை முன்னி றுத்தி புதிய அடையாளங்களைத் தேடுகிறார்கள் என்பது புலனாகிறது.

**இலங்கைத் தீவு**

இலங்கையிலும்தான் தேசிய வாதங்களால் பொது அடையாளம் தர விளைபவர்கள் மனி தனது தனிஅடையாளங்களுக்கான அவசியங்களை புரிந்து கொண்டிருப்பது இல்லை. சிங்களவர் என்ற ஒரு பதத்துடன் அம்மொழி பேசும் அனைவரையும் ஒருமுகப் படுத்தி விடலாம் என்று முனைபவர்கள் தம்முள்ளே வேறுபட்ட சமூகங்களிடையே தனிமனித அடையாளங்களை உந்தும் பிராந்திய ரீதியான வளச்சியே தனக்கு உகந்தது என்று நாடும் சுயநல-ஜீன்ஸ்களை அறிந்தவர்கள் அல்லர். அவர்கள், பொருளாதார ரீதியிலும் வாழ்க்கைத் தரத்திலும் மேற்கு மாகாணத்தில் வாழும் பணம் படைத்தவர்கள்

மற்றைய சிங்களச் சமூகங்களில் இருந்து வேறுபட்டவர்கள் என்று அறிந்தும் புரியாத வர்கள். ஏனெனில் அவர்கள் வளர்ச்சியில் பின் தங்கியவர்கள் என்பதுடன், "தமது" என்ற வரைவு களுள் அடங்குபவர்களது வளர்ச்சியியேயே கருத்தானவர்கள். எனவே, பொது எதிரியை ஒப்பித்த போதும்; முடிவில் தமது வளர்ச்சி தடங்கினால் புதிய அடையாளங்களைத் தேடு வதற்கும் தயங்க மாட்டார்கள். அதுபோலவே மக்களும் தமது சமூகக் கூறுகளூடாக அதே போன்ற சுயநல-ஜீன்சுகளின் தன்மையினால் தம்மை ஸ்திரப்படுத்த முயல்வதையும் காணத் தான் போகிறோம். இதையே மத்திய பூர்சுவா வர்க்கங்களின் போக்கு என பேரியல் ரீதியில் பலர் கூறுவர்.

தமிழர்கள் என்று தாம் நினைத்தவுடனேயே சகலரையும் ஒருமுகப் படுத்திடலாம் என முனைந்தவர்களும் இவர்கள் போன்றவர்களே, வர்க்க ரீதியில் ஒற்றுமையானவர்களே. தமிழ் பேசும் சமூகங்கள் முதலில் கூறுபடுவதற்கும், தனித்தனியே அடையாளங்கள் தேடுவதற்கும் காரணகர்த்தர்களும் இவர்களே. இன்று தமிழ் பேசும் சமூகங்கள் தனித் தனியே அடையாளங்கள் தேடுவதற்கான காரணிகளும் இவர்களே.

ஆனால், எமது வாதத்தில் இவர்கள்தான், தமது தேவைகளுக்காக போலிப் பொது அடையாளங் களை முன்வைப்பவர்கள்தான், எமது தொலை நோக்கில் பொது அடையாளங்களைத் தேடும் ஆணித்தரமான அவசியத்தையும் தம் செயல் களால் அறியாமலே உருவாக்கித் தந்த ஊக்கிகள். பின்தங்கிய சமூதாயங்களில் பொது அடையாளங் கள் இடம்பெறும் முன்னர், சுயநல-ஜீன்ஸ் தனி அடையாளங்களை சிறு சமூகங்களூடாகவே சாதிக்க விளையும் என்ற விஞ்ஞான ஓட்டத்தை அறிந்தமையால் எழும் தன்நம்பிக்கையின் கூற்றிது.

எனவே தமிழர்கள் என்ற கோஸத்திலிருந்து மட்டக்களப்பாராகவும், வன்னியராகவும், மலை யகத்தவராகவும் பிரித்தறிந்து, யாழ்பாணத்தாரை குறை கூறியபடியே அவர்களுடன் ஒப்பீடும் செய்து தம்மை ஸ்திரமாக்க முயல்வர். ஈற்றில் தமிழர்கள் என்ற பதத்துள் ஏதோவிதத்தில், வளர்ச்சி பின்னணியாக அமையின், தம்மை இணைத்துக் கொள்வர். இவர்கள் போலவே தமிழ் பேசும் இஸ்லாமியச் சமூகங்களுள் இஸ்லாமியர் என்ற கோஸத்திலிருந்து அகன்று ஏறாவூர் குடிகளாகவும் அல்லது சோனகர் என இன்னபிற பிரிவுகளாலாகும் அடையாளங் களுடன் தம்மை முதலில் ஸ்திரப்படுத்த முயல் வர் அம் மதத்தைச் சார்ந்தவர்கள். இறுதியில் தம்முள் மட்டுமின்றி பாரிய வளர்ச்சி தேடி வட கிழக்கு மக்களாகவும் தம்மைக் கண்டு கொள்வர். இவர்கள் அருகே வாழும் சிங்கள மக்களும் இவ்விதிகளுக்கு விலக்கானவர் அல்லர்.

இவைதான் இலங்கை வாழ் மக்களது உள்ளார்த்தமான இயங்கியல் விதிகள் தருவன என்பது உட்காரணிகள்பால் எமது வாதம். இவையே வர்க்கங்களாகவும் இனப்பாகுபாடு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களின் உந்து சக்திகளாகவும் இருக்கின்றன என்பது எமது வாதம்.

**இவ்வாறான புதிய கண்ணோட்டத்தூடாக நாம் சொல்ல விளைவதுதான் என்ன?**

முதற் பந்தியில் கூறியது போல இலங்கையர் யாராகினும் அவர்கள் தம்மைப் பிறிதுபடுத்திப் பார்ப்பதற்கான அடிப்படைக் காரணம் இறுதியில் சேர்ந்து வாழ்வதற்கான விதிகளை நிர்ணையம் செய்வதற்கேயன்றி பிரிந்து போவதற்காக அல்ல.

எம்மைப் பொறுத்தவரை அகக் காரணிகளுக்கே அமுலாகும் இலங்கையர் யாராகினும் சரி அவர்கள் இறுதியில் சேர்ந்து வாழவே முயல்வர் என்பதற்கு எமது வாதத்தின் கோள் காட்டியான சுயநல-ஜீன்ஸ்களின் சாட்சியமே போதும்.

எமது இந்த அணுகுமுறைக்கு உந்துதலாக இன்னமும் ஒரு தேவை உண்டு. நடப்பவை எவற்றிக்குமே பேரியல் காரணங்களையும் காரணிகளையும் கூறி விளக்கிவிடுவதும் பழி சுமத்தி விடுவதும் எமது புத்தி ஜீவிகள் என தம்மை இனம் காட்டுவோரது போக்கு. ஆனால், அவர்களும்தான் நாமும்தான் இந்த தனிமனி அவாக்களுள் அகப்பட்டவர்கள். வெறும் வர்க்கத்தையோ இன்னுமொரு இனத்தையையோ சுட்டிக்காட்டிவிடுவதால் எமது அடிப்படை வாதங்கள் சரி கண்டு விடுவதில்லை என்பதும் அதனை நாம் யாவரும்தான் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை உணர வைக்க வேண்டும் என்பதும் இதன் நோக்கம்.

**இவற்றை எல்லாம் விட, மிகப் பலமான புறக் காரணிகள் என்று வேறு உள்ளன என்பதையும் நாம் அறிவோம். அவை எவ்வாறு எம்மை நகர்த்தும்? எமது சுயநல ஜீன்சுகளின் உந்தல்கள் எவ்வாறு அவற்கிசைய அமையும்?**

இவையெல்லாம் பிறம்பாகக் கருத்தில் கொண்டு பதில் சொல்ல வேண்டிய விடயங்கள். இவற்கான பதில்கள் எப்போ என்பதை வாசகர்களது பொறுமை என்பதிலும் எதுவரை ஆசிரிய குழுவின் தேவை எதுவரை என்பதே நிர்ணையம் செய்யும். அதுவரை அவர்களுக்கும் நன்றி கூறிடுவது அவசியம்.

▣

**பின் குறிப்பு:**

எமது அணுகு முறைக்கு கருவியாக அமைந்த விஞ்ஞானத் துறைபற்றிய மேலதிக விளக்கங்களுக்கு இங்கு தரப்பட்டுள்ள புத்தகங்கள் உதவக்கூடும்.


1. ***The origin of species*** by Charles Darwin, Great Mind Series, Prometheus Books.

   (டார்வினிஸத்தின் பிதாவினது இப் படைப்பானது வாசிப்பதற்கு இதமானது என்று சொல்ல முடியாது. இருந்தாலும், ஒரு மனிதனது பார்வை எப்படி அமைகிறது அவனது சூழல், அதனை எவ்வாறு அவனுக்குத் தருகிறது என்பதை அறிந்து கொள்வதற்கு ஏதுவானது.)


2. ***The selfish gene*** by Richard Dawkins, Oxford

   (மிகவும் பிரபல்யமாகிவிட்ட இப் புத்தகம் எளிமை நடை கொண்டதுடன் விஞ்ஞானத்தில் பாண்டித்தியம் இல்லாதவர்களையும் கருத்தில் கொண்டு எழுதப்பட்டுள்ளது.)

3. ***The blank slate*** by Steven Pinker, Penguin Books

   (மிகவும் ஆழமான சித்தாந்த தத்துவார்த்தங்களைக் கொண்டடங்கிய இப் படைப்பு வாசகர் ஓரளவு தத்துவார்த்த சித்தாந்தத் தேர்ச்சி கொண்டவராக இருப்பார் என எதிர் பார்க்கிறது.)


▣



**உயிர்மெய்**

**இதழ்: 5-6,**

**தொகுப்பாசிரியர்கள்: பானுபாரதி, தமயந்தி**

"இலங்கை தேசமே
நீ எதைச் சாப்பிடுகிறாய்?
கண்களை மூடிக்கொண்டு
எனது எதிர்காலத்தையே
நான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்"

என தனது ஆசிரியர் தலையங்கத்திலேயே குறிப்பிட்டுள்ள உயிர்மெய், மாற்று அரசியல் தளத்தில் அதிக பங்காற்றி வருகிறது. நோர்வேயைச் சேர்ந்த படைப்பாளிகள், கலைஞர்கள், செயற்பாட்டாளர்கள் தொடர்பான அறிமுகங்களும் அவர்தம் படைப்புகளின் மொழிபெயர்ப்பும் இவ்விதழுக்கு தனிச்சிறப்பு சேர்க்கிறது.

தொடர்புக்கு:
*KEPTEIN LINGES VEI GA, 6006, AALESUND
NORWAY
Email: editor.uyirmei@hotmail.com*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*Best Compliments from*

# Tamil Information Centre (TIC)




## About TIC

The Tamil speaking community in Sri Lanka has suffered injustice and oppression for a long time and finds it extremely difficult to seek redress in the face of continuing persecution and spurious propaganda and disinformation.

The Tamil Information Centre's mission is to empower people, particularly those suffering persecution and subjected to human rights abuses, valuing the distinct identities and differences among them and to improve the quality of life through access to knowledge.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# Scudamores Solicitors



- ☑ அரசியல் தஞ்ச கோரிக்கை, விசா விண்ணப்பம், நாடு கடத்தல் மற்றும் சகலவிதமான குடிவரவு பிரச்சனைகளில் நீண்டகால அனுபவம் மிக்க சட்ட ஆலோசகர்கள் (Immigration and asylum)
- ☑ வீடுகள், வியாபார நிலையங்கள் வாங்க விற்க சட்ட உதவி (Conveyancing/ Residential and Commercial)
- ☑ குற்றவியல் ஆலோசனை, பொலிஸ் பிரச்சனைகள் (Criminal litigation, Police Station Attendance)
- ☑ இலவச சட்ட ஆலோசனை (இலவச சட்ட ஆலோசனைக்கு தகுதியானவர்களுக்கு மட்டும்) (Free Legal Help - Subjected to merit and means test)

தமிழில் தொடர்புகளுக்கு: ராஜ்

Tel: 08448 802 323

Fax: 08448 802 322

**Scudamores Solicitors**

132, Snakes Lane East, Woodford Green, Essex IG8 7HZ


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்